# தமிழீழமும் தங்க வங்கமும்





## இந்தியாவின் இரட்டை அணுகு முறை

பழ. நெடுமாறன்

# தமிழீழமும் - தங்க வங்கமும்

## இந்தியாவின் இரட்டை அணுகுமுறை

**பழ. நெடுமாறன்**

SEELAN BOOKS
SIGNATURE
NORWAY

**தமிழ்க்குலம் பதிப்பாலயம்**
**17/1, நரசிம்மபுரம்**
**மயிலை**
**சென்னை-600 004.**

| | |
|---|---|
| நூல் தலைப்பு | :தமிழீழமும் – தங்க வங்கமும் |
| ஆசிரியர் | :பழ. நெடுமாறன் |
| உரிமை | :ஆசிரியருக்கு |
| பதிப்பு | :முதல் பதிப்பு |
| நாள் | :திருவள்ளுவராண்டு 2031 (2000) |
| வெளியீடு | :தமிழ்க்குலம் பதிப்பாலயம்<br>17/1, நரசிம்மபுரம்<br>மயிலை<br>சென்னை–600 004. |
| விலை | :ரூ. 40–00 |

# முன்னுரை

வங்கதேச விடுதலைப் போராட்டம் நடைபெற்றபொழுது இந்திய அரசும் இந்திய அரசியல் கட்சிகளும் உலக நாடுகளும் ஆதரவாகச் செயல்பட்டு சுதந்திர வங்கம் பிறக்கக் காரணமாக இருந்தன.

ஆனால் தமிழீழ விடுதலைப் போராட்டத்தைப் பொறுத்தவரை இந்திய அரசும் இந்திய அரசியல் கட்சிகளும் உலக நாடுகளும் பாராமுகமாகவும் எதிராகவும் இருப்பது ஏன்?

நியாயமான இந்தக் கேள்வி உலகம் முழுவதிலும் உள்ள தமிழர்களின் உள்ளங்களைக் குடைந்து கொண்டிருக்கின்றன. ஏன் இந்த ஓரவஞ்சனை என தமிழர்கள் குமைகின்றனர்.

வங்க தேச விடுதலைப் போராட்டமும் தமிழீழ விடுதலைப் போராட்டமும் பலவகையிலும் ஒத்திருக்கின்றன.

வங்க மக்களும் ஈழத் தமிழ் மக்களும் மொழித்திணிப்பு, இனப்படுகொலை, பொருளாதாரச் சுரண்டல், இராணுவ ஒடுக்குமுறை, அகதிகளாக இந்தியாவிற்கு ஓடிவருதல் போன்ற பல பிரச்சினைகளில் ஒரே மாதிரியான ஒடுக்குமுறைகளுக்கும், கொடுமைகளுக்கும் ஆளானார்கள். ஆனாலும் வங்க மக்கள் மீது காட்டப்பட்ட அனுதாபமும், ஆதரவும் ஈழத் தமிழர்கள் மீது காட்டப்படாதது ஏன்? ஏன்?

தமிழ் மக்களின் உள்ளங்களை வாட்டிக் கொண்டிருக்கும் இந்தக் கேள்விகளின் எதிரொலியாக எழுந்ததே இந்நூலாகும்.

தமிழீழப் பிரச்சினைக் குறித்துத் தெளியாதாரும் தெளிவடைய இந்நூல் உதவும் என நம்புகிறேன்.

**சென்னை**
**அக்டோபர் 2000** **பழ. நெடுமாறன்**

# 1. தங்கவங்கம் – தமிழீழம் பண்டைய வரலாறு

இந்தியாவில் முஸ்லீம்களுக்கென்று தனி நாடு அமைக்கப்படவேண்டும் என்ற கோரிக்கை எழுந்த நாளிலிருந்து அதில் வங்காளம் சேர்க்கப்பட்டதே இல்லை. இந்தியாவில் மேற்குப் பகுதியில் இருந்த முஸ்லீம் பெரும்பான்மை மாநிலங்களை மட்டுமே உள்ளடக்கிய முஸ்லீம் அரசை நிறுவவே முயற்சி நடந்தது.

1883ஆம் ஆண்டில் ஆங்கிலேயரான **பிளண்ட்**(Blunt) என்பவர் வகுத்த தனி முஸ்லீம் அரசுத் திட்டத்தில்கூட வங்கத்தை அவர் சேர்க்கவில்லை.

புகழ்பெற்ற உருதுக் கவிஞரான **இக்பால்** 1927ஆம் ஆண்டில் காங்கிரசுக் கட்சியினால் அமைக்கப்பட்ட **மோதிலால் நேரு** குழுவினரிடம் அளித்த மனுவில் பஞ்சாப், வடமேற்கு மாநிலம், சிந்து, பலுச்சிஸ்தான் ஆகிய மாநிலங்களை உள்ளடக்கிய முஸ்லீம் நாட்டை அமைக்கவேண்டும் என்று கூறினார். அவரும் வங்கத்தைத் தமது திட்டத்தில் சேர்க்கவில்லை.

1933–ஆம் ஆண்டில் பாகிஸ்தான் என்ற சொல் உருவாக்கப்பட்டபோதுகூட வங்காளம் அதில் இடம்பெறவில்லை.

பிரிட்டன் இந்தியாவை ஆண்டபொழுது **வைசிராயாக இருந்த கர்சான்பிரபு** 1911ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் வங்க மாநிலத்தை இரண்டாகப் பிரித்தார். இப்பொழுதையக் கிழக்கு வங்கம், அஸ்ஸாம் ஆகிய மாநிலங்களை உள்ளடக்கிய ஒரு மாநிலம் உருவாக்கப்பட்டது. வங்காள மாநிலம் பெரிய மாநிலமாக இருப்பதால் நிர்வாக நலன்களுக்காக இவ்வாறு இரண்டு மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டதாகக் கர்சான்பிரபு கூறினார். ஆனால் இதற்குப் பலமாக எதிர்ப்பு எழுந்தது. வங்க மொழி பேசும் மக்களை இந்துக்கள் என்றும் முஸ்லீம்கள் என்றும் பிரிக்கவே கர்சான் இந்தச் சூழ்ச்சியைச் செய்வதாக வங்க மக்கள் கிளர்ந்தெழுந்தார்கள். இந்துக்களும் முஸ்லீம்களும் ஒன்றுபட்டு வங்கப் பிரிவினையை எதிர்த்துப் போராடினார்கள். இதன் விளைவாக 1911ஆம் ஆண்டில் வங்கப் பிரிவினை ரத்துச் செய்யப்பட்டது. வங்கம் மீண்டும் ஒன்றாக இணைக்கப்பட்டது.

பிரிட்டனின் பிரித்தாளும் சூழ்ச்சியை முறியடித்த வங்காளிகள் கொஞ்சம் கொஞ்சமாக வகுப்புவாத மாயையில் மயங்கினர். வங்கப் பிரிவினையை எதிர்த்துப் போராடிய வங்க முஸ்லீம்கள் பிற்காலத்தில் பாகிஸ்தான் பிரிவினையை ஆதரித்தனர்.

1940ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23–ஆம் தேதி **லாகூரில்** நடைபெற்ற முஸ்லீம்கள் மாநாட்டில் பாகிஸ்தான் தீர்மானத்தை வங்க முஸ்லீம்களின் தலைவரான **பஸ்லீல் ஹக்** முன்மொழிந்தார். வங்கப் பிரிவினையை எதிர்த்துத் தேசிய உணர்வுடன்

போராடிய வங்க முஸ்லீம்களின் தலைவரே பாகிஸ்தான் பிரிவினையை ஆதரிக்கும் தீர்மானத்தை முன்மொழிய நேர்ந்தது சரித்திரத்தில் ஏற்பட்ட விசித்திரமாகும்.

1940ஆம் ஆண்டிற்குப் பிறகே வங்க முஸ்லீம்கள் பாகிஸ்தான் கோரிக்கைக்கு ஆதரவு தரத் தொடங்கினார்கள். மத உணர்வுகளில் மயங்கி, மொழிவழித் தேசிய உணர்வை மறந்தார்கள். 1946ஆம் ஆண்டில் **கல்கத்தா, நவகாளி** போன்ற இடங்களில் நடைபெற்ற படுகொலைகள் இந்தியாவையே அதிர வைத்தன. இந்துவானாலும் முஸ்லீமானாலும் தாங்கள் வங்காளிகளே என்பதை மறந்து இருதரப்பினருமே மதவெறிக்கு இரையாகி ஒருவரை ஒருவர் வெட்டிச் சாய்த்தனர்.

கர்சான்பிரபு வங்காளத்தைப் பிரித்தபொழுது அதை எதிர்த்து இந்து-முஸ்லீம் என்ற பேதமில்லாமல் வங்காளிகள் அனைவரும் ஒன்றுபட்டுப் போராடினார்கள். வங்கமொழித் தேசிய உணர்வே தலைதூக்கி நின்று வெள்ளையரின் பிரித்தாளும் சூழ்ச்சியை முறியடித்தது. ஆனால் அதே வங்கமக்கள் காலப்போக்கில் மதவெறி மாயையில் மயங்கி 1947ஆம் ஆண்டில் இந்துவங்கம், முஸ்லீம்வங்கம் என இரண்டாகப் பிரிந்தனர்.

மொழிவழி தேசிய உணர்வே இயற்கையானது என்பதை மறந்து மதவழித் தேசிய உணர்வு என்னும் போலியுணர்வில் சிக்கிச் சீரழிந்தனர். முஸ்லீம்களாக இருந்தாலும் மேற்குப் பாகிஸ்தானியர் வேறு, கிழக்குப் பாகிஸ்தானியர் வேறு என்ற கசப்பான உண்மையை மெல்ல மெல்ல உணரத் தொடங்கினர்.

## தமிழீழத்தின் பண்டைய வரலாறு

இலங்கையின் ஆதிக்குடிகளாக விளங்கியவர்கள் தமிழர்கள். ஐரோப்பியர்கள் இலங்கையைக் கைப்பற்றும் வரையில் தமிழீழப் பகுதிகளைத் தமிழர்களே ஆண்டார்கள். வேறு யாரும் ஆளவில்லை.

சுமார் 2,100 ஆண்டுகளுக்கு முன்பாகத் தமிழ்மன்னன் **எல்லாளன்** இலங்கையை ஆண்டான். கி.மு. 161 முதல் கி.மு. 117 வரை இலங்கை முழுவதையும் ஆண்ட எல்லாள மன்னனின் நல்லாட்சியைச் சிங்கள வரலாற்று நூல்கள் பாராட்டுகின்றன.

எல்லாள மன்னனை வஞ்சகமாகச் சிங்கள மன்னன் **துட்டகைமுனு** கொன்றான். ஆனாலும் சிங்களர் ஆட்சி நீடிக்கவில்லை. கி.மு. 103இல் பாண்டிய மன்னர்களின் துணையுடன் தமிழர் ஆட்சி நிலைநிறுத்தப்பட்டது.

கி.பி. 993ஆம் ஆண்டில் இராசராசசோழன், இலங்கையின் வடபகுதி முழுவதையும் வென்று **மும்முடிச் சோழமண்டலம்** எனப் பெயரிட்டுத் தனது ஆட்சியின்கீழ்க் கொண்டு வந்தான். அவன் பெயர்களில் ஒன்றான **ஜனநாதன்** என்னும் பெயரால் **ஜனநாதமங்கலம்** என்ற தலைநகரம் அமைக்கப்பட்டுச் சோழ அரச குடும்பத்தைச் சேர்ந்த ஒருவனுக்கு அங்கு முடிசூட்டப்பட்டது.

இலங்கையின் தென்பகுதியில் மட்டுமே சிங்களர் ஆட்சி செய்தனர். கி.பி. 1017–இல் **இராசேந்திரசோழன்** காலத்தில் சிங்கள மன்னனான ஐந்தாம் மகிந்தனைத் தோற்கடித்து இலங்கைத்தீவு முழுவதையும் சோழர் கைப்பற்றினர். இதைத் தொடர்ந்து ஏராளமான தமிழர்கள் ஈழநாட்டில் குடியேறினர்.

தமிழீழப் பகுதியில் பல கோவில்கள் அமைக்கப்பட்டன. **திருக்கேதீசுவரம், திருக்கோணேசுவரம், முனீசுவரம், தொண்டேசுவரம், நகுலேஸ்வரம்** முதலிய இடங்களில் உள்ள பழைமையான ஆலயங்கள் தமிழரின் தொன்மைக்கு இன்றளவும் சான்றுகளாகத் திகழ்கின்றன.

கி.பி.107–இல் முதலாம் **விஜயபாகு, பொலன்னருவா** நகரைச் சோழரிடமிருந்து கைப்பற்றினான். ஆனாலும் இவன் ஆட்சிக் காலத்தில் தலைநகரம், நகரங்கள், ஊர்கள், சந்தைகள் போன்றவற்றில் தமிழர்களின் கையே மேலோங்கி நின்றது என்ற உண்மையை **நிக்காய சங்கிரகம்** என்ற 14ஆம் நூற்றாண்டுச் சிங்கள நூல் கூறுகிறது.

கி.பி.13ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் கலிங்க நாட்டைச் சேர்ந்த **மாகன்** என்பவன் தமிழ்நாட்டு வீரர்களைத் துணை சேர்த்துக்கொண்டு படையெடுத்து வந்து பொலன்னருவா அரசைக் கைப்பற்றி ஆண்டான். இதைத் தொடர்ந்து சாவகமன்னனான **சந்திரபானு** படையெடுத்தான். இவன் பாண்டியர்களின் மேலாட்சியை ஒப்புக்கொண்டான். பாண்டியர்களின் வலிமை குன்றிய காலத்தில் அவர்களால் அனுப்பப்பட்டிருந்த படைத் தளபதிகள் தம்மையே ஈழ மன்னர்களாகப் பிரகடனப்படுத்திக் கொண்டனர்.

கி.பி. 14ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் பாண்டிய அரசு சீர்குலைந்து முஸ்லீம்களால் அடிமைப்படுத்தப்பட்டது. தாய்த் தமிழகத்தில் தமிழர் ஆட்சி வீழ்ச்சியடைந்த நேரத்தில் சேய்த் தமிழகமான ஈழத்தில் **ஆரியச்சக்ரவர்த்திகள்** என்ற தமிழ் மன்னர்களின் ஆட்சி வலிமையோடு விளங்கிற்று. இம்மன்னர்களின் வழி வந்த கடைசி மன்னன்தான் சங்கிலி. கி.பி. 1619 ஜுன் மாதத்தில் இவனைப் போர்த்துக்கீசியர் சிறைப்பிடித்துத் தூக்கிலிட்டனர். சுமார் 350 ஆண்டுக்காலமாகத் தொடர்ந்து ஈழத்தை ஆண்ட தமிழ் மன்னர் பரம்பரை சங்கிலி மன்னனோடு முடிவடைந்தது.

கி.பி. 1619–இல் தமிழீழத்தைக் கைப்பற்றிய போர்த்துக்கீசியர் கி.பி.1658 வரை ஆண்டனர். பின்னர் **ஒல்லாந்தர்** படையெடுத்து ஈழத்தைக் கைப்பற்றினர்.

கி.பி. 1638 முதல் கி.பி. 1795 வரை ஒல்லாந்தர் இலங்கையை ஆண்டனர். இவர்கள் காலத்தில் தமிழர் பகுதிகள் தனியாகவே ஆளப்பட்டன. சிங்களர் பகுதிகளும் தனியாக ஆளப்பட்டன. சிங்களர்க்குத் தனியாகவும் தமிழர்களுக்குத் தனியாகவும் நீதிப் பிரிவுகள் அமைக்கப்பட்டிருந்தன.

கி.பி.1795–இல் பிரிட்டிஷ் படைகள் திரிகோணமலையைக் கைப்பற்றின. படிப்படியாகக் கி.பி.1815–க்குள் இலங்கை முழுவதையும் தமது ஆளுகைக்குள் கொண்டுவந்தனர்.

கி.பி. 1833 வரை தமிழர் நிலப்பகுதிகளில் பிரிட்டிஷார் தனியாட்சி செலுத்தினர். இலங்கைத் தீவின் வடக்கு, வடமேற்கு, கிழக்குக் கரையோர நிலப்பகுதிகள் தமிழரின் வாழ்விடங்கள், தமிழரின் ஆள்புலங்கள் என்பதைப் பிரிட்டிஷார் ஒப்புக்கொண்டிருந்தனர்.

கி.பி. 1833–க்கு பிறகே தமிழரின் நிலப்பகுதிகள் பலவந்தமாகச் சிங்களரின் நிலப்பகுதிகளுடன் இணைக்கப்பட்டு ஓராட்சியின்கீழ்க் கொண்டுவரப்பட்டன.

**எப்படி பாகிஸ்தானின் ஒரு பகுதியாக வங்கம் ஒருபொழுதும் இருந்ததில்லையோ அதைப்போலவே சிங்களவரின் ஆட்சியின்கீழ் ஒருபொழுதும் தமிழர் பகுதிகள் இருந்ததில்லை.**

இந்தியாவிலிருந்துப் பாகிஸ்தானை ஆங்கிலேயர் பிரித்தபொழுது கிழக்கு வங்கத்தையும் அதனுடன் சேர்த்து ஒரேநாடாக ஆக்கினார்கள். அதைப்போல இலங்கையைத் தமது ஆட்சியின்சீழ் ஆங்கிலேயர் கொண்டுவந்தபொழுது தமிழர் பகுதிகளைச் சிங்களர் பகுதிகளுடன் இணைத்து ஒரேநாடாக ஆக்கினார்கள்.

## 2. முஸ்லீம் வகுப்புவாதமும் சிங்களப் பேரினவாதமும்

மேற்குப் பாகிஸ்தானில் உள்ள மக்கள் தங்கள் நாட்டை நவீன மயமாக்குவதில் முனைந்து நிற்குமாறு பாகிஸ்தான் அரசினால் தூண்டப்பட்டனர். ஆனால் அதே வேளையில் கிழக்குப் பாகிஸ்தான் மக்கள் பழைமைப் பிடியிலிருந்து கொஞ்சமும் விடுபடாமல் நல்ல முஸ்லீம்களாகவே இருக்க வேண்டுமென்று போதிக்கப்பட்டனர்.

இதன் விளைவாக கிழக்குப் பாகிஸ்தானிலிருந்த கிழக்கு வங்க தேசியவாதிகள் மதச்சார்பான பாகிஸ்தானின் அடிப்படைச் சித்தாந்தத்தையே எதிர்த்தனர். கிழக்கு-மேற்குப் பாகிஸ்தான்களுக்கு இடையே இருந்த ஒரே இணைப்புப்பாலம் மதம் மட்டுமே. வேறு எந்தவகையிலும் இரு பகுதிகளுக்கு இடையேயும் எத்தகைய ஒற்றுமையும் இல்லை. மேலும் ஒரு நவீன நாட்டிற்கு மதம் மட்டுமே, அடிப்படையாக இருக்க முடியாது. அப்படி இருக்குமானால் மத்தியக் கிழக்கிலுள்ள பல முஸ்லீம் நாடுகள் ஒன்றாய் இருந்திருக்க வேண்டும். மதம், மொழி, கலாச்சாரம் ஆகியவற்றினால் ஒன்றாய்ப் பிணைக்கப்பட்டுள்ள அந்த நாடுகள் தனித்தனி நாடுகளாகவே உள்ளன. இஸ்ரேல் போன்ற ஒரு பொது எதிரி உருவான பின்பும் அந்த நாடுகளால் ஒன்றுபட முடியவில்லை என்பது எதைக் காட்டுகிறது? மதம் மட்டுமே மக்களை ஒன்றுபடுத்திவிட முடியாது என்பதற்கு இது தெளிவான உதாரணமாகும் என்று கூறினார்கள்.

கிழக்கு வங்கத்தில் உருவான தேசிய இயக்கம் மதச்சார்பற்றதாக அமைந்தது என்பது குறிப்பிடத் தக்கதாகும். இந்த இயக்கம் எழுச்சிபெற்ற பிறகு கிழக்கு வங்கத்தில் மதக்கலவரங்கள் அறவே ஓய்ந்தன. இந்தியாவில் ஏற்படும் மதக்கலவரங்களின் எதிரொலியாக மிக அபூர்வமாகக் கிழக்கு வங்கத்தில் இத்தகைய கலவரங்கள் ஓரிரு தடவைகள் மட்டுமே நடந்தன. அதுவும்கூட பாகிஸ்தான் அரசின் இடையறாத துவேஷப் பிரச்சாரத்தின் விளைவாகவே சிற்சில கலவரங்கள் ஏற்பட்டன.

இந்து-முஸ்லீம் வகுப்புவாத உணர்வின் அடிப்படையில் உருவாகிப் பின்னர்க் காங்கிரசு-முஸ்லீம் லீக் பகைமையாக வளர்ந்து, இந்தியா-பாகிஸ்தான் சச்சரவாக வடிவெடுத்த வகுப்புவாத அரசியலுக்கு வங்க தேசிய உணர்வு அடியோடு முற்றுப்புள்ளி வைத்தது. இந்த இயக்கம் இந்தியாவிற்கு எதிராக இல்லாமல் பாகிஸ்தான் மத்திய அரசுக்கு எதிராக முழுவேகத்துடன் திரும்பியது.

கிழக்கு வங்க தேசிய இயக்கத்தின் விளைவாகக் காஷ்மீர் பிரச்சினை தனது முக்கியத்துவத்தை இழந்தது. அரசியல் ரீதியாகவும் இராணுவ ரீதியாகவும் உணர்ச்சிபூர்வமாகவும் காஷ்மீர்ப் பிரச்சினையில் மேற்குப் பாகிஸ்தானியர் மிகத் தீவிரமான ஈடுபாடு கொண்டிருந்தனர். பொருளாதார ரீதியிலும் பூகோள ரீதியிலும் மேற்குப் பாகிஸ்தானுடன் காஷ்மீர் மிக நெருக்கமாக இருந்தது. மேற்குப் பாகிஸ்தானில் ஓடும் மூன்று முக்கிய நதிகள் காஷ்மீரில் உற்பத்தியாகின்றன. அதனால் மேற்குப் பாகிஸ்தான் மக்கள் காஷ்மீர்ப் பிரச்சினையில் மிகுந்த அக்கறை கொண்டிருந்தனர்.

ஆனால் கிழக்குப் பாகிஸ்தான் மக்கள் அறவே அக்கறை கொள்ளவில்லை. காஷ்மீர், பாகிஸ்தானுடன் இணைவதால் கிழக்கு வங்கத்திற்கு எத்தகைய இலாபமுமில்லை என்பதோடு மேற்குப் பாகிஸ்தான் மேலும் பயன் வாய்ந்ததாகிவிடும் என்றும் கருதினர்.

காஷ்மீர்ப் பிரச்சினையை மதப்பூர்வமான ஒரு பிரச்சினையாக்கி அதன் மூலம் மேற்கு–கிழக்குப் பாகிஸ்தான் மக்களிடையே ஒருமைப்பாட்டினை உருவாக்கவேண்டும் என்று பாகிஸ்தான் அரசு போட்ட சூழ்ச்சித் திட்டங்கள் எவையும் பலிக்கவில்லை. மதப் பிரச்சினையைவிடக் கிழக்கு வங்க மக்களின் ஜனநாயக உரிமைகள் முக்கியமானவையாகும் என்று அவர்கள் கருதினார்கள்.

கிழக்கு வங்கத்தின் முதலமைச்சராக இருந்த அட்டாமான் ரஹ்மான் என்பவர் பாகிஸ்தானின் ஜனாதிபதியாக இருந்த அயூப்கானிடம் பின்வருமாறு கூறினார்:

"மேற்குப் பாகிஸ்தானின் தனிப்பட்ட பிரச்சினையே காஷ்மீர்ப் பிரச்சினையாகும். கிழக்குப் பாகிஸ்தானுக்கும் அந்தப் பிரச்சினைக்கும் எவ்விதச் சம்பந்தமும் இல்லை. ஒடுக்கப்பட்ட காஷ்மீர் மக்களின் உரிமைகளை நிலை நிறுத்தப் போராடும் பாகிஸ்தான், கிழக்கு வங்க மக்களுக்கு எவ்வித உரிமைகளையும் தருவதற்குத் தயாராக இல்லை" என்பதைச் சுட்டிக்காட்டினார்.

முஸ்லீம் வகுப்புவாத அடிப்படையில் உருவாக்கப்பட்ட பாகிஸ்தானிய அரசியலின் அடிப்படையே தகர்ந்த பிறகு கிழக்கு வங்கத்தில் இந்தியாவுக்கு எதிரான உணர்வு மங்கிவிட்டது. ஆனால் பாகிஸ்தான் அரசு இந்தியாவின் தூண்டுதலின் பெயரிலேயே கிழக்கு வங்கத்தில் எதிர்ப்பு இயக்கங்கள் நடைபெறுவதாகக் குற்றம் சாட்டியது.

## சிங்களப் பேரினவாதம்

இலங்கையிலும் சிங்களப் பேரினவாத உணர்வு தூண்டப்பட்டது. சிங்களவர்களுள் பெரும்பாலோர் புத்த மதத்தைத் தழுவியவர்களாக இருந்தனர். சிலர் மட்டுமே கிறிஸ்துவ மதத்தைத் தழுவியவர்கள். ஆனால் ஒரு சிங்களவன்கூட இந்து மதத்தைத் தழுவியவன் அல்லன். அதைப்போலத் தமிழர்களில் பெரும்பாலோர் இந்துமதத்தையும் சிறுபான்மையோர் முஸ்லீம், கிறிஸ்துவ மதங்களையும் தழுவியவர்கள் ஆவார்கள். ஆனால் ஒரு தமிழன்கூட பௌத்த மதத்தைத் தழுவியவன் அல்லன்.

தமிழர்கள் மத்தியில் மத அடிப்படை அல்லாமல் மொழிவழித் தேசிய உணர்வு அடிப்படையில் ஒற்றுமை உருவானது. ஆனால் சிங்களர் நடுவில் பௌத்த மத அடிப்படையில் வெறியுணர்வு வளர்க்கப்பட்டது.

பாகிஸ்தான், முஸ்லீம்களுக்கு மட்டுமே உரிய இஸ்லாமியக் குடியரசு என மேற்குப் பாகிஸ்தானியர் கருதினர். அதைப் போலவே சிங்கள பௌத்தர்களுக்கு மட்டுமே உரிய புத்தக் குடியரசாக இலங்கையைச் சிங்களர் கருதுகிறார்கள்.

வங்க மக்கள் மதவேறுபாடில்லாத மொழிவழித் தேசிய உணர்வு பெற்றிருந்தது போல ஈழத் தமிழரும் மதவேறுபாடில்லாத மொழிவழித் தேசிய உணர்வைப் பெற்றுள்ளனர்.

பாகிஸ்தானிய மக்களுக்கும் கிழக்கு வங்க மக்களுக்குமிடையே மதம் ஒன்றாக இருந்தாலும், மொழியாலும் இனத்தாலும் வேறுபட்டிருந்தனர். மதத்தால் ஒன்றுபட்டிருந்தபொழுதிலும் கிழக்கு வங்க மக்களை இனப்படுகொலை செய்தொழிக்கப் பாகிஸ்தான் தயங்கவில்லை.

இலங்கையில் மதம், மொழி, இனம் ஆகிய மூன்றிலும் சிங்களரும் தமிழரும் வேறுபட்டிருந்தனர். எந்த வகையிலும் அவர்களுக்குள் ஒன்றுபட்ட அம்சங்கள் இல்லை. எனவே தமிழர்களை வெறிகொண்டு அழிக்கச் சிங்களர் இடைவிடாது முயலுகின்றனர்.

தொன்றுதொட்டு வங்கப் பண்பாட்டின் சின்னங்களாக விளங்கும் வங்கமொழி, இசை ஆகியவற்றை இஸ்லாமின் பெயரால் உருதுமயமாக்கப் பாகிஸ்தானியர் முயற்சி செய்தபொழுது அதற்கு எதிராக வங்காளிகள் கொதித்தெழுந்தார்கள்.

அதைப்போலவே இலங்கையில் பாரம்பரியப் பெருமைமிக்க தமிழர்களின் பண்பாட்டினையும் மொழியையும் புத்தக் கலாச்சாரத்தின் பெயராலும் சிங்கள மொழியின் பெயராலும் அழித்து ஒழிக்கச் சிங்களர் முயற்சி செய்தபொழுது அதற்கு எதிராகத் தமிழர்கள் போராடினார்கள்.

முஜிப்பூர் ரகுமானின் அவாமிலீக், கிழக்கு வங்காள மக்களின் சார்பில் 6 அம்சத் திட்டத்தைக் கொடுத்தபொழுது பாகிஸ்தானின் அதிபதியான யா:.யாகான் அதை ஏற்க மறுத்தார். மத்திய அரசின் அதிகாரங்களைக் குறைக்கும் எத்தகைய திட்டத்தையும் ஏற்க முடியாது என்று அவர் கூறினார். பலமான மத்திய அரசு, தேசிய ஒருமைப்பாடு என்ற பெயர்களால் கிழக்குவங்க மக்களின் உரிமைகளைப் பறிக்கவும் அவர்களை அடக்கி வைக்கவும் அவர் முயன்றார்.

அதைப்போலவே திம்பு மாநாட்டின்பொழுது விடுதலைப் புலிகளும் தமிழர் விடுதலைக் கூட்டணியும் மற்ற ஈழப் போராளிகளின் இயக்கங்களும் கூட்டாகச் சேர்ந்து அளித்த 4 அம்சத் திட்டத்தை ஏற்க இலங்கை அதிபர் ஜெயவர்த்தனா மறுத்துவிட்டார். இந்தக் கோரிக்கைகளை ஏற்பது இலங்கையின் ஒற்றுமையைச் சிதைத்துவிடும் என்று கூறினார். வங்க மக்களுக்கு யா:.யாகான் எதைச் சொன்னாரோ அதையே தமிழ் மக்களுக்கு ஜெயவர்த்தனா கூறினார்.

1970ஆம் ஆண்டு வங்கத்தில் நடைபெற்ற தேர்தல்களின் முடிவுப்படி வங்க மக்களில் மிகப் பெரும்பான்மையினோர் அவாமிலீக்கின் மாநில சுயாட்சிக் கோரிக்கைகளுக்கு ஆதரவாக வாக்களித்தனர். வங்க மக்களின் தீர்ப்பை மதிக்க யா:.யாகான் மறுத்ததுதான் பாகிஸ்தான் இரண்டாகப் பிரிந்ததற்குக் காரணமாகும்.

அதைப்போலவே 1977ஆம் ஆண்டில் இலங்கையில் நடைபெற்ற தேர்தல்களில் ஈழத் தமிழர்களுள் மிகப் பெரும்பாலோர் தமிழர் விடுதலைக் கூட்டணி முன்வைத்த தமிழீழக் கோரிக்கைக்கு ஆதரவாக வாக்களித்தனர். தமிழ் மக்களின் ஒருமனதான இந்த முடிவை மதிப்பதற்கு ஜெயவர்த்தனா பிடிவாதமாக மறுத்ததன் காரணமாகத்தான் இலங்கை இரண்டாகப் பிளவுபடும் நிலை தோன்றியது.

# 3. சரண்டப்பட்ட வங்கமும் சுரண்டப்படுகிற ஈழமும்

கிழக்கு வங்கத்தை ஒரு குடியேற்ற நாடாகவே பாகிஸ்தான் கருதியது. தனது தொழில்களுக்குத் தேவையான கச்சாப்பொருட்களை உற்பத்தி செய்யும் பகுதியாகவும் தனது உற்பத்திப் பொருட்களை விற்பதற்குரிய சந்தையாகவுமே வங்கத்தைப். பாகிஸ்தான் நடத்தியது.

மேற்குப் பாகிஸ்தான் தொழிற்பகுதியாக வளர்ந்தது. கிழக்கு வங்கம் விவசாயப் பகுதியாகத் தேய்ந்தது.

கல்வி-மொழித் துறைகளிலும் மேற்குப் பாகிஸ்தானே மேலாதிக்கம் செலுத்திற்று. கிழக்கு வங்கக் குழந்தைகளுக்குப் போதுமான கல்வி வசதிகள் செய்துத் தரப்படவில்லை. பல்கலைக்கழகப் படிப்புவரை தொடர அவர்களால் முடியாதபடி அரசின் கல்விக் கொள்கை அமைந்தது. குறிப்பாக மருத்துவ, தொழிற் கல்வியும் அதன்மூலம் வேலை வாய்ப்புகளும் அவர்களுக்கு மறுக்கப்பட்டன.

அதைப்போலவே தமிழீழப் பகுதியைத் தனக்குத் தேவையான கச்சாப்பொருட்களை உற்பத்தி செய்யும் பகுதியாகவும் தனது உற்பத்திப் பொருட்களை விற்பதற்குரிய சந்தையாகவுமே சிங்களர் கருதினார்கள்.

சிங்களநாடு தொழிற் பகுதியாக வளர்ச்சியடைந்த வேளையில் தமிழீழம் விவசாயப் பகுதியாகவே இருக்குமாறு செய்யப்பட்டது.

கல்வி-மொழித்துறைகளில் தமிழர் அறவே புறக்கணிக்கப்பட்டனர். 'தரப்படுத்துதல்' என்ற பெயரில் தமிழ் மாணவர்களுக்கு வஞ்சனை இழைக்கப்பட்டது. வேலை வாய்ப்புகளும் தமிழருக்கு மறுக்கப்பட்டன.

## பாகிஸ்தான் இராணுவம்

**இன்றைய வங்கதேசமும் இணைந்திருந்த பழைய பாகிஸ்தானின் மொத்த மக்கள் தொகையில் வங்காளிகள் 55 சதவிகிதம் இருந்தனர். ஆனால் இராணுவத்தில் அவர்களின் எண்ணிக்கை 7.4 சதவிகிதம் மட்டுமே. விமானப்படையில் 30 சதவிகிதம் கடற்படையில் 28.8 சதவிகிதம் ஆகும்.**

**1951ஆம் ஆண்டில் பாகிஸ்தான் இராணுவத்தில் இருந்த அதிகாரிகளில் 890 பேர்கள் மேற்கு பாகிஸ்தானைச் சேர்ந்தவர்களாகவும், 14 பேர்கள் மட்டுமே கிழக்கு வங்கத்தைச் சேர்ந்தவர்களாகவும் இருந்தனர். பாகிஸ்தான் கடற்படை அதிகாரிகளில் மேற்குப் பாகிஸ்தானைச் சேர்ந்தவர்களாக 593 பேர்களும் கிழக்கு வங்கத்தைச்**

சேர்ந்தவர்களாக 7 பேர் மட்டுமே இருந்தனர். பாகிஸ்தான் விமானப்படை அதிகாரிகளில் மேற்குப் பாகிஸ்தானைச் சேர்ந்தவர்களாக 640 பேர்களும் கிழக்கு வங்கத்தைச் சேர்ந்தவர்களாக 60 பேர்களும் மட்டுமே இருந்தனர். அயூப்கான் ஆட்சிக்காலத்திலும் இது தொடர்ந்தது. பாகிஸ்தான் இராணுவமும் மேற்குப் பிராந்தியத்தின் இராணுவமாகவே விளங்கிற்று.

கிழக்கு வங்க மக்களுக்கு அதில் எவ்விதப் பங்கும் இல்லை. கிழக்கு வங்க மக்கள் எண்ணிக்கையில் அதிகமானவர்களாக இருந்ததும், அரசியல் முதிர்ச்சி பெற்றவர்களாக விளங்கியதும், ஜனநாயக உரிமைகளை மதித்ததும் அவர்களுக்குப் பெரும் தீமையாக அமைந்துவிட்டன.

பாகிஸ்தான் இராணுவத்தில் மேற்குப் பாகிஸ்தானியர் கை ஓங்கி இருந்ததால் கிழக்கு வங்கத்தை ஒடுக்க முயற்சி நடந்தது. 1958ஆம் ஆண்டில் பாகிஸ்தானில் இராணுவ ஆட்சியை அயூப்கான் பிரகடனம் செய்தபொழுது மேற்குப் பாகிஸ்தானின் சர்வாதிகாரம் முழுமையாக நிலைநாட்டப் பெற்றது.

இதைப்போலவே இலங்கையில் இராணுவம் சிங்களர் மயமாகவே உள்ளது. தமிழர்களை இராணுவத்தில் சேர்ப்பது நாட்டின் பாதுகாப்பிற்கு ஆபத்தானது (Security risk) என்ற காரணம் காட்டிச் சேர்க்க மறுக்கிறார்கள். 1980ஆம் ஆண்டு வாக்கில் இலங்கையில் உள்ள இராணுவம், போலீஸ் ஆகியவற்றில் தமிழர்களின் எண்ணிக்கை:

## சிங்கள இராணுவம்

| வகை | மொத்த எண்ணிக்கை | தமிழர் எண்ணிக்கை | சதவீதம் |
|---|---|---|---|
| போலீஸ் | 17,000 | 475 | 2.8 |
| தரைப்படை | 11,000 | 220 | 2 |
| கடற்படை | 2,000 | 20 | 1 |
| விமானப்படை | 600 | 16 | 2.7 |

மக்கள் தொகை விகிதாச்சாரப்படி இராணுவத்திலும் போலீசிலும் குறைந்தபட்சம் 25.6 சதவீதமாவது தமிழர்களுக்கு அளிக்கப்படவேண்டும். ஆனால் அந்த உரிமை மறுக்கப்பட்டுள்ளது.

தமிழர்கள் யாரும் ஆயுதம் வைத்துக்கொள்ளக் கூடாது என்ற தடைச்சட்டம் உள்ளது. இதைமீறி யாரேனும் ஆயுதம் வைத்திருந்தால் அவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் சிங்களர்களுக்கு இந்தத் தடை கிடையாது. தமிழர் பகுதிகளில் வாழும் சிங்களர்களுக்கு அரசே

ஆயுதங்களை வழங்கித் தமிழர்களைக் கொன்று குவிக்கத் தூண்டுகிறது. பாகிஸ்தானின் இராணுவம் மேற்குப் பகுதியில் இராணுவமாக மட்டுமே விளங்கி வங்க மக்களைக் கொன்று குவித்ததைப்போலவே, இலங்கையின் இராணுவம் சிங்கள இராணுவமாக விளங்கித் தமிழர்களைக் கொன்று குவித்து வருகிறது.

## வெளிநாட்டு உதவிகள்
## வங்கமும் – ஈழமும்

அமெரிக்காவுடன் பாகிஸ்தான் செய்துகொண்ட இராணுவ உடன்பாட்டினைக் கிழக்கு வங்க தேசியவாதிகள் கடுமையாக எதிர்த்தனர். இந்த உடன்பாட்டின் மூலம் மேற்குப் பாகிஸ்தான் மட்டுமே பலன் அடையும் என்றும் அவர்கள் கூறினார்கள். கிழக்குப் பாகிஸ்தானின் பாதுகாப்பு அடியோடு புறக்கணிக்கப்படுவதாகவும் அவர்கள் கூறினார்கள். 1965–இல் நடைபெற்ற இந்தியா–பாகிஸ்தான் போரின்பொழுது கிழக்கு வங்கத்தைப் பாதுகாக்க எத்தகைய நடவடிக்கையும் பாகிஸ்தான் எடுக்காததைக் கண்டு கிழக்கு வங்க மக்கள் அதிர்ச்சியடைந்தார்கள்.

கிழக்கு வங்கத் தலைவரான **அம்ருதீன் அகமது** என்பவர் பின்வரும் கருத்தைத் தெரிவித்தார். "பாகிஸ்தான் அரசின் அமெரிக்க ஆதரவுக் கொள்கையைக் கிழக்கு வங்மக்கள் ஒருபொழுதும் ஆதரிக்கவில்லை. அமெரிக்கத் தூண்டுதலுடன் பாகிஸ்தான் அரசு மேற்கொண்ட இராணுவ உடன்பாடுகளையும் வங்கமக்கள் கண்டித்தனர். வங்கமக்கள் சமாதான விரும்பிகளாக இருந்ததனால் மட்டும் இவ்வாறு நினைக்கவில்லை. மக்களின் ஒட்டுமொத்தமான எதிர்ப்புச் சக்தியைவிட ஒரு நாட்டின் இராணுவம் பலம் பெறுவது இறுதியில் அந்த நாட்டை இராணுவச் சர்வாதிகார ஆட்சியில் கொண்டுபோய் விட்டுவிடும் என்பதனாலும் கிழக்கு வங்க மக்கள் இந்த உடன்பாடுகளை எதிர்த்தனர். மேற்குப் பாகிஸ்தானின் தொழில் வளர்ச்சிக்கும் நீர்ப்பாசன வசதிக்கும் அமெரிக்கா செய்த பெரும் உதவி நாட்டில் பணவீக்கத்தை வளர்த்துவிட்டது. இந்த உதவியினால் மேற்குப் பாகிஸ்தான் ஆதாயம் அடைந்தது. ஆனால் கிழக்கு வங்கம் பணவீக்கத்தின் காரணமாகப் பெரும் அவதிக்கு உள்ளாயிற்று.

இலங்கையில் வெளிநாட்டுக் கொள்கை அமெரிக்காவையும் மேற்கு நாடுகளையும் சார்ந்ததாக இருப்பதைத் தமிழர்கள் ஏற்கவில்லை எதிர்த்தே வந்துள்ளனர். இந்நாடுகளிடமிருந்து இலங்கை பெறும் இராணுவ உதவிகள் தமிழர்களை ஒடுக்கவே பயன்படுத்தப்படுகின்றன என்பதால் தமிழர்கள் இந்த உதவிகளைக் கடுமையாக எதிர்த்தனர்.

இந்நாடுகள் இலங்கைக்கு அளிக்கும் பொருளாதார உதவிகளினால் சிங்களர் மட்டுமே ஆதாயமடைந்தனர். தமிழர் பகுதிகளுக்கு இந்த உதவிகள் அறவே கிட்டவில்லை.

இலங்கையின் தேசிய வருமானத்தில் சுமார் 60 சதவிகித வருமானம் தமிழ்த் தோட்டத் தொழிலாளிகளின் உழைப்பினால் கிடைத்தும் அதன் பலன் தமிழருக்குக் கிடைக்கவில்லை. உழைக்கும் தமிழர்கள் உரிமை பறிக்கப்பட்டவர்களாக வாழ வேண்டியுள்ளது.

# புயல் உதவி

1970ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வரலாறு காணாத புயல் வீசிக் கடல் கொந்தளித்து உட்புகுந்து, கிழக்கு வங்கத்தில் பெரும்சேதத்தை விளைவித்தது. சுமார் 10 இலட்சம் மக்கள் இறந்தார்கள். மேலும் பல இலட்சம் மக்கள் வீடு வாசல்களை இழந்து அகதிகளானார்கள். வேதனையில் சிக்கித் தவித்த வங்க மக்களுக்கு விரைந்து உதவ வேண்டிய பாகிஸ்தான் அரசு இதயமில்லாமல் நடந்துகொண்டது. தேவையான நிவாரண நடவடிக்கைகளை அது மேற்கொள்ளவில்லை.

புயலால் பாதிக்கப்பட்ட கிழக்கு வங்க மக்களைச் சீரமைக்கச் சுமார் 10 இலட்சம் டாலர் தேவைப்படும் என உலக வங்கி மதிப்பிட்டது. உலக நாடுகள் பலவும் உலக அமைப்புகளும் அளித்த உதவியின் பெரும்பகுதி கிழக்கு வங்க மக்களுக்காகச் செலவிடப்படாமல் மேற்குப் பாகிஸ்தான் வளர்ச்சித் திட்டங்களுக்காகச் செலவிடப்பட்டது.

1979ஆம் ஆண்டு வீசிய புயலால் தமிழர் பகுதியான மட்டக்களப்பு பெருமளவு பாதிக்கப்பட்டது. சிங்களப் பகுதியான பொலன்னறுவாவும் பாதிக்கப்பட்டது. அதாவது மொத்தப்புயல் சேதத்தில் தமிழர்பகுதி 95 விழுக்காடும் சிங்களர் பகுதி 5 விழுக்காடும் பாதிப்புக்கு உள்ளாயின. ஆனால் உலகநாடுகள் அளித்த உதவியில் 80 விழுக்காடு சிங்களப் பகுதிக்கும் 20 விழுக்காடு தமிழர் பகுதிக்கும் அளிக்கப்பட்டன.

தமிழ் அகதிகளுக்கு உதவுவதற்காக பல வெளிநாடுகளில் இருந்து அனுப்பப்பட்ட ஏராளமான நிதியை சிங்களர்களைத் தமிழ்ப் பகுதிகளில் குடியேற்றுவதற்காக சிங்கள அரசுகள் செலவழித்தன.

ஜெயவர்த்தனா முதல் சந்திரிகாவரை இதைத்தான் செய்தார்கள். தொடர்ந்து செய்து வருகிறார்கள்.

பொருளாதாரத் தடைவிதித்து தமிழர் பகுதிக்கு உணவு, மருந்து மற்றும் அத்தியாவசியமான பண்டங்கள் அனுப்பாமல் தடுத்தார்கள். இதன் விளைவாக தமிழர்கள் பட்டினியாலும் மருந்து இல்லாமலும் ஆயிரக்கணக்கில் செத்து மடிந்தார்கள். இந்த நிலை இன்னமும் தொடருகிறது.

# 4. வங்கமும் — ஈழமும் நடத்திய அறப்போர்கள்

கிழக்குப் பாகிஸ்தானிய மக்களுக்கும் மேற்குப் பாகிஸ்தானிய மக்களுக்குமிடையே நில அளவில் மட்டுமல்ல மொழி, பண்பாடு போன்றவற்றிலும் பெரும் இடைவெளி இருந்தது. இஸ்லாமியப் போர்வையினால் அதை மூடி மறைக்க முடியவில்லை.

மேற்குப் பாகிஸ்தானின் காலனி நாடாகவே கிழக்குப் பாகிஸ்தான் நடத்தப்படுகிறது என்ற உண்மையை வங்க முஸ்லீம்கள் கொஞ்சம் கொஞ்சமாக உணரத் தலைப்பட்டனர். கிழக்கு வங்க மக்களின் மன உணர்வுகளை மேற்குப் பாகிஸ்தானியத் தலைவர்கள் புரிந்து கொள்ள மறுத்தார்கள்.

கிழக்கு வங்கத்திலிருந்த முஸ்லீம் லீக் தலைவர்களும் வங்கதேசிய உணர்வுக்கு எதிராக இருந்தார்கள். காங்கிரசுக்காரர்களும் கம்யூனிஸ்டுகளும் கிழக்கு வங்க மக்களின் தேசிய உணர்வை ஆதரித்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த உணர்வை மையமாகக் கொண்டு பல புதிய அரசியல் கட்சிகள் அங்கு உருவாயின.

**மொழிப் பிரச்சினையை மையமாகக் கொண்டு மாநில சுயாட்சி இயக்கம் புதிய உத்வேகத்தைப் பெற்றது.** பாகிஸ்தானின் தேசிய மொழியாக உருதுவே இருக்குமென்று அந்நாட்டின் அரசியல் நிர்ணயசபை முடிவு செய்தபொழுது பாகிஸ்தான் தேசிய காங்கிரசைச் சேர்ந்த உறுப்பினர்கள் இதை எதிர்த்து முதலில் குரல் கொடுத்தனர்.

"கிழக்கு வங்கத்தில் வங்க மொழியே ஆட்சி மொழியாக இருக்கவேண்டும்' என்ற போராட்டம் வெடித்தது. இந்தப் போராட்டம் இஸ்லாமிய தர்மத்திற்கு விரோதமானது எனப் பாகிஸ்தான் அரசு குற்றம் சாட்டியது. மத உணர்வுகளைத் தூண்டுவதன் மூலம் மொழியுணர்வை ஒழித்துவிடலாம் எனப் பாகிஸ்தான் அரசு நினைத்தது. **இஸ்லாமின் பெயரால் பாகிஸ்தானின் ஒரே தேசிய மொழி உருது என அறிவிக்கப்பட்டது.**

1948ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் பாகிஸ்தான் அரசியல் நிர்ணயசபையில் பிரதமர் **லியாகத் அலிகான்** பேசும்பொழுது பாகிஸ்தான் ஒரு முஸ்லீம் நாடு. எனவே இஸ்லாமியரின் மொழியான உருதுவே அதனுடைய ஆட்சி மொழியாக இருக்க முடியுமே தவிர வேறு எந்த மொழியும் அந்த இடத்தில் அமர்வது இஸ்லாமிய தர்மத்திற்கு எதிரானது" என்றார்.

இதைத் தொடர்ந்து பாகிஸ்தானின் நிறுவனரான ஜின்னாவும் பின்வருமாறு கூறினார். "பாகிஸ்தானின் ஆட்சி மொழியாக உருது மட்டுமே இருக்கும். வேறு எந்த மொழியும் இருக்காது" என்றார்.

பழைமையான வங்கமொழியும் அதனுடைய செறிவு வாய்ந்த இலக்கியங்களும் இஸ்லாமிய தர்மத்திற்கு விரோதமானவை என்று கருதப்பட்டன. உலகம் போற்றிய

வங்கமொழிக் கவிஞரான இரவீந்திரநாத் தாகூரைப் பாகிஸ்தான் அரசு மிகவும் வெறுத்தது. கிழக்கு வங்கத்தின் தலைநகரான டாக்கா வானொலியில் தாகூரின் பாடல்களை ஒலிபரப்பக் கூடாது எனத் தடைவிதிக்கப்பட்டது. தங்கள் மொழி மீது கரைகாணாக் காதல் கொண்டிருந்த வங்க மக்கள் இதைக் கண்டு அதிர்ச்சியடைந்தனர்.

வங்க நாகரிகம் என்பது இந்துக்களுக்கு மட்டுமோ முஸ்லீம்களுக்கு மட்டுமோ உரித்தானது இல்லை; அனைத்து மதங்களைச் சேர்ந்த வங்காளிகளுக்கும் உரித்தானது என வங்க தேசியவாதிகள் கருதினார்கள். ஆனால் "வங்கக் கலாச்சாரம் என்பது இந்துக் குணாம்சம் கொண்டது. ஆகவே அது இஸ்லாமியக் கோட்பாடுகளுக்கு எதிரிடையானது" எனப் பாகிஸ்தான் அரசு சார்பில் வாதிடப்பட்டது. பாகிஸ்தான் அரசின் இந்தப் போக்கின் விளைவாகக் கிழக்கு வங்க மக்கள் கொதித்தெழுந்தனர்.

"கிழக்கு வங்கத்தில் நடந்த மொழிப் போராட்டம் இஸ்லாம் தர்மத்திற்கு விரோதமானது என்றும் இந்தியா மற்றும் கம்யூனிஸ்டுகளினால் தூண்டிவிடப்படுவது" என்றும் ஜின்னா குற்றம்சாட்டினார். அவருக்குப் பின்னால் பாகிஸ்தானின் ஆட்சிப் பீடத்தில் ஏறிய ஒவ்வொருவரும் இதே குற்றச்சாட்டைத் திரும்ப திரும்பக் கூறினார்கள்.

மொழிப் போராட்டம் வலுக்கவே வேறு வழியில்லாமல் பாகிஸ்தான் அரசு 1952-ஆம் ஆண்டு, முதலாவது ஆட்சிமொழியாக உருதுவும் இரண்டாவது ஆட்சிமொழியாக வங்கமொழியும் விளங்குமென அறிவித்தது. வங்க மக்கள் இதனால் திருப்தியடையவில்லை.

1954-ஆம் ஆண்டில் கிழக்கு வங்கத்திற்கு மாநில சுயாட்சி அளிக்கும் வகையில் ஓர் அரசியல் சட்டம் உருவாக்கப்பட்டது. ஆனால் அது செயற்படுத்தப்படவேயில்லை.


ஜின்னாவின் நெருங்கிய சகாவும், முஸ்லீம் லீக்கின் பழம்பெரும் தலைவருமான குவாஜாமுகைதீன் பிரதமர் பதவியிலிருந்து திடீரென விலக்கப்பட்டார். ஒரு வங்காளி பிரதமராக இருப்பதை மேற்குப் பாகிஸ்தானிகள் சகித்துக் கொள்ளாததே இதற்குக் காரணமாகும்.

1966-ஆம் ஆண்டு, பிப்ரவரியில் லாகூரில் நடைபெற்ற அகில பாகிஸ்தான் தேசிய மாநாட்டில் ஆறு அம்சத் திட்டம் ஒன்றினை வங்கத் தலைவரான முஜுபுர்ரஹ்மான் அளித்தார். அவையாவன:-

1. கூட்டாட்சி முறையை நிறுவுதல், வயது வந்த வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டதும் சகல அதிகாரங்கள் கொண்டதுமான நாடாளுமன்றத்தை அமைத்தல்.

2. இராணுவம், வெளிநாட்டுத் துறை ஆகிய இரண்டே விஷயங்களைத் தவிர மற்ற அதிகாரங்கள் அனைத்தும் மாநில அரசுகளிடமே இருக்கும்.

3. பாகிஸ்தானின் இரு பிரிவுகளுக்கும் தனித்தனி நாணயச் செலாவணிமுறை இருக்கும். அல்லது, ஒரேமாதிரியான நாணயச் செலாவணிமுறை அமையுமானால் கிழக்கு வங்கத்திலிருந்து முதலீடு, மேற்குப் பாகிஸ்தான் செல்வதைத் தடுக்கப் போதுமான பாதுகாப்புகள் இருக்கவேண்டும்.



நதியைத் தாண்டிவரும் வங்க அகதிகள்



கடல் தாண்டிவரும் தமிழ் அகதிகள்



பாகிஸ்தான் படை வெறிக்குப் பலியான வங்காளிகள்



சிங்களப்படை வெறிக்குப் பலியான தமிழர்கள்



வங்க மக்களைக் காக்க விரையும் இந்தியப் படை



தமிழர்களை ஒடுக்க விரையும் இந்தியப் படை



வங்காளிகளுக்காகக் குரல் கொடுக்கும் இந்திரா



தமிழர்களை ஒடுக்கும் உடன்பாட்டில் கையெழுத்திடும் ராஜீவ்

**4. மத்திய அரசுக்கு வரி விதிக்கும் அதிகாரங்கள் கிடையாது. வரிவிதிப்பு, வசூலிப்பு அதிகாரங்கள் மாநிலங்களிடமே இருக்க வேண்டும். மாநில அரசுகளின் வருவாயிலிருந்து தனக்குத் தேவையானதை மத்திய அரசு பெற்றுக் கொள்ளும்.**
**5. வெளிநாடுகளுடன் வியாபார ஒப்பந்தங்கள் செய்துகொள்ளும் உரிமை மாநிலங்களுக்கு உண்டு. தாங்கள் ஈட்டும் அந்நியச் செலாவணி மீது முழுக்கட்டுப்பாடு மாநில அரசுகளுக்கு உண்டு.**
**6. பாதுகாப்பு விசயத்தில் கிழக்குப் பாகிஸ்தான் தன்னிறைவு பெற்றதாக இருக்க வேண்டும். கிழக்குப் பாகிஸ்தானில் ஆயுத உற்பத்திச் சாலை ஒன்றும் இராணுவப் பயிற்சிக் கல்லூரி ஒன்றும் கடற்படைத் தலைமைத் தளமும் அமையவேண்டும்.**

முஜிபூர் ரஹ்மானின் இத்திட்டத்தை மக்கள் கட்சித் தலைவரான பூட்டோவும் இராணுவத் தளபதிகளும் எதிர்த்தனர். எனவே உடன்பாடு ஏற்படவில்லை.

எனவே 1970ஆம் ஆண்டில் நடைபெற்ற தேர்தலில் இதனையே மக்கள முன்வைத்து முஜிபூரின் அவாமிலீக் கட்சி போட்டியிட்டு மகத்தான வெற்றிபெற்றது. பாகிஸ்தான் தேசிய சட்டமன்றத்திலுள்ள 308 இடங்களில் 168 இடங்களை அவாமிலீச் கைப்பற்றியது.

மீதமுள்ள 140 இடங்களை பூட்டோவின் கட்சியும் பிற கட்சிகளும் பகிர்ந்து கொண்டன. மேற்குப் பாகிஸ்தானில் 81 இடங்களைக் கைப்பற்றிய பூட்டோவின் கட்சியால் கிழக்குப் பாகிஸ்தானில் ஓர் இடத்தைக் கூடக் கைப்பற்ற முடியவில்லை.

கிழக்கு வங்க சட்டமன்றத்திற்குரிய 310 இடங்களில் 298 இடங்களை அவாமிலீக் கைப்பற்றியது. பூட்டோவின் கட்சியால் ஓர் இடத்தைக் கூடக் கைப்பற்ற முடியவில்லை.

பெரும்பான்மைக் கட்சித் தலைவர் என்ற முறையில் முஜிபூர் ரஹ்மான் பிரதமராவதைப் பூட்டோவும் இராணுவத் தளபதிகளும் விரும்பவில்லை. இதன் விளைவாகத் தேசியச் சட்டமன்றம் கூடாமலேயே ஒத்திப்போடப்பட்டது. வங்க மக்களின் உரிமை வேட்கையையும் அதை அடைய அவர்கள் கொண்டுள்ள மனவுறுதியையும் புரிந்துகொள்ளாத யாஃயாகான் கொடுமையான அடக்குமுறைகளை ஏவினார்.

பாகிஸ்தானின் இரு பகுதிகளுக்கிடையே இவ்வாறு மோதல் உருவாகிக் கொண்டிருந்த வேளையில் காஷ்மீர்ப் பிரச்சினையைப் பயன்படுத்தி இந்திய எதிர்ப்பு உணர்வை மேலும் தூண்டுவதற்குப் பூட்டோ முயற்சி செய்தார். அவாமிலீக் தலைவரான ஷேக் முஜிபூர் ரஹ்மான் இதை ஏற்கவில்லை. மாறாகத் **தமது கட்சி, அரசாங்கத்தை அமைக்கும் பட்சத்தில் காஷ்மீர் மற்றும் பராக்கா அணைப் பிரச்சினைகளுக்குச் சுமூகமான தீர்வுகாண முயற்சி செய்யும்**

**அண்டை நாடுகளுடன் நட்புறவு கொண்டு வாழும்** என்று அவர் அறிவித்தார். இந்தச் சூழ்நிலையில் தேசிய அரசியல் நிர்ணயசபை 1971 மார்ச் 3–ஆம் தேதி கூட இருந்தது. இக்கூட்டத்தைப் பூட்டோவின் கட்சி புறக்கணித்தது. இதைக் காரணமாகக் காட்டி இக்கூட்டத்தை யாஃயாகான் ஒத்திவைத்தார். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியல் நிர்ணய சபையின் கூட்டத்தினை ஜனநாயக விரோத வழியில் யாஃயாகான் ஒத்திவைத்தது கண்டு கிழக்கு வங்க மக்கள் ஆத்திரமடைந்தனர். முஜிபூர் ரஹ்மான் ஆணையின்படி ஒத்துழையாமை இயக்கத்தினைக் கிழக்கு வங்க மக்கள் தொடங்கினார்கள். மார்ச் 15ஆம் தேதி முதல் கிழக்கு வங்கம், வங்காள தேசம் என வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது. நாட்டின் நிர்வாகத்தைத் தாம் மேற்கொள்ளப் போவதாக முஜிபூர் ரஹ்மான் கூறினார். இதற்காக அவர் 35 அம்சங்கள் கொண்ட ஒரு திட்டத்தை அறிவித்தார். நிலைமை முற்றுவதைக் கண்ட பாகிஸ்தான் குடியரசுத் தலைவரான யாஃயாகான் மார்ச் 16ஆம் தேதி டாக்காவிற்குப் பறந்து வந்தார்.

முஜிபூர் ரஹ்மானுடன் பேச்சுவார்த்தையைத் தொடங்கினார். நிதானமாக நடந்த இந்தப் பேச்சுவார்த்தை மக்களின் பொறுமையைச் சோதித்தது. இதன் விளைவாக நாடெங்கும் பெரும் கலகங்கள் மூண்டன. வங்காளி அல்லாத பாகிஸ்தானியர்கள், மக்களால் தாக்கப்பட்டனர். இதற்குப் பதிலாக வங்காளிகளை இராணுவம் கொன்று குவித்தது. பாகிஸ்தான் குடியரசுத் தினமான மார்ச் 23ஆம் தேதி எதிர்ப்பு நாளாகக் கடைப்பிடிக்கப்பட்டது. அன்றைய தினம் கிழக்கு வங்கமெங்கும் வங்காள தேசக்கொடிகள் ஏற்றப்பட்டன. **ஜின்னாவின் படங்களும் பாகிஸ்தான் தேசியக் கொடிகளும் கொளுத்தப்பட்டன.** மார்ச் 23ஆம் தேதி வங்க மக்களுக்கு எதிரான அரச பயங்கரவாத நடவடிக்கைகளைப் பாகிஸ்தான் இராணுவம் தொடங்கியது.

அவாமிலீக் கட்சியைத் தடைசெய்வதாக யாஃயாகான் அறிவித்தார். முஜிபூர் ரஹ்மான் உட்பட ஏராளமான அவாமிலீக் தொண்டர்கள் சிறைப்பிடிக்கப்பட்டனர். பல தலைவர்கள் தப்பி இந்தியா வந்துசேர்ந்தனர். இதற்கிடையில் சுதந்திர வங்க வானொலியின் மூலம் வங்கதேசச் சுதந்திரப் பிரகடனத்தை முஜிபூர் ரஹ்மான் வெளியிட்டார். அத்துடன் வங்கத்திலுள்ள அந்நிய இராணுவத்தை முற்றிலுமாக விரட்டியடிக்கும் வரை போராடும்படி மக்களை அவர் வேண்டிக்கொண்டார்.

1971ஆம் ஆண்டு மார்ச் 28ஆம் தேதியன்று சுதந்திர வானொலி தற்காலிகச் சுதந்திர அரசு அமைக்கப்பட்டது பற்றி அறிவித்தது. மேஜர் ஜியாவுல் ரஹ்மான் தலைமையில் வங்கதேசத் தற்காலிகச் சுதந்திர அரசு நிறுவப்பட்டதாகவும் அது ஒலிபரப்பியது. புதிய அரசுக்கு அங்கீகாரம் அளிக்குமாறு உலக நாடுகளுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டது. ஏப்ரல் 10ஆம் தேதியன்று வங்கக் குடியரசின் புதிய அரசு பதவியேற்றது. முஜிப் நகர் என்னுமிடத்தில் தலைநகரம் அமைக்கப்பட்டது. புதிய பிரதமர் தாஜுதீன் அகமத் மேற்குப் பாகிஸ்தானுக்கு எதிரான போராட்டத்தில் வங்கதேசம் ஈடுபட்டிருப்பதாக அறிவித்தார். மோனிஷிங்

என்பவர் தலைமையில் கம்யூனிஸ்டுக் கட்சியும், பேராசிரியர் முபத் அகமத் தலைமையில் இயங்கிய தேசிய அவாமி கட்சியும், **மௌலானா பஷானியின்** தலைமையில் இயங்கிய சீன ஆதரவுத் தேசியக் கட்சியும் சுதந்திர அரசுக்கு ஆதரவு அளிப்பதாக அறிவித்தன.

வங்க மக்களின் சுயநிர்ணய உரிமையினை அதுவரை எதிர்த்து வந்த மௌலானா பஷானி, மக்களின் உணர்ச்சிக் கொந்தளிப்பைக் கண்டு தம்முடைய போக்கினை அடியோடு மாற்றிக் கொண்டார். சுதந்திர வங்க அரசை அங்கீகரிக்கும்படி அமெரிக்கக் குடியரசுத் தலைவர் **நிக்சன்,** சீனப் பிரதமர் **சூ.என்.லாய்** ஆகியோருக்கு வேண்டுகோள் விடுத்தார். ஜனநாயகத்தில் நம்பிக்கை உள்ள நாடுகள் வங்கக் குடியரசிற்கு அங்கீகாரம் அளிக்கவேண்டும் என்றும் அவர் வேண்டினார். வங்காளதேச தேசிய காங்கிரசும் புதிய அரசுக்கு ஆதரவு கொடுத்தது. ஆக வங்கதேசத்தில் உள்ள முக்கிய அரசியல் கட்சிகள் யாவும் சுதந்திரப் பிரகடனத்தை வரவேற்றன.

## சுதந்திரத்திற்குப் பின் தமிழர் நிலை:

1948ஆம் ஆண்டு பிப்ரவரி 4-ஆம் நாள் சிங்களவரிடம் பிரிட்டிஷ் அரசு முழுமையான ஆட்சிப் பொறுப்பை வழங்கியது.

1948ஆம் ஆண்டு டிசம்பரில் இலங்கையில் உள்ள தமிழர்கள் மீது முதற்பாணம் தொடுக்கப்பட்டது. **இலங்கைக் குடியுரிமைச் சட்டம், இந்திய-பாகிஸ்தானிய குடியுரிமைச் சட்டம்** ஆகியவற்றைச் சிங்கள ஆட்சி கொண்டுவந்தது. இதன்மூலம் இலங்கையில் வாழ்ந்த தமிழர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் நாடற்றவர்களானார்கள்.

இச்சட்டத்தை எதிர்த்து இலங்கைத் தமிழர் காங்கிரசுக் கட்சியின் பொதுச் செயலாளராக இருந்த சா.ஜே.வே. செல்வநாயகம் நாடாளுமன்றத்தில் வாக்களித்தார். அத்துடன் அவர் நிற்கவில்லை. தமது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியையும் ராஜினாமா செய்தார்.

18-12-1949இல் தமிழரசுக் கட்சியை அவர் தொடங்கினார்.

1954இல் சிங்களமும் தமிழும் சமஉரிமையுடன் ஆட்சி மொழிகளாக்கப்படும் எனப் பிரதமர் ஜான் கொத்தலவாலா அறிவித்தார். சிங்கள வெறியர்கள் இதைக் கடுமையாக எதிர்த்தவுடன் அவரும் தமது போக்கை மாற்றிக்கொண்டார்.

இலங்கையில் 1956ஆம் ஆண்டுத் தேர்தலில் தமிழரசுக் கட்சி அமோக வெற்றி பெற்றது. போட்டியிட்ட 14 தொகுதிகளில் 10 தொகுதிகளைக் கைப்பற்றியது. தந்தை செல்வா வகுத்த கூட்டாட்சிக் கொள்கையைப் பெரும்பான்மையான தமிழர்கள் ஏற்றுக்கொண்டனர்.

1956இல் எஸ்டபிள்யு.ஆர். டி. பண்டாரநாயகா பிரதமரானார். 1956 ஜூன் 5ஆம் நாள் சிங்களம் மட்டுமே ஆட்சிமொழி என்ற சட்டத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றினார்.

இச்சட்டத்தை எதிர்த்துத் தமிழர்கள் அறப்போர் நடத்தினார்கள். உண்ணா நோன்பு இருந்தனர். இதன் விளைவாகச் சிங்களக் காடையர்களால் தாக்கப்பட்டனர்.

இலங்கை நாடாளுமன்றத்தில் தமிழ் உறுப்பினர்கள் அனைவரும் இச்சட்டத்தை எதிர்த்து வாக்களித்தனர்.

இச்சட்டத்தின் விளைவாகச் சிங்களர்—தமிழர் உறவு சீர்குலைந்தது. பிரதமர் பண்டாரநாயகா தமிழர் தலைவர் செல்வநாயகத்துடன் பேச்சு நடத்தினார். 1957இல் பண்டாரநாயகா—செல்வநாயகம் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. தமிழர் நிலப்பகுதிகளான வடக்கு—கிழக்கு மாநிலங்களைத் தமிழர்களே ஆளவும், தமிழை ஆட்சிமொழியாக்கவும் தமிழர் பகுதிகளில் சிங்களக் குடியேற்றம் தடுக்கப்படவும் இந்த ஒப்பந்தம் வழிவகுத்தது. ஆனால் புத்தபிக்குகளின் எதிர்ப்பின் விளைவாக இந்த ஒப்பந்தத்தைப் பண்டாரநாயகா கிழித்தெறிந்தார்.

1958ஆம் ஆண்டில் தமிழர்களுக்கு எதிராக மிகப்பெரிய வன்முறைக் கலவரம் நடைபெற்றது. ஓர் இலட்சத்திற்கு மேற்பட்ட தமிழர்கள் பாரம்பரியமாக வாழ்ந்த மண்ணைவிட்டு அகதிகளாக ஓட நேர்ந்தது. பெரும்பாலும் சிங்களவர்களுக்கு நடுவில் வாழ்ந்த தமிழர்களுக்கு எதிராகவே இந்தக் கலவரம் நடந்தது. பண்டாரநாயகாவின் இனவெறிபிடித்த பேச்சின் விளைவாகவே இந்தக் கலவரம் தூண்டிவிடப்பட்டது. ஆனால் அவராலேயே இதை அடக்கமுடியாமல் போயிற்று. இந்தக் கலவரங்களுக்குப் பிறகு தென்னிலங்கையில் தமிழர்கள் வாழ்வது இயலாததாயிற்று.

1961ஆம் ஆண்டில் சிங்கள ஆட்சிமொழிச் சட்டத்தை எதிர்த்துத் தமிழர்கள் அறப்போராட்டத்தில் ஈடுபட்டபொழுது இராணுவமும் போலீசும் தமிழர்களுக்கு எதிரான வன்முறையில் ஈடுபட்டன.

1970—ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் தமிழர்களுக்குத் தனி மாநில ஆட்சி, சிங்களவர்களுக்குத் தனி மாநில ஆட்சி, இரண்டும் இணைந்த மத்திய ஆட்சி, இவற்றை உள்ளடக்கிய கூட்டாட்சி அரசியலமைப்பு அமைப்பதை நோக்கமாகக் கொண்டு தமிழரசுக் கட்சி போட்டியிட்டு 13 இடங்களைக் கைப்பற்றியது. தமிழர் காங்கிரசு 3 இடங்களைக் கைப்பற்றியது.

திருமதி. பண்டாரநாயகாவின் தலைமையில் அமைந்த கூட்டு முன்னணி, மூன்றில் இருபங்கு இடங்களில் வெற்றிபெற்றது. 157 இடங்களில் 116 இடங்களைக் கைப்பற்றியது. ஆனால் **தமிழர் பகுதிகளான வடக்கு—கிழக்கு மாநிலங்களில் தமிழரசுக் கட்சியே பெரும்பான்மை இடங்களைக் கைப்பற்றியது.**

இலங்கையைக் குடியரசாக மாற்றுவதற்குப் புதிய அரசியல் நிர்ணய சபையை அமைக்கத் திருமதி. பண்டாரநாயகா முயற்சி செய்தார். 1970 சூலை 19இல் புதிய அரசியல் நிர்ணயசபை கூடியது. இக்கூட்டத்தில், செல்வநாயகம் தலைமையில் தமிழர் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். நாட்டைத் துண்டாடவேண்டும் என்று கேட்பதற்காக அவர்கள் செல்லவில்லை. மாறாகச் சிங்களரும் தமிழரும் இணைந்த கூட்டாட்சி வேண்டும் எனக் கேட்பதற்காகச் சென்றனர். அதற்காகக் கீழ்க்கண்ட திருத்தங்களை அரசியல் நிர்ணய சபையில் தாக்கல் செய்தனர். ஆனால் சிங்களர் அவற்றை ஏற்க மறுத்தனர்.

1. ஒற்றையாட்சி முறைக்குப் பதில் சமஷ்டி ஆட்சி முறை வேண்டும்.
2. அரசு மதமாகப் பௌத்தமதம் மட்டும் ஏற்கப்படுவதற்கு மாறாக, மதச்சார்பற்ற குடியரசாக இலங்கை விளங்கவேண்டும். புத்த, இந்து, இஸ்லாம், கிறிஸ்தவ மதங்கள் சமமாகப் பாவிக்கப்படவேண்டும்.
3. சிங்களம் மட்டுமே ஆட்சிமொழி என்பதற்குப் பதில் சிங்களமும்–தமிழும் ஆட்சி மொழிகளாக வேண்டும்.

மேற்கண்ட திருத்தங்களை ஏற்கச் சிங்களர் மறுத்த காரணத்தினால் தந்தை செல்வா தலைமையில் 1971 ஜுன் 28ஆம் தேதி தமிழர் பிரதிநிதிகள் அரசியல் நிர்ணய சபையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர். பிறகு அவர்கள் திரும்பவேயில்லை.

1972இல் உருவான இலங்கையின் அரசியல் சட்டத்திற்குத் தமிழர்கள் இசைவு தரவில்லை. தமிழர்களின் சம்மதமின்றி நிறைவேற்றப்பட்ட அரசியல் சட்டமே இலங்கையின் இன்றைய அரசியல் சட்டமாகும். எனவே, 1972 மே 25ஆம் தேதி புதிய அரசியல் சட்டத்தை எரிக்கும் இயக்கத்தைத் தமிழரசுக் கட்சி நடத்தியது.

1972ஆம் ஆண்டு அக்டோபர் 3ஆம் தேதி வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஓர் உரையை இலங்கை நாடாளுமன்றத்தில் தந்தை செல்வா ஆற்றினார்.

கடந்த 24 ஆண்டுகளில் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளை, அவர்களின் உரிமைகள் பறிக்கப்பட்டதையெல்லாம் தமது பேச்சில் விளக்கமாகச் சுட்டிக்காட்டி இறுதியாக அரசாங்கத்திற்குக் கீழ்க்கண்ட அறைகூவலை விடுத்தார்.

"1972ஆம் ஆண்டின் அரசியலமைப்பைத் தமிழ் மக்கள் ஏற்கவில்லை. தமிழ் மக்கள் விடுதலை பெற்ற மக்களாக வாழ விரும்புகிறார்கள்' என்ற இரண்டு அடிப்படைக் கொள்கைகளை முன்வைத்துத் தேர்தலில் போட்டியிட முன்வருமாறு அரசுக்குச் சவால்விட்டார்.

1972 அக்டோபர் 3ஆம் நாள் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை விட்டுத் தந்தை செல்வா விலகினார். ஆனால் அவரின் சவாலை ஏற்க அரசுக்குத் தைரியமில்லை. இரண்டு ஆண்டுக் காலத்திற்கு மேலாக இடைத்தேர்தலை நடத்தாது தள்ளிப்போட்டது. இறுதியில் வேறு வழியில்லாமல் 1975 பிப்ரவரி 6ஆம் நாள் தேர்தல் நடைபெற்றபொழுது தந்தை செல்வா அமோக வெற்றிபெற்றார். தாங்கள் விடுதலை பெற்ற மக்களாகவே வாழ விரும்புவதைத் தமிழர்கள் இதன்மூலம் ஐயந்திரிபற நிலைநாட்டினார்கள்.

அதன்பின்னர் இலங்கைப் பாராளுமன்றத்தில் தந்தை செல்வாவும் 12 தமிழர் கூட்டணி உறுப்பினர்களும் கூட்டாக ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்தார்கள். அத்தீர்மானத்தில் பின்வருமாறு கூறப்பட்டிருந்தது. "காங்கேசன் துறை இடைத் தேர்தலில் மக்களால் வழங்கப்பட்ட தீர்ப்பை, விடுதலைபெற்ற இறைமையுடைய மதச்சார்பற்ற சமதர்ம நாடான தமிழீழத்தை அமைப்பதற்குரிய ஆற்றலுரிமையாக ஏற்பதென இப்பேரவை தீர்மானிக்கிறது." ஆனால் இத்தீர்மானத்தைச் சிங்களர்கள் தோற்கடித்தார்கள்.

1972ஆம் ஆண்டிலிருந்துத் தமிழ் இளைஞர்கள் போலீசாரால் கைதுசெய்யப்பட்டனர். பல்கலைக் கழகத்தில் தமிழ் மாணவர்களுக்கு எதிரான பல்வேறு நடவடிக்கைகளை எதிர்த்த காரணத்திற்காகத் தமிழ் இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டுப் பல்வேறு சித்திரவதைகளுக்கு ஆளானார்கள்.

1974ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் போலீசு புகுந்துச் சுட்டது. இதன் விளைவாக 9 தமிழர்கள் கொல்லப்பட்டார்கள். போலீசாரின் கொடூரமான இந்த நடவடிக்கை தமிழர்கள் மனத்தில் ஆழமான வடுவை ஏற்படுத்தியது. இந்த நிகழ்ச்சியைப் பற்றி விசாரணை நடத்த ஒரு கமிஷன் அமைக்கவும் அரசாங்கம் மறுத்தது.

1976ஆம் ஆண்டு மே மாதம் 14ஆம் நாள் தமிழர் விடுதலைக் கூட்டணியின் முதல் மாநாடு வட்டுக்கோட்டையில் நடைபெற்றபொழுது **தமிழீழத் தனிநாடே தனது இலட்சியம்** என்று பிரகடனம் செய்தது.

எதிர்பாராத வகையில் ஈழத் தமிழர் வாழ்வில் பேரிடி விழுந்தது. ஈழத் தந்தை செல்வா 1977ஆம் ஆண்டு ஏப்ரல் 26ம் தேதி காலமானார்.

21.7.77இல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் தமிழீழக் கோரிக்கையை முன்வைத்துப் போட்டியிட்ட **தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழர்களுக்கான 19 தொகுதிகளில் 18 தொகுதிகளைக் கைப்பற்றி நாடாளுமன்றத்தில் பிரதான எதிர்க்கட்சி என்ற அந்தஸ்தைப் பெற்றது.** இதன் மூலம் தமிழீழக் கோரிக்கைக்குத் தமிழர்கள் ஒட்டுமொத்தமான ஆதரவளிக்கிறார்கள் என்பது உலகிற்கு எடுத்துக் காட்டப்பட்டது.

இதைத் தொடர்ந்து நடைபெற்ற மாவட்டசபைத் தேர்தல்களிலும் தமிழர் விடுதலைக் கூட்டணி மகத்தான வெற்றி பெற்றுத் தமிழர்களின் கோரிக்கைத் தமிழீழத் தாயகமே என்பதை நிலைநாட்டியது.

## கலவரங்கள்

1977ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் மேலும் ஓர் இனக்கலவரம் தமிழர்களுக்கு எதிராகத் தூண்டிவிடப்பட்டது. தனித் தமிழீழம் அமைவதற்கு ஆதரவாக வாக்களித்த ஒரே காரணத்திற்காகத் தமிழர்கள் தண்டிக்கப்பட்டார்கள்.

1977ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 18ஆம் தேதியன்று பிரதம மந்திரியாக இருந்த ஜெயவர்த்தனாவின் வெறியூட்டும் பேச்சு வானொலியில் அரைமணி நேரத்திற்கு ஒருமுறை ஒலிபரப்பப்பட்டது. தமிழர்களுக்கு எதிரான போர் இந்தப் பேச்சின் மூலம் தொடங்கியது. மலையகத் தமிழர்கள் கூட இதில் விட்டுவைக்கப்படவில்லை. அவர்களின் வீடுகள் கொளுத்தப்பட்டுச் சொத்துகள் கொள்ளையடிக்கப்பட்டன. தமிழ்ப் பெண்கள் பல்வேறு அவமானங்களுக்கு ஆளானார்கள். நூற்றுக்கணக்கான தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர். இரண்டு இலட்சங்களுக்கு மேற்பட்ட மலையகத் தமிழர்கள் உயிர்தப்பித் தமிழீழப் பகுதியில் தஞ்சம் புகுந்தார்கள். நூற்றுக்கு மேற்பட்ட இந்துக் கோயில்கள் அழிக்கப்பட்டன. மலையகப் பகுதியில் சிங்கள

வெறியர்கள் நடத்திய இந்தத் தாக்குதல்களை இராணுவம் வேடிக்கை பார்த்தது. வட மாநிலத்திலும் கிழக்கு மாநிலத்திலும் சிங்கள வெறியர்களோடு இராணுவமும் தமிழர்களுக்கு எதிரான தாக்குதல்களை நடத்தியது.

1979ஆம் ஆண்டில் தமிழ் இளைஞர்களை இராணுவமும் போலீசும் பயங்கரமாக வேட்டையாடின. தமிழ் இளைஞர்களைச் சித்திரவதைப்படுத்த பல சித்திரவதை முகாம்கள் திறக்கப்பட்டன. ஆயிரக் கணக்கான இளைஞர்கள் இந்த முகாம்களில் அடைக்கப்பட்டுக் கொடூரமான சித்திரவ்தைக்கு ஆளானார்கள். ஈழவேந்தன், ஐ.தி. சம்பந்தன் உட்படப் பல தலைவர்கள் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் சிறைப்படுத்தப்பட்டனர்.

1981ஆம் ஆண்டு மே மாதம் 31ஆம் தேதி சிங்களப் போலீசார் யாழ்ப்பாண நாடாளுமன்ற உறுப்பினர் யோகீஸ்வரன் வீட்டுக்குத் தீ வைத்துக் கொளுத்தினார்கள். தமிழர் விடுதலைக் கூட்டணியின் அலுவலகமும் கொளுத்தப்பட்டது. இந்துக் கோவில் ஒன்றும் எரித்து நாசம் செய்யப்பட்டது. 'ஈழ நாடு' பத்திரிகை அலுவலகமும் தீக்கிரையாகிக் கடும் சேதமடைந்தது. வழிநெடுகத் தென்படுபவர்களையெல்லாம் போலீசார் சுட்டனர். மறுநாள் ஜுன் 1ஆம் தேதி ஆசியாவின் மிகப்பெரிய நூலகங்களில் ஒன்றான யாழ் நூலகத்தைச் சிங்களப் போலீசும், இராணுவமும் எரித்து நாசம் செய்தன. 96,000க்கு மேற்பட்ட நூற்களும் **கலாயோகி திரு ஆனந்த குமாரசாமியின் அபூர்வ சேகரிப்பு ஏடுகளும் நூற்களும்** எரிந்து சாம்பலாயின. அமைச்சரான காமினி திசநாயகா முன்னிலையிலேயே இந்த அட்டூழியங்கள் அரங்கேறின.

1981ஆம் ஆண்டு ஜுன் மாதம் 2ஆம் தேதி மாவட்ட சபைகளுக்கான தேர்தல் நடந்தபொழுது மீண்டும் தமிழர்களுக்கு எதிரான கலவரம் திட்டமிட்டுத் தொடுக்கப்பட்டது. தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் திரு. அமிர்தலிங்கம் மற்றும் மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களும் கைது செய்யப்பட்டார்கள். வாக்குச் சாவடிக்கு முன்னால் நின்ற நான்கு தமிழர்கள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். ஆனாலும் தமிழ் மக்கள் உறுதியாகவும் கட்டுப்பாடாகவும் இருந்தனர். அதே ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மிகப்பெரிய இனக்கலவரம் மூண்டது. ஏராளமான தமிழர் கிராமங்கள் தாக்கப்பட்டன. மலையகத் தமிழர்களும் தாக்கப்பட்டார்கள். கொழும்பு நகரத்தில் தமிழர்களின் கடைகள் எரிக்கப்பட்டன. நாற்பதாயிரத்திற்கு மேற்பட்ட மலையகத் தமிழர்கள் அகதிகளாக்கப் பட்டார்கள்.

1983ஆம் ஆண்டில் வரலாறு காணாத படுகொலைகள் நடத்தப்பட்டன.

1983ஆம் ஆண்டு ஜுன் மாதத்தில் வவுனியாவிலும் திரிகோணமலையிலும் தமிழ்க் கிராமங்கள் சிங்கள வெறியர்களால் தொடர்ந்து தாக்கப்பட்டன. அதே ஆண்டு ஜுலை மாதத்தில் கொழும்பு நகரம் பற்றி எரிந்தது. மூவாயிரத்திற்கு மேற்பட்ட தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். மலையகத்திலும் மற்றும் பல இடங்களிலும் தமிழர்கள் தொடர்ந்துத் தாக்கப்பட்டார்கள். கொழும்பு **வெலிக்கடைச் சிறையில் தங்கத்துரை, குட்டிமணி, ஜெகன்** உட்பட

53 தமிழ்த் தலைவர்கள் கொடூரமான முறையில் கொலை செய்யப்பட்டார்கள். இக்கலவரங்களின் விளைவாக ஓர் இலட்சத்திற்கு மேற்பட்ட தமிழர்கள் அகதிகளானார்கள்

1984ஆம் ஆண்டிலிருந்து தமிழர்கள் வாழும் பகுதிகளில் ஏராளமான இராணுவ முகாம்கள் திறக்கப்பட்டன. தமிழர்கள் தங்கள் சொந்த மண்ணிலேயே பாதுகாப்பாக வாழ முடியாத சூழ்நிலை ஏற்படுத்தப்பட்டது.

வங்க மக்களின் ஆதரவைப்பெற்ற அவாமிலீக் கட்சியை யா∴யாகான் தடைசெய்ததைப் போல இலங்கையிலும் பிரிவினைத் தடைச்சட்டம் கொண்டுவந்து தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் பதவிகளை ஜெயவர்த்தனா பறித்தார். இராணுவ அடக்குமுறைகளின் காரணமாகத் தமிழர் விடுதலைக் கூட்டணியும் பிற தமிழர் அமைப்புகளும் செயல்பட முடியாமல் முடக்கப்பட்டன. ஈழப் போராளிகளின் இயக்கத் தலைவர்களின் தலைகளுக்கு விலைவைத்து வேட்டையாடியது இலங்கை அரசு.

சுதந்திர வங்கக் கோரிக்கைக்கு ஆதரவளித்த ஒரே காரணத்திற்காக வங்க மக்கள் மீது பாகிஸ்தான் இராணுவத்தை ஏவிவிட்டார் யா∴யாகான். அதைப்போலவே சுதந்திரத் தமிழீழக் கோரிக்கைக்கு ஆதரவளித்தார்கள் என்பதற்காகத் தமிழர்கள் மீது சிங்கள இராணுவத்தை ஏவினார் ஜெயவர்த்தனா.

சட்டத்திற்குட்பட்ட வழிகளிலும் பேச்சுவார்த்தைகள் மூலமும் தங்கள் கோரிக்கைகளை அடைய முயன்ற வங்க மக்களுக்கு அவற்றை மறுத்தார் யா∴யாகான். அறப்போராட்டங்கள் மூலமும் பேச்சுவார்த்தைகள் மூலமும் தங்கள் கோரிக்கைகளை அடைய முயன்ற தமிழர்களுக்கு அதை மறுத்தார் ஜெயவர்த்தனா.

ஜெயவர்த்தனாவுக்குப் பிறகு குடியரசுத் தலைவரான பிரேமதாசாவும் அவர் வழியையே பின்பற்றினார். இனப் பிரச்சினைக்கு அமைதியான வழியில் தீர்வு காண்பதில் அவர் உண்மையாக இருக்கவில்லை. விடுதலைப் புலிகளுடன் பல மாதங்கள் அவர் பேச்சு நடத்தினார் என்றாலும் அடிப்படையான கோரிக்கைகள் எவற்றையும் நிறைவேற்றாமல் அவர் காலம் கடத்தியே வந்தார்.

இந்திய அமைதிப்படை வெளியேறவேண்டும் என்று அவர் வற்புறுத்தினாலும் அந்த அமைதிப்படையினால் போலியான தேர்தல் நடத்தி அதன் மூலம் அமைக்கப்பட்ட வட - கிழக்கு மாகாண கவுன்சிலைக் கலைக்க மறுத்தார். அதைப்போல இலங்கை அரசியலமைப்புச் சட்டத்தின் 6வது பிரிவை திரும்பப்பெறுவதற்கும் அவர் மறுத்தார்.

மாகாண கவுன்சிலைக் கலைப்பதாகவும் புலிகளிடம் அவர் கொடுத்த வாக்குறுதியை இறுதி வரை நிறைவேற்றவில்லை. பல மாதங்கள் பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டே அதே காலக்கட்டத்தில் தென் பகுதியில் இயங்கிய போராட்டத்தை ஒடுக்குவதில் தீவிர கவனம் செலுத்தினார். 60000க்கு மேற்பட்ட இளைஞர்களும் யுவதிகளும் சிங்கள இராணுவத்தினால் சுட்டுக் கொல்லப்பட்டனர். ஜே.வி.பி. இயக்கத்தை முற்றிலுமாக ஒழிப்பதற்கு இராணுவத்தையே முழுமையாகப் பயன்படுத்தவேண்டியிருந்தது. அந்தக் காலக்கட்டத்தில் புலிகளுடன் மோதலைத் தவிர்க்கவே பிரேமதாசா விரும்பினார். ஒரே

நேரத்தில் இரு முனைகளிலும் போராட முடியாது என்ற காரணத்தினாலும் பேச்சுவார்த்தை நாடகத்தை நடத்திக்கொண்டிருந்தார். ஜே.வி.பி. இயக்கத்தை அடக்கியவுடன் தமிழர் பகுதிகளில் புதிது புதிதாக இராணுவ முகாம்கள் திறக்கப்பட்டன. புலிகளுக்கு எதிரான பிற போராளி இயக்கங்களுக்குப் பயிற்சியும் ஆயுதங்களும் அளிக்கப்பட்டன. தமிழர் பகுதிகளில் சிங்களப் போலிசார்கள் கொண்ட புதிய போலிஸ் நிலையங்கள் திறக்கப்பட்டன. அகதிகள் மறுவாழ்வு என்ற பெயரில் தமிழர் பகுதிகளில் திட்டமிட்டச் சிங்களக் குடியேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன.

தமிழீழக் கோரிக்கையைக் கைவிடுவதாகவும் ஆனால் தமிழ் மக்களின் நியாயமான உரிமைகளை ஏற்றுக்கொள்ளும் வகையில் மாற்றுத் தீர்வுத் திட்டம் ஒன்றை அமைக்குமாறும் அரசை விடுதலைப் புலிகள் வேண்டிக் கொண்ட போதிலும் பிரேமதாசா அதைத் தவிர்த்தார். புதிய தீர்வுத் திட்டம் எதையும் அவர் முன்மொழியவில்லை. மேலும் மாகாண சபை கலைக்கப்பட்டுப் புதிய தேர்தல் சர்வதேசப் பார்வையாளர்கள் முன்னிலையில் நடத்தினால் அந்தத் தேர்தலில் பங்கேற்பதாகப் புலிகள் கூறி அதற்காக விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி என்ற பெயரில் அரசியல் கட்சி ஒன்றையும் தொடங்கினார்கள். அப்போதுதான் தமிழ் மக்களின் உண்மையான பிரதிநிதிகள் தாங்கள்தான் என்பதை நிருபிக்கமுடியும் எனப் புலிகள் கூறினார்கள். ஆனால் அந்த யோசனையையும் பிரேமதாசா ஏற்கவில்லை. அதேவேளையில் இலங்கையின் அரசியல் சட்ட வரம்புக்கு அப்பாற்பட்ட தீர்வு எதையும் தான் பரிசீலிக்க முடியாது என்றும் தேர்தலுக்கு முன்னால் புலிகள் ஆயுதங்களை ஒப்படைக்கவேண்டும் என்றும் நிபந்தனைகள் விதித்தார்.

வெளிநாடுகளில் இருந்து ஏராளமான நவீன ஆயுதங்களையும் விமானங்களையும் பீரங்கிப் படகுகளையும் இறக்குமதி செய்துக் குவித்தார். சிங்கள இராணுவமும் போலிசும் விடுதலைப் புலிகளை ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளில் ஈடுபட்டன. இதன் விளைவாகவே பேச்சுவார்த்தைகள் முறிந்தன. 1990ஆம் ஆண்டு ஜூன் முதல் வாரத்தில் இரண்டாம் ஈழப்போர் தொடங்கிற்று.

பெட்ரோல் மண்ணெண்ணெய், மருந்துகள், உரங்கள் மற்றும் பல்வேறு அத்தியாவசியப் பண்டங்கள் தமிழர் பகுதிகளுக்குக் கொண்டுபோவதற்குத் தடை விதிக்கப்பட்டது. விமானத் தாக்குதல்கள் தீவிரப்படுத்தப்பட்டன. மின்சாரம், தொலைபேசி, தண்ணீர் ஆகியவை நிறுத்தப்பட்டன. இதன் விளைவாக ஏராளமான மக்கள் சாக நேர்ந்தது. நிபந்தனையில்லாத பேச்சுவார்த்தைக்குத் தயார் எனப் புலிகள் அறிவித்தபோதிலும் கூட ஆயுதங்களை ஒப்படைக்கவேண்டும் என்று பிரேமதாசா வற்புறுத்தினார். இந்தக் காலக் கட்டத்தில் பிரேமதாசா படுகொலை செய்யப்பட்டார். இதற்கான பழி புலிகள் மீது சுமத்தப்பட்டது. ஆனால் இதைப்பற்றிய உண்மைகளைக் கண்டறிய அமைக்கப்பட்ட விசாரணைக் கமிஷன் இந்தக் கொலைக்கும் விடுதலைப் புலிகளுக்கும் தொடர்பு இல்லை என்று திட்டவட்டமாகக் கூறியது.

1994ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் நடைபெற்ற குடியரசுத் தலைவர் தேர்தலின்போது சந்திரிகா எப்பாடுபட்டாகிலும் அமைதியைக் கொண்டுவரப் போவதாகவும் நிபந்தனையற்ற வகையில் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்போவதாகவும் அறிவித்தார்.

அதே காலக்கட்டத்தில் ஒருவார காலத்திற்குப் போரை நிறுத்திவைப்பதாக விடுதலைப் புலிகள் தாமாகவே முன்வந்து அறிவித்தனர். சந்திரிகா உண்மையில் சமாதானத்தைக் கொண்டுவருவார் என்ற நம்பிக்கையில் தமிழர்கள் பெருவாரியான வாக்குகள் அளித்து அவரை வெற்றிபெற வைத்தார்கள். அதற்குப் பிறகு விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தையைச் சந்திரிகா தொடங்கினார். அவர் அனுப்பிய தூதுக் குழுவினர் அனுபவமற்ற அதிகாரிகளாக இருந்தார்கள். முடிவெடுக்கும் அதிகாரத்தையும் அவர்களுக்குச் சந்திரிகா அளிக்கவில்லை. இருந்தாலும் அந்தப் பேச்சுவார்த்தை தொடர்ந்தது. இதன் விளைவாகப் போர்நிறுத்த உடன்பாடு முதலில் ஏற்பட்டது.

பொருளாதாரத் தடையினால் தமிழர்கள் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்களின் பிரச்சினைகளை முதலில் தீர்க்கவேண்டும் எனப் புலிகள் வற்புறுத்தினார்கள். இதுபற்றி சந்திரிகாவும் பிரபாகரனும் கிட்டத்தட்ட 40க்கு மேற்பட்ட கடிதங்களைப் பரிமாறிக் கொண்டார்கள். அரசியல் தீர்வு காண எத்தகைய திட்டத்தையும் சந்திரிகா முன்வைக்கவில்லை. ஆனால் அதே வேளையில் இராணுவத்திற்கான நிதி ஒதுக்கீட்டை அதிகரித்தார். வெடிப் பொருட்கள், ஆயுதங்கள் தவிர பாக்கி எல்லாப் பொருட்களையும் தமிழர் பகுதிக்குக் கொண்டுசெல்லலாம் எனச் செய்யப்பட்ட உடன்பாட்டினைச் சிங்கள இராணுவம் மதிக்க மறுத்துவிட்டது. சந்திரிகாவின் கவனத்திற்கு இந்தப் பிரச்சினையைப் புலிகள் கொண்டுசென்றார்கள். ஆனாலும் எந்தப் பலனும் கிட்டவில்லை. இறுதியில் உடன்பாட்டை நிறைவேற்றுவதற்கு ஐந்துவார கால அவகாசத்தைச் சிங்கள அரசுக்குப் புலிகள் அளித்தனர். ஐந்துவார கால அவகாசம் முடிந்ததே தவிரப் பொருளாதாரத் தடையை நீக்குவதற்குச் சந்திரிகா எந்த முயற்சியும் செய்யவில்லை. மாறாக விமானத் தாக்குதலைச் சிங்கள இராணுவம் தொடங்கியது. புலிகளின் பிடியிலிருந்துத் தமிழ் மக்களை விடுவிப்பதே தங்கள் நோக்கம் எனச் சந்திரிகா அறிவித்தார். இரு பெரும் தாக்குதல்களை இராணுவம் தொடுத்தது. இதன் விளைவாக மூன்று இலட்சங்களுக்கு மேற்பட்ட தமிழர்கள் வீடுகளிலிருந்து அகதிகளாக வெளியேறினார்கள். இரண்டாவது தாக்குதலின்போது மேலும் இரண்டு இலட்சம் மக்கள் அகதிகளானார்கள்.

1983ஆம் ஆண்டிலிருந்து 8 இலட்சம் தமிழர்கள் இலங்கையிலிருந்து தப்பி வெளியேறி பிறநாடுகளில் அகதிகளாகத் தஞ்சம் புகுந்துள்ளனர். ஏறத்தாழ 60000க்கு மேற்பட்ட மக்கள் படுகொலை செய்யப்பட்டார்கள்.

1996ஆம் ஆண்டு, சனவரியில் சந்திரிகா அறிவித்த தீர்வுத் திட்டம் தமிழர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றவில்லை. தொடர்ந்து இந்தத் தீர்வுத் திட்டம் நீர்மைப்படுத்தப்பட்டது.

இராணுவ ரீதியாக பல வெற்றிகளை விடுதலைப் புலிகள் அடைந்து இறுதியாக 1999ஆம் ஆண்டு ஏப்ரலில் யானையிரவு முகாமைக் கைப்பற்றி யாழ்ப்பாணத்தைச் சுற்றிவளைத்தபோது மற்றொரு தீர்வுத் திட்டத்தை அவசர அவசரமாகத் தயாரித்து நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்குச் சந்திரிகா செய்த முயற்சிகள் படுதோல்வியடைந்துவிட்டன.

# 5. வங்கப் பிரச்சினையில் இந்திய அரசியல் கட்சிகளின் பங்கு

இந்தியாவிலுள்ள எல்லா அரசியல் கட்சிகளும் வங்க விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தன. ஜனசங்கம் (பிற்காலத்தில் பாரதிய ஜனதாக்கட்சி), இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி, இந்திய மார்க்கிஸ்ட் கம்யூனிஸ்டுக் கட்சி, இந்திய சோஷலிஸ்ட் கட்சி போன்ற கட்சிகள் மத்திய அரசைக் கடுமையாகக் குறை கூறின. வங்கதேச விடுதலைப் போராட்டத்திற்கு மத்திய அரசு வெறும் வாயளவில் அனுதாபம் தெரிவிக்கிறதே தவிர உருப்படியான உதவி எதையும் செய்யவில்லையென அவை குற்றம் சாட்டின. இந்திய இராணுவத்தின் நேரடி உதவி மட்டுமே வங்க விடுதலை வீரர்களுக்குப் பயன்படுமே தவிர வெறும் நல்லெண்ணம் மட்டும் எவ்விதத்திலும் உதவாது என இக்கட்சிகள் கருதின. இந்திய அரசியலில் வங்கதேசப் பிரச்சினை ஒரு முக்கியப் பிரச்சினையாகத் திகழ்ந்தது.

ஆனால் ஆரம்பக்கட்டத்தில் வங்கதேச மக்களின் உரிமைப் போராட்டத்தை இந்தியாவிலுள்ள கட்சிகள் பலவும் சரியாக மதிப்பீடு செய்யத் தவறிவிட்டன. இந்தப் பிரச்சினை பாகிஸ்தானின் உள்நாட்டுப் பிரச்சினை; இந்தியாவுக்கு எதிராக ஒரு போரைத் தொடங்குவதற்காக இப்பிரச்சினையைப் பாகிஸ்தான் அரசு உருவாக்கி இருக்கிறது என ஜனசங்கம் கருதியது. ஆனால் கிழக்கு வங்கத்தின் மீது பாகிஸ்தான் இராணுவம் ஏவிவிடப்பட்டதைத் தொடர்ந்து முஜிபுர் ரஹ்மான் சுதந்திரப் பிரகடனத்தை வெளியிட்டதும் ஜனசங்கம் தன்னுடைய நிலையை அடியோடு மாற்றிக் கொண்டது. "பாகிஸ்தானுடன் நட்புறவு கொள்ள விரும்பியே இந்திய அரசு யதார்த்த நிலையை உணர மறுக்கிறது. வங்க தேசத்திற்கு உதவி செய்யத் தயங்குகிறது" என ஜனசங்கம் குற்றம் சாட்டியது.

வங்கதேசச் சுதந்திர அரசுக்கு இந்திய அரசு உடனடியாக அங்கீகாரம் அளிக்கவேண்டுமென வற்புறுத்திப் புதுடெல்லியில் மே 24 ஆம் தேதி ஜனசங்கம் பிரம்மாண்டமான ஆர்ப்பாட்டத்தை நடத்தியது. இந்திய நாடாளுமன்றத்தில் பேசிய ஜனசங்கத் தலைவர் **வாஜ்பாய்** பின்வருமாறு முழங்கினார். "கிழக்கு வங்கத்தில் நடைபெறும் இனப்படுகொலையை உடனே நிறுத்தவேண்டும் என்று பாகிஸ்தானை இந்திய அரசு எச்சரிக்கவேண்டும். இந்தியாவுக்குத் தொடர்ந்து அகதிகள் வருவது பெரும் பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்திவிடும். இந்தப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாண வேண்டுமெனப் பிரதமர் இந்திரா சொல்லுவது மெத்தனப் போக்காகும். போரைத் தவிர இதற்குப் பரிகாரம் இல்லையென்று சொன்னால் அதற்கு ஏன் இந்தியா தயாராகக்கூடாது. போர் என்றால் நிறையச் செலவாகும் என்பதை நான் அறியாதவன் அல்லன். ஆனால் கோடிக்கணக்கான அகதிகள் வந்துக் குவிந்து அதனால் நமக்கு ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியை விடப் போரினால் ஏற்பட்டுள்ள நெருக்கடி குறைவாகவே இருக்கும். இந்தியாவுடன் நட்புறவு கொண்ட சுதந்திர வங்கதேசம்

அமைவதைத் தவிர இப்பிரச்சினையைத் தீர்க்க வேறு பரிகாரமில்லை. சுதந்திர வங்கம் அமைந்தாலொழிய வங்க அகதிகள் தங்கள் நாட்டிற்குத் திரும்பிப் போக மாட்டார்கள். இத்தகைய தீர்வுக்குப் பாகிஸ்தான் ஒருபொழுதும் ஒப்புக்கொள்ளாது. எனவே இப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாணப் போவதாக இந்திய அரசு சொல்லுவது நடைமுறைக்கு ஒவ்வாததாகும். பாகிஸ்தான் சிதறிக் கொண்டிருக்கும் வரலாற்றுப் பூர்வமான காலக்கட்டத்தில் அதற்குப் பாதகமான எதையும் இந்திய அரசு செய்யக்கூடாது. இந்தச் சூழ்நிலையை மேலும் வளர்ப்பதுதான் இந்திய அரசின் கடமையாகும்" என்றார்.

1971ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் வங்கதேசப் பிரச்சினைக்காகப் புதுடில்லியில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் பேசிய **ஆசாரியா கிருபளானி, எம்.சி.சக்ளா, எம்.எல். சோந்தி** போன்ற பல தலைவர்கள் "உலக நாடுகளை எதிர்பார்க்காமல் சுதந்திர வங்கம் அமைவதற்கு இந்திய அரசு உதவி செய்ய வேண்டுமென" வற்புறுத்தினர்.

இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி வங்கதேச விடுதலைப் போராட்டத்தை முழுமையாக ஆதரித்தது. 1971 மார்ச் 23ஆம் தேதி கல்கத்தாவில் பிரம்மாண்டமான ஒரு பேரணியைக் கம்யூனிஸ்டுக் கட்சி நடத்தி வங்கதேசப் போராட்டத்திற்கு ஆதரவினைத் தெரிவித்தது. அக்கட்சியின் தேசியக்குழு ஏப்ரலில் கூடி **"வங்க விடுதலைப் போராட்டத்திற்கு ஆயுத உதவி உட்படச் சகல உதவிகளும் அளிக்கும்படி இந்திய அரசையும் மக்களையும் வேண்டிக்கொண்டது".**

புதுடில்லியில் அமெரிக்கத் தூதுவர் அலுவலகத்திற்கு முன்பு ஜூன் 28ஆம் தேதி மாபெரும் ஆர்ப்பாட்டத்தையும் கம்யூனிஸ்டுக் கட்சி நடத்தியது.

வங்கச் சுதந்திர அரசை அங்கீகரிக்கும்படி இந்திய அரசை வற்புறுத்தியும் பாகிஸ்தானுக்கு ஆயுத உதவி செய்யும் அமெரிக்காவைக் கண்டித்தும் நாடெங்கும் ஆர்ப்பாட்டங்களை அக்கட்சி நடத்தியது.

## பிரஜா–சோஷலிஸ்ட் கட்சி

வங்க விடுதலைப் போராட்டத்தைப் பிரஜா–சோஷலிஸ்டுக் கட்சி தீவிரமாக ஆதரித்தது. அக்கட்சியின் பொதுச் செயலாளரான **பிரேம்பாசின்** பின்வரும் அறிக்கையை வெளியிட்டார்(14–3–1971).

"தங்களது ஜனநாயக உரிமைகளுக்காகப் போராடும் வங்க மக்களுக்கு இந்தியா வாயளவில் அனுதாபம் மட்டும் தெரிவித்தால் போதாது. தனது எல்லைக்கு அருகிலேயே இன்னொரு வியட்நாம் உருவாவதை இந்தியா அனுமதிக்கக்கூடாது".

"மனிதாபிமான உணர்வோடு வங்கதேச மக்களுக்குச் சகலவித உதவியையும் இந்தியா அளிக்கவேண்டும்" என இக்கட்சி வலியுறுத்தியது. "வங்கதேசத்தின் பாதுகாப்பைப் பொறுத்தது இந்தியாவின் பாதுகாப்பு" என்பதையும் அது வலியுறுத்தத் தவறவில்லை. இந்திய அரசு இப்பிரச்சினையைக் கையாண்ட விதத்தை இக்கட்சி கடுமையாகக் குறைகூறியது. வங்க பிரச்சினையைத் தீர்க்க உலக அரசுகள் ஒருபொழுதும் உதவப் போவதில்லை. இந்தியா நேரடியாகப் பாதிக்கப்பட்ட நாடாகும்.

இது பாகிஸ்தானின் உள்நாட்டுப் பிரச்சினை என மற்ற நாடுகள் கூறினாலும் இந்தியா அப்படிக்கூறக்கூடாது. ஏனெனில் இலட்சக்கணக்கில் தப்பி வந்திருக்கும் வங்க அகதிகளுக்கு உதவி வரும் இந்தியா அவ்வளவு எளிதில் தனது பொறுப்பபைத் தட்டிக்கழிக்க முடியாது. இவ்வாறு இக்கட்சியின் அதிகாரப்பூர்வ ஏடான **'ஜனதா'** தனது 16.5.1971 இதழில் குறிப்பிட்டது.

## மார்க்சிஸ்டுக் கம்யூனிஸ்டுக் கட்சி

இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டுக் கட்சியும் வங்க விடுதலைப் போராட்டத்தைத் தீவிரமாக ஆதரித்தது. 1971 மார்ச் 27ஆம் தேதியன்று இக்கட்சியின் பொதுச் செயலாளரான **பி. சுந்தரய்யா** வங்க மக்களின் போராட்டத்திற்குச் சகல உதவிகளும் அளிக்கும்படி இந்திய அரசையும் மக்களையும் வேண்டிக்கொண்டார்.

மார்ச் 23ஆம் தேதி கல்கத்தாவில் மாபெரும் பேரணி ஒன்றினை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைமையிலான ஐக்கிய முன்னணி நடத்தியது. வங்கதேசத்தின் சகோதரர்களுக்குச் சகல ஆதரவும் தருவதாக இப்பேரணி உறுதி கூறியது. மேலும் வங்க விடுதலை வீரர்களுக்கு ஆயுத உதவி அளிப்பதோடு சுதந்திர அரசை இந்தியா அங்கீகரிக்க வேண்டும் என்றும் அது வற்புறுத்தியது. இந்திய மக்கள் தாராளமாக உதவிகள் செய்யும் விதத்தில் வங்க எல்லையை முழுமையாகத் திறந்துவிடவேண்டும் என்றும் இப்பேரணி வற்புறுத்தியது.

இக்கட்சியின் மத்திய குழு ஏப்ரலில் நிறைவேற்றிய தீர்மானத்தில், இந்திய அரசின் மெத்தனப் போக்கைக் கடுமையாகச் சாடியது. "வெறும் வாயளவில் அனுதாபம் தெரிவிப்பது பயனற்றது. சுதந்திர அரசை உடனடியாக அங்கீகரிப்பதோடு அதற்குத் தேவையான சகல உதவிகளையும் இந்தியா செய்யவேண்டும்" என்று இடித்துரைத்தது.

யாஃயாகானின் இராணுவ ஆட்சி, கிழக்கு வங்கத்தை நடத்தும் முறைக்கும் இந்திராவின் ஆட்சி, மேற்கு வங்கத்தை நடத்தும் முறைக்கும் வேறுபாடு இல்லை என இக்கட்சி கூறியது. எனவேதான் இக்கட்சி "இந்திராவும் யாஃயாகானும் ஒன்றே" என்ற கோஷத்தை எழுப்பியது.

மேற்கு வங்க மார்க்சிஸ்ட் கட்சித் தலைவரான **ஜோதிபாசு** பின்வருமாறு கூறினார். "மேற்கு வங்க மக்களின் கோரிக்கைகளை மத்திய ரிசர்வ் போலீசை வைத்து ஒடுக்கும் இந்திரா ஆட்சி, கிழக்கு வங்க மக்களின் போராட்டத்தை ஆதரித்துக் கூக்குரல் எழுப்புவது பித்தலாட்டமாகும்" என்றார்.

"இந்திராவின் பிற்போக்கு அரசு வங்க மக்களின் நியாயமான போராட்டத்திற்கு நிச்சயமாக உதவப் போவதில்லை" என இக்கட்சி கருதியது. எனவே "வங்கதேச விடுதலைப் போராட்டத்திற்கு உதவும் இயக்கத்தின் ஓர் அங்கமாக இந்திய அரசையும் எதிர்த்துப் போராட வேண்டும்" என்றும் அக்கட்சி அறைகூவல் விடுத்தது.

சுதந்திரக்கட்சியும் அதன் தலைவர் இராஜாஜியும் மட்டுமே வங்க விடுதலைப் போராட்டத்தை எதிர்த்துக் கருத்துத் தெரிவித்தனர்.

# தமிழீழப் பிரச்சினையில் இந்திய அரசியல் கட்சிகளின் பங்கு

வங்கதேச மக்களின் உரிமைப் போராட்டத்தின் ஆரம்பக்கட்டத்தில் இந்தியாவிலுள்ள கட்சிகள் பலவும் அதுபற்றிச் சரியாக மதிப்பீடு செய்யத் தவறியதைப் போலவே இலங்கைத் தமிழர் பிரச்சினை பற்றியும் அகில இந்தியக் கட்சிகள் பலவும் ஆரம்பக் கட்டத்தில் சரியாக மதிப்பீடு செய்யவில்லை. இந்தப் பிரச்சினை இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினை என்றும் அதில் இந்தியா தலையிட முடியாது என்றும் இக்கட்சிகள் கூறின.

1981ஆம் ஆண்டு மே, ஜுன் மாதங்களில் இலங்கையில் தமிழருக்கு எதிரான வன்முறை வெறியாட்டங்கள் நடந்தபொழுதும் அதன் கடுமையை இந்திய மக்களும் கட்சிகளும் முழுமையாக உணரவில்லை. திட்டமிட்ட இனப்படுகொலை ஆரம்பமாகிவிட்டதை உணர்ந்துகொள்ள இந்தியாவிலுள்ள கட்சிகள் தவறிவிட்டன.

தமிழர் தேசிய இயக்கத் தலைவர் நெடுமாறன், இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர் எம். கலியாணசுந்தரம் ஆகியோர் இலங்கை சென்று உண்மைகளை அறிந்துவந்துச் சொன்னபொழுது தமிழகம் அதிர்ச்சி அடைந்தது. இவ்விருவரின் அறிக்கைகளையொட்டி 18.10.81 அன்று தமிழக முதலமைச்சர் மாண்புமிகு **எம்.ஜி. இராமச்சந்திரன்** அவர்கள் அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தைக் கூட்டினார். இக்கூட்டத்தில் இந்தியப் பிரதமரைச் சந்திக்க அனைத்துக் கட்சிக்குழு செல்வது என முடிவு செய்யப்பட்டது.

7–12–81 அன்று மாலை 4.30க்குப் புதுடில்லி நாடாளுமன்றக் கட்டடத்தில் பிரதமர் இந்திராவைத் தமிழக அனைத்துக்கட்சித் தூதுக்குழு சந்தித்தது. இக்குழுவினர் இலங்கையில் தமிழர்களின் அவல நிலையைப் பற்றிப் பிரதமரிடம் விளக்கியதோடு மனு ஒன்றினையும் தந்தனர். **தமிழக முதலமைச்சர் தலைமையில் அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகளையும் உள்ளடக்கிய தூதுக்குழு இந்தியப் பிரதமரைச் சந்தித்துப் பேசியது இதுதான் முதல் முறையாகும்.** இலங்கைத் தமிழர் துயர்துடைக்கத் தமிழகம் ஒன்றுபட்டு நின்று இந்திய அரசை வலியுறுத்தியது வரலாற்றில் இடம் பெறத்தக்க நிகழ்ச்சியாகும்.

இந்தப் பிரச்சினையின் கடுமையைத் தமிழகம் உணர்ந்த அளவுக்கு இந்தியாவின் பிறபகுதி மக்கள் உணரவில்லை. 1981ஆம் ஆண்டே இந்திய அரசு போதுமான நடவடிக்கைகளை எடுத்திருக்குமானால் 1983ஆம் ஆண்டுக் கலவரத்தையும் உயிரிழப்புகளையும் தவிர்த்திருக்க முடியும். அவ்வாறு செய்ய இந்திய அரசு தவறிவிட்டது.

1983ஆம் ஆண்டு ஜுலை மாதத்தில் பல்லாயிரக் கணக்கான தமிழர்கள் படுகொலை செய்யப்பட்ட பிறகும், தமிழர்கள்மீது சிங்கள இராணுவம் ஏவி விடப்பட்டதைத் தொடர்ந்து பல்லாயிரக் கணக்கான அகதிகள், இந்தியாவுக்கு வரத் தொடங்கிய பிறகுமே இப்பிரச்சினையின் கடுமையினை அகில இந்தியக் கட்சிகள் பலவும் உணரத் தொடங்கின.

இந்திரா காங்கிரசுக் கட்சி, ஜனதா கட்சி, பாரீய ஜனதா கட்சி, லோக்தளம், இந்தியக் கம்யூனிஸ்டுக்கட்சி, இந்திய மார்க்சிஸ்டுக் கம்யூனிஸ்டுக் கட்சி போன்ற கட்சிகள் இலங்கையில் தமிழர்களுக்கு எதிரான இனப்படுகொலை நடைபெறுவதைக் கண்டித்துத் தீர்மானங்கள் நிறைவேற்றின. பல்வேறு மாநில சட்டமன்றங்களிலும் இந்திய நாடாளுமன்றத்திலும் இது குறித்து விவாதங்கள் நடத்தப்பட்டன. தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

தமிழகம் கொதித்தெழுந்தது. வரலாறு காணாத வகையில் கண்டன ஊர்வலங்களும் போராட்டங்களும் வெடித்தன. சின்னஞ்சிறிய கிராமங்களில்கூட மக்கள் உணர்வுப்பூர்வமாகப் போராடினார்கள். ஜெயவர்த்தனாவின் கொடும்பாவிகள் கொளுத்தப்பட்டன. கல்வி நிலையங்களுக்குச் செல்லாமல் மாணவர்களும் ஆசிரியர்களும் கண்டனம் தெரிவித்தனர். தொழிற்சாலைகள், வணிக நிலையங்கள் மூடப்பட்டன.

**பழ. நெடுமாறன்** தலைமையில் கட்சி பேதமில்லாமல் 5,000 தமிழர்கள் அடங்கிய தியாகப்படை இலங்கையை நோக்கிப் புறப்பட்டுப் புதிய வரலாற்றைப் படைத்தது. இராமேசுவரத்திலிருந்து கடலைக் கடந்து இலங்கை செல்ல அவர்கள் முயன்றபொழுது கைது செய்யப்பட்டனர்.

**தி.மு.க. தலைவர் கலைஞர் மு. கருணாநிதி, பொதுச் செயலாளர் பேராசிரியர் க. அன்பழகன்** ஆகியோர் சட்டமன்ற உறுப்பினர் பதவிகளைத் துறந்தார்கள். இலங்கைத் தமிழர் படுகொலையைத் தடுக்க மத்திய அரசு உறுதியான நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று தி.மு.க நாடாளுமன்ற உறுப்பினர்களான **எல். கணேசன், வை. கோபால்சாமி** ஆகியோர் டில்லியில் சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொண்டனர். பல்வேறு தலைவர்களின் வேண்டுகோளுக்கிணங்க மூன்றாம் நாள் தங்கள் உண்ணாவிரதத்தை முடித்துக் கொண்டனர்.

அ.தி.மு.க.வின் மேல்சபை கொறடாபதவியை இராஜினாமா செய்த **டாக்டர் ஜெனார்த்தனம்** அ.தி.மு.க. விலிருந்தும் விலகினார்.

இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக நடத்தப்படும் கொடுமைகளை ஐ.நா. சபை தடுத்து நிறுத்தக் கோரித் தமிழகம் முழுவதும் ஒரு கையெழுத்து இயக்கத்தினைத் தி.மு.க. நடத்தியது. இதன்மூலம் 2 கோடி கையெழுத்துகள் வாங்கப்பட்டு அவை ஐ.நா. பொதுச் செயலாளரிடம் அளிக்கப்பட்டன.

டில்லியில் நடைபெற்ற **காமன்வெல்த்** மாநாட்டுக்கு வருகை தந்த இலங்கை அதிபர் ஜெயவர்த்தனாவுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் ஆர்ப்பாட்டம் நடத்திய திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் **கி. வீரமணி** மற்றும் தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் 17 பேர் உட்பட 500–க்கு மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டார்கள்.

1983ஆம் ஆண்டு மார்ச் மாதம் 21ஆம் தேதி இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் 24 பேர்கள் ஒரு கூட்டறிக்கை வெளியிட்டார்கள். இலங்கைத் தமிழரைக் காக்க அவசியமானால் இந்தியா நேரடியாகத் தலையிட வேண்டுமென அந்த அறிக்கை வற்புறுத்தியது.

1985ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23ஆம் தேதி கர்நாடக முதலமைச்சர் இராமகிருஷ்ண ஹெக்டே முக்கியமான அறிக்கை ஒன்றினை வெளியிட்டார். இலங்கைத் தமிழர் பிரச்சினை பற்றி விவாதிப்பதற்காக தென்மாநிலங்களின் முதலமைச்சர் மாநாடு ஒன்றினைக் கூட்டுமாறு பிரதமர் ராஜீவ்காந்தியை அவர் வேண்டிக்கொண்டார். தமிழர்கள் இந்த அறிக்கையை வரவேற்றனர். அவர்களுக்கு இந்த அறிக்கை ஒரு பெரும் நம்பிக்கையை ஊட்டியது. முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் தலைமையில் மத்திய அமைச்சர் திருமதி மரகதம் சந்திரசேகர், தமிழ்நாட்டைச் சேர்ந்த பல்வேறு நாடாளுமன்ற உறுப்பினர்களும் மற்றும் பல்வேறு தமிழ்த் தலைவர்களும் பிரதமர் ராஜீவ்காந்தி அவர்களை 1985ஆம் ஆண்டு மார்ச் 28ஆம் தேதி சந்தித்து இலங்கைத் தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதைத் தடுக்க உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி வேண்டிக்கொண்டார்கள். உலக நாடுகள் பலவற்றிற்கும் தூதுவர்களை அனுப்பி இலங்கை அரசின் இனப்படுகொலை நடவடிக்கைகளை இந்தியா அம்பலப்படுத்த வேண்டுமென அவர்கள் பிரதமர் ராஜீவ்காந்தியிடம் வேண்டிக் கொண்டார்கள்.

மார்ச் 30ஆம் தேதி, 30-க்கு மேற்பட்ட இந்தியத் தலைவர்கள் கூட்டறிக்கை ஒன்றினை வெளியிட்டார்கள். இலங்கைத் தமிழர் பிரச்சினைக்குச் சுமூகமான நியாயமான தீர்வு விரைவில் காணப்பட வேண்டுமென அந்த அறிக்கை வலியுறுத்திற்று.

தமிழகத்தில் இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவான கொதிப்புணர்வு ஓங்கி வளர்ந்திருப்பதைக் கண்ட முதலமைச்சர் எம்.ஜி.ஆர். சில நடவடிக்கைகளைச் செய்தார். சர்வகட்சிக் கூட்டத்தைக் கூட்டினார். பொது வேலை நிறுத்தம் மேற்கொண்டார்.

23-4-85 அன்று தமிழக முதலமைச்சர் எம்.ஜி.இராமச்சந்திரன் தலைமையில் அனைத்துக் கட்சித் தூதுக்குழு ஒன்று இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தியைச் சந்தித்து ஒரு மனுவைக் கொடுத்தது. இலங்கையில் தமிழர்கள் வாழும் பகுதிகளிலிருந்து சிங்கள இராணுவம் உடனடியாக வாபஸ் ஆக வேண்டுமென இம்மனுவில் வற்புறுத்தப்பட்டது. இலங்கைத் தமிழர் துயரைத் துடைக்க விரைவான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படிப் பிரதமரை இத்தூதுக்குழு வற்புறுத்தியது. தி.மு.க, தமிழர் தேசிய இயக்கம், ஜனதா, நமது கழகம் ஆகிய கட்சிகள் இத்தூதுக்குழுவில் பங்குபெற மறுத்துவிட்டன. ஏற்கனவே இரண்டுமுறை முதலமைச்சர் தலைமையில் அனைத்துக்கட்சித் தூதுக் குழுவினர் இந்தியப் பிரதமரிடம் அளித்த மனுக்களின் மீது இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாத நிலையில் மீண்டும் பிரதமரைச் சந்தித்து மனுத் தருவதில் எவ்விதப் பயனுமில்லை என இக்கட்சிகள் கூறிவிட்டன.

1985ஆம் ஆண்டு ஏப்ரல் 25-ஆம் தேதி புதுடெல்லியில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் பேசிய கர்நாடக முதலமைச்சர் இராமகிருஷ்ண ஹெக்டே இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இந்திய அரசின் மெத்தனப் போக்கினை மிகக் கடுமையாகச் சாடினார். அக்கூட்டத்தில் அவர் பின்வருமாறு கூறினார். "ஈரான், ஈராக் ஆகிய நாடுகளில் நடைபெறும் நிகழ்ச்சிகளைக் கண்டு பதைப்படைந்து

உயர்மட்டக்குழு ஒன்றினை விரைவாக அங்கு அனுப்பிய பிரதமர் ராஜீவ் காந்தியின் கண்களுக்கு அண்டை நாடான இலங்கையில் நடைபெறும் கொடுமைகள் தெரியவில்லையா?" என்று அவர் கேட்டார்.

தனக்கு எதிர்ப்பு வலுப்பதைக்கண்ட பிரதமர் ராஜீவ்காந்தி 1985ஆம் ஆண்டு ஏப்ரல் 25ஆம் தேதியன்று இலங்கைத் தமிழர் பிரச்சினை சம்பந்தமாக விசேஷ ஆலோசனைக்குழு ஒன்றினை அமைக்கப் போவதாக நாடாளுமன்றத்தில் அறிவித்தார்.

1985ஆம் ஆண்டு மே மாதம் 8-ஆம் தேதி இந்திய வெளிநாட்டுத்துறை இணை அமைச்சர் **குர்சித் ஆலம்கான்** இந்திய நாடாளுமன்றத்தில் இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு ஆதரவாகப் பேசியதற்காக இலங்கை அமைச்சரவை கடும் கண்டனம் தெரிவித்தது. **பூட்டானில்** நடைபெறவிருக்கும் **சார்க் மாநாட்டைப்** புறக்கணிக்கப் போவதாகவும் மிரட்டியது.

1985ஆம் ஆண்டு ஜூலை மாதம் 3-ஆம் தேதி சென்னையிலுள்ள இலங்கைத் துணைத்தூதுவர் அலுவலகத்திற்கு முன்பாகத் தமிழ்நாட்டிலுள்ள 13 எதிர்க்கட்சிகள் கூட்டாக ஆர்ப்பாட்டத்தை நடத்தின. இஸ்ரேலிய உதவியுடன் தமிழ்ப் போராளிகளை ஒழிக்க இலங்கை அரசு முயற்சிகள் மேற்கொண்டிருப்பதை இக்கட்சிகள் கண்டித்தன. தி.மு.க., தமிழர் தேசிய இயக்கம், இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி, இந்திய மார்க்சிஸ்டுக் கம்யூனிஸ்டுக் கட்சி, காங்கிரஸ் (ஜே), லோக்தளம் உட்பட 13 கட்சிகள் இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றன.

"இந்தப் பிரச்சினையில் நடுவர் என்ற நிலையில் மட்டும் செயல்படாமல் இலங்கையிலுள்ள தமிழர்களோடு நேரடியாகச் சம்பந்தப்பட்ட நாடு என்ற முறையில் இந்தியா தனது கடமையை உடனடியாகச் செய்யவேண்டும் என்றும் அவசியமானால் இலங்கைக்கு எதிராகப் பொருளாதாரப் புறக்கணிப்பு நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்றும் இலங்கைக்கு எந்த நாடும் ஆயுதம் கொடுக்கவிடாமல் செய்யவேண்டும்" என்றும் வலியுறுத்துகிற ஓர் அறிக்கையை 10 கட்சிகளின் தலைவர்கள் 14-3-86 அன்று டில்லியில் வெளியிட்டார்கள்.

தமிழர் தேசிய இயக்கத் தலைவர் நெடுமாறன், துணைத்தலைவர் தஞ்சை. அ. இராமமூர்த்தி, தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர் வை. கோபால்சாமி ஆகியோர் டில்லியில் பல்வேறு கட்சித் தலைவர்களையும் சந்தித்து நிலைமைகளை விளக்கிய பிறகு இத்தகைய கூட்டறிக்கையினை அந்தத் தலைவர்கள் வெளியிட்டார்கள்.

கீழ்க்கண்ட தலைவர்கள் இந்த அறிக்கையில் கையெழுத்திட்டார்கள்.

1. **எம்.எஸ்.குருபாதசாமி (ஜனதா கட்சி)**
2. **எல்.கே. அத்வானி (பாரதிய ஜனதா)**
3. **கே. உன்னிகிருஷ்ணன் (காங்கிரஸ் (எஸ்)**
4. **வீரேந்திரவர்மா (லோக்தளம்)**
5. **முரசொலிமாறன் (தி.மு.க.)**
6. **ஜி.எம்.பனத்வாலா (முஸ்லீம்லீக்)**

7. பி. உபேந்திரா (தெலுங்கு தேசம்)
8. குலாம்ரசூர் (காஷ்மீர் தேசிய மாநாடு)
9. நெடுமாறன் (தமிழர் தேசிய இயக்கம்)

இந்த அறிக்கையில் இரண்டு கம்யூனிஸ்டுக் கட்சிகளும் கையெழுத்திடாவிட்டாலும் தனித்தனியாக அவர்களும் கண்டன அறிக்கைகளை வெளியிட்டார்கள். இலங்கையில் தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதைக் கண்டித்தும், அவர்களுக்குச் சம உரிமைகளும் சம வாய்ப்புகளும் அளிக்கப்படவேண்டுமென்றும் ஒரு தீர்மானத்தை இந்திய கம்யூனிஸ்டுக் கட்சி நிறைவேற்றியது. பாட்னாவில் மார்ச் 15ஆம் தேதி நடைபெற்ற இக்கட்சியின் மாநாட்டில் இத்தகைய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதைப்போலவே இந்திய மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டுக் கட்சியின் பொதுச்செயலாளர் இ.எம்.எஸ்.நம்பூதிரிபாட் மார்ச் 18ஆம் தேதி கீழ்க்கண்ட அறிக்கையை வெளியிட்டார். இலங்கையிலுள்ள தமிழர்கள் பிரச்சினைக்கு அரசியல் ரீதியாகத் தீர்வுகாண ஜெயவர்த்தனா அரசு மறுப்பதனால் ஏற்பட்டுள்ள மோசமான விளைவுகள் குறித்துக் கட்சியின் மத்தியக்குழு கவலை தெரிவித்ததாக இவர் கூறினார். நடுநிலை நாடுகள் மூலமும் ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கங்கள் மூலமும் ஜெயவர்த்தனா அரசுக்கு நிர்ப்பந்தம் ஏற்படுத்தி இப்பிரச்னைக்கு ஓர் அரசியல் தீர்வுகாண இந்திய அரசு முயலவேண்டும்" என்றும் அவர் கூறினார்.

## வங்க – ஈழ நட்புறவு அமைப்புகள்

1968ஆம் ஆண்டில் கிழக்கு–மேற்கு வங்க நட்புறவுக் கழகம்(Burdao Paschim Bangla Sampridhi Samithi) என்ற பெயரில் ஓர் அமைப்பினை அஜித்ராய் என்பவர் தொடங்கினார். இவர் நேதாஜி சுபாஷ் சந்திரபோசின் நெருங்கிய நண்பர். நேதாஜியின் நெருங்கிய உறவினரான பிரதிபோஸ் மற்றும் பலர் இந்த அமைப்புடன் தொடர்பு கொண்டிருந்தனர். வங்கதேச விடுதலை வீரர் பலரும் அஜீத்ராயுடன் தொடர்பு கொண்டிருந்தனர். இந்த அமைப்பின் அலுவலகத்திலேயே அவர்கள் தங்கியிருந்தார்கள். கிழக்கு–மேற்கு வங்கங்களுக்கிடையே நட்புறவை வளர்ப்பதையே இந்த அமைப்பு, தனது நோக்கமாகக் கொண்டிருந்தது. இதற்காக ஏராளமான பொதுக் கூட்டங்களையும் செய்தியாளர் கூட்டங்களையும் இது நடத்தியது. துண்டுப் பிரசுரங்களையும் அது வெளியிட்டது. வங்க மொழிப் பத்திரிகை ஒன்றினையும் நடத்தியது. கிழக்கு வங்கத்தில் அவாமிலீக் தலைமையில் நடைபெற்ற சுயநிர்ணய உரிமை பற்றிய போராட்டத்தை மேற்கு வங்க மக்களுக்கு அறிவிப்பதே இப்பத்திரிகையின் நோக்கமாகும். இந்தியா–பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளுக்கிடையே எத்தகைய வணிக–கலாசாரத் தொடர்புகளும் அறவே

கிடையாது. கிழக்கு வங்கத்திலிருந்து வெளியிடப்படும் பத்திரிகைகளோ, புத்தகங்களோ மேற்கு வங்கத்தில் கிடைப்பதில்லை. இதன் விளைவாகக் கிழக்குப் பாகிஸ்தானிலுள்ள வங்காளிகளின் புதிய தேசிய இயக்கத்தைப் பற்றித் தெளிவான விவரங்களை மேற்கு வங்க மக்கள் ஆரம்பத்தில் அறிந்திருக்கவில்லை.

இந்த நட்புறவுக் கழகம் கிழக்கு வங்கப் பத்திரிகைகள் வெளியிடும் செய்திகளைத் தனது இதழில் வெளியிட்டுப் பரப்பியது. கிழக்கு வங்கத் தலைவர்களின் பேச்சுகளையும் அறிக்கைகளையும் வெளியிட்டது. இரு வங்கங்களுக்கிடையே நெருக்கமான உறவு ஏற்படவேண்டுமென இந்த அமைப்பு பாடுபட்டது. இந்த அமைப்பின் பிரச்சாரப் பணிகளைக் கண்டு பாகிஸ்தான் அரசு ஆத்திரமடைந்தது.

தமிழ்நாட்டிலும் ஈழ நட்புறவுக் கழகம், தமிழீழத் தோழமைக் கழகம் போன்ற பல்வேறு பெயர்களில் அமைப்புகள் உருவாக்கப்பட்டன. பல்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்களும் கட்சிகளுக்கு அப்பாற்பட்டவர்களும் எத்தகைய வேறுபாடுமில்லாமல் இந்த அமைப்புகளின் பணிகளில் பங்கு கொண்டிருந்தார்கள். குறிப்பாகக் கல்லூரிப் பேராசிரியர்களும் மாணவர்களும் இவற்றில் தீவிரமான ஈடுபாடு கொண்டிருந்தனர். ஈழத் தமிழர்களுக்கு ஆதரவான ஒரு சூழ்நிலையை இந்தியாவில் குறிப்பாகத் தமிழ்நாட்டில் உருவாக்குவதையே தமது நோக்கமாக இந்த அமைப்புகள் கொண்டிருந்தன. ஈழ விடுதலைப் போராட்டத்தைப் பற்றிய உண்மைகளை, அங்குச் சிங்கள அரசு நடத்திவரும் கொடுமைகளை இந்த அமைப்புகள் எடுத்து விளக்கின. இதற்காகப் பொதுக் கூட்டங்கள், மாநாடுகள் பல இந்த அமைப்புகளால் நடத்தப்பட்டன. துண்டுப் பிரசுரங்களும் நூற்களும் இந்த அமைப்புகளால் வெளியிடப்பட்டன.

ஈழத் தமிழர் பிரச்சினை தீரத் தனித் தமிழீழ நாடு அமைவதைத் தவிர வேறு வழியில்லை என்பதை ஏற்றுக்கொண்டவர்களான தி.மு.க. தலைவர் கலைஞர் கருணாநிதி, தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறன், திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் கி. வீரமணி, தமிழ்நாடு பார்வர்டுக் கட்சித் தலைவர் அய்யணன் அம்பலம் ஆகியோர் ஒன்றுகூடித் தமிழீழ ஆதரவாளர் அமைப்பு (டெசோ) ஒன்றினை ஏற்படுத்தினார்கள். இந்த அமைப்பின் சார்பில் பேரணிகளும் மாநாடுகளும் நடத்தப்பட்டன

1986ஆம் ஆண்டு மே மாதம் 4ஆம் தேதி "டெசோ" அமைப்பின் சார்பில் மதுரை நகரில் "இலங்கைத் தமிழர் பாதுகாப்பு மாநாடு" ஒன்று நடத்தப்பட்டது. பிரம்மாண்டமான இந்த மாநாட்டில் 15 இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டனர். இம்மாநாட்டிற்குத் தி.மு.க. தலைவர் மு. கருணாநிதி தலைமை வகித்தார். ஆந்திர முதலமைச்சர் என்.டி. இராமாராவ், பாரதிய ஜனதாகட்சித் தலைவர் வாஜ்பாய், லோக்தளத் தலைவர் எச்.என். பகுகுணா, காங்கிரசு (எஸ்)

தலைவர் உன்னிக்கிருஷ்ணன், காஷ்மீர் தேசிய மாநாட்டினைச் சேர்ந்த அப்துல் ரஷீத் காபூலி, அகாலிதளத்தைச் சேர்ந்த பல்வந்த்சிங் வாலியா, தமிழ்நாடு முஸ்லீம லீக் தலைவர் அப்துல்சமத் உட்பட பல்வேறு கட்சித் தலைவர்களும் அமைச்சர்களும் கலந்து கொண்டனர். இம்மாநாட்டின் வரவேற்புக்குழுவுக்குப் பழ. நெடுமாறன் தலைவராக இருந்தார்.

"இலங்கைப் பிரச்சினை வெறும் தமிழர் பிரச்சினை இல்லை. இந்தியா முழுமைக்குமான பிரச்சினை அது. இந்தியாவின் தேசியப் பாதுகாப்புக்கும், இந்துமாக்கடல் மண்டலத்தின் அமைதிக்கும் பங்கம் ஏற்படுத்தும் பிரச்சினை அது. எனவே அகில இந்தியாவும் இப்பிரச்சினையில் அக்கறை கொண்டிருக்கின்றது" என்பதைக் காட்டும் வகையில் நடைபெற்ற இம்மாநாடு மாபெரும் வெற்றிபெற்றது. இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு ஓர் அகில இந்திய வடிவம் இம்மாநாட்டின் மூலம் கொடுக்கப்பட்டது.

"இலங்கையில் வாழும் தமிழர்களைத் திட்டமிட்டு இனப்படுகொலை செய்யும் முயற்சியில் இலங்கை அரசாங்கம் ஈடுபட்டிருக்கிறது. ஐ.நா. நடுநிலை நாடுகள் அமைப்பு, காமன்வெல்த் நாடுகள் அமைப்பு போன்ற சர்வதேச அமைப்புகளில் இப்பிரச்சினையை எழுப்ப இந்திய அரசாங்கம் தகுந்த நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென" இம்மாநாடு வற்புறுத்தியது.

**இலங்கைத் தமிழர் பிரச்சினையைப் பொறுத்தவரையில் இந்திய அரசாங்கத்தின் கொள்கை முற்றிலுமாகப் படுதோல்வியடைந்துவிட்டது என்பதை இம்மாநாடு சுட்டிக்காட்டி இந்திய அரசாங்கத்தை வன்மையாகக் கண்டித்தது.**

சமாதானப் பேச்சுவார்த்தை என்ற பெயரில் காலம் கடத்தி இந்தியாவுக்கு விரோதமான வெளிநாட்டுச் சக்திகளின் துணையை இலங்கை அரசாங்கம் பெற்றிருப்பது இந்தியாவுக்கு எதிரான நடவடிக்கை என்பதையும் இம்மாநாடு சுட்டிக்காட்டியது.

"இலங்கைத் தமிழர் பிரச்சினையை அந்நாட்டின் உள்நாட்டுப் பிரச்சினையெனக் கருதுவது மிகப் பெரிய தவறு. இப்பிரச்சினை சர்வதேசப் பிரச்சினையாக மாறிவிட்டது. இந்தியாவுக்கும் தெற்காசியப் பகுதிக்கும் ஆபத்தை விளைவிக்கும் பிரச்சினையாக உருவாகிவிட்டது. எனவே இலங்கைக்கு உதவி செய்யும் நாடுகள் அதற்கு எத்தகைய உதவியும் செய்யக்கூடாது என இந்திய அரசாங்கம் வற்புறுத்தவேண்டும். இலங்கைத் தமிழர் பிரச்சினையில் வெறும் நடுவராக இல்லாமல் அதற்கு மேலான பொறுப்பு, தனக்கு இருப்பதை உணர்ந்த இந்திய அரசு விரைந்துச் செயல்படவேண்டும்" என வலியுறுத்தும் தீர்மானம் இம்மாநாட்டில் நிறைவேற்றப்பட்டது.

பல்வேறு அகில இந்தியக் கட்சிகளின், தமிழ்நாட்டுக் கிளைகள் இப்பிரச்சினையில் தாங்களும் தீவிரமாக இருப்பதாகக் காட்டிக்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டது. தமிழ்நாட்டைச் சேர்ந்த இந்திரா காங்கிரசு, ஜனதா கட்சி, பாரதிய ஜனதா கட்சி போன்ற கட்சிகளைச் சேர்ந்தவர்கள் இப்பிரச்சினைக்காக உண்ணாவிரதப் போராட்டங்கள் போன்ற பல போராட்டங்களை நடத்தினார்கள்

# "ரா" பிளவு வேலை

விடுதலைப் புலிகளுக்கும் டெலோ இயக்கத்தினருக்குமிடையே யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட மோதலின் பின்னணியில் இந்திய உளவுத்துறையான 'ரா' இருந்தது. டெலோ இயக்கத்தினைத் தூண்டிவிட்டு விடுதலைப் புலிகளை ஒழித்துக்கட்ட 'ரா' முயற்சி செய்தது. தமிழீழ விடுதலைப் போராட்ட இயக்கங்களை ஒன்றுடன் ஒன்று மோதவிட்டு அழிக்கவேண்டும் என்பதே ராவின் சதித்திட்டமாகும். திம்பு மாநாட்டின்பொழுது அனைத்துப் போராளி இயக்கங்களும் ஒன்றுபட்டு நின்றதைக் கண்டு எரிச்சலடைந்த 'ரா' உளவுத்துறை அவர்களைப் பிரிவுபடுத்த வகுத்த திட்டத்திற்கு டெலோ இயக்கம் இரையாயிற்று. இந்த உண்மையைப் புரிந்துகொள்ளாத தி.மு.க. தலைவர் மு. கருணாநிதி ஒருசார்பான நிலையை எடுத்து விடுதலைப் புலிகளைக் கண்டனம் செய்தார். 'ரா' உளவு நிறுவனத்தைக் கண்டிப்பதற்குப் பதில் "ஈழப் போராளிகள் ஒன்றுபடும்வரை இப்பிரச்சினையில் தான் பேசப்போவதில்லை" எனத் திடீர் என அறிவித்துவிட்டு டெசோ அமைப்பை முடக்கிவைத்தார். 'ரா' உளவுத்துறை எது நடைபெறவேண்டும் என்று விரும்பியதோ அது நடந்துவிட்டது. யாழ்ப்பாண மக்களை பட்டினிபோட்டுக் கொல்வதற்காகப் பெரிய முற்றுகைப் போராட்டம் ஒன்றினைச் சிங்கள அரசு நடத்தியது. இதைத் தொடர்ந்து தமிழகத்தில் பல்வேறு நெருக்கடியான நிலைகள் ஏற்பட்டபொழுது டெசோ அமைப்பு கூட்டப்படவோ செயல்படவோ இல்லை.

இந்நிலையில் டெசோவில் அங்கம் வகித்த தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறன், திராவிடர் கழக பொதுச் செயலாளர் கி. வீரமணி ஆகியோர் இணைந்து ஈழத் தமிழர்களுக்கு ஆதரவான போராட்டங்களையும் இயக்கங்களையும் நடத்தினார்கள்.

1986ஆம் ஆண்டு பிப்ரவரியில் பெங்களூரில் சார்க் மாநாடு நடைபெற்றபொழுது ஜெயவர்த்தனாவையும் பிரபாகரனையும் சந்திக்க வைப்பதற்கும் ஓர் உடன்பாடு காண்பதற்கும் பெருமுயற்சியைப் பிரதமர் ராஜீவ் மேற்கொண்டார். அப்பொழுது தமிழக முதலமைச்சராக இருந்த திரு. எம்.ஜி.ஆர் அவர்களையும், பிரபாகரனுடன் பெங்களூருக்கு வரச்செய்து அவர் மூலமாகப் பிரபாகரனுக்கு ஆசை வார்த்தைகள் காட்ட முயற்சிகள் செய்யப்பட்டன. வடக்கு மாநிலத்தை மட்டும் தற்பொழுது ஏற்றுக்கொண்டு அதன் முதலமைச்சராகும்படி பிரபாகரனை ராஜீவ்காந்தியும் எம்.ஜி.ஆரும் வற்புறுத்தினார்கள்.

இப்பொழுதைக்கு இந்த ஏற்பாட்டை பிரபாகரன் ஒப்புக்கொண்டால் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு நிதி உதவி உட்பட எல்லா வகையான உதவிகளையும் செய்வதாக எம்.ஜி.ஆர். ஆசை வார்த்தை காட்டினார். இந்த ஆசை வார்த்தைகளுக்கும் அச்சுறுத்தலுக்கும் பிரபாகரன் கொஞ்சமும் மயங்கவில்லை. இதன் விளைவாக அவர் மீது பிரதமர் கடும் கோபம் கொண்டார். பிரதமர் ராஜீவைத் திருப்திப்படுத்த முதலமைச்சர் எம்.ஜி.ஆரும் விடுதலைப் புலிகளுக்கு எதிராக பல நடவடிக்கைகளை மேற்கொண்டார். சென்னையிலிருந்த விடுதலைப் புலிகளின் அலுவலகங்கள் சோதனையிடப்பட்டன. அவர்களிடமிருந்த தகவல் தொடர்புச் சாதனங்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

இந்நடவடிக்கைகளைக் கண்டித்து பிரபாகரன் சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொள்ளப் போவதாக அறிவித்தார். அதற்குப் பின்னரே கைப்பற்றப்பட்ட சாதனங்கள் திரும்பப் பெறப்பட்டன. இதற்குப் பின்னர் இனி தமிழ்நாட்டில் இருப்பது சரியில்லை என்று முடிவு செய்த பிரபாகரன் தாயகம் திரும்பினார்.

1987ஆம் ஆண்டு ஜூலை 31ஆம் தேதியன்று ராஜீவ் – ஜெயவர்த்தனா உடன்பாடு கையெழுத்திடப்பட்டபொழுது அது ஈழத் தமிழர்களின் சம்மதம் இல்லாமல் அவர்களுக்கு எதிரானதாகச் செய்யப்பட்ட உடன்பாடு என கண்டித்து இந்த இரு அமைப்புகளும் தமிழ்நாடெங்கும் 2–8–87 அன்று உடன்பாடு எரிப்புப் போராட்டத்தினை நடத்தின. பல தோழமைக் கட்சிகளும் தமிழர் அமைப்புகளும் இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டன. இந்த உடன்பாட்டை எதிர்த்துப் பிரச்சாரப் பயணம் ஒன்றினையும் இரு அமைப்புகளும் நடத்தின.

இலங்கையில் இந்திய அமைதிப்படை மேற்கொண்ட தமிழர்களை கொன்று குவிக்கும் நடவடிக்கைகளுக்கு கண்டனம் தெரிவிக்கும் வகையில் 17–10–87 அன்று தமிழ்நாட்டில் அனைத்துக் கட்சிகளின் கடையடைப்புப் போராட்டம் வெற்றிகரமாக நடத்தப்பட்டது.

ஈழத் தமிழர்களுக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் தமிழகமெங்கும் 10–11–87இல் அனைத்துக் கட்சிகளின் மனித சங்கிலிப் போராட்டம் நடத்தப்பட்டது.

இந்திய அமைதிப் படையின் நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்தவேண்டும் என்பதை வலியுறுத்திச் சென்னையில் உள்ள தென்பகுதி இராணுவத் தலைமையகத்திற்கு முன்பாக 7–6–88இல் அனைத்துக் கட்சியினரின் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

தமிழ்நாட்டில் மருத்துவ மனைகளில் சிகிச்சை பெற்று வந்த விடுதலைப் புலிகள் கைதுசெய்யப்பட்டதைக் கண்டிப்பதற்காக மதுரையில் கண்டன மாநாடு ஒன்று நடத்தப்பட்டது. அம்மாநாட்டில் ஜார்ஜ் பெர்னாண்டஸ், மற்றும் தமிழகத் தலைவர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

சிங்கள இராணுவத்திற்கு அமெரிக்க இராணுவ அதிகாரிகள் பயிற்சி அளிப்பதைக் கண்டிக்கும் வகையில் மதுரையில் 1–7–89 அன்று தமிழர் எச்சரிக்கை மாநாடு நடத்தப்பட்டது. பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த தமிழ்நாட்டுத் தலைவர்கள் பலர் இதில் பங்கேற்றனர். இலங்கையிலிருந்து இந்திய அமைதிப்படை உடனடியாக வெளியேறவேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி 29–7–89 அன்று தமிழ்நாட்டிலுள்ள மத்திய அரசு அலுவலகங்களுக்கு முன்னால் அனைத்துக் கட்சிகளின் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. ஈழத் தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதைக் கண்டித்து 19–10–90இல் அனைத்துக் கட்சிகளும் கூட்டாகக் கடையடைப்புப் போராட்டம் நடத்தின.

தமிழீழ விடுதலை ஆதரவாளர்கள், தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவாக அவ்வப்பொழுது கூட்டாக முடிவெடுத்துச் செயல்பட்டதன் விளைவாக இதற்கு ஆதரவான கட்சிகளும் அமைப்புகளும் ஒன்றுசேர்ந்துக் குடை அமைப்பு ஒன்றினை நிறுவி முறையாகச் செயல்படவேண்டும் என்ற கருத்து உருவானது.

இதன் விளைவாக 20-12-90 அன்று சென்னையில் அனைத்துக் கட்சிகளும் இணைந்து அனைத்துத் தமிழர் அமைப்புகளின் கூட்டம் ஒன்று கூட்டப்பட்டது. இக்கூட்டத்தில் **தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக் குழு** அமைக்கப்பட்டது. இக்குழுவின் அமைப்பாளராகப் பழ. நெடுமாறன் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தமிழர் நெஞ்சங்களில் கனன்று எரிந்துகொண்டிருக்கும் ஈழத் தமிழர் ஆதரவு நெருப்பை அணைப்பதற்கு இந்திய, தமிழக அரசுகளின் உளவுத் துறைகளும் தொலைக்காட்சி, வானொலி மற்றும் பத்திரிகைகளும் இடைவிடாது முயன்றபொழுது இந்தப் பொய்ப் பிரச்சாரச் சூறாவளியில் தமிழர்களின் ஆதரவுக் கனலை அணையவிடாது பாதுகாத்த குடை அமைப்பாகத் தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக் குழு திகழ்ந்தது. இக்குழுவில் அங்கம் வகிக்கும் கட்சிகள், தமிழ் அமைப்புகள் ஆகியவற்றின் தலைவர்களும் தொண்டர்களும் தொடர்ந்து அடக்குமுறைகளுக்கும் சிறைவாசங்களுக்கும் ஆளாகினார்கள். தேசிய பாதுகாப்புச் சட்டம், கொடிய தடா சட்டம் ஆகியவை அவர்கள் மீது ஏவப்பட்டன. இந்த அமைப்புகளின் சார்பில் நடத்தப்பட்ட மாநாடுகளும் நிகழ்ச்சிகளும் பலமுறை தடை செய்யப்பட்டன. ஆனாலும் உண்மையான தமிழ் உணர்வுடனும் துணிவுடனும் தமிழீழ விடுதலை ஆதரவுக் கனலை அணையவிடாமல் பாதுகாத்து முன்னெடுத்துச் செல்வதில் இந்த அமைப்பு மட்டுமே தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டிலுள்ள பெரிய கட்சிகள் எல்லாம் ஈழப் பிரச்சினையைப் பற்றிப் பேசாமல் ஒதுங்கிக்கொண்ட வேளையிலும் அகில இந்தியக் கட்சிகள் பலவும் ஈழத் தமிழர்களுக்கு எதிரான நிலையை மேற்கொண்டபொழுதிலும் இந்த அமைப்பு ஒன்றுதான் தொடர்ந்து தனது பணிகளைச் செய்து வருகிறது. 1991ஆம் ஆண்டு முதல் இன்றுவரை பல்வேறு போராட்டங்களையும் மாநாடுகளையும் கருத்தரங்குகளையும் நடத்தி ஈழத் தமிழர்களுக்குத் தொடர்ந்து இந்த அமைப்பு ஆதரவு திரட்டி வருகிறது.

தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக் குழு தமிழ்நாட்டில் மட்டுமின்றி பிற மாநிலங்களிலும் இப்பிரச்சினைக்கு ஆதரவு திரட்டும் பணியைச் செய்து வருகிறது. இக்குழுவில் அங்கம் வகிக்கும் ஈழத் தமிழர் ஆதரவு அமைப்பின் சார்பில் கர்நாடக மாநிலத் தலைநகரான பெங்களூரில் 05-01-97 அன்று ஈழத் தமிழர் ஆதரவு மாநாடு நடத்தப்பட்டது. இம்மாநாட்டில் ஜார்ஜ் பெர்னாண்டஸ், வி.ஆர்.கிருஷ்ணய்யர், கர்நாடகத் தலைவர்கள் மற்றும் தமிழ்நாட்டுத் தலைவர்கள் பலரும் கலந்துகொண்டு பேசினார்கள்.

புதுடெல்லியில் சமதா கட்சித் தலைவர் ஜார்ஜ் பெர்னாண்டஸ் அவர்களின் முயற்சியின் பேரில் 14-12-97 அன்று ஈழத்தமிழர் ஆதரவு சர்வதேச மாநாடு ஒன்று நடத்தப்பட்டது. தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக் குழுவில் அங்கம் வகிக்கும் கட்சிகள், தமிழர் அமைப்புகள் ஆகியவை இம்மாநாட்டில்

பெரும் திரளாகக் கலந்துகொண்டன. ஜார்ஜ் பெர்னாண்டஸ், இந்திய வெளியுறவுத்துறை முன்னாள் செயலாளர் ஏ.பி.வெங்கடேசுவரன் மற்றும் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த பல தலைவர்கள் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் இதில் கலந்துகொண்டு பேசினார்கள்.

இம்மாநாட்டில் உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி வி.ஆர்.கிருஷ்ணய்யர் அவர்களைத் தலைவராகவும், ஜார்ஜ் பெர்னாண்டஸ் அவர்களை அமைப்பாளராகவும் கொண்டு **ஈழத் தமிழர் ஆதரவு அகில இந்தியக் குழு** ஒன்று அமைக்கப்பட்டது. ஈழத் தமிழர் பிரச்சினைக்கு ஆதரவு திரட்டுவதற்காக அகில இந்திய அளவில் அமைக்கப்பட்ட முதல் குழு இதுவேயாகும்.

1998ஆம் ஆண்டு ஏப்ரலில் ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைக் கமிஷன் கூட்டம் நடைபெற்றபொழுது ஈழத் தமிழர் ஆதரவு அகில இந்தியக் குழுவின் தலைவர் **வி.ஆர். கிருஷ்ணய்யர்,** ம.தி.மு.க. பொதுச் செயலாளர் **வைகோ,** அக்கட்சியைச் சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களான செஞ்சி. இராமச்சந்திரன், கணேசமூர்த்தி, சமதாக் கட்சியைச் சார்ந்த திக்விஜயசிங், சுனில்குமார்சிங் உட்பட பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்ட மனு ஒன்று அளிக்கப்பட்டது. இலங்கை அரசு நடத்திவரும் மனித உரிமை மீறல்கள் குறித்து இம்மனு அளிக்கப்பட்டது.

1998ஆம் ஆண்டு சூன் மாதத்தில் சிவசேனைத் தலைவர் **பால்தாக்கரே,** பா.ம.க. நிறுவனர் **டாக்டர் இராமதாசு,** ம.தி.மு.க. பொதுச் செயலாளர் **வைகோ** உள்ளிட்ட 17 நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட 34 அரசியல் தலைவர்கள் ஈழத்தமிழர் பிரச்சினையில் தலையிடுமாறு வேண்டிக் கொள்ளும் மனு ஒன்று பிரதமர் வாஜ்பாயிடம் அளிக்கப்பட்டது. வைகோ, டாக்டர் இராமதாசு ஆகியோர் பிரதமர் வாஜ்பாய், பாதுகாப்புத் துறை அமைச்சர் ஜார்ஜ் பெர்னாண்டஸ், வெளியுறவுத்துறை அமைச்சர் ஜஸ்வந்த்சிங் ஆகியோரை அடிக்கடி சந்தித்து ஈழத் தமிழர் பிரச்சினையில் ஆதரவு திரட்டி வருகின்றனர்.

# 6. வங்க விடுதலைப் போரிலும் ஈழ விடுதலைப் போரிலும் இந்திய அரசின் முரண்பட்ட நிலைகள்

வங்கதேசத்தில் நடைபெற்ற மக்கள் போராட்டங்களுக்கு இந்திய அரசு ஆதரவு அளித்தது. 1971ஆம் ஆண்டு மார்ச் 27ஆம் தேதி நாடாளுமன்றத்தில் பேசிய பிரதமர் இந்திராகாந்தி "கிழக்கு வங்கத் தேர்தல் முடிவுகளை இந்தியா வரவேற்றது என்று சொன்னால் அதற்குக் காரணம் எந்த உயரிய இலட்சியங்களை நாம் ஏற்றுக் கொண்டிருக்கிறோமோ அந்த இலட்சியங்கள் வெற்றி பெறும்பொழுது அதை வரவேற்காமல் இருக்க முடியாது" என்றார். "ஆனால் அதைத் தொடர்ந்து வங்கத்தில் ஏற்பட்டிருக்கும் அபாயகரமான நிலைமையைக்கண்டு இந்தியா சும்மா இருக்க முடியாது" என்றும் கூறினார். மேலும் மார்ச் 25ஆம் தேதி கிழக்கு வங்க மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட இராணுவ அடக்குமுறையைப் பற்றியும் அவர் குறிப்பிட்டார். "இஃது ஒரு மக்கள் இயக்கத்தை அடக்குவது மட்டுமில்லை. ஆயுதம் தரியாத அப்பாவி மக்களை இராணுவ டாங்கிகளைக் கொண்டு நசுக்குவதாகும். இத்தகைய கொடூரமான சூழ்நிலையைப் பார்த்துக்கொண்டு இந்தியா சும்மா இருக்க முடியாது. சுதந்திரம் என்பது அழிவற்றது என்பதில் நாம் நம்பிக்கை கொண்டிருக்கிறோம். கொடுமைகளுக்கு ஆளாவோருக்காக நாம் குரல் கொடுத்திருக்கிறோம். அதிலும் இந்த நெருக்கடியான நேரத்தில் அரசு ரீதியில் அந்தப் புனிதப் பணியினை நாம் நிச்சயமாகச் செய்வோம்" என்று குறிப்பிட்டார். மேலும் தொடர்ந்து பேசுகையில்,

**"இந்திய அரசு உரிய நேரத்தில் உரிய முடிவினை சர்வதேச நியதிகளுக்குட்பட்டு நிச்சயமாக எடுக்கும் என்ற உறுதியினை இந்திய நாடாளுமன்றத்தில் பிரதமர் இந்திரா வழங்கினார். கிழக்குப் பாகிஸ்தான் பிரச்சினையில் இந்தியாவில் முக்கிய நலன்களும் சிக்கியிருப்பதாக அவர் கூறினார்.**

இந்திய நாடாளுமன்றத்தில் வங்கதேச மக்களின் சுதந்திரப் போராட்டத்திற்கு இந்தியாவின் ஆதரவினைத் தெரிவிக்கும் தீர்மானத்தினைப் பிரதமர் இந்திராவே முன் மொழிந்தார். மார்ச் 31ஆம் தேதி நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருந்தது. "கிழக்கு வங்க மக்கள் தங்களைத் தாங்களே ஜனநாயக ரீதியில் ஆள்வதற்காக நடத்திவரும் போராட்டத்திற்கு இந்த மன்றம் தன்னுடைய முழுமையான ஆதரவைத் தெரிவித்துக் கொள்வதோடு வங்க மக்களுக்கு உறுதுணையாக நிற்க உறுதி பூணுகிறது. கிழக்கு வங்கத்தின் 7 1/2 கோடி மக்கள் வரலாற்றுப் புகழ்வாய்ந்த வீரஞ்செறிந்த போராட்டத்தில் வெற்றி பெறுவார்கள் என்று நம்புகிறது. வங்க மக்களின் தியாகங்களுக்கும் போராட்டங்களுக்கும் இந்திய மக்களின்

அனுதாபத்தினையும் ஆதரவினையும் இம்மன்றம் தெரிவித்துக் கொள்கிறது". மேலும் பாகிஸ்தான் நடத்திவரும் இனப்படுகொலையை உடனே தடுத்து நிறுத்த முன்வருமாறு உலக நாடுகளை அத்தீர்மானம் வேண்டிக் கொண்டது. கிழக்கு வங்கத்தில் நடைபெறும் சம்பவங்களைப் பார்த்துக்கொண்டு இந்தியா சும்மா இராது என இத்தீர்மானம் கடுமையாக எச்சரித்தது.

டெல்லியில் ஏப்ரலில் நடைபெற்ற அகில இந்தியக் காங்கிரசு கமிட்டிக் கூட்டத்தில் பேசும்பொழுது பிரதமர் இந்திராகாந்தி மீண்டும் இதை உறுதிப்படுத்தினார். "கிழக்கு வங்கத்தில் நடைபெறுவதைப் பார்த்துக்கொண்டு இந்தியா சும்மா இருக்க முடியாது. இந்திய மக்களின் ஏராளமான உறவினரும் உற்றாரும் கிழக்கு வங்கத்தில் படுகொலை செய்யப்படும்பொழுது அதனுடைய எதிரொலியும் இந்தியாவில் இருக்கத்தான் செய்யும்". இந்தியாவின் வெளியுறவுத்துறை அமைச்சராக அப்போதிருந்த **ஸ்வரண்சிங்** அதே கூட்டத்தில் பேசும்பொழுது பின்வருமாறு கூறினார். "காஷ்மீரிலிருந்து கேரளா வரையிலும் இராஜஸ்தானிலிருந்து அஸ்ஸாம் வரையிலும் இருக்கக்கூடிய இந்திய மக்கள் அனைவரும் வங்க தேசத்திலுள்ள தமது சகோதரர்களின் விடுதலைப் போராட்டத்தில் முழுமையான ஈடுபாடு கொண்டிருக்கின்றனர். வங்க தேசத்தில் நடைபெறுவது பாகிஸ்தானின் உள்விவகாரம் என இஸ்லாமாபாத் கூறுவதை நான் அடியோடு நிராகரிக்கிறேன்" என்றார்.

இந்தியாவின் இந்தப் போக்கு, பாகிஸ்தானுக்கு எரிச்சலை மூட்டியது. சுதந்திர வங்க அரசு கல்கத்தாவிலிருந்து இயங்குவதாகவும் இந்திய அதிகாரிகள் அதற்குத் துணைபுரிவதாகவும் பாகிஸ்தான் குற்றம் சாட்டியது.

கிழக்கு வங்கமக்களின் போராட்டம் மேற்கு வங்க மக்களிடையே மகத்தான எழுச்சியை ஏற்படுத்திற்று. 1905ஆம் ஆண்டு ஆங்கிலேயர் ஆட்சியில் வங்கத்தை இரண்டாகப் பிரித்தபொழுது அதற்கு எதிராக வங்கமக்கள் எப்படி கொதித்தெழுந்தனரோ அதே உணர்வு இப்பொழுதும் எழுந்தது. **கிழக்கு வங்க மக்களின் போராட்டத்தை ஆதரித்து 1971ஆம் ஆண்டு ஏப்ரல் 11இல் மேற்கு வங்கம் முழுவதிலும் வேலை நிறுத்தம் நடைபெற்றது.**

போராடும் வங்கதேச வீரர்களுக்கு உதவி செய்வதற்கு மேற்கு வங்க மக்கள் சிறுசிறு குழுக்களாக எல்லையைத் தாண்டிச் சென்றனர். விடுதலை வீரர்களுக்குத் தேவையான பல்வேறு சாதனங்களையும் அவர்களிடம் கொண்டுபோய்க் கொடுத்தனர். இவ்வாறு அவர்கள் செல்வதை இந்திய இராணுவமும் இந்திய எல்லைக்காவல் படையும் தடுக்கவில்லை. பாதுகாப்பான இந்தியத் தளங்களில் இருந்துகொண்டு தங்களது கொரில்லாப் போரை வெற்றிகரமாக நடத்துவதற்கு வங்க விடுதலை வீரர்களால் முடிந்தது.

வங்க விடுதலை வீரர்களுக்கு ஆரம்பக் கட்டத்திலிருந்தே இந்தியா உதவி செய்தது. டி.கே.பாலிட் (D.K. Palit) என்பவர் The "lightining Campaign" என்னும் தான் எழுதியுள்ள புத்தகத்தில் ஆதாரப்பூர்வமான தகவலைக் கொடுத்திருக்கிறார்.

**"இந்திய எல்லைக் காவல் படையினருக்குப் பிரதமர் இந்திரா தெளிவான உத்தரவு பிறப்பித்தார். பாகிஸ்தான் படையினரால் துரத்தப்பட்டு இந்திய எல்லைக்குள் தப்பிவரும் முக்தி வாகினிப்படைக்கு எல்லாவிதமான உதவிகளையும் அளிக்க வேண்டும் என்று அவர் உத்தரவிட்டார்.** அதன்படி இந்திய எல்லைக்காவல் படையினர் அவர்களை வரவேற்று இடமளித்து மேலும் பயிற்சி அளித்து அவர்களுக்குத் தேவையான ஆயுதங்களையும் கொடுத்து அனுப்பி வைத்தார்கள்.

இந்திய வங்காள எல்லை நெடுகிலும் வங்க விடுதலை வீரர்களின் முகாம்கள் அமைக்கப்பட்டிருந்தன. அந்த முகாம்களில் ஏராளமான படித்த இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. முக்தி வாகினிப் படையினர் பாகிஸ்தான் படையினரைத் தோற்கடித்து விடுவார்கள் என இந்திய அரசு முதலில் நினைத்தது. எனவே இந்திய அமைச்சரவை இந்தியப் படைகளின் தளபதியான பீல்டுமார்ஷல் மானெக் ஷா-வை வரவழைத்து ஆலோசனையும் நடத்தியது. கிழக்குப் பாகிஸ்தானில் யா:.யாகான் நடத்தும் அட்டூழியங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்று அவரிடம் கூறப்பட்டது. அவ்வாறு செய்வது பாகிஸ்தானுடன் போராட்டத்தில் கொண்டுபோய் விட்டுவிடும் என்று மானெக்ஷா கூறினார். **அப்படியானால் பாகிஸ்தானுடன் போராடுவதற்கு ஆயத்தம் செய்யுமாறு அவரிடம் கூறப்பட்டது.**

இந்திய நாடாளுமன்றத்தில் 21.5.71இல் பேசிய பிரதமர் இந்திரா பின்வருமாறு குறிப்பிட்டார். **"தேசம் பிரிக்கப்பட்ட காலத்திலிருந்தே அகதி என்ற சொல்லுக்குப் பொருளை நாம் அறிவோம். ஆனால் இப்பொழுது வருவோர் அகதிகள் அல்லர். நமது எல்லைக்கு அப்பால் நடைபெறும் இராணுவ அட்டூழியத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் வருகிறார்கள்."**

இப்படி ஓடிவந்த அகதிகளுள் பெரும்பாலோர் இந்துக்களாக இருந்தாலும் மதக்கலவரத்தினால் அவர்கள் ஓடிவரவில்லை. அரசியல் காரணங்களினால் அவர்கள் ஓடிவந்தார்கள். முஜிபுர் ரஹ்மான் தலைமையில் ஆட்சி அமைக்கப்பட்ட பிறகு நாடு திரும்ப அவர்கள் தயாராக இருந்தார்கள். *16-8-1971*இல் எவ்வளவு அகதிகள் இந்தியாவிற்கு வந்துள்ளார்கள் என்பதை இந்திய அரசாங்கம் வெளியிட்டது.

| | | |
|---|---|---|
| **1.** | **இந்துக்கள்** | **69.71 இலட்சம்** |
| **2.** | **முஸ்லீம்கள்** | **5.41 இலட்சம்** |
| **3.** | **பிற மதத்தினர்** | **0.44 இலட்சம்** |
| | **மொத்தம்** | **75.56 இலட்சம்** |

மேற்கு வங்கம், திரிபுரா, மேகாலயா, அசாம் ஆகிய பகுதிகளில் அகதிகள் வந்து குவிந்தார்கள். 75 இலட்சத்திற்கு மேற்பட்ட அகதிகள் வந்து சேர்ந்தனர். கிழக்கு வங்கத் தொகையில் *13* சதவிகிதம் பேர் இந்தியாவிற்கு அகதிகளாக வந்தனர்.

அகதிகளின் வருகையின் விளைவாக அரசியல் சமூகப் பொருளாதார ரீதியில் இந்தியா பெருமளவு பாதிக்கப்பட்டது. மே மாதம் 24 ஆம் தேதியன்று பிரதமர் இந்திரா நாடாளுமன்றத்தில் வெளியிட்ட அறிக்கையில் பின்வருமாறு கூறினார்: **"பாகிஸ்தானின் உள்விவகாரம் என்று எது கூறப்படுகிறதோ அது இன்றைக்கு இந்தியாவின் உள்விவகாரமாக மாறிவிட்டது. எனவே உள்விவகாரம் என்ற பெயரால் பாகிஸ்தான் நடத்திவரும் அத்தனை கொடுமைகளையும் உடனடியாக நிறுத்துமாறும் இலட்சக்கணக்கான மக்களின் எதிர்காலத்தைப் பாதிக்கும் செயல்களைக் கைவிடுமாறும் பாகிஸ்தானை வலியுறுத்த நமக்கு உரிமை உண்டு"** என்றார்.

குறுகிய காலத்தில் வந்து குவிந்த இந்த அகதிகளுக்குத் தேவையான உணவு, உடை, மருத்துவ வசதி போன்றவற்றை அளிக்க வேண்டியிருந்தது. இந்தியப் பொருளாதாரத்தை இது பெருமளவு பாதித்தது. வந்து குவிந்த அகதிகளின் பிரச்சினையை இருவிதங்களாகக் சமாளிக்க வேண்டி இருந்தது.

1. அகதிகளுக்குத் தேவையான உதவிகளைச் செய்வது.
2. தங்கள் நாட்டிற்குத் திரும்பிப் போவதற்கு அவசியமான அரசியல் சூழ்நிலையைக் கிழக்கு வங்கத்தில் ஏற்படுத்துவது.

கிழக்குப் பாகிஸ்தான் மக்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கம் அமையும்வரை அகதிகள் அங்குத் திரும்பிப் போக முடியாது என்பதை இந்தியா உணர்ந்திருந்தது. இத்தகைய அரசியல் தீர்வை ஏற்படுத்தினாலொழிய தனது சுமை குறையாது என்றும் இந்தியா கருதிற்று. இதைப் பிரதமர் இந்திராகாந்தி தெளிவாக அறிவித்தார். மே 24ஆம் தேதி இந்திய நாடாளுமன்றத்தில் அவர் வெளியிட்ட அறிக்கையில் பின்வருமாறு கூறினார். **"அகதிகளுக்கு உதவி என்பது நிரந்தரமானதாக இருக்க முடியாது. அவ்வாறு இருப்பதை நாமும் விரும்பவில்லை. மேலும் அகதிகள் வருவதைத் தடுக்கும் வகையில் வந்திருப்போர் திரும்பிச் சென்று பத்திரமான வாழ்வு நடத்தத் தேவையான சூழ்நிலை உருவாக்கப்படவேண்டும். அப்பொழுதுதான் இந்தப் பிரச்சினை தீரும;" என்று அவர் கூறினார்.**

"வங்கப் பிரச்சினை இந்தியாவினால் உருவாக்கப்பட்ட பிரச்சினை இல்லை. இன்னொரு நாட்டில் உருவாக்கப்பட்ட பிரச்சினைக்கு இந்தியா பலியாகியுள்ளது" என்றும் அவர் சுட்டிக் காட்டினார். இப்பிரச்சினையைத் தீர்க்கவேண்டிய கடமை இந்தியாவுக்கு மட்டுமின்றி உலக நாடுகளுக்கும் உண்டு. அகதிகளுக்குச் செய்யப்படுகின்ற உதவியில் பெரும் பகுதியினை வல்லரசுகள் ஏற்கவேண்டும் என்றும் இப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாண உலக நாடுகள் முன்வரவேண்டும் என்றும் அவர் வேண்டிக்கொண்டார். இச்சிக்கல், இந்தியா மற்றும் அதன் கிழக்காசிய நாடுகளின் அமைதிக்கும் பாதுகாப்பிற்கும் சவாலாக அமைந்திருப்பதை அவர் எடுத்துக்காட்டினார்.

இந்தப் பிரச்சினையில் இந்தியா, பாகிஸ்தானுக்கிடையே மூன்றாவது நாடு ஒன்று மத்தியஸ்தம் செய்வது என்ற யோசனைக்குக் கடுமையான எதிர்ப்புத் தெரிவித்தார். "எந்த அடிப்படையில் எந்த நாடு இதில் மத்தியஸ்தம் செய்வது? இவ்வாறு சொல்வதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. வங்கதேசத்தில் நடைபெறுவது விடுதலைப் போராட்டமாகும். அதுபற்றி எங்களுடன் மத்தியஸ்தம் பேசி என்ன பயன்? அந்தப் பிரச்சினை அங்குத் தீர்க்கப்படவேண்டும். அந்தப் போராட்டத்தினாலும் அங்கு நடைபெறும் அட்டூழியங்களினாலும் நாம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளோம்."

பிரதமர் இந்திராவின் இந்தப் பேச்சுக்களைக் கண்டு யாரும் திருப்தி அடையவில்லை. வெறும் பேச்சுகள், வங்க மக்களின் துயரைத் துடைக்க உதவாது என அனைவரும் கருதினார்கள்.

இந்தியாவில் உள்ள பெரும்பாலான அரசியல் கட்சிகளும் மக்களும் வங்க தேசப் பிரச்சினையில் தீவிரம் காட்டிய பொழுதும் இந்திய அரசு நிதானப் போக்கையே கடைப்பிடித்தது கண்டு அனைவரும் பொறுமையிழந்தனர்.

சர்வதேச எதிர்ப்புக்குக் குறிப்பாகச் செஞ்சீனத்தின் எதிர்ப்புக்கு அஞ்சியே இந்திய அரசு இவ்வாறு செய்வதாக மக்கள் கருதினர். கிழக்கு வங்க மக்களின் துயரைத் துடைப்பதை விடத் தலையிடாக் கொள்கையும் அனைத்துலகச் சட்டங்களை மதிப்பதையுமே இந்தியா பெரிதாகக் கருதியது. இந்தியாவின் இத்தடுமாற்றமான போக்கின் விளைவாகத் தெற்காசியாவில் ஒரு வல்லரசு என்ற மதிப்பை இந்தியா இழக்க நேரிடும் என்றும் பலர் எச்சரித்தனர்.

**"பிரான் சோப்ரா"** என்னும் புகழ்பெற்ற இந்தியப் பத்திரிகையாளர் 16-4-1971 தேதிய **"இந்துஸ்தான் டைம்ஸ்"** என்ற இதழில் பின்வருமாறு எழுதினார்.

"இந்தியா விரைவில் இரண்டிலொன்றைச் செய்தாக வேண்டும். சீனா போன்ற வெளிநாடுகள் என்ன செய்யுமோ என்ற தயக்கம் இந்தியாவுக்கு இருக்கக்கூடும். ஆனால் ஒன்றை மறந்துவிடக்கூடாது. இந்தியா என்ன செய்யப் போகிறது என்பதை அண்டைநாடுகள் கூர்ந்து கவனித்துக் கொண்டிருக்கின்றன. முதலாவதாகத் தெற்காசிய நாடுகளும் பிறகு தென்கிழக்காசிய நாடுகளும் சீனா உட்பட, இறுதியாக வல்லரசுகளும் நாம் என்ன செய்யப்போகிறோம் என்பதைப் பொறுத்தே நம்மை மதிக்கும்" என்று கூறினார்.

"உலக நாடுகளின் விமர்சனத்திற்கு ஆளாகிவிடக்கூடாதே என்று இந்திய அரசு பயப்படுவது புரிந்துகொள்ளக்கூடியது. ஆனால் இப்பிரச்சினையை இந்தியாவின் கண்ணோட்டத்தில் உலகத் தலைவர்கள் பலரும் பார்க்கவில்லை. அவரவர்கள் தங்கள் நாட்டுநலன் ஒன்றையே அடிப்படையாகக் கொண்டு இப்பிரச்சினையைப் பார்க்கிறார்கள். பாகிஸ்தானுக்குச் சீனா நேரடியாக எல்லா உதவிகளையும் அளிக்கிறது. பாகிஸ்தானின் கொடுமைகளை உலகம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறது. இந்த நிலையில் தனது தேசிய நலன் பாதிக்கப்படும்பொழுதுகூட இந்தியா செயலற்று இருப்பது பெருந்தீங்கை விளைவிக்கும். இவ்வாறு **"அமிர்தபஜார்"** பத்திரிகை தனது 20-3-71 தேதிய இதழில் எழுதிற்று.

வங்கதேசப் பிரச்சினையில் இந்தியாவின் நிலை ஒரே மாதிரியாக இருக்கவில்லை. பல்வேறு மாற்றங்களை அது அடைந்தது. 1971ஆம் ஆண்டு மே 21ஆம் தேதி இந்திய நாடாளுமன்றத்தில் பேசிய பிரதமர் இந்திரா பின்வருமாறு அறிவித்தார். "வங்கதேசப் பிரச்சினை சர்வதேசத் தன்மை வாய்ந்தது" என்றார்.

மே 26ஆம் தேதி நாடாளுமன்றத்தில் பிரதமர் இந்திரா பின்வருமாறு அறிவித்தார். "தற்பொழுது உருவாகியுள்ள சிக்கலான நிலைமையினை அனைத்துலக நாடுகள் உணரவேண்டும். உணர மறுத்தால் மோசமான விளைவுகள் ஏற்படும்" என்றார்.

உலக நாடுகள் இந்தப் பிரச்சினையைப் பற்றிப் பேசத் தொடங்கியபொழுது பிரதமர் இந்திரா தம்முடைய நிலையை மாற்றிக்கொண்டார். நவம்பர் 7ஆம் தேதி நாடாளுமன்றத்தில் பேசும்பொழுது பின்வருமாறு கூறினார். "நாம் இதை ஓர் அனைத்துலகப் பிரச்சினையாகக் கருதினோம். ஆனால் அது இந்தியாவிற்குள் பொங்கி வழிகிறது. இப்பிரச்சினை, கிழக்கு வங்க மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களுக்கும் பாகிஸ்தானின் இராணுவ ஆட்சிக்கும் இடையே உள்ள பிரச்சினையாகும். இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையே உள்ள பிரச்சினை இல்லை. இது பாகிஸ்தானின் உள்நாட்டுப் பிரச்சினையே."

அனைத்துலக அமைப்புகளால் தீர்க்கப்படவேண்டிய பிரச்சினையா? அல்லது பாகிஸ்தானின் உள்நாட்டுப் பிரச்சினையா? என்பது பற்றி இந்திராவுக்கு நிலையான கொள்கை இருக்கவில்லை. இந்தப் பிரச்சினையைச் சர்வதேசப் பிரச்சினையாக்கப் பாகிஸ்தான் முயலுவதாக இந்திரா குற்றம் சாட்டினார்.இந்தியா – பாகிஸ்தான் தகராறு காரணமாக இந்தப் பிரச்சினை எழாவிட்டாலும் இறுதியில் இந்தியா – பாகிஸ்தான் போரில்தான் முடிவடைந்தது. பாகிஸ்தானில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களினால் உருவான வங்கப்பிரச்சினை இந்தியா – பாகிஸ்தான் பிரச்சினையாக மாறியிருக்குமேயானால் அது அனைத்துலகத்திற்கும் உரிய பிரச்சினையாகி இருக்கும்.

இந்தியா சமரசப் பேச்சுகளின் மூலம் இப்பிரச்சினையைத் தீர்க்க முடியாது என்பதை மெல்ல மெல்ல உணர்ந்தது. இராணுவ ரீதியாகவும் இராஜதந்திர ரீதியாகவும் பாகிஸ்தானுடன் போர் புரிய இந்தியா தயாராகும் வரையில் இதைச் சர்வதேசப் பிரச்சினை என்று இந்தியா அறிவித்தது.

**1971ஆம் ஆண்டு அக்டோபர், நவம்பர் மாதங்களில் இந்தியப் பிரதமர் இந்திராகாந்தி உலக நாடுகளில் சுற்றுப்பயணம் செய்தார். வங்கப் பிரச்னையில் இந்தியாவின் நிலைமையை எடுத்துக்கூற ஆஸ்திரேலியா, பெல்ஜியம், பிரான்ஸ், மேற்கு ஜெர்மனி, பிரிட்டன், அமெரிக்கா ஆகிய நாடுகளுக்குச் சென்றார். ஆனால் இந்தப் பயணம் வெற்றி பெறவில்லை.**

இப்பிரச்சினையில் உரிய நடவடிக்கை எடுக்க ஐ.நா. பேரவை தவறிவிட்டது. ஐ.நா. பேரவைக்கு வெளியே உலக நாடுகளின் அனுதாபத்தைத் திரட்ட இந்தியப் பிரதமர் செய்த முயற்சிகள் தோல்வியடைந்தன.

ஐ.நா.பேரவையின் பாதுகாப்புக்குழு விரைந்து செயல்பட்டிருக்குமேயானால் இந்தியா – பாகிஸ்தான் போரைத் தவிர்த்திருக்க முடியும்.

1971ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 20 ஆம் தேதி, எல்லையிலிருந்த இந்தியா – பாகிஸ்தான் படைகள் வாபஸ் ஆக வேண்டுமென்று ஐ.நா. பேரவை யோசனை கூறியது. இதைப் பாகிஸ்தான் ஏற்றுக்கொண்டது. ஆனால் இந்தியா ஏற்க மறுத்துவிட்டது.

ஐ.நா. யோசனையை ஏற்க மறுத்தபொழுது பிரதமர் இந்திரா பின்வரும் காரணங்களைக் கூறினார். 'எல்லையிலிருந்துப் படைகளைத் திரும்பப்பெற வேண்டுமென்கிற யோசனை – பிரச்சினையைத் திசை திருப்பும் யோசனையாகும். பாகிஸ்தான் அரசுக்கும் அதனுடைய கிழக்குப்பகுதி மக்களுக்குமிடையே மூண்டெழுந்துள்ள சச்சரவு சுமூகமாகத் தீர்க்கப்பட்டால் இதன் மூலம் உருவான இந்தியா – பாகிஸ்தான் மோதல், எல்லைகளில் படைகளைக் குவித்தல் போன்ற பிரச்சினைகளும் தாமாகவே தீர்ந்து போகும். பிரச்சினையைத் திசை திருப்பப் பாகிஸ்தான் செய்யும் முயற்சிக்கு ஐ.நா. சபை பயன்படுத்தப்படுகிறது. ஆரம்பக் கட்டத்தில் இந்தப் பிரச்சினையில் தலையிடும்படி இந்தியா எவ்வளவோ வேண்டியும்கூட ஐ.நா. பேரவை அதை அலட்சியப்படுத்திவிட்டது. ஆனால் இப்போது யாஃயாகான் நிபந்தனைகளுக்கு ஏற்ற ஒரு தீர்வை எங்கள்மீது திணிக்க முயலுகிறார். எங்களை ஒருபொழுதும் யாரும் திசை திருப்ப முடியாது. எங்களுடைய தேசியப் பாதுகாப்பிற்காகவே எல்லையில் படைகள் குவிக்கப்பட்டுள்ளன. கடந்த காலத்தில் மத அடிப்படையில் புனிதப் போர் நடத்தப் போவதாகப் பாகிஸ்தான் தொடர்ந்து பயமுறுத்தி வந்துள்ளது. பலமுறைகள் எங்கள் எல்லையில் அத்துமீறியுள்ளது. அவற்றை எல்லாம் நாங்கள் அலட்சியம் செய்யமுடியாது, எங்கள் படைகளை வாபஸ் வாங்கவும் முடியாது. மீண்டும் ஒருமுறை ஆயத்தம் இல்லாத நிலையில் இருக்க நாங்கள் விரும்பவில்லை. இந்தியாவின் பிரதமர் என்ற முறையில் என்னுடைய கடமையை நான் செய்தாக வேண்டும்" என்று திட்டவட்டமாகக் கூறினார்.

கிழக்கு வங்கத்தில் நடைபெற்ற திட்டமிட்ட இனப்படுகொலையையும் அட்டூழியங்களையும் அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகளின் பத்திரிகையாளர்கள் நேரில் சென்று கண்டு உலகெங்கும் பரப்பினார்கள். அனைத்துலக நீதிபதிகள் குழுமமும் இப்பிரச்சினை குறித்து வெளியிட்ட ஆய்வறிக்கை உலகெங்கும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இந்தியாவில் வந்து குவிந்த அகதிகள் கூறிய சோகக் கதைகள் உலகெங்கும் பரவின.

போருக்கு இந்தியா தயாரானதற்குப் பல காரணங்கள் இருந்தன. இந்திய மக்களின் கருத்து வங்க மக்களுக்கு ஆதரவாக இருந்தது. உலக நாடுகளின் ஆதரவும் அனைத்துலக அரங்கில் ஏற்பட்டிருந்த மாறுதல்களும் இதற்கு முக்கியமான காரணங்களாம்.

இந்தியப் பத்திரிக்கைகளைப் போலவே உலகப் பத்திரிகைகளும் பாகிஸ்தான் இராணுவக் கொடுமைகளைக் கண்டித்தன. அம்பலப்படுத்தின. அமெரிக்கா போன்ற

நாடுகளிலுள்ள செனட்டர்கள், இராஜதந்திரிகள், பத்திரிகையாளர்கள் ஆகியோர் இந்திய நிலையை ஆதரித்தனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். பல்வேறு நாடுகள் பாகிஸ்தானுக்கு அளித்துவந்த பொருளாதார உதவியை நிறுத்த முன்வந்தன.

இந்தியாவில் விழிப்புணர்ச்சி பெற்ற மக்களும் பத்திரிகைகளும் பெரும்பான்மையான பத்திரிகையாளர்களும் வங்க மக்களின் விடுதலையை ஆதரித்ததோடு அதற்கு உதவவும் முன்வந்தனர். இந்தியா – பாகிஸ்தான் போர்மூண்டபொழுது பிரதமர் இந்திராவிற்குப் பின்னால் நாடே திரண்டு நின்றது.

முதலாவதாகத் தற்காப்புக்காகவும், இரண்டாவதாகத் தன்னால் அங்கீகரிக்கப்பட்ட வங்க தேச விடுதலை அரசுக்கு உதவி புரிவதற்காகவும் இந்தியா நேரடியாகத் தலையிட்டது.

இந்தியாவின் தலையீட்டை அனைத்துலக நீதிபதிகளின் குழுமம் நியாயமெனக் கூறியது.ஒரு நாட்டின் உள் விவகாரமாக இருந்தாலும் மனிதாபிமான அடிப்படையில் தலையிடுவதை அனைத்துலகச் சட்டமே ஏற்றுக் கொண்டிருக்கிறது. ஐ.நா. பட்டயமே இதனை வலியுறுத்துகிறது. இதுபோன்ற பிரச்சினையில் தனியாகவோ கூட்டாகவோ ஐ.நா.வில் அங்கம் வகிக்கும் நாடுகள் தலையிடலாமென்று ஐ.நா. பட்டயத்தில் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. மிகப் பெரியளவில் மனித உரிமைகள் மீறப்படும்பொழுது ஐ.நா. பேரவை தலையிடத் தவறுமேயானால் மனிதாபிமான அடிப்படையில் தலையிடுவதற்கு மற்ற நாடுகளுக்கு உரிமை உண்டு. அந்த உரிமையின் அடிப்படையில்தான் வங்கப்பிரச்சினையில் இந்தியா தலையிட்டது.

## ஈழப்பிரச்சினையில் இந்திய அரசு

1977ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் நாடாளுமன்றத்தில் ஆறில் ஐந்து பகுதிப் பெரும்பான்மை ஜெயவர்த்தனாவிற்குக் கிடைத்தது. ஆனால் அதேவேளையில் இந்தியாவில் இந்திரா காங்கிரஸ் தோல்வியடைந்தது. பிரதமராக மொரார்ஜி தேசாய் தலைமையில் ஜனதாக் கட்சி ஆட்சி அமைத்தது. ஜெயவர்த்தனாவிற்கும் மொரார்ஜி தேசாய்க்குமிடையே சுமூகமான நட்புறவு இருந்தது. இதன் விளைவாக இரு பிரதமர்களும் மாறி மாறி இரு நாடுகளுக்கும் வருகை தந்தனர். 1977ஆம் ஆண்டு பிப்ரவரியில் இலங்கைச் சுதந்திரதின விழாவின் சிறப்பு விருந்தினராக இந்தியப் பிரதமர் மொரார்ஜி தேசாய் கொழும்புக்கு வருகை தந்தார். அப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த திரு. அ. அமிர்தலிங்கம் தலைமையில் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் அடங்கிய தூதுக்குழு ஒன்று அவரைச் சந்தித்தது. இந்தக் குழுவினரிடம் மொரார்ஜி தேசாய் முரட்டுத்தனமாக நடந்துகொண்டார். தனி நாடு கோரிக்கையை அவர்கள் கைவிட்டால் ஒழிய அவர்களுடன் எத்தகைய பேச்சுவார்த்தையும் கிடையாது என்றும் இந்திய அரசு எத்தகைய உதவியும் அளிக்காது என்றும் கூறினார். தூதுக்குழுவினர் அதிர்ச்சியுடனும் ஏமாற்றத்துடனும் திரும்பினர்.

1983ஆம் ஆண்டு ஜூலை 23ஆம் தேதியன்று வரலாறு காணாத வகையில் இலங்கையில் தமிழர்களுக்கெதிரான படுகொலைகள் தொடங்கின. கொழும்பு நகரில் 3,000க்கும் மேற்பட்ட தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர். பல ஆயிரம் கோடி ரூபாய்கள் பெறுமான தமிழர் சொத்துக்கள் நாசம் செய்யப்பட்டன. பல இலட்சம் தமிழர்கள் அகதிகளானார்கள். இதையொட்டி இந்தியாவெங்கும் குறிப்பாகத் தமிழகத்தில் பெரும் பதற்றநிலை மூண்டது. எனவே இந்திய அரசு உடனே செயல்படும் நிலைக்கு நிர்ப்பந்திக்கப்பட்டது.

1983ஆம் ஆண்டு ஜூலை மாதம் 29ஆம் தேதி இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் **பி.வி. நரசிம்மராவ்** இலங்கைக்கு விரைந்தார். பிரதமர் இந்திராகாந்தி, இலங்கை அதிபர் ஜெயவர்த்தனாவுடன் டெலிபோன் தொடர்பு கொண்டு நரசிம்மராவை அனுப்புவது குறித்துத் தெரிவித்தார்.

கொழும்பு சென்ற நரசிம்மராவ், ஜெயவர்த்தனாவுடன் 90 நிமிட நேரம் பேச்சுவார்த்தை நடத்தினார். நரசிம்மராவ் கொழும்பிலிருந்தபொழுதே சிங்கள இராணுவம் தனது கைவரிசையைக் காட்டியது. தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் அமிர்தலிங்கத்தைச் சந்திக்கவேண்டுமென்றும் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் செல்லவேண்டுமென்றும் நரசிம்மராவ் கூறியபொழுது அவரின் உயிருக்கே பாதுகாப்பு தரமுடியாத நிலையில் இருப்பதாக ஜெயவர்த்தனா கூறினார். நரசிம்மராவ் ஒரே நாளில் இந்தியா திரும்பினார்.

இலங்கையில் தமிழர் படுகொலை செய்யப்படும் நிலைமையையொட்டித் தமிழ்நாடு கொந்தளித்தது. சிக்கிம் நாட்டில் மூன்று நாட்கள் சுற்றுப்பயணம் சென்றிருந்த பிரதமர் இந்திராகாந்தி தமது சுற்றுப் பயணத்தை ரத்துச் செய்துவிட்டு அவசரமாக டில்லி திரும்பினார். டில்லி திரும்பியதும் **"இவ்வளவு மோசமான நிலைமைகளைப் பார்த்துக்கொண்டு இந்தியா சும்மா இருக்கமுடியாது"** என்று தெரிவித்தார்.

ஆகஸ்டு 1ஆம் தேதி இலங்கை வெளியுறவு அமைச்சர் ஏ.சி. என். ஹமீதை அழைத்துப் பிரதமர் இந்திரா பேச்சுவார்த்தை நடத்தினார். **இந்தியாவின் கண்டனத்தை அவரிடம் இந்திராகாந்தி நேரில் தெரிவித்தார்.**

ஆகஸ்டு முதல் தேதியன்று காங்கிரசு கட்சியின் அரசியல் முகாம் ஒன்றினைத் தொடங்கிவைத்துப் பிரதமர் இந்திரா பின்வருமாறு கூறினார். "இலங்கைப் பிரச்சினையில் தமிழர்கள் மட்டுமே பாதிக்கப்படுகிறார்கள் என்றோ, தென்னாட்டுக்கு மட்டுமே இதன் பாதிப்பு உண்டு என்றோ நாம் கருதவில்லை. மொத்த இந்தியாவும் பாதிக்கப்படுகிறது என்றுதான் நாம் கருதுகிறோம். இலங்கைப் பிரச்சினையைக் கையாளுவதற்குச் சரியான வழிமுறையைக் காண்பதில் ஒவ்வொருவருக்கும் பொறுப்புண்டு. மக்கள் படுகொலை செய்யப்படுவதையும் கொடுமைகளுக்கு ஆளாக்கப்படுவதையும் சொத்துகள் அழிக்கப்படுவதையும் தடுத்து நிறுத்தச் சரியான வழிமுறைகளைக் கடைப்பிடித்தாக வேண்டும். இந்தக் கலவரங்களையொட்டி உணர்ச்சிகளைத் தூண்டிவிட வேண்டாமென" அவர் வேண்டிக்கொண்டார்.

அமெரிக்கா, பிரிட்டன், பாகிஸ்தான், வங்காளதேசம் ஆகிய நாடுகளிடம் இராணுவ உதவியை இலங்கை கோரியிருப்பதாகச் செய்தி வெளியானபொழுது இந்திய நாடாளுமன்றத்தில் கடுங்கண்டனம் எழுந்தது.

வெளியுறவுத்துறை அமைச்சரான பி.வி. நரசிம்மராவ் (1.8.83), நாடாளுமன்றத்தில் பின்வருமாறு அறிவித்தார்:

"மேற்கண்ட நான்கு நாடுகளிடம் இராணுவ உதவி அளிக்குமாறு இலங்கை கேட்டதாக வெளியான செய்தியை இலங்கை மறுத்தபொழுதிலும் அதில் உண்மை இல்லாமல் இல்லை. இந்தியாவிற்கு எதிராகத்தான் இந்த உதவி கேட்கப்பட்டிருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. சம்பந்தப்பட்ட அரசுகளுடன் மட்டுமின்றி மேலும் பல அரசுகளுடனும் இந்தியா தொடர்புகொண்டு தன்னிலையைத் தெளிவுபடுத்தியிருக்கிறது. இந்தப் பிராந்தியத்தில் வெளிநாடு எதுவும் தலையிடுவதால் ஏற்படும் விளைவுகள் பற்றியும் நாம் ஆராய்ந்து வருகிறோம்" என்றார்.

பி.வி. நரசிம்மராவ் இந்த அறிவிப்பை வெளியிட்டபொழுது பாகிஸ்தான், வங்கதேச வெளியுறவுத்துறை அமைச்சர்கள் புதுடில்லியிலிருந்தனர். இலங்கையில் உள்ள சிங்களர் – தமிழர் தகராறில் தலையிடும் உத்தேசம் தமக்கு இல்லை என அந்த இருநாட்டு அமைச்சர்களும் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சரிடம் தெரிவித்தார்கள். அமெரிக்காவும் பிரிட்டனும் அவ்விதமே கூறின.

கொழும்பில் அகதிகளாகத் தவித்த பல்லாயிரக்கணக்கான தமிழர்களைப் பத்திரமாகத் தமிழ்ப் பிரதேசங்களுக்குக் கொண்டு செல்ல **இந்தியக் கப்பல்கள்** இலங்கைக்கு அனுப்பப்பட்டன. இவற்றில் நிவாரணப் பணிகளுக்கான பொருட்களும் அனுப்பப்பட்டன. இதற்கான ஏற்பாடுகளை இந்திய அரசு செய்தது.

ஆகஸ்டு 3ஆம் தேதி இந்திய நாடாளுமன்ற மேலவையில் வெளியுறவு அமைச்சர் நரசிம்மராவ் இலங்கைப் படுகொலை சம்பந்தமாக அறிக்கை சமர்ப்பித்தார். அவரின் அறிக்கை ஏமாற்றம் அளிப்பதாக கூறித் தி.மு.க. வெளிநடப்புச் செய்தது.

ஆகஸ்டு 7 ஆம் தேதி "**இந்து**" நாளிதழுக்கு அளித்த பேட்டியில் ஜெயவர்த்தனா பின்வருமாறு இறுமாப்போடு கூறினார்.

**"இந்தியா எங்கள்மீது படையெடுத்தால் எங்களின் இலட்சியங்கள் மாசு படிந்தவையாகிவிடாது. இலங்கையைப் பிடித்து ஆள்வது சுலபமானதில்லை. 150 இலட்சம் மக்களை அவ்வளவு சுலபமாக அடக்கியாண்டுவிடமுடியாது. என் உடலில் உயிர் உள்ளவரை இந்த ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போராடியே தீருவேன்".**

ஜெயவர்த்தனாவின் இந்த அறிவிப்புக்கண்டு இந்திரா எரிச்சல் அடைந்தார்.

**ஆகஸ்டு 15 ஆம் தேதி இந்திய சுதந்திர நாளில் டில்லி செங்கோட்டையிலிருந்து நாட்டுமக்களுக்கு ஆற்றிய உரையில் பிரதமர் இந்திரா பின்வருமாறு கூறினார். இலங்கையில் நடக்கும் தமிழினப் படுகொலையைப் பார்த்துக்கொண்டு சும்மா இருக்கமுடியாது. இனப்**

**படுகொலை எங்கு நடந்தாலும் அதை இந்தியா கண்டித்தே தீரும். இவ்வகையில் இலங்கையில் நடக்கும் படுகொலையை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்' என்றார்.**

**இதுவரை இலங்கைத் தமிழர் பிரச்சினை அந்நாட்டின் உள்நாட்டுப் பிரச்னை எனப் பேசிவந்த இந்திராகாந்தி முதன்முதலாக இனப்படுகொலை என்ற வார்த்தையை உபயோகித்துக் கண்டனம் செய்தது ஒரு மாபெரும் திருப்பமாகும்.**

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர்– நாயகம் அமிர்தலிங்கம் ஆகஸ்டு 14ஆம் தேதி சென்னை வந்து சேர்ந்தார். பிறகு டில்லி சென்று பிரதமர் இந்திராவைச் சந்தித்து இலங்கையில் தமிழர்கள் படுகொலை செய்யப்படுவது பற்றிய விவரங்களைக் கூறினார். இதைக் கேட்டு இந்திரா அதிர்ச்சி அடைந்தார்.

ஆகஸ்டு 25ஆம் தேதி பிரதமர் இந்திராவின் சிறப்புத்தூதுவராக **ஜி. பார்த்தசாரதி** இலங்கை சென்றார். இலங்கை அரசுக்கும் தமிழர் தலைவர்களுக்குமிடையே பேச்சுவார்த்தைக்கு வழிகோல ஜி. பார்த்தசாரதி அனுப்பப்படுவதாக நாடாளுமன்றத்தில் பிரதமர் இந்திரா அறிவித்தார்.

கொழும்பில் ஜெயவர்த்தனா, திருமதி. சிறிமாவோ பண்டாரநாயகா, அமிர்தலிங்கம், தொண்டமான் மற்றும் பல தலைவர்களைப் பார்த்தசாரதி கண்டு பேசினார்.

அவரது முயற்சிகளின் விளைவாகவும் இந்திரா– ஜெயவர்த்தனா பேச்சுகளின் விளைவாகவும் கொழும்பில் 25–1–84 அன்று வட்டமேசை மாநாடு தொடங்கியது. இம்மாநாட்டிற்குப் புத்தபிட்சுகளையும் சிங்கள வெறியர்களையும் அழைத்ததன் மூலம் மாநாடு சுமூகமாக நடைபெறுவதை ஜெயவர்த்தனா தகர்த்தார்.

25–1–84இல் தொடங்கி 21–12–84 வரை இடையிடையிட்டு நடைபெற்ற இம்மாநாடு வெற்றிபெறவில்லை. இறுதியாக 1985ஆம் ஆண்டு ஜனவரி 10ஆம் தேதி இம்மாநாடு கூடி விவாதித்துப் பயனில்லாமல் முடிவடைந்தது.

இந்த ஓராண்டுக்கால அவகாசத்தைப் பயன்படுத்திக்கொண்டு தமது இராணுவ வலிமையை ஜெயவர்த்தனா பெருக்கிக்கொண்டார்.

இதற்கிடையில் இந்திய எதிர்ப்புப் பிரச்சாரத்தைச் சிங்களத் தலைவர்கள் கட்டவிழ்த்துவிட்டனர்.

இலங்கைப் பிரதமர் **பிரேமதாசா** 1984 மே மாதம் 24ஆம் தேதியன்று இலங்கை நாடாளுமன்றத்தில் பேசும்பொழுது இந்தியாவுக்கு எதிரான கடும் தாக்குதலில் ஈடுபட்டார். "எங்களுடன் கண்ணாமூச்சி விளையாட்டு விளையாட வேண்டாம் என்று இந்தியாவை எச்சரிக்கிறேன். இந்தியா எங்கள்மீது பகிரங்கமாகப் படையெடுக்கட்டும். எங்களுடைய நாட்டைக் காக்க நாங்கள் எங்களுடைய உயிரைத் தியாகம் செய்வதற்கும் தயாராக இருக்கிறோம்" என்றார்.

இந்தியா சுதந்திரம் பெற்ற பிறகு இத்தனை ஆண்டுக்காலத்தில் இந்தியாவைச் சிங்களத் தலைவர்கள் யாரும் இவ்வளவு கடுமையாகத் தாக்கியதில்லை. இதைக்கண்டு இந்தியா கடுங்கோபம் அடைந்தது. இந்திய அரசாங்கத்தின் சார்பில் இலங்கை அரசுக்குக் கடுங் கண்டனம் தெரிவிக்கப்பட்டது. இந்தியா – இலங்கை நட்புறவைக் கெடுப்பதற்காக இவ்வாறு பிரச்சாரம் செய்யப்படுவதாக இந்தியா தெரிவித்தது. இலங்கைத் தமிழர் படுகொலை செய்யப்படுவதிலிருந்து மக்கள் கவனத்தைத் திருப்பவே இந்தியப் படையெடுப்பு என்ற கூக்குரல் எழுப்பப்படுவதாகவும் இந்தியா கூறியது. இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தனாவுக்கு இது குறித்த கண்டனக் கடிதம் ஒன்றை இந்திய அரசு அனுப்பிவைத்தது.

தமிழ்நாட்டிலுள்ள ஈழப்போராளிகளின் தலைவர்களைத் தன்னிடம் ஒப்படைக்க வேண்டுமென்று இந்திய அரசாங்கத்தைத் தனது அரசாங்கம் வற்புறுத்துமென இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தனா கூறினார். சீனா, ஜப்பான், தென்கொரியா போன்ற நாடுகளில் சுற்றுப்பயணம் செய்துவிட்டு ஹாங்காங் திரும்பிய அவர் இவ்வாறு அறிவித்தார்.

"அவசியமானால் அனைத்துலக நீதிமன்றத்திற்கும் இப்பிரச்சினையை நாங்கள் எடுத்துச் செல்வோம்" என்றும் அவர் கூறினார்.(1–6–84)

பஞ்சாப் பிரச்சினையைப் பயன்படுத்திக்கொண்டு இலங்கைத் தமிழர் பிரச்சினைகளில் இந்தியாவின் தலையீட்டைக் குறைக்கச் செய்யும் முயற்சிகளில் ஈடுபடமுடியும் என்று ஜெயவர்த்தனா நினைத்தார். அதற்கான பல்வேறு நடவடிக்கைகளையும் அவர் மேற்கொண்டார்.

இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி தமிழர்களின் கோரிக்கைகளை அனுதாபத்துடன் அணுகும்படி ஜெயவர்த்தனாவை வற்புறுத்தினார். ஒத்திவைக்கப்பட்ட அனைத்துக்கட்சி மாநாட்டினை மீண்டும் தொடங்கிப் பேச்சுவார்த்தை நடத்தும்படி அவர் கூறினார்.

1984ஆம் ஆண்டு ஜுன் மாதம் 3–ஆம் தேதியன்று ஜெயவர்த்தனா டில்லிக்கு வரவிருப்பதையொட்டி அதற்கு முன்னோடியாக இலங்கையின் தேசியப் பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலியுடன் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் பி. நரசிம்மராவ், இந்திராகாந்தியின் விசேஷத் தூதுவர் ஜி. பார்த்தசாரதி ஆகியோர் விரிவான பேச்சுவார்த்தை நடத்தினார்கள்.

அமெரிக்க ஜனாதிபதி ரீகன், பிரிட்டிஷ் பிரதமர் தாட்சர் ஆகியோரை ஜெயவர்த்தனா சந்தித்தபொழுது அவர்களும் பேச்சுவார்த்தையின் மூலம் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வுகாணும்படி ஆலோசனை கூறியுள்ளதாகவும் அதையொட்டியே ஜெயவர்த்தனா இந்தியப் பிரதமருடன் பேச முன்வந்துள்ளதாகவும் கூறப்பட்டது.

இந்தியப் பிரதமர் இந்திராகாந்தியுடன் மூன்றுநாட்கள் பேச்சுவார்த்தை நடத்திய பிறகு இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தனா கீழ்க்கண்ட அறிக்கையை 3–7–84இல் வெளியிட்டார்.

"இலங்கைத் தமிழர் பிரச்சினை இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினையாகும். இலங்கையில் உள்ள பல்வேறு கட்சிகள் தங்களுக்குள் இப்பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ள வேண்டும். இலங்கையைப் பிரிப்பதையும் அதற்காக வன்முறையை உபயோகிப்பதையும் தனது அரசு கடுமையாக எதிர்க்க உறுதி பூண்டிருக்கிறது" என்று அவர் கூறினார்.

மேலும் இந்திய மண்ணிலிருந்துகொண்டு பயங்கரவாதிகளுக்கு ஆதரவாகவும் இலங்கைக்கு எதிராகவும் நடைபெறும் பிரச்சாரத்தைத் திருமதி இந்திராகாந்தியின் கவனத்திற்குக் கொண்டுவந்ததாகவும் ஜனாதிபதி கூறினார். இது சம்பந்தமாகக் குறிப்பிட்ட சில நிகழ்ச்சிகளை ஆதாரப்பூர்வமாகத் தாம் தெரிவித்ததாகவும் அவர் கூறினார். ஜெயவர்த்தனாவுடன் திருமதி. இந்திராகாந்தி நடத்திய பேச்சுகள் பலனளிக்கவில்லை என்பதை ஜெயவர்த்தனாவின் அறிவிப்புகள் தெளிவாகக் காட்டின.

"மேலும் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே தீர்க்கவேண்டிய ஒரு பிரச்சினையாகக் காஷ்மீர்ப் பிரச்சினை உள்ளது" என ஜெயவர்த்தனா கூறியதற்கும் இந்திய அரசு கடுமையான கண்டனத்தைத் தெரிவித்தது.

பஞ்சாப் பிரச்சினையையும் தமிழர் பிரச்சினையையும் ஒப்பிட்டு ஜெயவர்த்தனா பேசியதுகண்டு இந்தியா எரிச்சலடைந்தது. இதன் விளைவாக இந்திராவின் விசேஷத் தூதுவர் ஜி. பார்த்தசாரதி இலங்கைக்குச் செல்லும் பயணத்தை ரத்துச் செய்தார்.

இந்தியாவுக்கு வந்திருந்த இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தனாவுடன் தாம் நடத்திய பேச்சுவார்த்தைகள் திருப்திகரமாக இல்லை என்று பிரதமர் இந்திராகாந்தி கூறினார். "இந்தப் பிரச்சினையில் இந்திய மக்கள் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். இலங்கையிலிருந்து ஏராளமான அகதிகள் இந்தியாவுக்கு வந்துகொண்டிருக்கிறார்கள். எனவே இப்பிரச்சினையில் சுமூகமான உடன்பாடு ஏற்பட வேண்டுமென்று நாங்கள் எண்ணினோம். ஆனால் பிரச்சினை சுமூகமடைவதற்குப் பதிலாக மேலும் சிக்கலாகிக்கொண்டிருக்கிறது. நாங்கள் இரு தரப்பையும் சுமூகப்படுத்த முயற்சிகள் செய்துவருகிறோம். இந்த அடிப்படையில் ஜெயவர்த்தனாவுடன் நான் பேசிய பேச்சு திருப்திகரமாக இல்லை". இவ்வாறு 1984ஆம் ஆண்டு ஜூலை மாதம் 12ஆம் தேதி பிரஞ்சு நாளிதழ் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் இந்திரா கூறினார்."தமிழ்நாட்டில் அடைக்கலம் புகுந்திருக்கக்கூடிய பயங்கரவாதிகளைத் தங்களிடம் ஒப்படைக்கவேண்டுமென்று இலங்கை அரசு கேட்குமானால் நீங்கள் என்ன செய்வீர்கள்?" என்று கேட்கப்பட்ட கேள்விக்குப் பிரதமர் இந்திரா பின்வரும் பதிலை அளித்தார். "இலங்கையில் பத்திரமாக வாழமுடியாத சூழ்நிலையில் ஏராளமான அகதிகள் இந்தியாவில் அடைக்கலம் புகுந்திருக்கிறார்கள். அவர்கள் இந்தியாவிலேயே தொடர்ந்து வாழ விரும்பவில்லை. நாங்களும், அகதிகள் இங்கு இருப்பதை விரும்பவில்லை. ஆனாலும் சில சட்டங்களுக்கு உட்பட்டு நாங்கள் நடக்கவேண்டியுள்ளது. பிரிட்டனில்கூட இதேபோன்ற சூழ்நிலை நிலவுகிறது. அங்கும் பல்வேறு நாடுகளிலிருந்து பலர் அடைக்கலம் புகுந்திருக்கிறார்கள். நாங்கள் எங்கள் நாட்டுச் சட்டப்படி நடந்துகொள்கிறோம்."

"இலங்கை அரசுடன் பயங்கரவாதிகளை வெளியேற்றுவதற்கான உடன்பாடு ஏதாவது செய்துகொள்வீர்களா" என்று கேட்கப்பட்டபொழுது செய்துகொள்ள மாட்டோம் என்று திட்டவட்டமான பதிலை இந்திரா அளித்தார்.

இந்தச் சூழ்நிலையில் பஞ்சாப் நெருக்கடி முற்றி இந்திய அரசின் முழுக்கவனமும் அதன்பால் திரும்பியது. இலங்கைப் பிரச்சினை பின்னுக்குத் தள்ளப்பட்டது. இதை ஜெயவர்த்தனா நன்கு பயன்படுத்திக்கொண்டார்.

துரதிருஷ்டவசமாக 1984ஆம் ஆண்டு அக்டோபர் 31ஆம் தேதியன்று பிரதமர் இந்திரா படுகொலை செய்யப்பட்டார். இதன்விளைவாக இலங்கைத் தமிழர்கள் பிரச்சினைக்குப் பெரும் பின்னடைவு ஏற்பட்டது.

புதிய பிரதமர் ராஜீவ் இப்பிரச்சினையே புரியாதவராக இருந்தார். எனவே அவரை ஏமாற்றுவது ஜெயவர்த்தனாவுக்கு எளிதாயிற்று. ஜி. பார்த்தசாரதியை வரக்கூடாது என ஜெயவர்த்தனா தடுத்துவிட்டார். தமிழர்களுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளை முடுக்கிவிட்டார். தமிழர் பகுதிகள் மீது விமானத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இவற்றின் விளைவாக ஏராளமான அகதிகள் இந்தியாவில் வந்துக் குவியத் தொடங்கினார்கள்.

இந்தியாவின் பிரதமராக ராஜீவ்காந்தி பதவியேற்ற பின்னால் முதன் முறையாக அவரை 9.2.85 அன்று இலங்கைத் தேசியப் பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி சந்தித்துப் பேசினார். ஆனால் இந்தப் பேச்சுவார்த்தையினால் எவ்விதப் பயனும் விளையவில்லை.

இலங்கை அதிபர் ஜெயவர்த்தனா, இந்தியாவின்மீது கடுமையான குற்றச்சாட்டுகளைச் சுமத்தினார். 1985ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 20ஆம் தேதி இலங்கைப் பாராளுமன்றக் கூட்டத்தொடரை ஆரம்பித்து வைத்தப்பொழுது அவர் பின்வருமாறு கூறினார்.

"இந்தியாவில் தமிழ்ப் பயங்கரவாதிகளின் பயிற்சிமுகாம்கள் உள்ளன. அங்கிருந்துக் கடலைக் கடந்து இலங்கைக்கு வந்து பயங்கரவாதிகள் தாக்குதல்களில் ஈடுபடுகிறார்கள். இதைத் தடுக்கவேண்டுமானால் இருநாட்டிற்குமிடையேயுள்ள கடற்பகுதியில் இரு நாடுகளும் கூட்டாகக் கண்காணிப்புச் செய்யவேண்டும். ஆனால் இதை இந்தியா ஆட்சேபிக்கிறது. அவ்வாறு ஆட்சேபிப்பது ஏன்? என்பது எனக்குப் புரியவில்லை. இத்தகைய கூட்டுக் கண்காணிப்பு மூலம் இலங்கையிலிருந்து அகதிகள் இந்தியா வருவதையும் தடுக்க முடியும்" என்று அவர் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் "பயங்கரவாதிகள் இறுதியான ஒரு போராட்டத்திற்குத் தயாராகிக் கொண்டிருக்கிறார்கள் என்பதற்கான அசைக்கமுடியாத ஆதாரங்கள் கிடைத்துள்ளன. தென்னிந்தியாவில் அதிகாரத்திலுள்ள சில முக்கியமானவர்கள் தமிழ்ப் பயங்கரவாதக் குழுக்களை இணைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதை அம்பலப்படுத்தும் சான்றுகளும் எனக்குக் கிடைத்திருக்கின்றன. இந்திய அரசும் தமிழ்நாட்டு அரசும் தங்களுடன் சுமூக உறவுடன் இருப்பதாகப் பயங்கரவாதத் தலைவர்கள் சொல்லிக்கொள்கிறார்கள். உலகிலுள்ள பெரும் பயங்கரவாத இயக்கங்களுடன்

இவர்களுக்குத் தொடர்பு இருக்கிறது. இலங்கையின் இதயப் பகுதியை ஊடுருவுவதற்குப் பயங்கரவாதிகள் திட்டமிட்டிருக்கிறார்கள். நாம் எல்லையை ஆக்கிரமிக்காவிட்டால், எல்லை நமக்கு அருகிலேயே வந்துவிடும். இந்த முயற்சியில் அவர்கள் வெற்றி பெறுவதற்கு முன்னால் நாம் நடவடிக்கைகள் எடுத்தாகவேண்டும்" என்றார்.

பிரதமர் பிரேமதாசா, தேசியப் பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி போன்ற பலர் இந்தியாவுக்கு எதிராகக் குற்றச்சாட்டுகளை இதற்கு முன்னால் சொல்லியிருந்தபோதிலும் இலங்கை அதிபர் ஜெயவர்த்தனா இத்தகைய குற்றச்சாட்டுகளை கூறியது இதுதான் முதல்முறையாகும்.

மறுநாளே இந்தியா இதற்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்தது. இந்தியாவில் பயங்கரவாதிகளின் பயிற்சிமுகாம் இருப்பதாக ஜெயவர்த்தனா கூறியதற்கு இந்திய அரசு தனது கண்டனத்தை இலங்கைத் தூதுவரிடம் தெரிவித்தது.

கடல் பகுதியில் இந்தியா இலங்கைக் கூட்டுக் கண்காணிப்பு ஏற்படுத்தப்பட வேண்டுமென்று ஜெயவர்த்தனா கூறிய யோசனைக்குத் தமிழ்நாடு அரசு தனது கடும் எதிர்ப்பைத் தெரிவித்தது.

**இந்திய மீனவர்கள்மீது தான் நடத்திவரும் அத்துமீறிய தாக்குதலை மூடி மறைக்கவே இந்த யோசனைகளை இலங்கை கூறுவதாக முதலமைச்சர் எம்.ஜி. இராமச்சந்திரன் அறிவித்தார்.**

1985ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் கொழும்புக்குச் சென்ற இந்திய வெளியுறவுத்துறைச் செயலாளர் பண்டாரி, இலங்கை அதிபர் ஜெயவர்த்தனா மற்றும் அமைச்சர்கள் பலரையும் சந்தித்துப் பேசினார். இந்தப் பேச்சுவார்த்தைகள் தமக்குத் திருப்திகரமாக இருந்ததாகவும் அவர் அறிவித்தார். தமிழர் பிரசசினையைத் தீர்ப்பதற்கான அரசியல் பேச்சுவார்த்தைகள் தொடங்குவதற்கு முன்பாகப் பயங்கரவாதம் முற்றிலுமாக நிறுத்தப்படவேண்டும் என்ற இலங்கையின் நிலையை இந்தியா ஏற்றுக்கொள்வதாகவும் அவர் கூறினார்.

பண்டாரியின் இந்த அறிக்கைக்கு இந்திய நாடாளுமன்றத்திலும் மாநிலங்கள் அவையிலும் கடுமையான கண்டனத்தை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தெரிவித்தனர். இலங்கைத் தமிழர் பிரச்னையில் இந்தியா இதுவரை எடுத்த நிலையிலிருந்து இறங்கிவிட்டதாகவும் இந்திய நலன்களைப் பண்டாரி விற்றுவிட்டதாகவும் எதிர்க்கட்சியினர் கடுமையான குற்றச்சாட்டுகளைத் தெரிவித்தனர்.

25-3-85 அன்று நாடாளுமன்றத்தில் பேசிய இந்திய வெளியுறவுத்துறை ராஜாங்க அமைச்சர் **குர்ஷித் ஆலம்கான்** "இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இந்தியாவின் நிலையில் எத்தகைய மாற்றமுமில்லை" என அறிவித்தார். பண்டாரியின் இலங்கை விஜயம் பற்றி எதிர்க்கட்சியினர் தெரிவித்த கண்டனத்திற்குப் பதிலாகவே இத்தகைய அறிக்கையை அவர் வெளியிட்டார். ஆனால் இந்த அறிக்கை எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்குத் திருப்தியளிக்கவில்லை.

**"இலங்கையில் ஜனநாயகம் அழிக்கப்படும் அபாயத்திலிருந்துப் பாதுகாப்பதற்குப் பிரிட்டிஷ் இராணுவத்தை இலங்கையில் நிறுத்தவேண்டுமென்று" அதிபர் ஜெயவர்த்தனா பிரிட்டிஷ் பிரதமர் தாட்சருக்கு வேண்டுகோள் விடுத்தார்.**

13–4–85 அன்று பிரிட்டிஷ் பிரதமருக்கு ஜெயவர்த்தனா அளித்த விருந்தில் மேலே கண்ட வேண்டுகோளை விடுத்தார். அதைத் தொடர்ந்து பேசுகையில் அவர் பின்வருமாறு குறிப்பிட்டார்.

"ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்காக மத்திய அமெரிக்காவின் சில நாடுகளில் பிரிட்டன் தனது இராணுவத்தை நிறுத்தியிருக்கிறது. சைப்ரஸ், தென் அட்லாண்டிக், பெய்ரூட் போன்ற உலகின் பல்வேறு பகுதிகளில் உள்ள சுமார் 35 நாடுகளில் பிரிட்டிஷ் இராணுவம் நிறுத்தப்பட்டுள்ளது. உலகெங்கிலும் உள்ள நாடுகளின் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்காகப் பிரிட்டன் தனது கடமையைச் செய்யும் என நீங்கள் குறிப்பிட்டிருப்பதன் அடிப்படையில் இலங்கையிலும் பிரிட்டிஷ் இராணுவத்தை நிறுத்த முன்வரவேண்டும். இந்துமாக்கடல் பகுதியின் அமைதியைப் பாதுகாக்கவேண்டிய பொறுப்பு பிரிட்டனுக்கு உண்டு".

ஜெயவர்த்தனாவின் இந்த வேண்டுகோளைக் கண்டு இந்திய அரசு அதிர்ச்சியடைந்தது. இதற்கு ஒரு வாரத்திற்கு முன்பாக இந்திய வெளியுறவுத்துறைச் செயலாளர் பண்டாரியிடம் அமைதியான அரசியல் தீர்வையே தாம் விரும்புவதாகக் கூறிய ஜெயவர்த்தனா திடீரென்று இவ்வாறு அறிவித்திருப்பதன்மூலம் தமிழர் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வையே அவர் விரும்புகிறார் என்பது தெளிவாகிவிட்டது. வெளிநாட்டு இராணுவத்தை இலங்கை உதவிக்கு அழைப்பது இது முதல் தடவையில்லை. 1983ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் கொழும்பில் பெரும் இனக்கலவரம் மூண்டபோது பிரிட்டன், அமெரிக்கா, வங்காளதேசம் ஆகிய நாடுகளிடம் இலங்கை அரசு இராணுவ உதவியைக் கேட்டது. இந்தியாவின் எதிர்ப்புக்கு அஞ்சி இந்த நாடுகள் இராணுவ உதவி செய்ய மறுத்துவிட்டன.

இந்தியப் பிரதமர் ராஜீவும் இலங்கை அதிபர் ஜெயவர்த்தனாவும் கூட்டாக வங்காள தேசத்திற்குச் சென்றார்கள். 31–6–85 அன்று வங்காளதேசப் புயல் பகுதிகளைப் பார்வையிடச் சென்ற இந்த இரண்டு தலைவர்களும் இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்துப் பலமுறைகள் விவாதித்தார்கள். மூன்று நாட்கள் நடந்த இந்தப் பேச்சுவார்த்தையின் இறுதியில் ஐக்கிய இலங்கையின் சட்ட வரம்பிற்கு உட்பட்ட வகையில் தமிழர் பிரச்சினையைத் தீர்க்க முயற்சி செய்வது என இரண்டு தலைவர்களும் கூட்டாக அறிக்கை வெளியிட்டார்கள்.

பிரதமர் ராஜீவின் முயற்சியின் பேரில் 1985ஆம் ஆண்டு ஜூலை மாதம் 8ஆம் தேதியன்று பூட்டான் தலைநகரான திம்புவில் இலங்கை அரசுப் பிரதிநிதிகளுக்கும் தமிழர் பிரதிநிதிகளுக்குமிடையே பேச்சுவார்த்தை ஆரம்பமாயிற்று. இப்பேச்சுவார்த்தையில் தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் ஈழப் போராளிகளின் இயக்கங்களான விடுதலைப்புலிகள், டெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப், ஈரோஸ் ஆகியவை கலந்துகொண்டன. இவை அனைத்தும் ஒன்றுசேர்ந்து கீழ்க்கண்ட நான்கு அம்சக் கோரிக்கையை வெளியிட்டன.

1. தமிழர்கள் ஒரு தனித் தேசிய இனம் என்பது ஒப்புக்கொள்ளப்படவேண்டும். (Distinct Nationality)
2. தமிழ்த்தாயகப் பிரதேசங்களின் நிலப்பரப்பு ஒரே தொகுப்பு என்பது ஒப்புக்கொள்ளப்படவேண்டும். (Integrity of Tamil Territory)
3. தமிழ்த்தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமை ஒப்புக்கொள்ளப்படவேண்டும். (Right of self-Determination)
4. மலையகத் தமிழர்களுக்குக் குடியுரிமை அளிக்கப்படவேண்டும். அவர்களுள் யாரும் நாடற்றவர்கள் என்ற நிலையில் இருக்கக்கூடாது .(Citizenship right to Indian origin Tamils)

இந்த நான்கு அம்ச அடிப்படையிலேயே பேச்சுவார்த்தை நடத்தமுடியும் எனத் தமிழர் பிரதிநிதிகள் கூறினார்கள். இலங்கை அரசின் சார்பில் வந்திருந்த எச்.டபிள்யு. ஜெயவர்த்தனா அளித்த நகல் திட்டத்தைத் தமிழர் பிரதிநிதிகள் முற்றாக நிராகரித்தனர். எனவே பேச்சுவார்த்தை மீண்டும் ஒத்திவைக்கப்பட்டது.

ஆகஸ்டு 12ஆம் தேதி பேச்சுவார்த்தை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது. இப்பேச்சுவார்த்தையும் வெற்றிபெறவில்லை. இதற்கிடையில் வவுனியாவில் அப்பாவி மக்களைச் சிங்கள இராணுவம் கொன்று குவித்ததையொட்டி அதற்குக் கண்டனம் தெரிவித்துத் தமிழர் பிரதிநிதிகள் திம்பு மாநாட்டைவிட்டு வெளிநடப்புச் செய்தனர். முறிந்துபோன பேச்சுவார்த்தையை மீண்டும் தொடங்கப் பிரதமர் ராஜீவ்காந்தி முயற்சி எடுத்தார். ஈழதேசிய விடுதலை முன்னணி, தமிழீழத்திற்கு எத்தகைய மாற்றுத் திட்டத்தையும் தாங்கள் வைக்கமுடியாது எனக் கூறிவிட்டது. இதைக்கண்டு எரிச்சல் அடைந்த பிரதமர் ராஜீவ், தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த பாலசிங்கம் மற்றும் சந்திரகாசன், சத்தியேந்திரா ஆகிய மூவரையும் 27–8–85 அன்று இந்தியாவைவிட்டு நாடுகடத்த உத்தரவிட்டார். இதையொட்டித் தமிழகம் கொதித்தெழுந்தது. டெசோ அமைப்பு பெரும் போராட்டத்தை நடத்தியது. பல்லாயிரக்கணக்கானவர்கள் சிறைப்படுத்தப்பட்டார்கள். பள்ளிகளும் கல்லூரிகளும் மூடப்பட்டன. தமிழ்நாட்டு மக்களின் எழுச்சியைக் கண்டு இந்திய அரசு பணிந்தது. 30–8–85இல் நாடு கடத்தல் உத்தரவைத் திரும்பப்பெற்றது.

இந்திய அரசின் முயற்சியினால் ஜூன் மாதம் 18ஆம் தேதி போர் நிறுத்த ஒப்பந்தம் ஒன்று அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது. ஆனால் இந்த ஒப்பந்தத்தை இலங்கை அரசு மதிக்கவில்லை. போர் நிறுத்தத்தைக் கண்காணிப்பதற்காக அமைக்கப்பட்ட குழுவும் சரியாகச் செயல்படவில்லை. போர் நிறுத்தம் அமுலிலிருந்த 5 மாத காலத்தில் சிங்கள இராணுவ நடவடிக்கைகளின் விளைவாக சுமார் 2 ஆயிரத்திற்கு மேற்பட்ட தமிழர்கள் வீடு வாசல்களை விட்டு விரட்டியடிக்கப்பட்டு அகதிகளாக்கப்பட்டார்கள்.

இந்தச் சூழ்நிலையில் போர்நிறுத்த அவகாசத்தைப் பயன்படுத்திக்கொண்டு தனது இராணுவ வலிமையைப் பெருக்கும் முயற்சிகளில் இலங்கை ஈடுபட்டது.

**இதற்கிடையில் இலங்கையில் தமிழர் பகுதிகளில் தமிழர் தேசிய இயக்கத் தலைவர் நெடுமாறன் 1985ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் 23 நாட்கள் இரகசியச் சுற்றுப்பயணம் செய்துத் திரும்பினார். போர் நிறுத்தம் ஒரு மோசடி என்பதையும் போர் நிறுத்தக் காலத்தில் சுமார் 2,000 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டிருப்பதையும் இலட்சத்திற்கு மேற்பட்டோர் அகதிகளாயிருப்பதையும் அவர் அம்பலப்படுத்தினார்.**

"தமிழ்ப் போராளிகளுக்கு இந்தியா உதவி வருகிறது. இந்திய ஆயுதங்களைக் கொண்டே அவர்கள் போராடுகிறார்கள். இந்த ஆயுதங்களில் இந்திய அடையாளங்கள் உள்ளன. இந்தியா எங்கள்மீது படையெடுக்க விரும்பும் என்று நாங்கள் நினைக்கவில்லை. **அப்படி அவர்கள் படையெடுத்தால் 24 மணி நேரத்தில் இலங்கையைப் பிடிக்கமுடியும். என்னைக் கைதுசெய்யவும் முடியும். ஆனால் அவ்வாறு நடைபெறுமானால் இலங்கையிலுள்ள தமிழர்கள் அத்தனைப் பேரும் படுகொலை செய்யப்படுவார்கள் என்பது உறுதி** "என்ற இலங்கை அதிபர் ஜெயவர்த்தனா கூறினார். **"இந்தியா டுடே"** என்ற வார ஏட்டுக்கு அவர் அளித்த பேட்டியிலே அவர் இவ்வாறு கூறினார். (15-12-1985)

**"இந்தியா இலங்கையுடன் கொண்டுள்ள நட்புறவு இரட்டைவேட நட்புறவாகும். இத்தகைய நாட்டுடன் இலங்கை நெருக்கமாக இருக்கமுடியாது. இந்தியாவைவிடப் பாகிஸ்தானே இலங்கைக்குச் சிறந்த நட்பு நாடாகும்;" என இலங்கை அதிபர் ஜெயவர்த்தனா, ஆஸ்திரேலிய ஒலிபரப்பு நிறுவனம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் கூறினார்.(21-4-86)**

1986ஆம் ஆண்டு பிப்ரவரியில் பெங்களூரில் சார்க் மாநாடு நடைபெற்றபொழுது ஜெயவர்த்தனாவையும் பிரபாகரனையும் சந்திக்க வைப்பதற்கும் ஓர் உடன்பாடு காண்பதற்கும் பெரு முயற்சியைப் பிரதமர் ராஜீவ் மேற்கொண்டார். அப்பொழுது தமிழக முதலமைச்சராக இருந்த எம்.ஜி.ஆர். அவர்களையும் பிரபாகரனுடன் பெங்களூருக்கு வரச்செய்து அவர் மூலமாகப் பிரபாகரனுக்கு ஆசை வார்த்தை காட்ட முயற்சிகள் செய்யப்பட்டது. வடக்கு மாநிலத்தை மட்டும் தற்பொழுது ஏற்றுக்கொண்டு அதன் முதலமைச்சராகும்படி பிரபாகரனை ராஜீவ் காந்தியும் எம்.ஜி.ஆரும் வற்புறுத்தினார்கள்.

இப்பொழுதைக்கு இந்த ஏற்பாட்டை பிரபாகரன் ஒப்புக் கொண்டால் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு நிதி உதவி உட்பட எல்லா வகையான உதவிகளையும் செய்வதாக எம்.ஜி.ஆர். ஆசை வார்த்தை காட்டினார். இந்த ஆசை வார்த்தைகளுக்கும் அச்சுறுத்தலுக்கும் பிரபாகரன் கொஞ்சமும் மயங்கவில்லை. இதன் விளைவாக அவர் மீது பிரதமர் கடும் கோபம் கொண்டார். பிரதமர் ராஜீவைத் திருப்திபடுத்த

முதலமைச்சர் எம்.ஜி.ஆரும் விடுதலைப் புலிகளுக்கு எதிராகப் பல நடவடிக்கைகளை மேற்கொண்டார். சென்னையிலிருந்த விடுதலைப் புலிகளின் அலுவலகங்கள் சோதனையிடப்பட்டன. அவர்களிடமிருந்த தகவல் தொடர்புச் சாதனங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. இந்நடவடிக்கைகளைக் கண்டித்து பிரபாகரன் சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொண்டார். அதற்குப் பின்னரே கைப்பற்றப்பட்ட சாதனங்கள் திரும்பப் பெறப்பட்டன. இதற்குப் பின்னர் இனி தமிழ்நாட்டில் இருப்பது சரியில்லை என்று முடிவு செய்த பிரபாகரன் தாயகம் திரும்பினார்.

தமிழீழப் போராளிகளுக்கு இந்தியா உதவுவதாக ஜெயவர்த்தனாவும் பிற சிங்களத் தலைவர்களும் குற்றம் சாட்டிய வேளையில் இந்தியாவில் இரு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

சென்னைத் துறைமுகத்தில் போராளிகளுக்கு வந்திறங்கிய ஆயுதங்களை இந்திய அரசு பறிமுதல் செய்தது.

அதேவேளையில் இலங்கை அரசுக்காக ஆயுதங்கள் ஏற்றிச் செல்லும் விமானங்களையும் கப்பல்களையும் தங்கு தடையில்லாமல் இந்தியா வழியே செல்ல இந்திய அரசு அனுமதித்தது.

இந்திய அரசின் இந்த இரட்டை அணுகுமுறை கண்டு தமிழர்கள் மனம் கொதித்தனர்.

*1986*ஆம் ஆண்டில் வெளியுறவுத் துறை அமைச்சராக இருந்த நட்வர்சிங் இலங்கைக்கு அனுப்பப்பட்டு பேச்சு வார்த்தை நடத்தப்பட்டது. இதன் விளைவாக **டிசம்பர் 19 திட்டம்** என்ற பெயரில் ஒரு சமரசத் திட்டம் உருவாக்கப்பட்டது. ஆனாலும் மீண்டும் மீண்டும் பழைய கள்ளையே புதிய மொந்தையில் அளித்தனர். எனவே இதனை ஏற்றுக் கொள்ள விடுதலைப்புலிகள் மறுத்துவிட்டனர்.

யாழ்குடா நாட்டை விடுதலைப்புலிகள் தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டு வந்தனர். உடனடியாக பொருளாதாரத் தடையை சிங்கள அரசு அறிவித்தது. இதற்கு தமிழ்நாட்டில் கடும் எதிர்ப்பு எழுந்ததின் விளைவாக பிரதமர் ராஜீவ் காந்தி தலையிட்டு பொருளாதாரத் தடையை நீக்குமாறு ஜெயவர்த்தனாவிற்கு வேண்டுகோள் விடுத்தார். ஆனால் அவர் அதை ஏற்க மறுத்தார். இதன் விளைவாக பட்டினியால் வாடும் தமிழர்களுக்கு உதவுவதற்காக உணவு மற்றும் மருந்துகள் படகுகள் மூலம் இந்திய அரசு அனுப்பியது. ஆனால் இலங்கைக் கடற்படை இந்தப் படகுகளைத் தடுத்து திருப்பி அனுப்பியது. எனவே இந்திய விமானங்கள் மூலம் யாழ்குடா நாட்டில் இந்தப் பொருட்கள் போடப்பட்டன. இதன் விளைவாக அச்சமடைந்த இலங்கை பொருளாதாரத் தடையை நீக்கியது. இந்தச் சூழ்நிலையில்தான் ராஜீவ் – ஜெயவர்த்தனா உடன்பாடு ஜீலை மூன்றாம் நாள் ஏற்பட்டது.

இலங்கைப் பிரச்சினை சம்பந்தமாக பிரதமர் ராஜீவ் பல முயற்சிகள் மேற்கொண்டபோது விவரம் தெரிந்தவர்கள் தனது நம்பிக்கைக்கு உரியவர்களாக எடுத்துக் கொள்ளவில்லை. தன்னைச் சுற்றியுள்ள ஒரு சிறு கும்பலை மட்டுமே

கலந்து ஆலோசனை செய்தார். அமெரிக்காவில் இருந்து அவருக்குக் கிடைத்த ஆலோசனையின்படி அவர் செயற்பட்டார்.

1987ஆம் ஆண்டு ஜீலை 27ஆம் தேதி குடியரசுத் தலைவராக ஆர். வெங்கட்ராமன் பதவி ஏற்றார். அதற்கு 4 நாட்கள் கழித்து ஜீலை 29ஆம் தேதி ராஜீவ் – ஜெயவர்த்தனா உடன்பாடு கையெழுத்திடப்பட்டது. ஆனால் இந்த உடன்பாட்டைப் பற்றிய எந்த விவரமும் குடியரசுத் தலைவர் ஆர். வெங்கட்ராமனுக்கு தெரிவிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அப்போது இலங்கை இராணுவத் தலைமை தளபதியாக இருந்த ஜெனரல் சுந்தர்ஜிக்குகூட இந்த உடன்பாடு பற்றிய எந்த விவரமும் தெரிந்திருக்கவில்லை. அவர் குடியரசுத் தலைவரைச் சந்தித்து இதுபற்றி முறையிட்டார். அந்தச் செய்தியை "Comment" என்றப் பத்திரிக்கை தனது 1–12–1987 இதழில் வெளியிட்டது. இந்தப் பத்திரிக்கை ஆசிரியர் பிரபலமான காங்கிரசு தலைவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ராஜீவ் – ஜெயவர்த்தனா உடன்பாட்டின் விளைவாக இந்திய அமைதிப்படை இலங்கையில் அடியெடுத்து வைத்தபொழுது இலங்கைத் தமிழர்கள் ஆரத்தி எடுத்து அவர்களை ஆரவாரத்துடனும் அளவிலா மகிழ்ச்சியுடனும் வரவேற்றார்கள். சிங்கள வல்லரக்கர்களின் பிடியிலிருந்து தங்களைக் காக்க வந்த இரட்சகர்களாக இந்திய வீரர்களை ஈழத் தமிழர்கள் கருதினார்கள். இந்திய இராணுவத் தளபதிகளின் முன்னிலையில் யாழ்ப்பாணம் சுதுமலையில் 04–08–1987 அன்று நடைபெற்ற பெரிய கூட்டத்தில் உரையாற்றுகையில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் பின்வருமாறு தனது பேச்சில் குறிப்பிட்டார்.

"எங்களுடைய மக்களின் பாதுகாப்பிற்காகவும் விடுதலைக்காகவும் உயர்வுக்காகவும் நாங்கள் ஆயுதங்களைத் தூக்கினோம். இப்போது எமது மக்களைப் பாதுகாக்கும் பொறுப்பை இந்திய அரசிடம் ஒப்படைக்கிறோம். நாங்கள் ஆயுதங்களைக் கீழே வைக்காவிட்டால் இந்திய இராணுவத்துடன் போரிடும்படியான வேண்டாத சூழ்நிலை ஏற்பட்டுவிடும். அதை நாங்கள் விரும்பவில்லை. நாங்கள் இந்தியாவை நேசிக்கிறோம். இந்திய மக்களை நேசிக்கிறோம். இந்திய இராணுவ வீரர்களுக்கு எதிராக எங்கள் ஆயுதங்களைத் திருப்புவது என்ற பேச்சுக்கே இடமில்லை. ஆனால் அதே வேளையில் கொஞ்சமும் சந்தேகத்திற்கு இடமில்லாத வகையில் ஒன்றைத் தெளிவுபடுத்த விரும்புகிறோம். தமிழீழத்தை அடைவதற்கான எங்கள் போராட்டத்தை நிச்சயமாக நான் தொடருவேன். எமது தாயகமான தமிழீழத்தை அடைவதையே எமது நோக்கமாகக் கொண்டு இருக்கிறோம்".

## மோசமான விளைவுகள்

பிரதமர் ராஜீவின் முன்யோசனையற்றதும் அனுபவமற்றதுமான போக்கின் விளைவாக இலங்கையில் கீழ்க்கண்ட மோசமான விளைவுகள் ஏற்பட்டன.

இஸ்ரேலிய மோசாட் படையினர் இலங்கைக்கு வந்து சிங்கள இராணுவத்திற்குப் பயிற்சி கொடுத்தனர்.

மேற்கத்திய நாடுகளைச் சேர்ந்த கூலிப் படையினர் தமிழர்களுக்கு எதிராகப் போராட வரவழைக்கப்பட்டனர்.

சிங்கள இராணுவத்தின் எண்ணிக்கை 5 மடங்காகப் பெருக்கப்பட்டது. மேற்கு ஐரோப்பிய நாடுகள், இஸ்ரேல், பாகிஸ்தான், சீனா, தென்னாப்பிரிக்கா ஆகிய நாடுகள் இலங்கைக்கு இராணுவ ரீதியான உதவிகளை அளித்தன.

திருகோணமலைத் துறைமுகத்தில் அமெரிக்கப் போர்க் கப்பல்களுக்கு எண்ணெய் நிரப்பிக்கொள்ளும் வசதியும் ஓய்வு தங்குமிட வசதிகளும் அளிக்கப்பட்டன.

இலங்கை விமானங்களை ஓட்டுவதற்குப் பாகிஸ்தான் விமானிகள் நியமிக்கப்பட்டனர்.

திருகோணமலையில் இந்தியாவுக்கு எதிராகப் பிரச்சாரம் செய்ய நவீன சக்திவாய்ந்த வானொலி நிலையம் அமைக்கப்பட்டது.

இந்தியாவுக்கு எதிரிகளாக உள்ள நாடுகளின் செல்வாக்கு இலங்கையில் ஓங்கியது. இவற்றைக் கண்டு கோபங்கொள்வதற்குப் பதில் இந்திய அரசு சிங்கள அரசைத் திருப்திப்படுத்துவதில் முனைந்தது.

தமிழர்களுக்கு எதிராகவும் சிங்கள அரசுக்குச் சாதகமாகவும் இந்திய அரசின் நடவடிக்கைகள் திருப்பப் பெறத் தொடங்கின.

ராஜீவ் பிரதமரானபிறகு சுமார் 20 ஆயிரம் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். சுமார் 5 இலட்சம் தமிழர்கள் அகதிகளானார்கள். பல்லாயிரக் கணக்கான தமிழ்ப் பெண்கள் மானம் இழந்தார்கள். பல ஆயிரம் கோடி ரூபாய்கள் பெறுமான தமிழர்களின் சொத்துகளும் ஊர்களும் அழிக்கப்பட்டன. தமிழர்களின் மண்ணில் சிங்களவர்கள் தங்குத் தடையின்றிக் குடியேறினர்.

பிரதமர் ராஜீவின் அணுகுமுறையைப் புரிந்துகொண்ட ஜெயவர்த்தனா அவருக்குக் கீழ்க்கண்ட வாக்குறுதிகளை அளித்தார்:

"இந்தியாவுக்குப் பாதகமற்றப் போக்கை உள்நாட்டு ரீதியாகவும் வெளிநாட்டு ரீதியாகவும் இலங்கை கடைபிடிக்கும்.

இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையுடன் முரண்படாதவாறும் அதே வேளையில் வேறு ஒரு வெளிநாடு இலங்கையில் தனது செல்வாக்கைச் செலுத்த முடியாதவாறும் இலங்கை பார்த்துக் கொள்ளும்".

**இந்த வாக்குறுதிகளுக்குப் பதிலாக ராஜீவ் கீழ்க்கண்ட வாக்குறுதிகளை ஜெயவர்த்தனாவிற்கு அளித்தார்.**

**இலங்கையை இரண்டாகப் பிரித்து தமிழீழம் அமைப்பதற்கு இந்தியா ஒருபொழுதும் ஆதரவு அளிக்காது.**

**இந்தியாவைத் தளமாகப் பயன்படுத்த போராளிகள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.**

**தேவைப்பட்டால் இந்திய இராணுவத்தைப் பயன்படுத்தி விடுதலைப் புலிகளையும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தையும் ஒடுக்க இந்தியா உதவும்.**

இந்த அடிப்படையில்தான் 1986ஆம் ஆண்டில் ராஜீவ் ஜெயவர்த்தனா உடன்பாடு ஏற்பட்டது. இந்த மோசமான உடன்பாட்டின் விளைவாக இந்திய இராணுவம் இலங்கைக்குச் சென்று விடுதலைப் புலிகளை வேட்டையாடுவது என்ற பெயரால் தமிழ் மக்களைக் கொன்று குவித்தது. இந்த உடன்பாட்டின்படி தமிழ் மக்களுக்கு எல்லா உரிமைகளையும் பெற்று தருவேன் என்று ராஜீவ் கூறியது முற்றிலும் பொய்யாகிவிட்டது.

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியும் இலங்கைக் குடியரசுத் தலைவர் ஜெயவர்த்தனாவும் செய்துகொண்ட உடன்பாடு மிகச் சிறந்ததாகும் என சிலரால் வர்ணிக்கப்பட்டபோதிலும் கூட அந்த உடன்பாடு படுதோல்வி அடைந்தது.

இலங்கையில் உள்ள இடதுசாரி சனநாயக அமைப்புகளும் மனித உரிமை அமைப்புக்களும் இந்த உடன்பாட்டை வரவேற்றபோதிலும் சிங்களத் தீவிரவாத இயக்கமான ஜனதா விமுக்தி பெரமுனா இந்த உடன்பாட்டை மிகக் கடுமையாக எதிர்த்தது. இந்த உடன்பாட்டில் கையெழுத்திட பிரதமர் ராஜீவ் காந்தி கொழும்புவிற்கு வந்த வேளையில் சிங்களப் பகுதிகள் முழுவதிலும் பெரும் கலவரங்கள் மூண்டன. கொழும்பு போன்ற நகரங்களில் இருந்த தமிழர்கள் தாக்கப்பட்டனர். அவர்களின் கடைகள் சூறையாடப்பட்டன. இதன் விளைவாக 36 மணிநேர ஊரடங்குச் சட்டத்தினை இலங்கை அரசு பிறப்பித்தது. சிங்களக் கலவரக்காரர்களில் 20 பேருக்கு மேல் சுட்டுக் கொல்லப்பட்டனர். எல்லாவற்றுக்கும் மேலாக இலங்கைப் பிரதமர் பிரேமதாசா இந்த உடன்பாட்டுக்குப் பகிரங்கமாக எதிர்ப்புத் தெரிவித்தார். மரபுப்படி இந்தியப் பிரதமரை வரவேற்கச் செல்லாமல் புறக்கணித்தார். உள்நாட்டுப் பாதுகாப்புத்துறை அமைச்சர் லலித் அதுலத் முதலியும் இந்த உடன்பாட்டுக்குக் கடுமையான எதிர்ப்பு தெரிவித்தார்.

காட்டுநாயகா விமான நிலையத்திலிருந்து இந்தியப் பிரதமர் புறப்படுவதற்கு முன்னால் சிங்கள இராணுவ வீரர்களின் மரியாதை அணிவகுப்பை அவர் பார்வையிட்டபோது கடற்படையைச் சேர்ந்த விஜித முனி ரோகணா என்ற ஒரு வீரர் துப்பாக்கிக் கட்டையால் ராஜீவ் காந்தியைத் தாக்கிய பரபரப்பான நிகழ்ச்சியும் நடந்தது. "மனநிலை சரியில்லாதவன் இப்படி செய்துவிட்டதாக" சிங்கள அரசு இந்நிகழ்ச்சியைப் பூசி மெழுகிற்று. ஆனால் பிரேமதாசா, குடியரசுத் தலைவரானவுடன் சிறையில் இருந்த விஜித முனி ரோகணாவை விடுதலை செய்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இவர் மேற்கு மாகாண சட்டசபைத் தேர்தலிலும் போட்டியிட்டு வெற்றிபெற்றார். பூமி புத்ரா என்னும் கட்சிக்குத் தலைவராகவும் இருந்து வருகிறார்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தவிர மற்ற அனைத்துத் தமிழ் அமைப்புகளும் இந்த உடன்பாட்டுக்கு ஆதரவு தெரிவித்தன. ஆனால் வடக்கு – கிழக்கு மாநிலங்களை ஒரே மாநிலமாக இணைப்பது குறித்துப் பின்னர் வாக்கெடுப்பு நடத்தி இறுதி முடிவு செய்யப்படும் என்று சொல்லப்பட்டிருந்ததை இந்த அமைப்புகள் கடுமையாகக் கண்டித்தன.

1987ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 6ஆம் தேதியன்று நாட்டுமக்களுக்கு நிகழ்த்திய வானொலி உரையில் பேசிய ஜெயவர்த்தனா இந்த இணைப்பை எதிர்த்துத் தான் பிரச்சாரம் செய்யப்போவதாகவும் பகிரங்கமாக அறிவித்தார். மேலும் இந்தியாவின் உதவியுடன் விடுதலைப் புலிகளிடம் உள்ள ஆயுதங்களைப் பறித்தெடுக்க இந்த உடன்பாடு ஒரு நல்ல வாய்ப்பாக அமைந்தது என்றும் கூறினார். இந்த உடன்பாட்டில் கையெழுத்திட்டதற்கே இதுதான் நோக்கம் என்பதையும் அவர் வெளிப்படையாக கூறத் தயங்கவில்லை.

இந்த உடன்பாட்டின் விளைவாக என்ன நடக்கவேண்டுமென்று ஜெயவர்த்தனா விரும்பினாரோ அது நடந்தது. ஈழத் தமிழர்களின் உதவிக்கு இந்தியா வரக்கூடாது. மாறாக ஈழத் தமிழர்களுக்கும் இந்தியாவுக்குமிடையே மோதல் உருவாக வேண்டுமென ஜெயவர்த்தனா விரும்பினார். இந்த நோக்கத்துடன் அவர் விரித்த வலையில் ராஜீவ் காந்தி தலைகீழாக விழுந்தார். இதன் விளைவாகத் தமிழர்களைப் பாதுகாக்க அனுப்பப்பட்ட இந்திய இராணுவம் தமிழர்களைத் தொடர்ந்து வேட்டையாடியது. எந்தத் தமிழர்கள் இந்தியாவையே நம்பி இருந்தார்களோ அந்தத் தமிழர்களுக்கு இந்தியா துரோகமிழைத்தது.

இந்திய அமைதிப்படையிடம் ஆயுதங்களை ஒப்படைத்துவிட்டு நிராயுதபாணிகளாக இருந்த விடுதலைப் புலிகளுக்கு எதிராகப் பிற துரோக இயக்கங்களை ரா உளவுத்துறை ஏவிவிட்டது. 22 விடுதலைப் புலிகள் படுகொலை செய்யப்பட்டார்கள். கிறித்துவப் பாதிரியார்கள் சிலரைக்கூட துரோகிகள் சுட்டுக் கொன்றார்கள். ஆனால் இந்திய அமைதிப்படை இதற்கு எதிராக எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. மேலும் உடன்பாட்டில் சொல்லப்பட்ட பல அம்சங்களை ஜெயவர்த்தனா நிறைவேற்றவில்லை. இதற்குக் கடும் எதிர்ப்பு தெரிவிக்க பிரபாகரன் முடிவு செய்தார். ஆயுதம் தாங்கிப் போராடும் இயக்கத்தின் தலைவரான அவர் இந்தியாவுக்கு எதிரான எதிர்ப்பைத் தெரிவிக்கும் போராட்டத்தை அறவழியில் நடத்த முடிவு செய்தார். விடுதலைப் புலிகள் இயக்க அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் திலீபன் கீழ்க்கண்ட கோரிக்கைகளை முன்வைத்துச் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கப் போவதாக அறிவித்தார்.

1. அவசரகால நிலையை ஜெயவர்த்தனா நீக்கவில்லை.
2. தமிழ் அரசியல் கைதிகளை முழுமையாக விடுவிக்கவில்லை.
3. தமிழர் பகுதிகளில் சிங்களர் குடியேற்றம் நிறுத்தப்படவில்லை.
4. தங்களின் சொந்த ஊர்களுக்குத் தமிழ் அகதிகள் திரும்ப முடியவில்லை. அவர்களைச் சிங்கள இராணுவம் விரட்டி அடிக்கிறது.
5. சிங்கள ஊர்க்காவல் படையிடமிருந்து ஆயுதங்களைத் திரும்பப் பெறவில்லை.
6. தமிழ்ப் பகுதிகளில் அவசர அவசரமாகச் சிங்கள காவல் நிலையங்கள் திறக்கப்படுகின்றன
7. தமிழ்ப் பகுதிகளில் இருந்து சிங்கள இராணுவ முகாம்கள் அகற்றப்படவில்லை.

இந்திய இலங்கை உடன்பாட்டில் கண்டுள்ளபடி மேற்கண்டவற்றை நிறைவேற்றியிருக்க வேண்டிய ஜெயவர்த்தனா அதனை நிறைவேற்ற மறுத்தார். அதை ஏன் என்று இந்திய அரசு தட்டிக் கேட்கவில்லை. இதை எதிர்த்துத்தான் திலீபன் உண்ணாநோன்பு மேற்கொண்டார். ஒருசொட்டுத் தண்ணீர் கூட அருந்தாமல் உண்ணாநோன்பு இருந்துத் திலீபன் உயிர்த்தியாகம் செய்த நிகழ்ச்சி தமிழர்களின் உள்ளங்களில் ஆறாத புண்ணை ஏற்படுத்திவிட்டது.

திலீபனின் உயிர்த்தியாகம் உன்னதமானது. ஒப்புவமை கூறமுடியாதது. உலகத்திலேயே ஒரு சொட்டுத் தண்ணீர் கூட அருந்தாமல் உண்ணாநோன்பு இருந்து உயிர் துறந்த முதல் தியாகி திலீபன்தான். காந்தியடிகளைத் தங்களின் தேசத் தந்தையாகக் கொண்டிருக்கும் இந்திய அரசு ஈழத் தமிழர்களுக்கு இழைத்த அநீதியைக் கண்டிக்க காந்திய வழியிலேயே திலீபன் போராடினார். காந்தியடிகளின் உண்மையான சீடனாக அறவழியில் போராடி அவர் உயிர்த்தியாகம் செய்தார். அவருடைய தியாக மரணத்தை இந்திய அரசு அலட்சியம் செய்தது. அவதூறாகப் பிரச்சாரம் செய்தது. திலீபனின் உயிர்த்தியாகத்தால் ஏற்பட்ட சோக மேகங்கள் கலைவதற்குள் மற்றொரு கொடிய நிகழ்ச்சி நடந்தது.

1987ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 3ஆம் தேதி தமிழகத்திற்குச் சென்று அங்குள்ள தங்கள் அலுவலகத்திலுள்ள ஆவணங்களையும் பொருட்களையும் எடுத்து வருவதற்காக இந்திய அமைதிப்படைத் தளபதியிடம் முன்னறிவிப்புக் கொடுத்துவிட்டுத் தமிழகம் நோக்கிப் படகில் புறப்பட்ட 17 விடுதலைப் புலிகளைச் சிங்களக் கடற்படை சுற்றிவளைத்துப் பிடித்து பலாலி இராணுவ முகாமிற்குக் கொண்டு சென்றது. ராஜீவ் – ஜெயவர்த்தனா உடன்பாட்டின்படி எல்லோருக்கும் பொதுமன்னிப்பு அளிக்கப்பட்டுவிட்ட நிலையில் அதை மீறிச் சிங்கள இராணுவம் அவர்களைக் கைது செய்தது குறிப்பிடத்தக்கது. இந்திய அமைதிப் படையின் தளபதி லெப்.ஜெனரல். திபீந்தர் சிங் இதை ஏற்கவில்லை. புலிகளைக் கைது செய்தது தவறு என்பதைச் சுட்டிக்காட்டினார். அவர் சொல்லை ஏற்பதற்குச் சிங்கள அதிகாரிகள் மறுத்துவிட்டார்கள். உடனடியாக அவர் அங்கு இந்திய அமைதிப்படை வீரர்களைக் காவலுக்கு நிறுத்திவிட்டு இந்திய அரசுக்குத் தகவல் கொடுத்தார். இந்த 17 பேர்களில் விடுதலைப்புலிகளின் இரு முக்கிய தளபதிகளான குமரப்பா, புலேந்திரன் ஆகியோரும் அடங்குவர். அவர்கள் அனைவரையும் கொழும்பு கொண்டு செல்வதற்குச் சிங்கள இராணுவம் முயற்சி செய்தது. அதை இந்தியத் தளபதி திபீந்தர் சிங் அனுமதிக்க மறுத்தார். ஆனால் இந்தப் பிரச்சினையில் தலையிட வேண்டாம் என்று பிரதமர் ராஜீவ் காந்தி இந்தியத் தளபதிக்கு ஆணையிட்டார். இதன் விளைவாக 17 புலிகளும் வைக்கப்பட்டிருந்த இடத்தைச் சுற்றிக் காவல்புரிந்து வந்த இந்திய அமைதிப்படை வீரர்கள் திரும்பப் பெறப்பட்டனர். உடனடியாகச் சிங்கள இராணுவ வீரர்கள் அந்த இடத்தைச் சூழ்ந்து கொண்டனர். புலிகளைக் கொழும்பு கொண்டு செல்வதற்குச் சிங்களப்படை முயன்றபொழுது 17 புலிகளும் நச்சுக் குப்பிகளைக் கடித்தனர். தளபதிகள் புலேந்திரன், குமரப்பா உட்பட 12 புலிகளின் உயிர்கள் உடனடியாகப் பிரிந்தன. எஞ்சிய 5 விடுதலைப்புலிகளும் மருத்துவ மனைக்கு எடுத்துச்செல்லப்பட்டு பிழைக்க வைக்கப்பட்டனர். குமரப்பா, புலேந்திரன் ஆகியோர் இறந்த பின்னரும் சிங்கள வெறியர்களின்

வெறி தணியவில்லை. துப்பாக்கிச் சனியன்களால் அவர்களின் உடலைக் குத்திக் கிழித்தார்கள். எந்தச் சூழ்நிலையிலும் புலிகளுடன் சமரசம் செய்துகொள்ளாமல் அவர்களுக்கு ஆத்திரமூட்டி இந்திய இராணுவத்திடம் அவர்களை மோதவைத்து அவர்களை அழித்துவிடவேண்டும் என ஜெயவர்த்தனா வகுத்த திட்டத்திற்கு ராஜீவ் இரையானார். ஜெயவர்த்தனாவின் திட்டப்படி பெரும் மோதல் வெடித்தது. தமிழர்களைக் காப்பதற்காக அனுப்பப்பட்டதாகக் கூறப்பட்ட இந்திய அமைதிப்படை தமிழர்களையே வேட்டையாடத் தொடங்கியது. பாகிஸ்தான் இராணுவக் கொடுமைகளிலிருந்து வங்க மக்களைக் காப்பதற்காக இந்தியப்படை அங்குச் சென்று பாகிஸ்தான் இராணுவத்தை எதிர்த்துப் போராடி அவர்களின் விடுதலைக்கு வழி வகுத்தது. ஆனால் ஈழத் தமிழர்களைத் திட்டமிட்டு இனப்படுகொலை செய்த சிங்கள இராணுவத்துடன் இந்தியப் படை சேர்ந்துகொண்டு ஈழத் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தினை ஒடுக்குவதற்கு முயற்சி செய்தது.

இந்திய – இலங்கை உடன்பாட்டினைத் தொடர்ந்து இலங்கை அரசியலமைப்புச் சட்டத்திற்கு 1978ஆம் ஆண்டு 13வது சட்டத்திருத்தத்தை இலங்கை அரசு கொண்டு வந்தது. மிதவாத அமைப்பான தமிழர் விடுதலைக் கூட்டணி கூட இந்தச் சட்டத்திருத்தத்தை ஏற்கவில்லை. கடுமையாக எதிர்த்தது. ஆனால் அவர்களின் எதிர்ப்பையெல்லாம் அலட்சியம் செய்து ஒதுக்கிவிட்டது. 1987ஆம் ஆண்டு நவம்பர் 17ஆம் தேதி இந்தச் சட்டத் திருத்தத்தை நாடாளுமன்றத்தில் இலங்கை அரசு நிறைவேற்றியது.

1988ஆம் ஆண்டு நவம்பர் 19ஆம் தேதியன்று வடகிழக்கு மாகாணத்திற்காக மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட்டது. விடுதலைப் புலிகளும் தமிழர் விடுதலைக் கூட்டணியும் இந்தத் தேர்தலைப் புறக்கணித்தன. சிங்கள அரசின் கைக்கூலிகளாகச் செயல்பட்டுவந்த இயக்கங்கள் மட்டுமே தேர்தலில் கலந்துகொண்டன. இந்தத் தேர்தலைப் புறக்கணிக்கும்படி விடுதலைப் புலிகள் விடுத்த வேண்டுகோளை மக்கள் ஏற்றனர். அந்த வேண்டுகோளை ஏற்று மிகப் பெரும்பாலான மக்கள் மாகாணசபைத் தேர்தலைப் புறக்கணித்தனர். போலியான தேர்தல் நடத்தப்பட்டு மாகாணசபை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. இபிஆர்எல்எப் இயக்கத்தைச் சேர்ந்த **வரதராசப் பெருமாள்** தலைமையில் அமைச்சரவை அமைக்கப்பட்டது. இதற்கிடையில் பிரேமதாசா குடியரசுத் தலைவர் ஆனவுடன் இந்திய அமைதிப்படை வெளியேறவேண்டும் என வற்புறுத்தினார். 1989ஆம் ஆண்டு இறுதியில் இந்தியாவில் பொதுத் தேர்தல் நடைபெறவேண்டியிருந்தது. அந்த வேளையில் பிரேமதாசாவின் இந்தக் கோரிக்கையை ஏற்பது என்பது தனக்குப் பெரும் அவமானத்தை ஏற்படுத்திவிடும். தேர்தலிலும் பின்னடைவு ஏற்படும் என்று அஞ்சிய பிரதமர் ராஜீவ் காந்தி இந்திய இராணுவம் திரும்பப்பெற வேண்டுமானால் இந்திய – இலங்கை உடன்பாட்டின் சகல அம்சங்களும் நிறைவேற்றப்படவேண்டும் என்று கூறினார். 1987ஆம் ஆண்டு கையெழுத்திடப்பட்ட இந்த உடன்பாட்டின் பல அம்சங்களை இரண்டு ஆண்டு காலமாக இலங்கை அரசு நிறைவேற்றாததைக் கண்டுகொள்ளாமல்

இருந்த பிரதமர் ராஜீவ் காந்தி திடீர் என அதை வற்புறுத்தத் தொடங்கினார். அதோடு மட்டுமல்லாமல் **தமிழ்த் தேசிய இராணுவம்** என்ற பெயரில் ஒரு படையை அமைத்து அவர்களுக்கு ஆயுதப் பயிற்சியும் அளித்தார். இந்த இராணுவம் மாகாண அரசின் அதிகாரத்திற்கு உட்பட்டு இயங்கும் என்றும் அறிவிக்கப்பட்டது.

தேசியப் பாதுகாப்புத்துறை அமைச்சரான விஜயரத்தின, தமிழ்த் தேசிய இராணுவம் அமைக்கப்பட்டதற்கு கடும் கண்டனம் தெரிவித்தார்.

இந்திய இராணுவத்தை திரும்பப் பெறாமல் இருப்பதற்காக ராஜீவ் காந்தி இரகசியத் திட்டம் ஒன்றினை வகுத்தார். அதற்கிணங்க வரதராசப் பெருமாள் மாகாண சபைக் கூட்டத்தைக் கூட்டித் தனித் தமிழீழத்தைப் பிரகடனம் செய்தார்.

இலங்கையின் தேசிய ஒருமைப்பாட்டுக்குப் பாதகம் விளையும் வகையில் தமிழர்களுக்குத் தனி நாடு அமைவதை ஒருபோதும் ஏற்கமுடியாது என திரும்பத் திரும்ப சொல்லிவந்த ராஜீவ் காந்தி திடீர் என்று தனித்தமிழீழத்தைப் பிரகடனம் செய்ய வைத்தது வேடிக்கையாகும்.

*1989*ஆம் ஆண்டில் இந்தியாவில் நடைபெற்ற தேர்தலில் ராஜீவ் காந்தி கட்சி படுதோல்வி அடைந்தது. இந்தியப் பிரதமராக விபி.சிங் பதவி ஏற்றார். இலங்கையில் தமிழ்த் தேசிய இராணுவத்தை முற்றிலுமாக விடுதலைப் புலிகள் முறியடித்தனர். இந்திய இராணுவம் வெளியேற வேண்டிய நிலை உருவாயிற்று.

# 7. வங்க-ஈழ விடுதலைப் போர்களில் இந்திய மக்களின் பங்கு

வங்கதேச விடுதலைப் போருக்கு இந்திய மக்கள் பேராதரவு தந்தனர். குறிப்பாக மேற்கு வங்க மக்கள் அளித்த ஆதரவு வரலாறு காணாததாகும்.

கல்வி நிலையங்கள், தொழிற்சாலைகள், வணிக அமைப்புகள், பொது அமைப்புகள் போன்றவை வங்கதேச நிதிக்கு உதவிகளை வாறி வாறி வழங்கின. 1971 மார்ச் 31ஆம் தேதி **வங்க பந்த்** நடத்தப்பட்டது. யா.:.யாகானின் கொடும்பாவி மேற்கு வங்கமெங்கும் கொளுத்தப்பட்டது. எல்லா மாநிலங்களிலும் வங்கதேச உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டன. நிதி மற்றும் உதவிகள் திரட்டப்பட்டன. பாகிஸ்தானின் அட்டூழியங்களுக்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழுந்தார்கள். இந்தியாவிலிருந்து பிரிந்துபோனவர்கள் என்ற எண்ணத்தையே மறந்து இந்திய மக்கள் அனைவரும் வங்க மக்களிடம் அனுதாபம் காட்டினர்.

**பாகிஸ்தான் வசமிருக்கும் கிழக்கு வங்க மக்கள் விடுதலை பெற நாம் உதவினால் எதிர்காலத்தில் இந்தியாவிலிருக்கும் மேற்கு வங்க மக்களும் அவ்விதமே விடுதலை கேட்டால் என்ன செய்வது? என்ற தயக்கம் ஒருபொழுதும் இந்திய மக்களுக்கும் அகில இந்தியக் கட்சிகளுக்கும் ஏற்படவே இல்லை.**

வங்க விடுதலைப் போராட்டத்தையொட்டி அதற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் நாடெங்கும் பல்வேறு குழுக்கள் அமைக்கப்பட்டன. கல்கத்தா பல்கலைக் கழக **வங்கதேச சகாயத் சமிதி** (calcutta university Bangaladesh sahayak samiti) என்ற அமைப்பு இதில் முக்கியமான ஒன்றாகும்.

1971ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 3ஆம்தேதி அமைக்கப்பட்ட இந்தக் குழுவிற்குக் கல்கத்தா பல்கலைக் கழகத் துணைவேந்தர் தலைவராக இருந்தார். இந்தக் குழு வங்க விடுதலைப் போராட்டத்திற்குப் பெருமளவு துணைபுரிந்தது. நிதி திரட்டுதல், விடுதலைப் போராட்டத்திற்கு நேரடி உதவி செய்தல், பிரசுரங்களை வெளியிடுதல், பிரச்சாரம் செய்தல், குடிபெயர்ந்த ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் உதவுதல் போன்ற பல்வேறு பணிகளை இக்குழு செய்தது.

வங்கச் சுதந்திர அரசை உடனடியாக அங்கீகரிக்கும்படி இந்தியப் பிரதமரை இக்குழு வற்புறுத்தியது. யுனெஸ்கோ (unesco) வுக்கும் இக்குழு வேண்டுகோள் விடுத்தது. வெளிநாடுகளிலுள்ள பல்வேறு பல்கலைக் கழகங்களுக்கும் வங்கத்தில் நடைபெறும் கொடுமைகளை விளக்கிக் கடிதங்கள் எழுதியது. எல்லாவற்றுக்கும் மேலாக வங்க விடுதலைப் படையினருக்குத் தேவையான எல்லா உதவிகளையும் இக்குழு செய்தது. வங்கதேச எல்லையோரங்களில் இந்தியப் பகுதிக்குள் விடுதலை வீரர்கள் முகாம்கள் அமைக்கவும் அவர்களுக்குத் தேவையான போர்வைகள், கொசுவலைகள், மருந்துகள், வானொலிப் பெட்டிகள் போன்ற சாதனங்களைத் திரட்டி அளிக்கவும் உதவி புரிந்தது.

விடுதலை வீரர்களுக்கு அவசியமான இராணுவப் பயிற்சி முறைகளைப் பற்றிய **"பிரதமிக் யுத்த வித்யா"** என்னும் நூலினையும் இக்குழு வெளியிட்டது. வங்கமொழியிலும் ஆங்கில மொழியிலும் இந்நூல் வெளியிடப்பட்டது. உலகின் பல நாடுகளுக்கும் சென்று இப்பிரச்சினை குறித்துப் பிரச்சாரம் செய்யத் தூதுவர்களை அனுப்பிவைத்தது.

மேற்கு வங்கத்தில் மட்டுமின்றி இந்தியா முழுவதிலும் உள்ள ஆசிரியர்களும் மாணவர்களும் வங்க தேசத்திற்கு ஆதரவாகக் கிளர்த்தெழுந்தார்கள். டில்லியிலுள்ள ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழகம் இதில் மிகத் தீவிரமாக ஈடுபட்டது. இந்தியப் பிரதமரின் இல்லத்திற்கு முன்னால் 1971ஆம் ஆண்டு ஆகஸ்டு 15ஆம் தேதி தர்ணாப் போராட்டத்தையும் அது நடத்தியது. சுதந்திர வங்க அரசை உடனடியாக அங்கீகரிக்க வேண்டுமென்ற இந்தப் போராட்டத்தில் இந்தியா முழுவதிலுமுள்ள பல்வேறு பல்கலைக் கழகங்களும் கலந்துகொண்டன.

தமிழகத்து மக்களும் ஈழ விடுதலைப் போருக்குப் பேராதரவு தந்தார்கள்.

தமிழ்நாட்டு மக்கள் 1983 முதல் 1999 வரை 6 முறை இலங்கைத் தமிழர்களுக்காக **"பந்த்"** நடத்தித் தங்கள் மனக்கொதிப்பை வெளிப்படுத்தினார்கள். தமிழகமெங்கும் கண்டன ஊர்வலங்களும், ஆர்ப்பாட்டங்களும் பலவகையான போராட்டங்களும் தொடர்ந்து நடைபெற்றன. மாணவர்கள் திரண்டெழுந்துத் தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்தார்கள். தமிழ்நாட்டில் எந்த அரசியல் கட்சியும் இதிலிருந்து விலகி நிற்க முடியவில்லை.

ஈழ விடுதலை இயக்கங்கள் கண்காட்சிகள், வீடியோக் காட்சிகள் நடத்தி நிதி திரட்டின. இவற்றுக்குத் தமிழக மக்கள் வாறி வாறி வழங்கினார்கள்.

வங்க விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவு தரவும் உதவி புரியவும் மத்திய–மாநில அரசுகளின் துணையோடு எல்லா மாநிலங்களிலும் குழுக்கள் அமைக்கப்பட்டன. ஆனால் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு இத்தகைய ஆதரவை நல்க மத்திய அரசோ தமிழக அரசோ முன்வரவில்லை.

தமிழ் அகதிகளுக்குச் சில வரையறைக்குட்பட்ட உதவிகளைச் செய்ய மட்டுமே மத்திய அரசும் தமிழக அரசும் முன்வந்தன.

வங்க விடுதலை வீரர்களுக்குத் தேவையான சகல உதவிகளையும் புரிய இந்திய மக்களை அனுமதித்த இந்திய அரசு அத்தகைய உதவிகளைத் தமிழீழப் போராளிகளுக்கு மக்கள் அளிப்பதை அனுமதிக்கவில்லை.

தமிழக அரசு இன்னும் மோசமாக நடந்துகொண்டது. ஈழப் போராளிகளை இடைவிடாமல் கண்காணித்தது. தமிழகப் போலீஸ்துறையைச் சேர்ந்த உயர் அதிகாரிகள் சிலர் சிங்கள அரசின் உளவாளிகளாகச் செயற்பட்டனர்.

இராணுவப் பயிற்சி முறைகளைப் பற்றிய நூற்களை வெளியிட வங்க உதவிக் குழுக்களை மேற்குவங்க அரசு அனுமதித்தது.

ஆனால் இராணுவப் பயிற்சிகள் செய்வதையோ முகாம்கள் நடத்துவதையோ தமிழக அரசு அடியோடு தடைசெய்தது.

வங்க விடுதலைப் போரை ஆதரித்து மக்கள் கருத்தைத் திரட்ட இந்தியப் பல்கலைக் கழகங்கள் முழுமையாக அனுமதிக்கப்பட்டன. பேராசிரியர்களும் மாணவர்களும் முழுவேகத்துடன் இதில் ஈடுபட்டனர். இந்தியப் பிரதமர் இல்லம் முன்பாகத் தர்ணா நடத்தவும் அவர்கள் அனுமதிக்கப்பட்டனர். ஆனால் தமிழ் நாட்டில் ஈழத் தமிழருக்கு ஆதரவாக மாணவர்கள் போராட்டம் வெடித்தபொழுதெல்லாம் அவர்களின் உணர்ச்சித் தீயை அணைப்பதிலேயே தமிழக அரசு முழு மூச்சாக முனைந்தது. மாணவர்கள் கொதித்தெழுந்தபொழுதெல்லாம் கல்வி நிலையங்களை மூடியும் அவர்கள் மீது அடக்குமுறைகளை உபயோகித்தும் ஒடுக்குவதில் தமிழக அரசு தீவிரமாக இருந்தது.

எவ்விதக் காரணமும் இல்லாமல் ஈழப் போராளிகளின் 3 தலைவர்களை இந்திய அரசு நாட்டைவிட்டு வெளியேற்றியது. அதைத் தமிழகம் கடுமையாக எதிர்த்த பிறகு இந்திய அரசு பணிந்தது என்பதை முந்திய அத்தியாயத்தில் பார்த்தோம்.

தமிழ்நாட்டு மக்களின் கொதிப்புணர்வுக்கு டில்லி அஞ்சியதே தவிர ஈழப் பிரச்சினையைத் தீர்ப்பதில் போதுமான அக்கறை காட்டவில்லை. தமிழ்நாட்டு மக்களின் எதிர்ப்புக்கு ஆளாகிவிடக் கூடாது என்ற நோக்கத்துடன் அவ்வப்பொழுது சில நடவடிக்கைகளை மேற்கொள்வதையே இந்திய அரசு வழக்கமாகக் கொண்டிருந்தது. இந்திய அரசை வற்புறுத்தவேண்டிய தமிழக அரசு இந்திய அரசுக்கு ஆமாம்சாமி போட்டதே தவிர இலங்கைத் தமிழர்களின் நலன்காக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை. வங்க விடுதலைப் போராட்டத்திற்கு மேற்குவங்க அரசு பரிபூரணமான ஆதரவு அளித்தது போலத் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்குத் தமிழக அரசு ஆதரவு அளிக்க மறுத்தது. தமிழீழக் கோரிக்கையைக் கூட அது ஆதரிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாட்டு மக்களின் ஆதரவு உணர்வுதான் தமிழீழ மக்களுக்கு அரணாக விளங்கிக் கொண்டிருக்கிறது. தமிழ்நாட்டு மக்களின் கோபத்திற்கு இரையாகிவிடக் கூடாது என்பதற்காகத்தான் ஈழத் தமிழர் பிரச்சினையில் பெயரளவிற்கான நடவடிக்கைகளில் இந்திய அரசும் தமிழக அரசும் ஈடுபட்டுள்ளன.

தமிழ்நாட்டில் தொடர்ந்து பதவியிலிருந்த அரசுகள் தமிழீழ விடுதலைப் போராட்டத்தைப் பற்றிய அணுகுமுறை என்பதை வித்தியாசமான முறையில் கொண்டிருந்தன. 5 கோடி மக்களைக் கொண்ட தமிழ்நாடு உலகெங்கிலும் பல்வேறு நாடுகளில் வாழும் தமிழர்களின் ஆதித் தாயகம் என்ற உணர்வுடன் இப்பிரச்சினையை அணுகவில்லை. மாறாக, இந்திய அரசு இந்தப் பிரச்னையில் எத்தகைய அணுகுமுறையைக் கொண்டிருந்ததோ அந்த அணுகுமுறையை அப்படியே ஏற்றுக்கொண்டுச் செயல்பட்டன.

பிரதமராக இந்திரா இருந்தபொழுது ஈழத் தமிழர் பிரச்சினையில் அனுதாபமான ஓர் அணுகுமுறையை மேற்கொண்டு இருந்தார். ஈழத் தமிழர்களுக்கு எதிரான இனவெறிப் படுகொலைகளை உடனடியாக நிறுத்த வேண்டும் எனச் சிங்கள அரசுக்கு அவர் எச்சரிக்கை விடுத்தார். தமிழர் பிரச்சினையைப் பேசித்தான் தீர்க்கவேண்டும் என வற்புறுத்தினார். அதற்காக தனது சிறப்புத் தூதுவராக ஜி. பார்த்தசாரதியை

அனுப்பிவைத்துத் தமிழர்–சிங்களர் பேச்சுவார்த்தைக்கு வழி வகுத்தார். காலங்கடத்துவதன் மூலம் ஏமாற்றுவதற்குச் சிங்கள அதிபர் ஜெயவர்த்தனா முயற்சி செய்கிறார் என்பதைப் புரிந்துகொண்டபொழுது ஈழப் போராளிகளுக்கு இந்தியாவில் ஆயுதப் பயிற்சி அளிக்க அவர் ஆணையிட்டார். நெருக்கடியான கால கட்டத்தில் அவரது மறைவு ஈழத் தமிழர் பிரச்சினையில் பின்னடைவை ஏற்படுத்திற்று.

பிரதமர் இந்திராவின் தலைமையில் இயங்கிய இந்திய அரசு ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக மேற்கொண்ட அணுகுமுறையை அப்பொழுதைய அ.தி.மு.க. அரசு அப்படியே கடைப்பிடித்தது. ஆளுங்கட்சியான அ.தி.மு.க.வும் எதிர்க்கட்சியான தி.மு.க.வும் இப்பிரச்சினையில் தீவிரமான ஈடுபாடு காட்டுவதில் ஒருவருடன் ஒருவர் போட்டியிட்டார்கள். பிரதமராக ராஜீவ் காந்தி பொறுப்பேற்ற பிறகு இந்திராவின் அணுகுமுறையிலிருந்து அவர் மாறத் தொடங்கினார். ஈழத் தமிழர்களுக்கு ஆதரவான நிலையிலிருந்து எதிரான நிலையை அவர் எடுத்தார். இதன் உச்சகட்டமாக ராஜீவ்–ஜெயவர்த்தனா உடன்பாடு கையெழுத்திடப்பட்டது. தமிழீழ விடுதலைப் போராட்டத்தை முன்னின்று நடத்திவந்த விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கீழே போடவேண்டும் என்று நிர்ப்பந்திக்கப்பட்டனர். இந்த உடன்பாட்டினை அப்படியே ஏற்கவேண்டும் என்று வற்புறுத்தப்பட்டனர். உடன்பாட்டில் உள்ள பல அம்சங்களை நிறைவேற்றச் சிங்கள அரசு மறுத்தபொழுது அதை எதிர்த்த விடுதலைப் புலிகளை ஒடுக்குவதற்காக இந்திய இராணுவத்தைப் பிரதமர் ராஜீவ் அனுப்பினார்.

**தமிழீழ விடுதலைப் போராட்டத்தை ஒடுக்குவதற்குப் பிரதமர் ராஜீவ் மேற்கொண்ட முயற்சிகளை எதிர்த்துக் கண்டனம் தெரிவிக்க ஆளுங்கட்சியான அ.தி.மு.க.வோ பிரதான எதிர்க்கட்சியான தி.மு.க.வோ முன்வரவில்லை. இவர்கள் ஒன்றுபட்டுக் கண்டனம் தெரிவித்து இருந்தால் இந்திய இராணுவத்தை இலங்கைக்கு அனுப்பும் துணிவு பிரதமர் ராஜீவிற்கு ஏற்பட்டு இருக்காது. பல்லாயிரக் கணக்கான ஈழத் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டு இருக்க மாட்டார்கள். தமிழீழம் சுடுகாடாக ஆகியிருக்காது.**

ராஜீவிற்குப் பிறகும் கையாளப்பட்ட இதே தவறான அணுகுமுறையை இந்த இரு கட்சிகளும் எதிர்க்கத் தவறிவிட்டன. தி.மு.க. தலைவர் மு. கருணாநிதி முதலமைச்சராக பதவியேற்றபொழுது "ஈழத் தமிழர் பிரச்சினையில் இந்திய அரசின் அணுகுமுறையை அப்படியே ஏற்றுத் தான் செயல்படுவதாக" பகிரங்கமாக பலமுறைகள் கூறினார். ஈழத் தமிழர் பிரச்சினையில் தமிழக அரசு எத்தகைய அணுகுமுறையைக் கையாள வேண்டும் என்று கூறுகிறதோ அதை அப்படியே ஏற்று இந்திய அரசு செயல்படவேண்டும் என்று வற்புறுத்துவதற்குப் பதில் இந்திய அரசின் நிலைப்பாடு எதுவோ அதனையே தங்களின் நிலைப்பாடாக ஏற்றுக்கொண்ட தமிழக அரசுகளின் போக்கின் விளைவாக தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்குப் பல்வேறு நெருக்கடிகள் ஏற்பட்டன.

தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு எல்லா வகைகளிலும் பின்புலமாகவும் பக்கபலமாகவும் விளங்கவேண்டிய தமிழ்நாடு அதற்கு எதிரான நிலைக்களமாக மாற்றப்பட்டது. தமிழீழப் போராட்டத்தில் படுகாயமடைந்து சிகிச்சை பெறுவதற்காக தமிழ்நாடு வந்த விடுதலைப் புலிகளும் ஈழத் தமிழர்களும் தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுச் சிறைகளில் அடைக்கப்பட்டனர். தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவாகத் தமிழ்நாட்டில் செயல்பட்ட[illegible]கள், தமிழர் அமைப்புகள் மீது கடும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அவர்களுக்கு எதிராக தேசிய பாதுகாப்புச் சட்டம், தடா சட்டம் போன்ற கொடிய சட்டங்கள் ஏவி விடப்பட்டன. பொய்யான வழக்குகள் தொடுக்கப்பட்டன. தமிழீழ விடுதலை ஆதரவாளர்களைக் கண்காணிப்பதற்காக தமிழ் வெறியர் பிரிவு (Tamil chavuistic section) என்ற பெயரில் தனிப் போலீஸ் பிரிவு அமைக்கப்பட்டது.

தமிழீழ மக்களுக்குத் தேவையான மருந்துகள், உணவுப் பொருட்கள் மற்றும் அத்தியாவசியப் பண்டங்கள் அனுப்புவதற்குத் தடை விதித்துச் சிங்கள அரசு அவர்களைப் பட்டினிபோட்டுச் சாகடிக்க முயற்சி செய்து வருகிறது. உள்நாட்டிலேயே அகதிகளாக்கப்பட்ட 10 இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் காடுகளிலும் சாலையோரங்களிலும் வாழ்ந்துப் பட்டினியினாலும் நோயினாலும் மடிந்தார்கள். இந்நிலையில் அந்த மக்களுக்கு உதவுவதற்காக மருந்துகள், உணவுப்பொருட்கள் போன்றவற்றை அனுப்புவது தமிழ்நாட்டு மக்களின் மகத்தான கடமையாகும். ஆனால் அவ்வாறு அனுப்புவதற்குத் தமிழக அரசு தடை விதித்தது. கடற்கரையோரங்களில் தமிழகக் காவல் துறையின் சிறப்புக் காவல் படைகள் நிறுத்தப்பட்டன. கடலில் இந்தியக் கடற்படையும் கடலோரக் கடற்படையும் தீவிரமாகக் கண்காணித்தன. இந்த அவலம் இன்னமும் தொடருகிறது.

வங்க மக்கள் விடுதலைக்காகப் போராடியபொழுது மேற்குவங்க மக்கள் மட்டுமல்லாமல் இந்தியா முழுமையும் உள்ள மக்கள் அதற்குத் தேவையான உதவிகளைச் செய்தார்கள். 60 இலட்சத்திற்கு மேற்பட்ட வங்காளிகள் அகதிகளாக இந்தியாவிற்கு ஓடி வந்தபொழுது அவர்களை இந்திய அரசும் சகல மாநில அரசுகளும் ஒன்றுசேர்ந்துக் காப்பாற்றின. வங்க அகதிகளுக்கு உதவுவதற்காகச் சிறப்பு வரிகள் விதிக்கப்பட்டன. மாநில அரசுகள் நிதி திரட்டி அளித்தன. தமிழக அரசின் சார்பில் முதலமைச்சர் கருணாநிதி சுமார் 6 கோடி ரூபாய்களை அளித்தார். ஆனால் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு இவ்வாறு உதவுவதற்குத் தமிழக அரசே முன்வராத நிலையில் இந்திய அரசோ பிற மாநில அரசுகளோ முன்வராதது வியப்புக்குரிய ஒன்றில்லை.

# 8. வங்க—ஈழப் பிரச்னைகளில் அமெரிக்காவும் அதன் ஆதரவு நாடுகளும்

வங்கத்தேசப் பிரச்சினையில் அமெரிக்காவின் நிலை என்பது கீழ்க்கண்ட பல்வேறு காரணங்களைப் பொறுத்ததாக அமைந்தது.

1. தென்கிழக்காசிய ஒப்பந்த நாடுகளின் அமைப்பில் (SEATO) பாகிஸ்தானும் ஓர் உறுப்பு நாடேயாகும். எனவே பாகிஸ்தானின் நலனைக் காப்பதில் அமெரிக்கா முன்னின்றது.

2. செஞ்சீனத்துடன் அரசியல், பொருளாதார உறவுகள் கொள்ள அமெரிக்கக் குடியரசுத்தலைவர் **நிக்சன்** விரும்பினார். இரு நாடுகளுக்கு இடையேயும் தரகராகப் பணியாற்ற யா:.யாகன் இசைந்தார். **நிக்சனின்** விசேஷத் தூதுவரான **கிசிங்கர்** இரகசியமாகச் சீனா செல்ல யா:.யாகான் ஏற்பாடு செய்தார். இதற்குப் பதிலாக யா:.யாகானுக்கு உதவி செய்ய அமெரிக்கா விரும்பியது.

3. அமெரிக்காவின் வெளிநாட்டுக் கொள்கையை இந்தியா தொடர்ந்து விமர்சனம் செய்ததனால் அமெரிக்கா எரிச்சல் அடைந்தது.

இந்தக் காரணங்களினால் வங்கதேசப் பிரச்சினையில் ஆரம்பத்திலிருந்தே இந்தியாவிற்கு விரோதமாக அமெரிக்கக் கொள்கை அமைந்திருந்தது. நிக்சன் இதில் தீவிரக் கவனம் செலுத்தினார். 1971 டிசம்பர் 3இல் இந்தியாவிற்குச் செய்யப்பட்டு வந்த பொருளாதார உதவிகளை அமெரிக்கா நிறுத்தியது. அதைப்போலவே விமானம், எலக்ட்ரானிக் கருவிகள் போன்ற சாதனங்களை இந்தியாவிற்கு அனுப்பக்கூடாது என்றும் அமெரிக்கா தடை விதித்தது. வங்கதேசத்தில் யா:.யாகானின் இராணுவம் செய்த மனிதத் தன்மையற்ற கொடுமைகளைக் கண்டித்து ஒரு வார்த்தை கூட அமெரிக்க அரசு கூறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. வங்கதேசப் பிரச்சினை முற்றிக் கொண்டிருந்த வேளையில் பாகிஸ்தானுக்குத் தொடர்ந்து ஆயுத உதவிகளை அமெரிக்கா செய்தது. வங்கதேசக் கொடுமைகள் தொடர்ந்து நடந்ததற்கு அமெரிக்காவும் ஒரு முக்கிய காரணமாகும்.

கிழக்கு வங்கத்தில் நிலைமை முற்றிப் பாகிஸ்தான் இராணுவ ஆட்சி ஆட்டம் கண்டபொழுது சமரசம் ஏற்படுத்த அமெரிக்கா முன்வந்தது. கிழக்குப் பாகிஸ்தானுக்கு ஏதாவது ஒரு வகையான சுயாட்சி உரிமை அளிக்கப்படவேண்டுமென்று ஒரு கட்டத்தில் அமெரிக்கா, பாகிஸ்தானை வற்புறுத்திற்று. ஆனால் இந்தியா அதை ஏற்கவில்லை.

இப்பிரச்சினையில் இந்தியாவிற்கும் அமெரிக்காவிற்கும் உள்ள வேறுபாட்டினை அமெரிக்க விசேஷத் தூதரான **ஹென்றி கிசிங்கர்**, தான் நடத்திய **செய்தியாளர்** மாநாட்டில் பின்வருமாறு கூறினார்:

கிழக்குப் பாகிஸ்தானுக்குச் சுயாட்சி உரிமை அளிக்கப்படவேண்டுமென்பதற்கு அமெரிக்கா ஆதரவாக உள்ளது. ஆனால் சுதந்திர வங்கம் அமைக்க வேண்டும் என்ற இந்தியாவின் யோசனை ஆபத்தானது. பாகிஸ்தானின் அரசியல் வடிவத்திற்குள் அது பொருந்தாது. ஓர் அரசியல் தீர்வைக் காண வேண்டுமென்பதற்கு நாங்கள் பெரு முயற்சி செய்தோம். ஆனால் பாகிஸ்தானில் அரசியல் மாற்றம் ஏற்படுவதற்குப் பதில் அரசியல் சீர்குலைவு ஏற்படவேண்டுமென்று இந்தியா கூறுகிறது."

அமெரிக்கா கூறிய யோசனை பாகிஸ்தானுக்குத் திருப்தி அளித்தது. ஆனால் இந்தியா கூறிய தீர்வு வங்க விடுதலை வீரர்களுக்குத் திருப்தி அளித்தது.

**அவாமி லீக்கின்** சம்மதம் இல்லாமல் எத்தகைய தீர்வையும் கிழக்கு வங்கம் ஏற்காது என்ற உண்மையை உணர்ந்த யா:யாகான் அவாமிலீக் தலைவர்களில் ஒரு சிலரைத் தன் வலையில் இழுக்க முயன்றார்.

அவாமிலீக்கின் ஆறு அம்சத் திட்டத்தில் வெளிநாட்டு வணிகம் பற்றிய கொள்கையைத் தவிர மற்ற எல்லாக் கோரிக்கைகளையும் ஏற்றுக்கொள்வதாக யா:யாகான் கூறினார். அவாமிலீக் தலைவர்களைத் தன்வசம் இழுக்கப் பாகிஸ்தான் செய்த முயற்சிகளுக்கு அமெரிக்காவும் துணைபுரிந்தது.

இதுபற்றி ஹென்றி கிசிங்கரே பத்திரிகைகளுக்குப் பின்வருமாறு அறிவித்தார்: "பாகிஸ்தானிய அரசுக்கும் அவாமிலீக் தலைவர்களுக்கும் இடையே பேச்சுவார்த்தைகள் நடத்துவது சம்பந்தமாக இந்தியப் பிரதமர் இந்திராகாந்தி அமெரிக்கா வந்திருந்தபொழுது கூறினோம். ஆனால் இந்த யோசனைகளை இந்திராகாந்தி ஏற்கவில்லை."

அமெரிக்காவும் பாகிஸ்தானும் கூட்டாகச் செய்த சமரச முயற்சிகளை வங்க விடுதலை வீரர்கள் ஏற்கவில்லை. ஐக்கியப் பாகிஸ்தான் என்ற பிரமை அடியோடு தகர்ந்துவிட்டது. எந்தக் காலக்கட்டத்திலும் பாகிஸ்தானின் இரு பிரிவுகளும் ஒன்றுபடவே முடியாது என்ற நிலை ஏற்பட்டுவிட்டது. வங்கத்தில் பாகிஸ்தான் இராணுவம் செய்த அட்டூழியங்களினாலும் இனப்படுகொலைகளினாலும் பாகிஸ்தானின் ஒருமைப்பாடு சாகடிக்கப்பட்டது. இவ்வளவு கொடுமைகளையும் செய்துவிட்டுச் சமரச நாடகங்களை யா:யாகான் நடத்தியபொழுது வங்க மக்கள் அவரை நம்பத் தயாராக இல்லை.

வங்க விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட அத்தனை மக்களுக்கும் பொது மன்னிப்பு அளிப்பதாக யா:யாகான் அறிவித்ததை விடுதலை வீரர்கள் எள்ளி நகையாடினர். "வங்க மக்கள் எத்தகைய குற்றமும் புரியவில்லை. எனவே அவர்களை மன்னிப்பது என்ற பேச்சிற்கே இடமில்லை" என்று கூறினர்.

பாகிஸ்தானுக்கு அளித்துவரும் பொருளாதார, ஆயுத உதவிகளை உடனடியாக நிறுத்துமாறு இந்தியா மீண்டும் வேண்டிக்கொண்டதை அமெரிக்கா ஏற்க மறுத்துவிட்டது.

உலக வங்கியின் **பாகிஸ்தான் உதவி அமைப்பின் கூட்டம்** 1971 ஏப்ரலில் நடைபெற்றபொழுது பாகிஸ்தான் பொருளாதார நிலை மிக மோசமாய் இருப்பது பற்றி அது கவலை தெரிவித்தது. உலக வங்கியின் சார்பில் ஒரு குழுவினைக் கிழக்கு வங்கத்திற்கு அனுப்பி நிலையை ஆராய முடிவு செய்தது.

இக்குழுவின் அறிக்கைக்கு இணங்கப் பாகிஸ்தான் அனுப்பப்பட்ட பொருளாதார உதவிகள் முற்றிலுமாகத் தடுத்து நிறுத்தப்பட்டன.

மெல்ல மெல்ல மேற்கு ஐரோப்பிய நாடுகள் பலவும் பாகிஸ்தானுக்கு அளித்துவந்த பொருளாதார உதவிகளை நிறுத்திவிட்டன. பாகிஸ்தானுக்கு அமெரிக்க தொடர்ந்து கொடுத்துவரும் ஆயுத உதவிக்கு இந்தியா கடும் எதிர்ப்பு தெரிவித்தது. புதுடெல்லியிலுள்ள அமெரிக்க அலுவலகத்திற்கு முன்னால் இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூடி ஆர்ப்பாட்டம் செய்தார்கள். **சுந்தரவனம், பத்மா** ஆகிய இரு கப்பல்கள் ஏராளமான ஆயுதங்களை ஏற்றிக்கொண்டு அமெரிக்காவிலிருந்து வருவதை இந்திய வெளிநாட்டு அமைச்சர் **ஸ்வரணசிங்** அம்பலப்படுத்தினார். இச்செய்தி கேட்டு இந்திய மக்கள் கொதித்தெழுந்தனர்.

1971ஆம் ஆண்டு டிசம்பர் 10ஆம் நாள் பாகிஸ்தானிய விமானப்படையின் தளபதியான **ஏர் மார்ஷல் சபர்மன் அலிகான்** உடனடியாகப் போர் நிறுத்தத்திற்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட கிழக்கு வங்கப் பிரதிநிதிகளிடம் அதிகாரங்களை ஒப்படைப்பதற்கும் ஏற்பாடு செய்யும்படி டாக்காவிலிருந்து ஐ.நா. உதவித் தலைமைச் செயலாளர் பால் மார்க் ஹென்றியிடம் கேட்டுக்கொண்டார். இதற்கு யா.்யாகான் ஒப்புதலும் இருப்பதாகச் சொன்னார். ஆனால் பாகிஸ்தான் படைக்கு உதவுவதற்கு அமெரிக்காவின் 7ஆவது கடற்படையை அனுப்ப நிக்சன் முன்வந்ததும் யா.்யாகான் தனது முடிவை மாற்றிக்கொண்டார். வங்கதேசப் போராட்டம் உலகப் போராகும் சூழ்நிலையை அமெரிக்கா ஏற்படுத்தியது. டீகோ-கார்ஷியாத் தீவிலிருந்து தனது 7ஆவது கடற்படையை வங்காள விரிகுடாவிற்கு அமெரிக்கா அனுப்பியபொழுது ரஷ்யா பதிலடி கொடுத்தது. இந்துமாக்கடலிலும் அரபிக் கடலிலும் சோவியத் கடற்படை புகுந்தது.

மொத்தத்தில் அமெரிக்காவின் நடவடிக்கைகள் தெற்காசியப் பகுதியின் அமைதிக்கு உலை வைப்பதாக அமைந்திருந்தன.

## கனடா

கிழக்கு வங்கத்தில் நடைபெற்ற இராணுவக் கொடுமைகளைக் கனடா கண்டித்தது. பாகிஸ்தானுக்கு அனுப்பப்பட இருந்த விமான உதிரி பாகங்களை அனுப்ப மறுத்தது. ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, பிரான்சு, சுவிட்சர்லாந்து போன்ற நாடுகள் இப்பிரச்சினையில் நடுநிலை வகித்தன. துருக்கி தன்வசம் இருந்த பெரிய அமெரிக்க விமானங்களைப் பாகிஸ்தானுக்கு அனுப்பி உதவியது. பாகிஸ்தானின் நிலையைத் துருக்கி முழுமையாக ஆதரித்தது.

## அரபு நாடுகள்

கிழக்கு வங்கத்தின் சுயநிர்யண உரிமையை அரபுநாடுகள் ஏற்கவில்லை. கிழக்கு வங்கத்தில் படுகொலை செய்யப்படுபவர்கள் முஸ்லீம்கள் என்ற உண்மையையும் அவை உணரவில்லை. மொத்தத்தில் அரபுநாடுகளின் போக்கு பாகிஸ்தானுக்குச் சாதகமாகவே இருந்தது.

ஆப்பிரிக்க நாடுகளின் பெரும்பாலான நாடுகளும் இப்பிரச்சினையில் பகிரங்க நிலை எதுவும் எடுக்கவில்லை.

# இலங்கைப் பிரச்சினையில் அமெரிக்காவும் அதன் ஆதரவு நாடுகளும்

இலங்கைத் தமிழர் பிரச்சினையைப் பொறுத்தவரையில் அமெரிக்காவும் மேற்கு நாடுகளும் இலங்கை அரசுக்குச் சார்பாகவே இருந்து வருகின்றன. இந்தப் பிரச்சினையின் முழுவடிவத்தையும் இந்நாடுகள் உணர மறுத்தன. இந்தியாவை நிர்பந்திக்க இலங்கையை ஒரு கருவியாகப் பயன்படுத்தும் நோக்கம் இந்நாடுகளுக்கு இருந்து வருகிறது. எனவேதான், இலங்கையில் சிங்கள இராணுவம் தமிழர்களை இனப்படுகொலை செய்வதை வெளிப்படையாகக் கண்டிக்க இந்நாடுகள் இன்னமும் தயங்குகின்றன. அதே நேரத்தில் இந்நாடுகள் இப்பிரச்சினையில் இந்தியாவின் சமரச முயற்சியை ஆதரிப்பதாகக் கூறிய பொழுதிலும் உண்மையில் அம்முயற்சிகளை இலங்கை அரசு உதாசீனம் செய்தபோது அதைக் கண்டு கொள்ளாமல் இருந்தன. அமெரிக்காவும் மேற்கு நாடுகளும் அளித்துவரும் பொருளாதார உதவிகளை ஒருபொழுதும் நிறுத்தவில்லை. அமெரிக்கா நேரடியாக இலங்கைக்கு உதவி செய்யாவிட்டாலும் தன் ஆதரவு நாடுகளான இஸ்ரேல், பாகிஸ்தான் போன்றவை மூலம் தேவையான நவீன ஆயுதங்களை வழங்க ஏற்பாடு செய்தது.

புத்தளத்தில் அமெரிக்கா அமைத்துவரும் வானொலி நிலையம் உண்மையில் சக்திவாய்ந்த உளவு மாளிகையே என்பதைக் கொழும்பிலிருந்து வெளியாகும் **"போரம்"** பத்திரிகை கூறுகிறது.

இலங்கையைச் சுற்றியுள்ள கடலில் ஆராய்ச்சிப் பணிகளை அமெரிக்கா மேற்கொள்ளும். இதற்கான உடன்பாட்டினை ஜெயவர்த்தனா செய்துள்ளார். அமெரிக்கச் சாதனங்களையும் அமெரிக்கர்களையும் மட்டுமே கொண்டு இந்த ஆராய்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. உண்மையில் இது இராணுவ சம்பந்தமானது எனச் சந்தேகிக்கப்படுகிறது.

1986ஆம் ஆண்டு அக்டோபர் 11ஆம் தேதி மற்றுமொரு திடுக்கிடும் செய்தி வெளியாயிற்று. பயங்கரவாதத்தை ஒடுக்க உதவிபெறத் தகுதிவாய்ந்த நாடுகளில் இலங்கையையும் சேர்க்க அமெரிக்க வெளியுறவுத்துறை முடிவு செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டது. அமெரிக்க அந்நிய உதவிச் சட்டத்தின் 571, 572ஆவது பிரிவுகளின் கீழ் இலங்கை இத்தகைய உதவியைப் பெறுகிறது. இந்த உதவி கீழ்க்கண்ட விதங்களில் அளிக்கப்படலாம். "பயிற்சி அளித்தல், குண்டுகளைக் கண்டறிந்து அழிக்கச் சாதனங்களை வழங்குதல், ஆட்களுக்குப் பாதுகாப்பு அளித்தல் மற்றும் பயங்கரவாதத் தடுப்பு சம்பந்தமான விஷயங்கள்", பயங்கரவாதத்தை ஒடுக்கி எதிர் நடவடிக்கை எடுக்கத் தேவையான பயிற்சியையும் சாதனங்களையும் அளிப்பது இதில் அடங்கும். இதுவரை மறைமுகமாக இலங்கைக்கு இராணுவ உதவி அளித்துவந்த அமெரிக்கா இப்பொழுது பகிரங்கமாக அளிக்க முன்வந்துவிட்டது என்பது இதன் மூலம் அம்பலமாகிவிட்டது.

1986ஆம் ஆண்டில் மட்டும் 11 அமெரிக்க கடற்படைக் கப்பல்கள் கொழும்புத் துறைமுகத்திற்கு வந்திருக்கின்றன. **கிட்டி ஹாக்** என்ற அமெரிக்க விமானம் தாங்கிக் கப்பல் கொழும்பில் பல நாட்கள் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. அமெரிக்கக் கூலிப் படையினர் இலங்கை இராணுவத்திற்கு உதவி செய்கிறார்கள் என இந்திய வெளிநாட்டுத்துறைச் செயலாளர் **ஏ.பி.வெங்கடேசுவரன்** 1987ஆம் ஆண்டு சனவரி மாதம் 10ஆம் தேதி புகார் செய்தார். இந்தப் புகாரினை அவர் அமெரிக்கத் தலைநகரான **வாஷிங்டனில்** கூறினார்.

அமெரிக்க வெளிநாட்டுத் துறையின் துணைச் செயலாளரான **மைக்கேல் ஆர்டி. கோஸ்ட்** என்பவருடன் இந்திய வெளியுறவுச் செயலாளர் ஏ.பி.வெங்கடேசுவரன் பேச்சுவார்த்தை நடத்தியபொழுது இந்தக் குற்றச்சாட்டைத் தெரிவித்தார். இதை முதலிலே அமெரிக்க அரசின் சார்பில் மறுத்தாலும் பின்னர் அதை அவர்கள் ஒப்புக்கொண்டார்கள். ஹெலிகாப்டர் விமானங்களை ஓட்டுவதற்குச் சிங்கள விமானிகளுக்குப் பயிற்சியளிப்பதற்காகப் பெல் விமானக் கம்பெனிகளைச் சேர்ந்த சில அமெரிக்க விமானிகள் இலங்கையில் இருப்பதாக அமெரிக்கா ஒப்புக்கொண்டது.

ஏ.பி. வெங்கடேசுவரனின் இந்த அறிக்கையை இலங்கை அரசு கண்டனம் செய்தது. ஆனால் அந்தக் கண்டனத்தை ஏற்க இந்திய அரசு மறுத்துவிட்டது.

ஆனால் 1987ஆம் ஆண்டு ராஜீவ் – ஜெயவர்த்தனா உடன்பாடு கையெழுத்திடப்பட்ட பிறகு நிலைமை அடியோடு மாறிவிட்டது. அன்னை இந்திராவின் மரணத்திற்குப் பிறகு பதவியேற்ற ராஜீவ் ஒரு பலவீனமான பிரதமர் என்பதைப் புரிந்துகொண்ட அமெரிக்கா தனது காய்களைச் சாமர்த்தியமாக நகர்த்தியது. ராஜீவிற்குச் சர்வதேச அரசியலில் எத்தகைய அனுபவமும் கிடையாது என்பதால் அவரைப் புகழ்ந்து பேசி ஏமாற்றித் தன் வழிக்கு அமெரிக்கா கொண்டு வந்தது.

அமெரிக்காவின் சனாதிபதியாக இருந்த ரீகன் தெற்காசியப் பகுதியில் இந்தியாவுக்கு முக்கியமான கடமைகள் உண்டு. **"தெற்காசியாவின் போலீஸ்காரனாக இந்தியா விளங்கவேண்டும்"** என்று கூறியபொழுது ராஜீவ் அதை உண்மை என நம்பினார். ராஜீவ்–ஜெயவர்த்தனா உடன்பாடு ஏற்பட்டதற்குப் பின்னணியில் அமெரிக்காவின் பங்கு கணிசமானது. உடன்பாடு கையெழுத்தான சில மணி நேரங்களிலேயே அதை வரவேற்றும் ராஜீவைப் பாராட்டியும் ரீகன் கடிதம் அனுப்பினார்.

சிங்களர்–தமிழர்களிடையே உடன்பாடு ஏற்படுத்தும் முயற்சியில் இந்திய இராணுவத்தைப் பயன்படுத்த முன்வந்த இராஜீவ் காந்தியின் தலைமையை அமெரிக்க வெளியுறவுத்துறை துணிகரமானது எனப் பாராட்டியது

அமெரிக்க செனட் சபையின் ஆசிய–பசுபிக் விவகார துணைக் குழுவின் தலைவராக இருந்த ஸ்டிபன் சோலார்ஜ் என்பவர் தங்களது இரு நாடுகளிலும் எழுந்த எதிர்ப்புகளைக் கண்டு கொஞ்சமும் அஞ்சாமல் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியும் இலங்கைக் குடியரசுத் தலைவர் ஜெயவர்த்தனாவும் இனப் பிரச்சினையைத்

தீர்க்கத் துணிந்து எடுத்த முயற்சிகளைப் பாராட்டும் வகையில் அவர்கள் இருவருக்கும் அமைதிக்கான நோபல் பரிசை அளிக்கவேண்டும் என்று (அமெரிக்க காங்கிரஸ் கூட்டத்தில் 24–1–88) கூறினார்.

"அமெரிக்க இராணுவத்தைச் சேர்ந்த அதிரடிப்படைப் பிரிவான கிரீன் பேரட் என்னும் அமைப்பு சிங்கள இராணுவ வீரர்களுக்கு மூன்று மாத கால தீவிர பயிற்சி அளித்துள்ளது. இந்த நடவடிக்கைக்கு Operation Balanced Style என்னும் இரகசிய குறியீடு கொடுக்கப்பட்டுப் பல வகையான தாக்குதல்கள், காயமடைந்தவர்களை பத்திரமாக அப்புறப்படுத்துதல், வானொலித் தொடர்புகள் போன்ற பல பயிற்சிகள் அளிக்கபட்டன.

தமிழர்களின் தாயகப் பகுதியான வடக்கு – கிழக்கு மாநிலத்தின் எல்லையையொட்டிய பகுதியில் சிங்கள இராணுவ வீரர்களுக்கு அமெரிக்க இராணுவத்தின் சிறப்புப் படைப் பிரிவினர் பயிற்சி அளித்த செய்தியும் வெளியாகியுள்ளது. 1996ஆம் ஆண்டு நவம்பரில் அமெரிக்க இராணுவத்தின் பசுபிக் படைப் பிரிவின் தலைமைத் தளபதியான ஜெனரல் வில்லியம் ஸ்டீல் என்பவர் இலங்கைக்கு வருகை தந்து அதிபர் சந்திரிகாவையும் துணை பாதுகாப்புத் துறை அமைச்சர் ரத்தவத்தேயையும் சந்தித்துப் பேசினார். இதற்குப் பிறகு சிங்கள இராணுவ அதிகாரிகளுக்கு பயிற்சி அளிப்பதற்காக இராணுவக் கல்லூரி ஒன்றையும் அமைக்க அமெரிக்கா முன்வந்துள்ளது. இலங்கை சம்பந்தமாக அமெரிக்காவுக்கு ஆழமான உள்நோக்கங்கள் உள்ளன. இந்தியாவைப் பல்வேறு காரணங்களினால் அமெரிக்கா நம்பவில்லை. இந்தியா வலிமை வாய்ந்த நாடாக வளர்வதை அமெரிக்கா எதிர்க்கிறது. இந்தப் பின்னணியில்தான் இந்தியாவின் தெற்கு எல்லைப் பகுதியில் உள்ள இலங்கையில் அமெரிக்காவின் தலையீட்டை நாம் பார்க்கவேண்டும்" என சமதாக்கட்சியின் தலைவரும் இந்திய நாடாளுமன்ற உறுப்பினருமான ஜார்ஜ் பெர்னாண்டஸ் (தற்போதைய இந்தியப் பாதுகாப்புத் துறை அமைச்சர்) பகிரங்கமாகக் கண்டனம் தெரிவித்தார்.(05–01–1997, பெங்களூர்)

## அமெரிக்க இராணுவத் தலையீடு

1. Military Provisional Resources INC என்னும் தனியார் இராணுவ அமைப்பு அமெரிக்காவில் இருந்துச் செயல்படுகிறது. இந்த அமைப்பில் அமெரிக்க இராணுவத்தின் ஓய்வுபெற்ற அதிகாரிகள் அங்கம் வகிக்கிறார்கள். இந்த அமைப்பைச் சேர்ந்த ஜெனரல் கோயிஸ்டர் என்னும் முன்னாள் இராணுவத் தளபதியின் தலைமையில் தூதுக்குழு ஒன்று 1997ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இலங்கைக்கு வருகை தந்து சிங்கள இராணுவத்திற்குப் பயிற்சி அளிப்பது பற்றி இலங்கை அரசுடன் விவாதித்தது. இதற்கு அமெரிக்க அரசின் ஒப்புதலும் இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

2. அதே ஆண்டின் நடுவில் அமெரிக்கத் தூதுவரான டிக்சன் தலைமையில் மற்றொரு குழு இலங்கைக்கு வந்து பயங்கரவாதத்தினை ஒழிப்பதற்கான நடவடிக்கைகள் குறித்துச் சிங்கள அரசுடன் விவாதித்தது. சர்வதேச ஒத்துழைப்புடன் இலங்கை உள்பட உலகின் பல்வேறு நாடுகளில் பரவி வரும் பய்கரவாதத்தினை கட்டுப்படுத்துவது குறித்துத்

தாங்கள் விவாதித்ததாகவும் பயங்கரவாதத்தை ஒடுக்குவதற்காக இலங்கை அரசுக்கு அமெரிக்கா உதவும் என்றும் அவர் கூறினார்.

3. டிக்சனின் வருகையைத் தொடர்ந்து அமெரிக்காவில் இருந்து உயர் அதிகாரிகளைக் கொண்ட குழு இலங்கைக்கு வந்து ஒரு வார காலம் தங்கி நிலைமையை ஆராய்ந்தது.

4. அமெரிக்க இராணுவத்தின் பசுபிக் பிராந்தியத் தலைமைத் தளபதியான ஜெனரல் ஸ்டே என்பவர் தலைமையில் 7 பேர் கொண்ட குழு ஒன்று அதே ஆண்டு நவம்பர் மாதத்தில் இலங்கைக்கு வருகைதந்து நிலைமையை ஆராய்ந்ததோடு சிங்கள அரசோடும் பேச்சுவார்த்தை நடத்தியது. விடுதலைப் புலிகளை எதிர்த்துப் போராடுவதற்கு எத்தகைய ஆயுதங்கள் சிங்கள அரசுக்குத் தேவை என்பது பற்றியும் இந்தக் குழுவினர் ஆராய்ந்து அமெரிக்க அரசுக்கு அறிக்கை தந்துள்ளனர்

5. அமெரிக்க இராணுவத்தைச் சேர்ந்த கர்னல் ஒல்சன் என்பவர் தலைமையில் உயர் அதிகாரிகள் கொண்ட குழுவினர் இலங்கைக்கு வருகை தந்து இரண்டு நாட்கள் இரகசியப் பேச்சு நடத்தினர்.

## பயிற்சி

சிங்கள இராணுவத்திற்குத் தேவையான அடிப்படைப் பயிற்சிகளை சிங்கள இராணுவ அதிகாரிகள் பல்லாண்டுக் காலமாகத் தொடர்ந்து அளித்து வருகிறார்கள். 1996ஆம் ஆண்டு ஆகஸ்டு 9ஆம் தேதியன்று வெளியான AFP செய்தி நிறுவனம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் “சிங்கள இராணுவத்திற்குப் பயிற்சி அளிப்பதோடு ஆயுதங்களையும் அமெரிக்க அரசு விற்பனை செய்து வருகிறது” எனக் கூறியது. இது சம்பந்தமாக அமெரிக்கா, பிரிட்டன், இலங்கை, பத்திரிகைகள் விரிவான புகைபடங்களுடன் செய்திகளை வெளியிட்டுள்ளன.

இரு நாடுகளின் அரசுகளும் இந்தச் செய்திகளை உறுதி செய்திருப்பதாக பிபிசி. வானொலி அறிவித்தது. பயிற்சி அளிப்பதோடு மட்டுமல்லாமல் அனுராதபுரம் மாவட்டத்தில் சாலியபடை என்னும் இடத்தில் அமெரிக்க இராணுவ அதிகாரிகள் நிரந்தரமான பயிற்சி முகாம் ஒன்றினை அமைத்துள்ளர். இராணுவக் கல்லூரி ஒன்றினைப் பின்னர் அமைக்கும் திட்டத்திற்கு முன்னோடியாக இந்த முகாம் அமைக்கப்பட்டுள்ளது.

Seattle times என்னும் பத்திரிக்கையில் Mark Kaufinan என்பவர் எழுதியுள்ள கட்டுரையில் Green Barets அமைப்பைச் சேர்ந்த 12 அதிகாரிகளைத் தான் நேரில் சந்தித்துப் பேசியதாகவும் குறிப்பிட்டுள்ளார். கடந்த இரண்டு ஆண்டுக் காலத்திற்கு மேலாக இந்தப் பயிற்சி அளிக்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் மனித உரிமைகள் பற்றிய நிலைமையை திருத்துவதற்காகவே இத்தகைய பயிற்சிகள் அளிக்கப்படுவதாக அமெரிக்க அரசு கூறியுள்ளது. ஆனால் இது உண்மையைத் திரித்துக் கூறுவதாகும். ஏனென்றால் உலகத்திலேயே மனித உரிமை மீறல்களில் இரண்டாம் இடத்தை வகிப்பது இலங்கை என ஆம்னஸ்டி இன்டர்நேசனல் குற்றம் சாட்டியுள்ளது.

AFP செய்தி நிறுவனம் வெளியிட்டுள்ள செய்தி ஒன்றில் இலங்கைக்கு அமெரிக்கா ஆயுதங்களை விற்பது குறித்துக் குறிப்பிட்டுள்ளது. மேலும் சக்திவாய்ந்த ஆயுதங்களை இலங்கைக்கு விற்பதற்கு இஸ்ரேல் அரசுக்கு அமெரிக்கா அனுமதி அளித்துள்ளது. ரோந்துப் படகுகள், இராணுவ ஹெலிகாப்டர்கள், பீரங்கிகள் போன்ற கனரக ஆயுதங்களையும் இலங்கைக்கு விற்பது குறித்து அமெரிக்கா பேச்சு நடத்தி வருகிறது. இவற்றை இஸ்ரேலிடமிருந்து பெற்றுக்கொள்வது பற்றியும் அமெரிக்கா கூறியுள்ளது.

சிங்கப்பூரில் உள்ள அமெரிக்கத் துணை நிறுவனம் ஒன்றுக்கு திருகோணமலைத் துறைமுகத்தில் உள்ள எண்ணெய் கிடங்குகள் குத்தகைக்கு விடுவது பற்றி அமெரிக்கா பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது. இலங்கையில் உள்ள புத்தளம் என்ற இடத்தில் சக்திவாய்ந்த அமெரிக்க வானொலி நிலையம் அமைப்பது பற்றிய பேச்சுவார்த்தை முடிந்து அதற்கான வேலைகளும் தொடங்கப்பட்டுள்ளன. இந்தியாவில் உள்ள இராமேஸ்வரத்திற்கு எதிர்க்கரையில் இந்த வானொலி நிலையம் அமைக்கப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். இந்த வானொலி நிலையத்தின் மூலம் தென்னாசிய நாடுகள் முழுவதும் ஒலிபரப்ப முடியும் என்றும் வானொலி நிலையமாக மட்டும் இது அமைக்கப்படவில்லை. மாறாக இந்தியா உட்பட தென்னாசிய நாடுகளின் இராணுவங்கள் தங்களுக்குள் பரிமாறிக்கொள்ளும் இரகசியச் செய்திகளை ஒட்டுக்கேட்கும் விதமாகவும் இது அமைக்கப்பட்டுள்ளது.

## பிரிட்டன்

இலங்கை அதிரடிப்படைக்குப் பிரிட்டனிலுள்ள **கினி–மினி** நிறுவனம் பயிற்சியளித்து வருவதாக இலண்டன் டெய்லி நியூஸ் பத்திரிகை 1987ஆம் ஆண்டு மார்ச் 13ஆம் தேதி அறிவித்தது. இதே நிறுவனம் ஆப்கானிஸ்தான் கொரில்லாப் படையினருக்கும் பயிற்சியளித்தது என்பது குறிப்பிடத்தக்கதாகும். பிரிட்டிஷ் அரசின் உளவுத்துறைக்கும் இந்த நிறுவனத்திற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்றும் அந்தப் பத்திரிகை கூறியது.

பிரிட்டனும் நேரடியாக ஆயுத உதவி செய்யாவிட்டாலும் பிரிட்டனிலுள்ள தனியார் இராணுவ அமைப்புகள் சிங்களப் படைகளுக்குப் பயிற்சியளிப்பதிலும் போர்த் தந்திரங்கள் வகுத்துக் கொடுப்பதிலும் உதவி புரிந்தன. இலங்கைப் போலீஸ் கமாண்டோக்கள் படைக்கு பிரிட்டனின் எஸ்.ஏ.எஸ்.படைகள் பயிற்சி அளித்து வரும் உண்மை நிலைநாட்டப்பட்டுள்ளது.

போர்த்துக்கீசிய நாட்டிலிருந்து விமானம் மூலம் ஏராளமான ஆயுதங்கள் இலங்கைக்கு அனுப்பப்படுகின்றன. கடந்த 10–2–85இல் **"ஜைரே ஏர்வேஸ்"** விமானம் மூலம் 16 ஆயிரம் கிலோ எடையுள்ள ஆயுதங்கள் அனுப்பப்பட்டன.

பிரேசில் நாட்டின் போர்விமான நிறுவன இயக்குநர் லாரன்ஸ் சிம்சேச்சா 1985ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் கொழும்பு வந்திருந்தார். அப்பொழுது அவர் கூறியதாக 9–9–85 தேதிய தினமணி நாளிதழ் கீழ்க்கண்ட செய்தியை வெளியிட்டது.

"டுகானோ ரகப் போர் விமானம்" ஒன்றை 13 இலட்சம் அமெரிக்க டாலர்களுக்கு விற்கிறோம். 20சதவீத ரொக்கம் மீதத் தொகையை 8 ஆண்டுத்

தவணைகளில் 7 சதவீத வட்டியுடன் வசூலிக்கிறோம். இலங்கை அரசு வேகவேகமாக எங்கள் விமானங்களை வாங்கி வருகிறது".

இத்தாலி நிறுவனம் ஒன்றிடமிருந்து அண்மையில் இராணுவப் பயிற்சி விமானம் ஒன்றை இலங்கை வாங்கியுள்ளது. இவ்விமானங்கள் ஒவ்வொன்றிலும் 500 கிலோ எடையுள்ள 4 குண்டுகளையும் விமானத்திலிருந்து பாயும் ஏவுகணைகளையும், 2 இயந்திரத் துப்பாக்கிகளையும் கொண்டு செல்லமுடியும்.

13 ஹெலிகாப்டர்கள், படைவீரர்களை ஏற்றிச்செல்லும் பெரிய விமானங்கள் 7 மற்றும் பல போர் விமானங்களையும் வாங்கியுள்ளது.

இயந்திரத் துப்பாக்கிகள் பொருத்தப்பட்ட 6 ரோந்துப் படகுகளைப் பிரிட்டனிடமிருந்து வாங்கியுள்ளது.

மூன்றாவது நாடு அல்லது ஒரு சர்வதேச அமைப்பு ஆகியற்றின் மூலம் மட்டுமே சிங்கள அரசுடன் பேச்சுவார்த்தை நடத்த முடியும் என 1998ஆம் ஆண்டு நவம்பர் மாதம் மாவீரர் நாளில் ஆற்றிய உரையில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் அறிவித்தார்.

1999ஆம் ஆண்டு மாவீரர் நாள் உரையிலும் இதே நிபந்தனையை அவர் வலியுறுத்தினார். ஆனால் சிங்கள அரசு இதை ஏற்றுக் கொள்ள மறுத்தது. பிரிட்டிஷ் அரசு இதில் தலையிட்டு இரு தரப்பினருக்கும் இடையே பேச்சுவார்த்தை நடத்துவதற்கு முயற்சி செய்தது.

1977ஆம் ஆண்டு ஏப்ரலில் பிரிட்டனின் வெளியுறவுத்துறை துணையமைச்சர் டாக்டர் லியாம்பாக்ஸ் கொழும்பு வந்து அதிபர் சந்திரிகாவைச் சந்தித்துப் பேசினார். முதலில் சிங்களக் கட்சிகள் ஒன்றுபட்டு தீர்வுத்திட்டமொன்றைத் தயாரிக்க வேண்டும் என அறிவுரை கூறினார். விடுதலைப் புலிகளுடன் பேச வேண்டும் என அறிவுரை கூறினார். ஆனால் சந்திரிகா அதற்குச் செவி சாய்க்கவில்லை.

## இஸ்ரேல்

இலங்கையின் கிழக்கு மாநிலத்தில் உள்ள திருகோணமலைக் கடற்படைப் பயிற்சி நிலையத்தைத் தலைமையிடமாகக் கொண்டு இஸ்ரேலிய கூலிப் படையான "மொசாத்" செயல்படத் தொடங்கியுள்ளது. கிழக்கு மாநிலத்தில் 16 இடங்களில் மொசாத் பயிற்சி முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் சுமார் 450 மொசாத் அதிகாரிகள் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

தமிழர்களின் குடியிருப்புகளை அழிப்பது, சொத்துகளைச் சேதப்படுத்துவது, போராளிகளின் முகாம்களைத் தகர்ப்பது போன்றவற்றில் சிங்களப் படையினருக்கு மொசாத் அதிகாரிகள் பயிற்சி தருகிறார்கள்.

கிழக்கு மாநிலத்திலிருந்து குறிப்பாகத் திருகோணமலை மாவட்டத்திலிருந்துத் தமிழர்களை அடியோடு விரட்ட இவர்கள் திட்டமிட்டுச் செயல்படுகிறார்கள்.

இதன் விளைவாக ஆயிரக்கணக்கான தமிழர்கள் திருகோணமலையில் கொல்லப்பட்டனர். சுமார் இலட்சம் பேர் அகதிகளாகி விரட்டப்பட்டுள்ளனர். இத்தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினரான சம்பந்தம் அவர்களின் வீடு உட்பட ஏராளமான தமிழர்களின் வீடுகள் கொளுத்தப்பட்டன.

"மொசாத்" உதவியை இஸ்ரேல் பெறுவதற்கு எதிராக இலங்கை முஸ்லீம்கள் கிளர்ச்சி நடத்தினர். இதை அரசு கடுமையாக ஒடுக்கியது.

இந்தியாவிலுள்ள முஸ்லீம் அமைப்புகள் ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள் மூலம் தமது கண்டனத்தைத் தெரிவித்தனர்.

இஸ்ரேலிய இரகசியக் கொலைகாரப் படையான மொசாத் ( Mossad ) அமைப்புப் பற்றிப் பிரிட்டனில் உள்ள இஸ்லாமியப் புரட்சிகர இயக்கம் 30-4-85இல் ஓர் அறிக்கை வெளியிட்டது. இலங்கைப் போக்குவரத்துத்துறை அமைச்சரான **எம்.எச்.முகம்மது** இலண்டனில் செய்தியாளர் மாநாடு நடத்திக் ணெ்டிருந்த அதே நேரத்தில் இந்த அறிக்கை வெளியிடப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

"இலங்கையில் மொசாத் படையின் நாசகார வேலைகள் குறித்தும் அமைச்சர் எம்.எச்.முகம்மதின் துரோகச் செயல்கள் குறித்தும் சில உண்மைகளை வெளியிட விரும்புகிறோம்.

**உண்மை-1:** கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதுவர் அலுவலகத்தில் உள்ள விசேஷப் பிரிவுக்கு அமைச்சர் எம்.எச். முகம்மது அடிக்கடி விஜயம் செய்துள்ளார். இந்த விசேஷப் பிரிவில்தான் இஸ்ரேலிய மொசாத் படையின் தலைமை அலுவலகம் அமைந்துள்ளது.

**உண்மை-2:** கொழும்பில் உள்ள இலங்கா ஓபராய் ஓட்டலில் 21.1.85 அன்று இரவு 9.15 மணி முதல் 11.32 வரை மொசாத் விசேஷ அதிகாரியான **ஆவ்ரஹாம் யோபி** என்பவரை அமைச்சர் எம்.எச்.முகமது சந்தித்து இரண்டுமணி நேரத்திற்கு மேல் இரகசியப் பேச்சு நடத்தியதற்கு ஏராளமான சான்றுகள் உள்ளன.

**உண்மை-3:** இலங்கையில் உள்ள தமிழ்பேசும் மக்களிடையே முஸ்லீம், கிறிஸ்துவ, இந்து மதங்களைச் சார்ந்தவர்கள் உள்ளனர். அனைவரும் ஒற்றுமையாகவும் அமைதியாகவும் வாழ்கின்றனர். கடந்தகாலத்தில் இலங்கை அரசுகள் மசூதிகளை நாசப்படுத்தியுள்ளன. அப்பாவி முஸ்லீம் மக்களைக் கொன்று குவித்துள்ளனர். முஸ்லீம் விவசாயிகளுக்குச் சொந்தமான நிலங்களைப் பறித்துச் சிங்களரைக் குடியேற்றி வருகின்றனர். இப்பொழுது மசூதிகள் இருந்த இடங்களில் புத்த ஆலயங்களைக் கட்டி வருகின்றனர். மொசாத் படையினரின் துணையோடு தமிழர்களுக்கு எதிராகத் தமிழ் முஸ்லீம்களை மோதவிட முயற்சி நடைபெறுகிறது.

**உண்மை-4:** இஸ்லாமிய மக்கள் எங்கிருந்தாலும் பிரித்தாளும் சூழ்ச்சியின் மூலம் அழிக்க மொசாத் முயற்சி செய்துவருகிறது என்பது உண்மையே. இப்பொழுது இலங்கை முஸ்லீம்கள் மீது அதன் கவனம் திரும்பியிருக்கிறது. அமைதியாக வாழும் இலங்கை முஸ்லீம்களைப் பகடைக் காய்களாகப் பயன்படுத்த மொசாத் படை முயலுகிறது. இந்த முயற்சியை முறியடிக்காவிட்டால் பேரழிவு நிச்சயம். எம்.எச்.முகம்மது போன்ற துரோகிகளின் முகமூடி கிழித்தெறியப்படவேண்டும்.

மட்டக்களப்பில் உள்ள சிங்களப் போலீஸ் கமாண்டோக்களுக்கு இஸ்ரேல் நிபுணர்கள் பயிற்சி அளித்து வருகிறார்கள்.

# முஸ்லீம் நாடுகள்

இலங்கை இராணுவத்திற்குப் பயிற்சியளிப்பதற்காக இஸ்ரேலியா மொசாத் அமைப்பின் உதவியை ஜெயவர்த்தனா நாடியிருப்பது கண்டு இலங்கையிலுள்ள முஸ்லீம்களும், சிங்கள இடதுசாரிகளும் கடும் கோபமடைந்தனர். இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதுவர் அலுவலகத்தில் **இஸ்ரேலிய நலன் காக்கும் பிரிவு** ஒன்று தொடங்க அமெரிக்கா அனுமதித்திருப்பது அமெரிக்காவின் மீது வெறுப்பை ஏற்படுத்தியது.

1970இல் இஸ்ரேலியர்களுடன் உள்ள தனது உறவை இலங்கை முறித்துக்கொண்டது. அதற்குப் பின் 14 ஆண்டுகள் கழித்து அமெரிக்க உதவியுடன் இஸ்ரேலிய உறவு புதுப்பிக்கப்பட்டது. இதற்குப் **பாலஸ்தீனிய விடுதலை இயக்கம்** தனது கடும் கண்டனத்தைத் தெரிவித்தது. தமிழ் விடுதலைப் போராளிகளுக்குப் பயிற்சி தரவும் அது முன்வந்துள்ளது.

இஸ்ரேலிய உறவினால் இலங்கைக்கு எதிராக அரேபிய நாடுகள் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன. அரேபிய நாடுகளில் வேலை வாய்ப்புகளைத் தேடிச் செல்லும் இலங்கைப் பிரஜைகள் இதனால் கடுமையான பாதிப்புக்கு உள்ளாகியிருக்கிறார்கள். இவர்களுக்கு விசா கொடுக்க அரேபிய அரசுகள் மறுத்து வருகின்றன. எட்டு அரேபிய நாடுகளில் சுமார் 3 இலட்சத்திற்கு மேற்பட்ட இலங்கைக் குடிமக்கள் வேலை பார்த்து வருகிறார்கள். இவர்கள் ஆண்டுதோறும் 600 கோடி ரூபாய்க்கு மேல் சம்பாதித்து இலங்கைக்கு அனுப்புவதாகவும் கூறப்படுகிறது.

இலங்கைத் தேயிலை மூலம் கிடைக்கும் வெளிநாட்டு வருமானம் சுமார் 800 கோடியாகும். அதற்கு அடுத்து அரேபிய நாடுகளில் வேலை பார்ப்போர் சம்பாதித்து அனுப்பும் தொகையே பெரிய வருமானமாகும்.

**மது ஓயா** திட்டத்திற்கு 5 கோடி டாலர்கள் கடன் தருவதாகச் சவுதி அரேபியா அறிவித்திருந்தது. ஆனால் இஸ்ரேலிய உறவுக்குப் பின்னால் அதை நிறுத்தி வைத்தது. இஸ்ரேலுடன் இலங்கை கொண்டுள்ள உறவு கண்டு அரேபிய நாடுகள் கடும்கோபம் அடைந்துள்ளன. முக்கிய அரேபிய நாடுகள் இலங்கைக் குடிமக்களுக்கு விசா வழங்குவதை நிறுத்தி வைத்துள்ளன. இலங்கைக்கு எதிராக அரசியல், பொருளாதார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதைப் பற்றி அரேபிய நாடுகள் ஆராய்ந்து வருவதாகப் பாலஸ்தீனிய விடுதலை இயக்கத்தைச் சேர்ந்த டாக்டா கே. அப்துல் ரகுமான் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஜெயவர்த்தனாவும் இலங்கை அமைச்சர்கள் பலரும் மொசாட் அமைப்பைச் சேர்ந்த பல இஸ்ரேலியர்கள் இலங்கையில் இருப்பதாகத் தம்மிடம் ஒப்புக்கொண்டதாக அவர் தெரிவித்தார்.

1984ஆம் ஆண்டு ஜுன் மாதம் வரை சுமார் 150 இஸ்ரேலியர்கள் இலங்கையில் இருந்ததாக அவர் கூறினார்.

இப்பிரச்சினையில் இலங்கை அரசுடன் கொண்டுள்ள உறவுகள் குறித்துத் தாங்கள் மறுபரிசீலனை செய்யவேண்டிய அவசியத்திற்கு ஆளாகி இருப்பதாக **லிபியா** தெரிவித்துள்ளது.

சவுதி அரேபியாவிற்குள் முஸ்லீம் அல்லாத இலங்கைக் குடிமக்கள் நுழைவதைத் தடை செய்யப்போவதாக அந்நாடு அறிவித்தது. பாலஸ்தீனிய விடுதலை இயக்கத் தூதுவர் கொழும்பிலிருந்து வெளியேறிச் சென்றுவிட்டார். எகிப்து அரசும் தனது கடுமையான கண்டனத்தைத் தெரிவித்தது.

ஈரான் நாட்டிற்கு வரவிருந்த இலங்கைத் தூதுக்குழுவை வரவேண்டாம் என ஈரான் அரசு கூறியது. 1985ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 10ஆம் தேதி இந்த அறிவிப்பை ஈரான் அரசு வெளியிட்டது. இஸ்ரேலுடன் இலங்கை கொண்டுள்ள தொடர்பே ஈரானின் இந்த நடவடிக்கைக்குக் காரணம் என்று கூறப்பட்டது.

இலங்கையில் தமிழ் முஸ்லீம்கள் படுகொலை செய்யப்படுவது கண்டு வங்காளதேச ஜனாதிபதி **எர்ஷாட்** தமது கடும் கண்டனத்தை ஜெயவர்த்தனாவிற்குத் தெரிவித்தார். தமது இலங்கை விஜயத்தையும் ரத்து செய்தார்.

## பாகிஸ்தான்

1985ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் இலங்கை அதிபர் ஜெயவர்த்தனா பாகிஸ்தானுக்கு விஜயம் செய்தார். பாகிஸ்தான் அதிபர் **ஜியா-உல்-ஹக்** உடன் அவர் நடத்திய பேச்சுவார்த்தைக்குப் பின்னால் பாகிஸ்தான் அதிபர் ஜியா பின்வருமாறு அறிவித்தார்.

"இலங்கையின் ஐக்கியத்தையும் ஒருமைப்பாட்டையும் பாதுகாக்கப் பாகிஸ்தான் துணை நிற்கும்" என்று அவர் கூறினார்.

இலங்கை அதிபர் ஜெயவர்த்தனாவுக்குப் பாகிஸ்தானின் முக்கிய உயர்ந்த விருதான **மிஷான்-இ-பாகிஸ்தான்** என்பது வழங்கப்பட்டது. பாகிஸ்தானில் ஒருவார காலம் ஜெயவர்த்தனா சுற்றுப்பயணம் செய்தார். இந்திய வெளிநாட்டுத்துறைச் செயலாளர் **ரோமேஷ் பண்டாரி** ஜெயவர்த்தனாவைச் சந்தித்த பிறகும் பிரிட்டிஷ் பிரதமர் **மார்க்கரேட் தாட்சர்** கொழும்பிற்கு வரும் முன்னாலும் ஜெயவர்த்தனா பாகிஸ்தான் சென்றிருப்பது முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்பட்டது.

இலங்கை இராணுவத்தினருக்கு விசேஷப் பயிற்சியளிக்கப் பாகிஸ்தான் ஒப்புக்கொண்டது.

இதைத் தொடர்ந்து பாகிஸ்தானிய ஜனாதிபதி **ஜியா-உல்-ஹக்** இலங்கைக்கு விஜயம் செய்தார். இலங்கை அதிபர் ஜெயவர்த்தனாவை ஒரு சமாதானத் தூதுவராக அவர் வர்ணித்தார். இலங்கையிலுள்ள முஸ்லீம்கள் அவரைத் தலைவராகப் பெற்றிருப்பது அவர்களுடைய அதிர்ஷ்டம் என்றும் அவர் கூறினார். ஆசியாவின் மூத்த இராசதந்திரியான ஜெயவர்த்தனா இலங்கைக்கு மட்டுமின்றி ஆசியாவுக்கே வழிகாட்டக்கூடிய தகுதி படைத்தவர் என்றும் அவர் பாராட்டினார்.(13-12-85, தினமணி)

ஜெயவர்த்தனா காலத்தில் பாகிஸ்தானுடன் ஏற்பட்ட நெருக்கம் சந்திரிகா காலத்தில் மேலும் பன்மடங்கு பெருகியது.

இராணுவ ரீதியாக புலிகளை வெல்ல முடியாத சிங்கள இராணுவத்தை மேலும் வலிமை படுத்த பாகிஸ்தான் அதிபர் முஷ்ரப் கப்பல் கப்பலாக ஆயுதங்களை அனுப்பி உதவி செய்தார். இந்தியாவிற்கு எதிராகவே இதைப் பாகிஸ்தான் செய்தது.

## ஜப்பான்

அமெரிக்க ஆதரவு நாடான ஜப்பான் ஏராளமான பொருளாதார உதவிகளையும் தொழில்நுட்ப உதவிகளையும் இலங்கைக்கு அளித்து வருகிறது. ஜப்பானின் பொருளாதார உதவியில்லாமல் போயிருந்தால் இதற்குள் இலங்கையின் பொருளாதாரம் அடியோடு சரிந்து போயிருக்கும்.

## சிங்கப்பூர்

நவீன எலக்ட்ரானிக் சாதனங்களும் பீரங்கிகளும் பொருத்தப்பட்ட பெல்ப் 212 ரக ஹெலிகாப்டர்கள் ஆறினைச் சிங்கப்பூர் இலங்கைக்குக் கொடுத்திருக்கிறது.

அமெரிக்காவும் அதனுடைய ஆதரவு நாடுகளும் இலங்கைக்குத் தொடர்ந்து இராணுவப் பொருளாதார உதவிகள் அளி த்து வருகின்றன. இந்தியாவிற்கு எதிரான நிர்ப்பந்த அரசியலில் இலங்கையை ஒரு கருவியாக இந்நாடுகள் பயன்படுத்தி வருகின்றன.

இலங்கையில் தமிழர்கள் இனப்படுகொலைக்கு ஆளாகி வருவதை அமெரிக்காவும் அதன் ஆதரவு நாடுகளும் கண்டனம் செய்யவில்லை. மாறாகத் தமிழர்களை இனப்படுகொலை செய்வதற்குத் தேவையான ஆயுதங்களைச் சிங்களவர்களுக்கு இந்நாடுகள் அள்ளி அள்ளி அளித்து வருகின்றன.

வங்க மக்களை ஒடுக்குவதற்குப் பாகிஸ்தானியருக்கு ஆயுதங்களை அள்ளி அள்ளித் தந்ததைப் போலவே தமிழர்களை ஒடுக்கச் சிங்களருக்கு இந்நாடுகள் ஆயுதங்களைக் கொடுத்து வருகின்றன.

வங்கப் பிரச்சினையில் அமெரிக்காவும் அதன் ஆதரவு நாடுகளும் பாகிஸ்தானின் சர்வாதிகாரத்திற்குத் துணை போயின. அதைப்போலவே இப்பொழுது சிங்கள அரசின் சர்வாதிகாரத்திற்குத் துணை போகின்றன.

# 9. வங்க – ஈழப்பிரச்சினைகளில் சோவியத் நாடு

பாகிஸ்தானில் சீனாவின் ஆதிக்கம் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதற்காகத்தான் இந்தியா– பாகிஸ்தான் ஒற்றுமையை ஏற்படுத்த சோவியத் நாடு பெரும் முயற்சி எடுத்தது. தாஷ்கண்ட் உடன்பாடும் ஏற்பட்டது. இந்திய–பாகிஸ்தான் தகராறுகளில் சோவியத் நாடு நடுநிலை வகித்தது. வேறு வல்லரசுகள் இந்தத் தகராறில் நுழைந்துவிடக் கூடாதே என்பதில் அக்கறையாய் இருந்தது.

1971 மார்ச் மாதத்தில் கிழக்கு வங்க மக்களைப் பாகிஸ்தான் இராணுவம் இனப்படுகொலை செய்தபொழுதுகூட சோவியத் நாடு மவுனம் சாதித்ததற்கு இதுவே காரணமாகும். ஓர் உண்மையைச் சோவியத் தலைவர்கள் மறந்துவிட்டார்கள். இந்தியாவில் ஜனநாயகமும் பாகிஸ்தானில் சர்வாதிகாரமும் தொடர்ந்து நீடிக்கும்பொழுது இரு நாடுகளுக்கிடையே மோதல் தவிர்க்க முடியாதது என்பதே இந்த மகத்தான உண்மையாகும். ஆனால் மெல்ல மெல்ல இந்த உண்மையைச் சோவியத் நாடு உணர்ந்து கொண்டது. சீனாவும் அமெரிக்காவும் நெருங்கி வருவதையும் அவர்களுக்குத் துணையாகப் பாகிஸ்தான் இருப்பதையும் பார்த்த பின்னால் சோவியத்நாடு திட்டவட்டமான முடிவுக்கு வந்து இந்தியாவுடன் மேலும் நெருக்கமான உறவு கொள்ளத் தொடங்கிவிட்டது. இதன் விளைவாக ஏற்பட்டதே இந்திய–சோவியத் இருபது ஆண்டுக்கால ஒப்பந்தமாகும்.

பாகிஸ்தானியத் தலைவர் **யாஃயாகானுக்கு சோவியத் நாட்டின் தலைவர் போர்ட் ஹொர்னி** கீழ்க்கண்ட கடிதத்தை அனுப்பினார்.

"கிழக்குப் பாகிஸ்தானின் ஒடுக்குமுறை நீடிப்பதன் மூலமும் இரத்த ஆறு பெருகி ஓடுவதன் மூலமும் இந்தப் பிரச்சினை மேலும் சிக்கலாகும். பாகிஸ்தானின் முழுமைக்குமே இதனால் பெரும் பாதகம் விளையும். எனவே ஒடுக்குமுறைகளையும் இரத்தம் சிந்துதலையும் உடனே நிறுத்தி அமைதியான வழியில் இப்பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும்" என்றார்.

1971 டிசம்பர் 8ஆம் தேதி நேபாளத்தின் தலைநகரான காட்மண்டுவில் இருந்த சோவியத் தூதுவர் அலுவலகத்தின் இராணுவச் செயலாளர் சீனத் தூதுவர் அலுவலகத்தைச் சேர்ந்த இராணுவச் செயலாளரைச் சந்தித்து **"இந்தியா–பாகிஸ்தான் தகராறில் சீனா தலையிடுமானால் சோவியத் நாடும் தலையிடவேண்டிய அவசியம் நேரிடும். சீனாவில் சிங்கியாங் மாநிலத்தில் நிறுவப்பட்டுள்ள அணு ஆயுத மற்றும் ஏவுகணைத் தளங்களைச் சோவியத் நாடு அழிக்கும்" என்று எச்சரித்தார். இந்த எச்சரிக்கை போதுமான பலனைக் கொடுத்தது.**

அமெரிக்கா–சீனா உடன்பாடு ஏற்பட்ட பின்னால், தான் தனிமைப்படுத்தப்படுவதாகச் சோவியத் நாடு கருதியது. எனவே ஆசியாவின்

இரண்டாவது பெரிய நாடான இந்தியாவுடன் உடன்பாடு செய்தது. வங்கப் பிரச்சினையில் பாகிஸ்தானுக்கு ஆதரவாகச் சீனா தலையிடலாம் என்ற அச்சம் இந்தியாவிற்கு இருந்த காரணத்தினால் இந்தியாவும் சோவியத் நாட்டுடன் உடன்பாடு செய்துகொண்டது. இந்தியாவின் அரசியல் கட்சிகளும் தலைவர்களும் இந்திய – சோவியத் உடன்பாடு வங்கப் பிரச்சினையைத் தீர்க்க உதவுமா? என்ற கோணத்தில் மட்டுமே பார்த்து அதை ஆதரித்தனர்.

முஜிபூர் ரஹ்மானுடன் எவ்விதப் பேச்சுவார்த்தையும் நடத்துவதற்கு யாஃயாகான் மறுத்தவுடன் சோவியத் நாட்டின் போக்கு, பாகிஸ்தானுக்கு எதிராகத் திரும்பி இறுதியில் வங்கதேசச் சுதந்திரத்தை ஆதரிப்பதில் போய் முடிந்தது. இந்தியாவுடன் உடன்பாடு ஏற்பட்ட பின்னால் இன்னும் வெளிப்படையாகவே பாகிஸ்தானின் இராணுவ ஆட்சியைக் கண்டிக்கத் தொடங்கியது. பொது மன்னிப்பினை யாஃயாகான் அறிவித்தபொழுதிலும் ஆயிரக்கணக்கான அரசியல் கைதிகள் சிறை வைக்கப் பட்டிருந்ததையும் கொடுமைப்படுத்தப்பட்டதையும் சோவியத் நாடு கண்டித்தது.

சோவியத் நாட்டிலுள்ள உலக அமைதிக்குழு, ஆசிய–ஆப்பிரிக்க ஒருமைப் பாட்டுக்குழு, தொழிற்சங்கம், மகளிர்– இளைஞர்– மாணவர் அமைப்புகள் போன்ற பல்வேறு அமைப்புகளும் பாகிஸ்தானின் கொடுமைகளைக் கண்டித்தும் வங்க விடுதலைப் போராட்டத்தை ஆதரித்தும் குரல் கொடுத்தன. சோவியத் அரசும் மக்களும் கொடுத்த இந்த ஆதரவின் அடிப்படையிலேயே வங்கதேசத்திற்கு உதவும் இந்தியாவின் திட்டம் உருவாக்கப்பட்டது.

## ஈழத் தமிழர் பிரச்சினையில் சோவியத் நாடு

இலங்கையில் அமெரிக்கா, சீனா ஆகிய நாடுகளின் ஆதிக்கம் வலுத்து வருவதைச் சோவியத் நாடு விரும்பவில்லை. இலங்கையிலுள்ள திரிகோணமலையில் தனது கடற்படைத்தளம் ஒன்றினை அமைப்பதில் அமெரிக்கா ஆர்வம் கொண்டிருக்கிறது. அதற்கான முயற்சியில் ஈடுபட்டிருக்கிறது என்பதைச் சோவியத் நாடு அறிந்து அதைத் தடுக்க உறுதி பூண்டுள்ளது.

இந்துமாக்கடல் பகுதி, அமைதி மண்டலமாக விளங்கவேண்டும் எனச் சோவியத் நாடு விரும்பியது. அமெரிக்காவின் ஏழாவது கடற்படை, இந்துமாக்கடல் பகுதியில் ஆதிக்கம் செலுத்த முயலுவதைச் சோவியத் நாடு மிகக் கடுமையாக எதிர்த்தது. இந்தப் பின்னணியில்தான் இலங்கைத் தமிழர் பிரச்சினையைச் சோவியத் நாடு பார்த்தது.

இலங்கையும் இந்தியாவும் நட்புறவாக இருப்பதன் மூலம் இப்பிராந்தியத்தில் அமெரிக்காவோ சீனாவோ நுழைய விடாமல் தடுக்கலாம் எனச் சோவியத் நாடு நினைத்தது. இதன் காரணமாகத்தான் இலங்கைப் பிரச்சினையில் இந்தியா செய்துவந்த சமரச முயற்சிகளைச் சோவியத்நாடு ஆதரித்தது.

1971ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் கிழக்கு வங்க மக்களைப் பாகிஸ்தான் இராணுவம் இனப்படுகொலை செய்தபொழுதுகூடச் சோவியத் நாடு மவுனம் சாதித்தது. அதைப்போலவே 1983ஆம் ஆண்டு ஜூலையில் இலங்கையில் சிங்கள இராணுவத்தினால் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டபொழுது சோவியத் நாடும் மவுனம் சாதித்தது.

வங்கப் பிரச்சினையில் சற்றுக் காலதாமதமாக உண்மையைச் சோவியத் நாடு உணர்ந்ததுபோல இலங்கைப் பிரச்சினையிலும் சற்றுத் தாமதமாகச் சோவியத் நாடு உண்மையை உணரத் தொடங்கியிருக்கிறது.

1983ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை தொடர்ந்து இலங்கையில் தமிழர்கள் திட்டமிட்டுப் படுகொலை செய்யப்படுவதையும் தமிழர்களுக்கு எத்தகைய உரிமைகளும் வழங்கப்படாமல் இருப்பதையும் சோவியத்நாடு கண்டிக்கத் தொடங்கியுள்ளது. சோவியத் நாட்டின் துணை ஜனாதிபதியான காசேவ் 1985 ஆகஸ்டு 20இல் சென்னைக்கு வந்திருந்தபொழுது **இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக நடைபெறும் வன்முறைகளுக்குத் தனது அரசின் பகிரங்கக் கண்டனத்தைத் தெரிவித்தார். இது ஒரு குறிப்பிடத்தக்க அறிவிப்பாகும்.** இலங்கைத் தமிழர் பிரச்சினையில் பகிரங்கமாக இதுவரை கருத்து எதுவும் தெரிவிக்காத சோவியத் நாடு இவ்வாறு கருத்துத் தெரிவித்தது இலங்கை அரசுக்கு அதிர்ச்சியைக் கொடுத்தது.

இதைத் தொடர்ந்து 1986ஆம் ஆண்டு ஆகஸ்டு 19ஆம் தேதியன்று சென்னைக்கு வருகைதந்த சோவியத் துணை ஜனாதிபதியான எஸ் பி. டட்லியேவ், இலங்கையில் நடக்கும் படுகொலைகளைக் கண்டித்தார். தமிழர் பிரச்சினைக்குத் தீர்வுகாண இந்தியா மேற்கொண்டுள்ள முயற்சிகளை முறியடிக்க ஏகாதிபத்திய நாடுகள் சதி செய்வதையும் அவர் குற்றம் சாட்டினார்.

சோவியத் நாட்டின் தலைநகரான மாஸ்கோவிலிருந்து வெளிவரும் **இன்டர்நேஷனல் அபேர்ஸ்** என்னும் பத்திரிகையில் ஒய்.லூகாஸ்காய் என்பவர் வங்கப் பிரச்சினையைப் பற்றி ஒரு கட்டுரை எழுதினார். வங்கதேசம் உருவான பிறகு இந்தக் கட்டுரை வெளியிடப்பட்டது. (1972 பிப்ரவரி) இக்கட்டுரையில் யா∴யாகான் நடத்திய சமரசப் பேச்சுகள் வஞ்சக நோக்கம் கொண்டவை என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார். "டாக்காவில் நடைபெற்ற யா∴யாகான் – முஜிப்பூர் ரஹ்மான் பேச்சுவார்த்தைகள் ஏமாற்றும் நோக்கம் கொண்டவை. மேற்குப் பாகிஸ்தானிலிருந்து கிழக்குப் பாகிஸ்தானுக்கு ஏராளமான இராணுவத்தைக் கொண்டுவந்துச் சேர்ப்பதற்குப் போதுமான கால அவகாசம் பெறுவதற்காகப் பேச்சுவார்த்தை நாடகம் நடைபெற்றது. போதுமான இராணுவம் வந்து சேர்ந்தவுடன் பேச்சுவார்த்தை முறியடிக்கப்பட்டது. முஜிபூர் ரஹ்மானும் அவருடைய சகாக்களும் கைதுசெய்யப்பட்டார்கள். வங்க மக்களுக்கு எதிராக வரலாறு காணாத வகையில் கொடூரமான இராணுவ அடக்குமுறை ஏவிவிடப்பட்டது."

கிட்டத்தட்ட இதேநிலைதான் இலங்கையிலும் நீடித்தது. 1983ஆம் ஆண்டு வட்டமேஜை மாநாடு என்ற பெயரில் தமிழர் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை தொடங்கிய சிங்கள அரசு 1985ஆம் ஆண்டு திம்பு மாநாடு வரை பேச்சுவார்த்தை என்ற பெயரில் காலத்தைக் கடத்தி தம்முடைய இராணுவத்தைப் பலப்படுத்திக் கொண்டது. வெளிநாடுகளிலிருந்து ஆயுதங்களைக் கொண்டுவந்து குவிக்கவும் தமது படைவீரர்களுக்குப் பாகிஸ்தான், இஸ்ரேல் போன்ற நாடுகளில் பயிற்சி

அளிக்கவும் இந்தக் கால அவகாசத்தை முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டு பேச்சுவார்த்தையை முறித்துத் தமிழர்கள் மீது கொடூரமான இராணுவத் தாக்குதல்களைச் சிங்கள அரசு நடத்தியது என்பது சோவியத் நாடு அறியாத உண்மையன்று.

"ஈழப் பிரதேசத்தில் இராணுவத் தளம் அமைக்க அமெரிக்கா ஏற்பாடு செய்து வருகிறது. இஃது அண்டை நாடுகளின் பாதுகாப்பிற்குப் பேராபத்து" என்று சோவியத் நாடு எச்சரித்துள்ளது. இலங்கை கம்யூனிஸ்டுக் கட்சிக்கு விடுத்த செய்தியில் இவ்வாறு சோவியத் நாடு கூறியுள்ளது.

இந்தப் பின்னணியில் இலங்கைத் தேயிலையை வாங்கச் சோவியத்நாடு மறுத்துவிட்டதை நாம் பார்க்கவேண்டும். இலங்கைத் தேயிலையில் 5 சதவிகிதத்தைச் சோவியத் நாடு வாங்கி வந்தது. ஆனால் 1985 டிசம்பரிலிருந்து அவ்வாறு வாங்குவதை நிறுத்திவிட்டது. அதற்குப் பதில் இந்தியாவிலிருந்து தனக்குத் தேவையான தேயிலையைப் பெற்றுக் கொள்கிறது. இலங்கை அரசின் இனவெறிக் கொள்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கவே சோவியத் நாடு இவ்வாறு செய்துள்ளதாகக் கூறப்படுகிறது.

சோவியத் நாட்டின் நடவடிக்கைகளைத் தொடர்ந்து இந்திய–சோவியத் பண்பாட்டுறவுக் கழகம், உலக சமாதானக் கழகம் போன்ற அமைப்புகள் இலங்கையில் தமிழர்கள் இனவெறிப் படுகொலைக்கு ஆளாவதைக் கண்டித்தன.

# 10. வங்க – ஈழப் பிரச்சினைகளில் சீனா

“பல்வேறு நாடுகளில் நடைபெறும் விடுதலைப் போராட்டங்களையும் சுயநிர்ணய உரிமைக் கிளர்ச்சிகளையும் ஆதரிப்பது” என்ற தனது கொள்கைக்கு விரோதமாக வங்கதேசப் பிரச்சினையில் சீனா நடந்துகொண்டது. கிழக்கு வங்க மக்களின் உரிமைகளை இரும்புக்கரம் கொண்டு நசுக்க முயன்ற பாகிஸ்தானை முழுமையாக ஆதரித்ததோடு மட்டுமின்றி இந்தியா–பாகிஸ்தான் போர் மூண்டால் பாகிஸ்தானுக்கு ஆதரவாகத் தலையிடப் போவதாகவும் சீனா மிரட்டியது.

சீட்டோ, சென்டோ ஆகிய இராணுவக் கூட்டமைப்புகளில் அங்கம் வகித்ததற்காகப் பாகிஸ்தானைக் கடுமையாகச் சாடிய சீனா, அதே பாகிஸ்தானை விரிந்து கட்டிக்கொண்டு ஆதரிக்கவும் தயங்கவில்லை.

**வங்கதேசப் பிரச்சினை முற்றிய நேரத்தில் சீனாவை அமெரிக்கா அங்கீகரித்தது குறிப்பிடத் தக்கதாகும். இந்த உறவு ஏற்பட வழி செய்ததற்காகவும் இந்தியாவை வஞ்சம் தீர்ப்பதற்காகவும் பாகிஸ்தானைச் சீனா ஆதரித்தது.**

சீனப் பிரதமர் சூ–என்–லாய் யா:.யாகானுக்கு எழுதிய கடிதமொன்றில் பின்வருமாறு கூறினார்: "பாகிஸ்தானை ஆக்கிரமிக்க இந்திய–சாம்ராஜ்யவாதிகள் துணிவார்களானால் பாகிஸ்தான் அரசையும் மக்களையும் அவர்களின் இறையாண்மையையும் சுதந்திரத்தையும் பாதுகாக்கச் சீன அரசும் மக்களும் துணை நிற்பார்கள்."

பாகிஸ்தானுக்கு எந்த அளவு சீனா உதவும்? என்ற கேள்வி பெரும் புதிராகவே இருந்தது. வங்கதேசப் பிரச்சினை உருவான நேரத்தில் பாகிஸ்தானும் சீனாவும் மிக நெருக்கமான உறவு கொண்டிருந்தன. வங்கதேசப் போராட்டம் தொடங்குவதற்கு ஒருமாத காலத்திற்கு முன்பாகப் பாகிஸ்தானையும் சீனாவையும் இணைக்கக் கூடிய **"கார கோரம் நெடுஞ்சாலை"** திறக்கப்பட்டது. இதற்கு **"நட்புறவு நெடுஞ்சாலை"** என்றும் பெயரிடப்பட்டது. இந்தச் சாலையின் வழியாக ஏராளமான ஆயுதங்களையும் மற்ற உதவிகளையும் சீனா அனுப்பி வைத்தது. அதாவது வங்கப் பிரச்சினையின் தொடக்கத்திலிருந்து முடியும் வரையில் தினமும் 100 லாரிகள் சீனாவிலிருந்து ஆயுதங்களை ஏற்றிக்கொண்டு பாகிஸ்தானுக்கு வந்தன.

"பாகிஸ்தான் இராணுவத்தை விரிவுபடுத்தவும், அதற்குத் தேவையான நவீன ஆயுதங்களை அளிக்கவும் வேண்டிய அனைத்தையும் சீனா செய்யும்" என்று யா:.யாகானுக்கு **மா–சே–துங்** உறுதியளித்தார். மேலும் கிழக்கு வங்கத்திலிருந்துப் பாகிஸ்தானிய இராணுவ வீரர்களுக்குக் கொரில்லாப் போர்முறையில் பயிற்சியளிப்பதற்காகச் சீன நிபுணர்கள் அனுப்பப்பட்டனர். பாகிஸ்தானுக்கு ஆதரவாகப் பிரச்சாரம், பொருளாதார உதவி, இராணுவ உதவி ஆகியவற்றை முழு மூச்சுடன் சீனா செய்தபொழுதிலும், பாகிஸ்தானுக்கு ஆதரவாக நேரடியாகச் சீனா களத்தில் இறங்குமா? என்பது சந்தேகத்துக்குரியதாகவே இருந்தது.

சீனாவை நம்பி யா:்யாகான் பின்வருமாறு அறிவித்தார்.

"இந்தியா, பாகிஸ்தானுடன் போர் தொடங்குமானால் பாகிஸ்தான் ஒருபொழுதும் தனித்துப் போராடாது " என எச்சரித்தார்.

ஆனால் சீனாவின் சிந்தனையோ வேறுவிதமாக இருந்தது. இந்தியாவின் துணையோடு கிழக்கு வங்கம் போராடுவதைத்தான் அது எதிர்த்தது. இந்தியாவைக் கட்டுப்படுத்தும் ஒரு நாடாகப் பாகிஸ்தான் இருக்கவேண்டுமெனச் சீனா விரும்பியது. இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையே சமபலம் இருக்கவேண்டுமென்பதே சீனாவின் தெற்காசியக் கொள்கையாக இருந்தது. கிழக்கு வங்கத்தை இழந்துவிட்ட பாகிஸ்தான் இந்தியாவுக்குச் சமமாக இருக்கமுடியாது. சுதந்திரக் கிழக்கு வங்கம் இந்தியாவுடன் சேர்ந்து நின்று இந்தியாவின் பலத்தை அதிகரிக்கச் செய்துவிடும் எனச் சீனா நினைத்தது.

இந்திய - சோவியத் உடன்பாடும் சீனாவின் வடக்கெல்லையில் சோவியத் படைகள் குவிக்கப்பட்டதும் சீனாவின் தடுமாற்றத்திற்கு முக்கியக் காரணங்களாகும். மேலும் அணு ஆயுதங்களை உற்பத்தி செய்வதில் சீனா முழுமையாக ஈடுபட்டிருந்தது. அமெரிக்காவையும் சோவியத் நாட்டையும் போலத் தானும் ஒரு மாபெரும் வல்லரசு ஆகவேண்டுமென்று சீனா முழுமுச்சுடன் முனைந்திருந்தது. எனவே இந்த நேரத்தில் தன்னுடைய சக்தியை வீணாகச் செலவழிக்க அது விரும்பவில்லை.

சோவியத் நாட்டுடன் போராடும் அளவிற்கு இன்னும் அது வலிமை பெறவில்லை. பாகிஸ்தானுடன் சேர்ந்து இந்தியாவுக்கு எதிராகப் போராடினால் சீனாவிற்குக் கிடைக்கும் லாபம் எதுவுமில்லை. அல்லது இந்தப் போராட்டத்திலிருந்து விலகினால் அடையப்போகும் இழப்பு எதுவுமில்லை.

இருபது ஆண்டுக் காலப் போராட்டத்திற்குப் பின்னால் ஐ.நா. பேரவையில் சீனா பெற்றுள்ள இடத்தின் மதிப்பை யா:்யாகானின் இராணுவ ஆட்சியைப் பாதுகாப்பதற்காக இழந்துவிடச் சீனா விரும்பவில்லை.

## ஈழமும் சீனாவும்

ஈழத் தமிழர்களின் சுயநிர்ணய உரிமைக் கிளர்ச்சியை ஆதரிக்க வேண்டிய சீனா அதைக் கடுமையாக எதிர்த்தது. இப்பிரச்சினையில் இந்தியா அனுதாபம் காட்டுவதனால் வழக்கம்போலச் சீனா அதில் எதிரிடையான நிலை எடுத்தது. இலங்கை அரசுக்கு எல்லா வகையான உதவிகளையும் சீனா செய்தது. பொருளாதார உதவி மட்டுமின்றி ஆயுத உதவியும் செய்தது. கடற்கரையோரப் பாதுகாவல் பணிகளை மேற்கொள்வதற்காக டோரா பீரங்கிப் படகுகளைச் சீனா இலங்கைக்கு அளித்தது.

தமிழர் பிரச்சினையில் இந்தியா-இலங்கை உறவுகள் மிகவும் சீர்கேடு அடைந்த கட்டத்தில் அதாவது 26-1-85இல் சீனா வெளிநாட்டு அமைச்சரான ஊ. சுகியின் இலங்கைக்கு மூன்றுநாள் விஜயம் செய்தார். ஜனாதிபதி ஜெயவர்த்தனா, பிரதமர் பிரேமதாசா, தேசியப் பாதுகாப்பு அமைச்சர் லலித் அதுலத் முதலி ஆகியோருடன் பேச்சுவார்த்தை நடத்தினார். இந்தப் பேச்சுவார்த்தைக்குப் பிறகு அவர் பின்வருமாறு அறிவித்தார்.

"இலங்கை பிளவுபடுவதைச் சீனா முற்றிலுமாக எதிர்க்கிறது. இலங்கையின் ஐக்கியத்தையும் இறைமையையும் காக்கச் சீனா என்றும் துணை நிற்கும்" என்றும் அவர் அறிவித்தார்.

1984ஆம் ஆண்டு மே மாதம் ஜெயவர்த்தனா சீனா சென்றபொழுது செய்து கொள்ளப்பட்ட **சீனா–இலங்கைக் கூட்டுப் பொருளாதார வர்க்க ஒப்பந்தத்தின் கீழ்** சீனா தெரிவித்த ஆலோசனைகளை அப்படியே ஏற்பதாக இலங்கை வெளிநாட்டு அமைச்சர் **ஹமீது** தெரிவித்தார்.

இலங்கை விமானப்படை வீரர்களுக்குப் பயிற்சியளிக்கச் சீனாவின் உதவியை இலங்கை அரசு நாடியது. சீன விமானப்படைத் தளபதியான **ஜாங் டிங்ஃபா** (ZHANG TINGFA) 1984ஆம் ஆண்டு ஜுலை மாதத்தில் இலங்கை சென்றார். அவருடன் 5 உறுப்பினர்களைக் கொண்ட சீன இராணுவக்குழு ஒன்றும் சென்றது. இலங்கை அரசு சார்பான **மிரர்** என்னும் ஏடு இலங்கை இராணுவத்திலுள்ள ஆயுதங்கள் இராணுவத் தளவாடங்கள் ஆகியவற்றில் 50 சதவிகிதம் சீனா கொடுத்தது என்று செய்தி வெளியிட்டது.

1985ஆம் ஆண்டு மார்ச் 13ஆம்தேதி சீனத் தலைவர்களில் முக்கியமானவரான டெங் – ஜியாபிங் இலங்கைக்கு மூன்றுநாள் விஜயம் செய்தார்.

சுதந்திர வங்கம் அமைந்தால் அஃது இந்தியச் சார்புள்ள நாடாக இருக்கும் என்று நினைத்து வங்கச் சுதந்திரப் போராட்டத்தினைச் சீனா எதிர்த்தது. அதைப் போலவே சுதந்திரத் தமிழீழம் அமைந்தால் அது இந்தியச் சார்புள்ள நாடாகவே இருக்கும் என்று சீனா கருதுவதால் இதையும் எதிர்த்து வருகிறது. மேலும் இலங்கையை இந்திய எதிர்ப்பு நாடாகவே வைத்திருக்க வேண்டுமென்று சீனா விரும்புகிறது. ஆகவேதான் இலங்கைக்கு எல்லாவிதமான உதவிகளையும் செய்து வருகிறது.

# 11. வங்க ஈழப் பிரச்னைகளில் அனைத்துலக அமைப்புகள்

அனைத்துலக நீதிபதிகள் குழுமம்(International commission of Jurists) 1971ஆம் ஆண்டு வெளியிட்ட அறிக்கையில் பின்வருமாறு குறிப்பிட்டது.

"ஷேக் முஜிபூர் ரஹ்மானின்" போராட்டங்களின் விளைவாகக் கிழக்கு வங்கத்தில் சுதந்திர அரசு நிறுவப்பட்டது. பாகிஸ்தான் இராணுவ ஆட்சியின் சட்டப்படி இது குற்றமாக இருக்கலாம். படைபலம் கொண்டு இதை ஒடுக்க இராணுவ ஆட்சி செய்த முயற்சி சட்டப்படி சரியாக இருக்கலாம். ஆனால் இராணுவ அதிகாரிகள் தலையிடாமல் இருப்பார்களேயானால் கிழக்கு வங்கத்திலுள்ள நீதி– நிர்வாகத் துறையின் அதிகாரிகளும் பாகிஸ்தான் இராணுவத்திலுள்ள வங்கப் பிரிவினரும் அவாமி லீக்கின் அதிகாரத்தையும் உத்தரவுகளையும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருந்தனர். தேர்தலில் அவாமி லீக் பெற்ற வெற்றி, ஆட்சி புரிவதற்குரிய சட்டபூர்வமான உரிமையை அதற்கு அளித்தது. கிழக்கு வங்கத்தின் தலைமை நீதிபதியான முகமது முனீர் இதை ஏற்றுக் கொண்டார்.

அனைத்துலக நடுவர்கள் குழுமத்தின் (International commission of Jurists) சார்பில் அமெரிக்காவில் உள்ள நியூயார்க் பல்கலைக் கழகப் பேராசிரியர் வர்ஜினியா ஏ.லியரி என்பவர் இலங்கைக்கு அனுப்பப்பட்டார். 1981ஆம் ஆண்டு ஜூலை ஆகஸ்டு மாதங்களில் அங்குச் சுற்றுப்பயணம் செய்து நேரில் கண்டு, கேட்டு, விசாரித்தறிந்த உண்மைகளை அவர் அறிக்கையாக அளித்தார். இலங்கை அரசின் பல்வேறு அடக்குமுறைச் சட்டங்களைப் பற்றியும், தமிழருக்கு எதிராக அரசு ஆதரவுடன் நடத்தப்படும் கொடுமைகளைப் பற்றியும் இந்த அறிக்கையில் விரிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

## கனடா தூதுக்குழுவின் பரிந்துரை

கனடா நாடளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட அனைத்துக் கட்சித் தூதுக்குழு ஒன்று இலங்கை சென்று சுற்றுப்பயணம் செய்துத் திரும்பியது. இக்குழு கனடா அரசுக்கு அளித்த அறிக்கையில் கீழ்க்கண்டவாறு பரிந்துரை செய்துள்ளது:

இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் உடனடியாகப் போர் நிறுத்தத்திற்கு ஒப்புக்கொள்ள வேண்டும். பன்னாட்டு மேற்பார்வையில் இப்போர்நிறுத்தம் அமையவேண்டும். பேச்சுவார்த்தையின் மூலம் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண இரு தரப்பினரும் முயலவேண்டும். இந்த நோக்கங்களை நிறைவேற்றப் பன்னாட்டுச் சமுதாயம் அவர்களுக்கு நிர்ப்பந்தம் அளிக்க வேண்டும். பிரச்சினைகளுக்கு இராணுவத் தீர்வுகாண இலங்கை அரசு எந்தக் கட்டத்திலும் முயலக் கூடாது. குறிப்பாக யாழ்த் தீபகற்பத்தைத் தாக்கக் கூடாது. இந்த இனப் பிரச்சினைக்குத் திட்டவட்டமான–தெளிவான அரசியல் தீர்வுக்குத் தங்களுடைய யோசனைகளை இலங்கை அரசு அளித்துத் தனது நல்லெண்ணத்தை

வெளிப்படுத்தவேண்டும். இந்த மோதலுக்குப் பன்னாட்டுச் சமரச முயற்சிகளை மேற்கொள்ள ஐ.நா. சபை, பொதுநலவாரியம் (காமன்வெல்த்) அல்லது வேறு பன்னாட்டு அமைப்பைக் கனடா அரசு அணுகி முன்னின்று ஆவன செய்யவேண்டும்.

இலங்கை அரசு பயங்கரவாதத் தடுப்புச் சட்டம், அவசரகால விதிமுறைகள் போன்ற கொடிய அடக்குமுறைச் சட்டங்களை நீக்கிப் பன்னாட்டுச் சட்டங்களுக்கும் நியதிகளுக்கும் ஏற்ற வகையில் அதனுடைய சட்டங்களை அமைக்கவேண்டும்.

இலங்கையில் இன, பண்பாட்டு உறவு ஏற்படுவதற்கு மதத் தலைவர்கள் முக்கிய பங்கு வகிக்குமாறு ஊக்கப்படுத்தப்படவேண்டும்.

அனைத்துலக மன்னிப்பு அவை (அம்னெஸ்டி இன்டர் நேஷனல்) இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படுவதைப் பற்றி அளித்துள்ள 32 பரிந்துரைகள் உடனடியாகச் செயற்படுத்தப்படவேண்டும். அவ்வாறு செயற்படுத்தப்படுகிறதா என்பதைத் தனியானதொரு அமைப்பு மேற்பார்வையிடவேண்டும்.

மனித உரிமைகள் பற்றிய ஐ.நா. ஆணைக்குழுவின் 48ஆவது மாநாடு நடைபெறும் பொழுது இலங்கையின் மனித உரிமைகள் மீறுதல்கள் பற்றி ஒரு கண்டனத் தீர்மானத்தினைக் கனடா கொண்டுவரவேண்டும். இலங்கைக்கு ஆயுதங்கள் ஏற்றுமதி செய்யப்படுவதற்குத் தடை விதிக்கப்பட வேண்டும். இலங்கை அரசு மூலம் கனடா அளித்துவரும் உதவிகள் யாவும் நிறுத்தப்பட்டு அந்த உதவிகள் அரசு சாரா அமைப்புகள் மூலம் அளிக்கப்படவேண்டும். இலங்கையில் வடக்கு மாநிலத்திற்கு உணவு மற்றும் மருந்துப் பொருள்களை உடனடியாக அனுப்புவதற்கு ஏற்பாடு செய்யப்படவேண்டும். இலங்கையில் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் குறிப்பாக யாழ் மாவட்டத்தில் மனிதாபிமான அடிப்படையில் அனைத்து உதவிகளும் அளிப்பதற்குக் கனடா அரசு முன்னுரிமை கொடுக்கவேண்டும். இலங்கையில் உள்நாட்டுப் போர் முடிவடையும் காலம் வரையிலும் கனடாவில் தஞ்சம் புகுந்துள்ள தமிழ் அகதிகளை எக்காரணத்தை முன்னிட்டும் வெளியேற்றக் கூடாது. இந்தியாவில் உள்ள இலங்கைத்தமிழ் அகதிகள் குறித்து அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் ஆணையர் அலுவலகம் (யு.என்.எச்.சி.ஆர்) வகுத்துள்ள விதிமுறைகளை இந்திய அரசு ஏற்றுக்கொண்டு அவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும்.

இவை உள்ளடங்கியதாக 43 முக்கியமான பரிந்துரைகளை இக்குழு கனடா அரசுக்கு அளித்துள்ளது.

## ஆஸ்திரேலியாவின் முயற்சி

ஆஸ்திரேலியாவில் உள்ள தமிழ்ச் சங்கங்களின் கூட்டமைப்பினைச் சேர்ந்த பிரதிநிதிகளைக் கொண்ட தூதுக்குழு ஒன்று பிரதமர் பாப் ஹாங்கேயைச் சந்தித்தது. 7.11.91இல் நடைபெற்ற இச்சந்திப்பில் பிரதமர், தமிழ்க்குழுவிடம் பின்வருமாறு கூறினார்:

"ஜிம்பாப்வே நாட்டின் தலைநகரமான ஹராரேயில் நடைபெற்ற பொதுநலவாரியத் தலைவர்கள் மாநாட்டின் பொழுது இலங்கையின் சனாதிபதி பிரேமதாசாவுடன் பேசத் திட்டமிட்டிருந்தேன். ஆனால் அவர் அந்த மாநாட்டிற்கு

வரவில்லை. எனவே இலங்கை இனப் பிரச்சினையில் பொதுநலவாரிய நாடுகள் மூலம் சமரசம் காண்பதற்கான முன் முயற்சிகளைச் செய்ய ஆஸ்திரேலிய அரசு தயாராக இருக்கிறது என ஒரு கடிதம் மூலம் பிரேமதாசாவிற்குத் தெரிவித்தேன். அவருடைய பதில் கிடைத்ததும் மேற்கொண்டு எனது முயற்சிகளைத் தொடருவேன்" என்று கூறினார்.

ஆஸ்திரேலியா நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவரான ராபர்ட்ஹில் வெளியிட்ட ஓர் அறிக்கையில் "இலங்கை இனப்பிரச்சினை பற்றிப் பொதுநலவாரிய நாடுகளின் மாநாட்டில் எழுப்புவதற்குப் பிரதமர் ஹாங்கே தவறிவிட்டார். இப்பிரச்சினையைப் பொதுநலவாரிய மாநாடும் ஆராயவில்லை. இது கண்டிக்கத்தக்கது" என்று கூறினார்.

ஆஸ்திரேலியாவின் பிரதமரும் எதிர்க்கட்சித் தலைவரும் ஈழத் தமிழர் பிரச்சினையைப் பற்றித் தெளிவாக அறிந்திருப்பதும் அதைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதும் நல்ல அறிகுறிகளாகும்.

## நார்வே முயற்சி

பாலஸ்தீனப் பிரச்சினையில் யூதர்களுக்கும் - அராபியர்களுக்கும் இடையே பேச்சுவார்த்தை நடைபெற காரணமாக இருந்த நார்வே நாடு இலங்கை இனப் பிரச்சினையிலும் நடுவராகச் செயல்பட முன்வந்தது. ஆனால் இலங்கை அதிபர் சந்திரிகா மூன்றாம் நாட்டின் தலையீட்டை ஒருபோதும் ஏற்கமுடியாது எனக் கூறினார். ஆனாலும் விடுதலைப் புலிகளிடம் சிங்கள இராணுவம் விடுதலைப்புலிகள் தோல்விக்கு மேல் தோல்வி அடைந்தபோது வேறு வழியில்லாமல் நார்வேயின் உதவியை நாடினார். இந்தியா, அமெரிக்கா ஆகிய நாடுகள் நார்வேயின் தலையீட்டை வரவேற்றதோடு நில்லாமல் அதற்குத் துணைப் புரிவதாகவும் அறிவித்தன. இதைக் கண்டு சந்திரிகா கலக்கமடைந்தார். ஆனாலும் நார்வேயின் முயற்சிகளுக்கு முழுமையான ஆதரவு அளிக்கவில்லை.

## காமன்வெல்த் அரசுகளுக்கு வேண்டுகோள்

ஆஸ்திரேலியாவில் உள்ள ஐக்கிய கிறித்துவ தேசியப் பேரவையின் உட்பிரிவான **சமூகக் கடமையும் நீதியும்** என்ற அமைப்பின் இயக்குநர் வண. ரிச்சர்டு ஊட்டன் என்பவர் பொதுநலவாரிய நாடுகளின் அரசுத் தலைவர்களுக்கு 30-9-91இல் கீழ்க்காணும் வேண்டுகோள் கடிதத்தை அனுப்பினார்.

நிபந்தனையில்லாமல் பேச்சுவார்த்தைக்குத் தாங்கள் தயாராக இருப்பதாக விடுதலைப் புலிகள் அறிவித்த பின்பும் அதை ஏற்காமல் இராணுவத் தீர்வின் மூலம் தமிழர் பிரச்சினைக்கு முடிவுகாண முயலும் இலங்கை அரசுக்குச் சர்வதேசச் சமுதாயம் நிர்ப்பந்தம் கொடுக்க வேண்டும்

சோவியத் நாடு, யூகோஸ்லோவியா, கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் தேசிய இனங்களின் எழுச்சியும் அவற்றின் வெற்றியும் மலர்ந்துள்ள இத்தருணத்தில் இலங்கையில் இனமோதலைத் தீர்த்து வைப்பதற்குச் சர்வதேசச் சமுதாயம்

முன்வரவேண்டும்.

இலங்கையில் போரை நிறுத்துவதற்குப் பொதுநலவாரிய நாடுகள் மூலம் ஒரு முயற்சியை ஆஸ்திரேலிய அரசு மேற்கொள்ளவேண்டும்.

இலங்கை மேற்கொண்டுவரும் இனப்படுகொலை நடவடிக்கைகளைச் சர்வதேச நியாய சபை, ஐரோப்பிய நாடாளுமன்றத் தூதுக்குழு, சர்வதேச மன்னிப்புச் சபை, சர்வதேச எச்சரிக்கைக் குழு, பிரிட்டன் மற்றும் டச்சு அகதிகள் பேரவைகள், கத்தோலிக்க அகதிகள் சேவைக் குழு, உலக கிறித்துவப் பேரவை போன்றவை கண்டித்துள்ளன.

இலங்கையில் கீழ்க்காணும் குறிக்கோள்களை ஏற்கும் வகையில் அரசியல் தீர்வு அமையவேண்டும்.

இலங்கையில் உள்ள தமிழர்கள் தனித் தேசிய இனம்; வடக்கு – கிழக்குப் பகுதிகள் தமிழர்களின் தாயகம் என்பது ஏற்கப்படவேண்டும்.

தமிழ்த் தேசிய இனத்திற்குச் சுயநிர்ணய உரிமை உண்டு. மேற்கண்டவற்றை ஏற்றுக்கொண்டு சிங்கள நாடும் தமிழீழமும் கூட்டாட்சியில் இயங்கலாம். அல்லது இரு சுதந்திர நாடுகளாகத் தனித்தனியே இயங்கலாம்.
உலகம் முழுவதிலும் செல்வாக்குப் பெற்ற ஓர் அமைப்பு பொதுநலவாரிய நாடுகளின் அரசாங்கங்களின் பரிசீலனைக்குத் தமிழீழப் பிரச்சினையைக் கொண்டுசென்றது ஒரு முன்னேற்றமான நடவடிக்கையேயாகும்.

## ஆஸ்திரேலிய தொழிற்சங்க ஆதரவு

ஆஸ்திரேலியத் தொழிற்சங்கங்களின் சர்வதேசக் குழுவின் கூட்டம் 16–1–91இல் நடைபெற்றபொழுது கீழ்க்காணும் தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது.

தமிழீழப் பகுதிமீது இலங்கை அரசு மேற்கொண்ட பொருளாதாரத் தடையை நீக்கிவிட்டுப் பேச்சுவார்த்தையின் மூலம் பிரச்சினையைத் தீர்க்க முன்வருமாறு இலங்கை அரசை வலியுறுத்துமாறு ஆஸ்திரேலிய அரசை இக்குழு வேண்டிக் கொள்கிறது.

ஆஸ்திரேலியத் தொழிற்சங்கங்களின் பேரவை, வலிமை வாய்ந்த ஓர் அமைப்பாகும். பிரதமரான பாப் ஹாங்கே போன்றவர்கள் எல்லாம் இந்த அமைப்பின் தலைவராக இருந்தவர்கள். தமிழீழ மக்களின் போராட்டத்திற்கு இந்த அமைப்பின் ஆதரவு கிடைத்திருப்பது குறிப்பிடத் தக்கதாகும்.

## சுவீடன் சமரச முயற்சி

சுவீடன் உப்சலா பல்கலைக் கழகப் பேராசிரியர் பீட்டர் சாக் இலங்கையில் நடைபெற்றுவரும் போராட்டம் பற்றியும் அதில் சுவீடன் நடுவராகச் செயல்படவேண்டும் என வற்புறுத்தி ஒரு கடிதத்தை சுவீடன் வெளிநாட்டமைச்சரான மாகர்த்தா அவ் உக்கிளஸ் அவர்களுக்கு அனுப்பினார்.

பேராசிரியருக்கு அமைச்சர் 6–3–92 அன்று எழுதிய பதில் கடிதத்தில் இலங்கைச் சிக்கலில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையே நடுவராகத் தான் செயல்படத் தயாராக இருப்பதாகத் தெரிவித்தார்.

சுவீடன் வெளிநாட்டமைச்சருக்கு விடுதலைப் புலிகளின் சர்வதேசச் செயலகத்தின் சார்பில் லாரன்ஸ் திலகர் ஒரு பதில் அனுப்பினார்.

நடுவராகச் செயற்பட முன்வந்துள்ள சுவீடன் அரசின் எல்லா முயற்சிகளுக்கும் விடுதலைப் புலிகள் பரிபூரண ஒத்துழைப்புக் கொடுப்பார்கள் எனத் திலகர் தனது கடிதத்தில் உறுதி கூறித் தமிழீழத்திற்கு வருகை தருமாறு கேட்டுக்கொண்டார்.

## மொரீசியசு ஆதரவு

மொரீசியசு நாட்டின் வெளியுறவுத்துறை அமைச்சரான பால் ஆர். பெரெங்கர் கடந்த 9-8-92 அன்று சென்னை வந்திருந்தபொழுது அவரைச் சந்தித்தேன். பிரெஞ்சுக்காரரான அவர் ஈழத் தமிழர் பிரச்சினையில் மிகுந்த ஈடுபாடு கொண்டவராகத் திகழ்ந்தார். மொரீசியசுத் தீவில் வாழும் தமிழர்களிடம் அவருக்கு நெருங்கியத் தொடர்பு இருக்கிறது. அவரது தொகுதியில் கணிசமான தமிழர்கள் வாழ்கிறார்கள். இந்த விவரங்களையெல்லாம் அவர் என்னிடம் தெரிவித்தபொழுது நான் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தேன்.

தமிழீழப் பிரச்சினையில் தலையிட்டுச் சிங்களருக்கும் தமிழருக்குமிடையே பேச்சுவார்த்தை நடத்த பிராந்திய முயற்சி ஒன்று மேற்கொள்ளப்படவேண்டும். மொரீசியசு, இந்தியா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகள் கூட்டாக இம்முயற்சியில் ஈடுபடவேண்டும் என்னும் திட்டத்துடன் தான் இந்தியா வந்ததாக அவர் கூறினார். தில்லியில் பிரதமர் நரசிம்மராவைச் சந்தித்துப் பேசியதாகவும், அடுத்த மாதம் ஆஸ்திரேலியா சென்று அந்நாட்டுப் பிரதமருடன் இத்திட்டம் பற்றி விவாதிக்கப் போவதாகவும் கூறினார்.

"நல்ல முயற்சி. தமிழர்கள் அனைவரும் உங்கள் முயற்சியை வரவேற்பார்கள்" எனக் கூறி அவரைப் பாராட்டினேன்.

ஆஸ்திரேலியாவில் உள்ள தமிழர்கள் அவரைச் சந்தித்துப் பேச அனுமதிக்கும்படி நான் கேட்டுக்கொண்டபொழுது மகிழ்வுடன் இசைவு தந்தார்.

உடனடியாக ஆஸ்திரேலிய நண்பர்களுடன் தொடர்புகொண்டு மொரீசியசு அமைச்சர் அங்கு வரும் நாளைக் கூறி அவரைச் சந்திக்கும்படி வேண்டிக்கொண்டேன். அவ்வாறு அவர்களும் சென்று சந்தித்தனர்.

மொரீசியசு மேற்கொள்ளும் சமரச முயற்சியில் இந்தியா பங்குபெற மறுத்துவிட்டாலும் ஆஸ்திரேலியாவின் துணையோடு அந்நாடு இம்முயற்சியைத் தொடரும் என்பதற்கான அறிகுறியை அவரது பேச்சினூடே நான் கண்டேன்.

## தமிழீழப் பிரச்சினையில் உலக மனித உரிமை மாநாடு

ஐநா. பேரவையின் தீர்மானத்திற்கு இணங்க ஆஸ்திரிய நாட்டின் தலைநகரமான வியன்னாவில் 1993ஆம் ஆண்டு சூன் மாதம் 14 முதல் 25 வரை உலக மனித உரிமைகள் மாநாடு நடைபெற்றது. இஃது இரண்டாவது மாநாடாகும். முதலாவது மாநாடு 1968ஆம் ஆண்டு ஈரான் நாட்டில் நடைபெற்றது. அதற்குப் பின்னர் 25 ஆண்டுகள் கழித்து இப்போது இம்மாநாடு நடைபெற்றது.

21ஆம் நூற்றாண்டில் உலகம் நுழையப் போகிற வேளையில் மனித உரிமைகள் பற்றிக் கணித்தல், நடைமுறையில் உள்ள சட்ட வரையறைகள் போதுமா என்பதை

ஆராய்தல், புதிய வரைமுறைகள் தேவைப்பட்டால் உருவாக்குதல் போன்றவை பற்றி ஐ.நா. பேரவைக்குப் பரிந்துரை தரும் மாநாடாகவும் இம்மாநாடு அமைந்தது. எல்லாவற்றுக்கும் மேலாகத் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டங்களைச் சர்வதேசச் சட்ட வரையறையினுள் அடக்கவேண்டியதன் தேவையே இம்மாநாட்டைக் கூட்டுவதற்கான உந்து சக்தியாக இருந்தது.

அரசுகளின் பிரதிநிதிகள், அரசு சார்பற்றப் பிரதிநிதிகள் என்ற வகையில் 6,000 பேர்களுக்கும் அதிகமானோர் இம்மாநாடுகளில் பங்கேற்றனர். சர்வதேசக் கல்வி நிறுவனத்தின் சார்பில் இம்மாநாட்டில் கலந்துகொண்டு அறிக்கை வாசித்த அன்றன் பொன்ராசா "சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை இனவாதப் போராட்டமாக இலங்கை அரசின் அறிக்கை சித்திரித்திருந்தது. இனவாத அரசுக்கு எதிராக ஒரு மக்கள் ஆயுதந்தாங்கிய போராட்டத்தை நடத்துவதும், சுய நிர்ணய உரிமையை நிலைநாட்டுவதும் சர்வதேசச் சட்ட வரையறையினுள் அடங்கும்" என வாதிட்டார்.

**உலகச் சமாதான அமைப்பு என்னும் சர்வதேச மனித உரிமை அமைப்பு ஒழுங்கு செய்த அறிக்கையில் 120 மனித உரிமை அமைப்புகள் கையெழுத்திட்டு உலக மனித உரிமைகள் மாநாட்டுத் தலைவரிடம் அளிக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சி மிக மிக முக்கியமானதாகும்.**

இலங்கை அரசு தமிழர் பிரச்சினைக்கு இராணுவ ரீதியாகத் தீர்வு காண முயல்வதை இந்தக் கூட்டறிக்கை கண்டித்தது. இலங்கைத் தீர்வானது இருவேறு நாடுகளாகப் பிரியவேண்டிய கட்டத்தை நெருங்கிவிட்டதையும் இக்கூட்டறிக்கை சுட்டிக்காட்டியது. தமிழ் மக்கள் மீது கடல், தரை, வான் ஆகிய மூவகையிலும் தொடுக்கப்பட்டுள்ள தாக்குதல்களை இந்த அறிக்கை கண்டித்ததோடு பொருளாதாரத் தடையை உடனடியாக நீக்கவேண்டும் எனவும் வற்புறுத்தியது. போர் நிறுத்தம் செய்து உடனடியாகப் பேச்சுவார்த்தைகள் நடைபெறவேண்டும் எனவும், தமிழ்மக்களின் பிரச்சினைகளை மனித உரிமைகளின் அடிப்படையிலும் சுய நிர்ணய உரிமை அடிப்படையிலும் தீர்க்க வேண்டும் எனவும் வலியுறுத்தியது.

120 அமைப்புகள் கையெழுத்திட்டுத் தமிழீழப் பிரச்சினைக்கு ஆதரவு தெரிவித்த நிகழ்ச்சி சர்வதேச அரங்கில் தமிழீழப் போராட்டத்திற்குக் கிடைத்த மிகப்பெரிய அங்கீகாரமாகும்.

இம்மாநாட்டில் கலந்துகொண்ட விடுதலைப் புலிகளின் சர்வதேசப் பிரதிநிதி **லாரன்ஸ் திலகர்** "தமிழ்த் தேசியம் நிலைபெற்றுவிட்டது. அது முன்னோக்கித்தான் செல்லும். யாராலும் அதைப் பின்னோக்கி நகர்த்த முடியாது" என முழங்கினார். பல்வேறு நாடுகளில் இருந்தும் வந்திருந்த பிரதிநிதிகளின் ஆதரவை அவர் திரட்டினார்.

இம்மாநாட்டினையொட்டித் தமிழீழப் போராட்டம் பற்றியும் சிங்களப் பேரினவாத அரசு நடத்திவரும் மனிதாபிமானமற்ற செயல்களைக் குறித்தும் படங்களையும் ஓவியங்களையும் கொண்ட கண்காட்சி ஒன்று நடத்தப்பட்டது. மனித உரிமைகளுக்கான தமிழர் மையம் என்ற அமைப்பு நடத்திய இக்கண்காட்சியை மாநாட்டுப் பிரதிநிதிகள் போட்டிபோட்டுக்கொண்டு பார்த்தனர். இலங்கை அமைச்சரான ஜோன் அமரதுங்கா

அவர்களையே இக்கண்காட்சி கவர்ந்து இழுத்தது. இக்கண்காட்சியைப் பல நாட்டுத் தொலைக்காட்சிகளும் ஒளிபரப்பின.

உலக மனித உரிமை மாநாடு மொத்தத்தில் தமிழீழப் பிரச்சினையை உலகத்தினின் பார்வைக்குக் கொண்டுவர உதவியிருக்கிறது.

## ஐ.நா. துணைக் குழுவின் ஆதரவு

வேறுபாடுகள் தடுப்பு மற்றும் சிறுபான்மையினர் பாதுகாப்பு பற்றிய ஐ.நா.வின் துணைக்குழுவின் 44ஆவதுகூட்டம் ஜெனீவாவில் 1992ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் நடைபெற்றபொழுது 20க்கு மேற்பட்ட அரசு அல்லாத அமைப்புகள் ஒன்றுகூடிக் கூட்டறிக்கையினை அளித்தன.

இலங்கையின் வடக்கு-கிழக்கு பகுதியில் நடைபெறும் போராட்டம் தமிழ் மக்களின் தேசியப் போராட்டமாகும் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

இந்தக் கூட்டறிக்கையில் அனைத்துலக நீதிவான்கள் ஆணையம், அமெரிக்க நீதிவான்கள் அமைப்பு, அராபிய வழக்கறிஞர்கள் சங்கம், அராபிய மனித உரிமை அமைப்பு ஆகியவை கையெழுத்திட்டுள்ளன.

ஷேக் முஜிபுர் ரஹ்மானின் போராட்டங்களின் விளைவாகக் கிழக்கு வங்கத்தில் சுதந்திர அரசு நியமிக்கப்பட்டது. பாகிஸ்தான் இராணுவ ஆட்சியின் சட்டப்படி இது குற்றமாக இருக்கலாம். படைபலம் கொண்டு அதை ஒடுக்க இராணுவ ஆட்சி செய்த முயற்சி சட்டப்படி சரியாக இருக்கலாம். ஆனால் இராணுவ அதிகாரிகள் தலையிடாமல் இருப்பார்களேயானால் கிழக்கு வங்கத்திலுள்ள நீதி-நிர்வாகத் துறையின் அதிகாரிகளும் பாகிஸ்தான் இராணுவத்திலுள்ள வங்கப் பிரிவினரும், அவாமி லீக்கின் அதிகாரத்தையும் உத்தரவுகளையும் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருந்தனர். தேர்தலில் அவாமி லீக் பெற்ற வெற்றி , ஆட்சி புரிவதற்குரிய சட்டபூர்வமான உரிமையை அதற்கு அளித்தது. கிழக்கு வங்கத்தின் தலைமை நீதிபதியான **முகமது முனீர்** இதை ஏற்றுக்கொண்டார்.

அதைப்போலவே ஆஸ்திரேலியா நாட்டின் அனைத்துலக நடுவர்கள் குழுமத்தின் சார்பில் அந்நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினரான **டிம்மூரே** என்பவர் இலங்கை சென்று நிலைமைகளை ஆராய்ந்து ஓர் அறிக்கை அளித்தார். அந்த அறிக்கையும் பல உண்மைகளை அம்பலப்படுத்தியது. 1981ஆம் ஆண்டு முதல் 83ஆம் ஆண்டுவரை நடைபெற்ற கொடுமைகளை இந்த அறிக்கை விவரிக்கிறது.

இவற்றைத் தொடர்ந்து அனைத்துலக நடுவர்கள் குழுமத்தின் சார்பில் மற்றொரு விரிவான விசாரணை அறிக்கை இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தனாவுக்கு அனுப்பிவைக்கப்பட்டது. 1984ஆம் ஆண்டு ஜூன் 1ஆம் தேதி அனுப்பிவைக்கப்பட்ட இந்த அறிக்கையில் இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படுவது பற்றியும் 1983 ஜூலை முதல் 1984 ஏப்ரல் வரை சிங்கள இராணுவம் எவ்வித நீதி விசாரணையும் இன்றி நடத்திய படுகொலைகள் பற்றியும் விரிவாக எடுத்துச்சொல்லப்பட்டது. இந்த அறிக்கை உலகெங்கும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர்களால் அமைக்கப்பட்ட **பாராளுமன்ற மனித உரிமைக்குழு** ஒரு விசாரணை அறிக்கையை 1985ஆம் ஆண்டு பிப்ரவரியில் அளித்தது.

பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர்களான **ராபர்ட் கில்ராய்-சில்க் ரோஜர்சிம்ஸ்** ஆகிய இருவரும் 1985ஆம் ஆண்டு பிப்ரவரியில் இருவாரங்கள் இலங்கையில் சுற்றுப்பயணம் செய்தனர். ஜனாதிபதி ஜெயவர்த்தனா, மற்றும் பல அமைச்சர்கள், சிங்கள, தமிழர் தலைவர்கள், கிறிஸ்துவப் பாதிரியார்கள் உட்பட பலரைச் சந்தித்தனர். வெளிக்கடைச்சிறை மற்றும் அகதிகள் முகாம்கள் ஆகியவற்றைப் பார்வையிட்டனர். தமிழர்களின் உரிமைகள் பறிக்கப்படுவதையும் கொடுமைகள் இழைக்கப்படுவதையும் தமது அறிக்கையில் அவர்களும் விரிவாகச் சுட்டிக்காட்டினார்கள்.

## நூரம்பர்க் கோட்பாடுகள்

மனித இனத்திற்கு எதிராக இழைக்கப்படும் குற்றங்களைப் பற்றிய கோட்பாடுகள் அனைத்துலகச் சட்டத்தில் முக்கியத்துவம் வாய்ந்தவையாக இன்னும் திகழ்கின்றன.

இறையாண்மையுள்ள ஓர் அரசாங்கம் தன்னுடைய சொந்தநாட்டு மக்களைச் சர்வதேசச் சட்டங்களுக்கு விரோதமான முறையில் கொடுமைப்படுத்தியதற்காக **நூரம்பர்க்** அனைத்துலக இராணுவ நீதிமன்றம் நடத்திய விசாரணை உலகப் புகழ்பெற்றதாகும். ஜெர்மானிய நாஜிக் கட்சித் தலைவர்கள் அனைத்துலக நீதிமன்றத்தினால் விசாரிக்கப்பட்டுத் தண்டிக்கப்பட்டது உலகச் சரித்திரத்தில் இதற்குமுன் இல்லாத நிகழ்ச்சியாகும். 1950ஆம் ஆண்டில் ஐ.நா. பேரவையின் வேண்டுகோளின்பேரில் அனைத்துலகச் சட்டக்குழு வகுத்த **நூரம்பர்க்** கோட்பாடுகளை அனைத்துலகச் சட்டங்களின் பகுதியாக ஐ.நா.பேரவை ஏற்றுக்கொண்டது.

**ஒரு நாட்டின் ஆட்சி தன்னுடைய சொந்த மக்களை மனிதத் தன்மையற்ற விதத்திலும் அதிர்ச்சி தரத்தக்க வகையிலும் கொடுமைப்படுத்துமானால் அந்நாட்டின் விவகாரத்தில் தலையிடும் உரிமை எல்லா நாடுகளுக்கும் உண்டு என்பது இக்கோட்பாடுகளில் முக்கியமானவொன்றாகும்.**

யாஃயாகானின் இராணுவ ஆட்சி தனது நாட்டு மக்களைக் கிழக்கு வங்க மக்களைக் கொடூரமான முறையில் கொன்றுகுவித்தபோது **நூரம்பர்க்** கோட்பாடுகளின் அடிப்படையில் இந்தியா தலையிட்டு அம்மக்களை அழிவிலிருந்து காப்பாற்றியது.

ஆனால் இலங்கையில் ஜெயவர்த்தனாவின் சிங்கள இராணுவம் அந்நாட்டு மக்களான தமிழர்களைக் கொன்று குவிக்கும்பொழுது இந்தியா வேடிக்கை பார்ப்பது எந்தவகையில் நியாயமானது? நூரம்பர்க் கோட்பாடுகளுக்கு முற்றிலும் விரோதமானது இல்லையா? உலகம் நம்மைப் பழிக்காதா? வங்க மக்களுக்கொரு நீதி. இலங்கைத் தமிழர்களுக்கொரு நீதியா? இந்தியாவின் அண்டை நாடான வங்கத்தில் நடைபெற்ற இனப்படுகொலையை இந்தியா தடுத்து நிறுத்தியது. ஆனால் மற்றோர் அண்டை நாடான இலங்கையில் நடைபெறும் இனப்படுகொலையைத் தடுத்துநிறுத்த இந்தியா இன்னமும் தயங்குவது ஏன்?

# இனப்படுகொலை மாநாடு

1948-இல் நடைபெற்ற அனைத்துலக இனப்படுகொலை மாநாட்டில் கீழ்க்கண்ட விதிமுறைகள் வகுக்கப்பட்டன.

**1ஆம் பிரிவு:** போர்க்களத்திலோ, அமைதிக் காலத்திலோ இனப்படுகொலை செய்வது சர்வதேசச் சட்டப்படி குற்றமாகும்.

**2ஆம் பிரிவு:** ஒரு தேசிய இனம், ஒரு மொழி இனம் அல்லது மதப்பிரிவினர் ஆகியோரை முழுவதுமாக அழித்துவிடும் நோக்கத்துடன் கீழ்க்கண்ட காரியங்களைச் செய்வது இனப்படுகொலையாகும்.

(அ) இந்தப் பிரிவுகளைச் சேர்ந்தவர்களைப் படுகொலை செய்வது.
ஆ) உடல் ரீதியாகவோ, மனரீதியாகவே இவர்களுக்குத் தீங்கு விளைவிப்பது.
(இ) ஒரு தேசிய அல்லது மொழி அல்லது இன அல்லது மதத்தைச் சேர்ந்தவர்களை முழுவதுமாகவோ பகுதியாகவோ அழிப்பதற்காக அவர்கள் மீது திட்டமிட்டு ஒடுக்குமுறைகளை ஏவி விடுதல்.

**3ஆம் பிரிவு:** கீழ்க்கண்டவை தண்டனைக்குரிய குற்றங்களாகும்.

அ) இனப்படுகொலை
ஆ) இனப்படுகொலை செய்வதற்குச் சதி செய்தல்
இ) இனப்படுகொலை செய்ய நேரடியாகவும் பகிரங்கமாகவும் தூண்டுதல்.
ஈ) இனப்படுகொலை நடத்தத் தூண்டுதல்

**4ஆம் பிரிவு:**

இனப்படுகொலையையோ அல்லது மூன்றாம் பிரிவில் சொல்லப்பட்ட கொடுமைகளையோ செய்பவர்கள் யாராயிருந்தாலும் சட்டப்படியான ஆட்சியாளரானாலும் அதிகாரிகளானாலும் தனி நபர்களானாலும் அவர்கள் தண்டிக்கப்படவேண்டியவர்களே.

இம்மாநாட்டின் கோட்பாடுகளை இந்தியாவும் ஏற்றுக் கொண்டுள்ளது. கிழக்கு வங்கத்தில் பாகிஸ்தான் இராணுவம் இனப்படுகொலை நடத்தியபொழுது இந்த விதிகளைச் சுட்டிக்காட்டித்தான் இந்தியா குற்றம் சாட்டியது. வங்க தேசிய இனத்தை முற்றிலுமாக அழிக்கச் சதிசெய்த யாஃயாகானும் அவரது கூட்டாளிகளும் தண்டிக்கப்படவேண்டியவர்களே என இந்தியா வாதாடியது.

கிழக்கு வங்கத்தில் பாகிஸ்தான் இராணுவம் நடத்திய திட்டமிட்ட இனப்படுகொலைகளுக்கு இலங்கையில் சிங்கள இராணுவம் நடத்திவரும் தமிழினப் படுகொலைகள் எந்தவிதத்திலும் குறைந்தவையில்லை. இரண்டும் ஒன்றுதான். அனைத்துலக இனப்படுகொலை மாநாட்டு விதிமுறைகளின்படி சிங்கள அதிபரும் அவரது கூட்டாளிகளும் தண்டிக்கப்படவேண்டியவர்களே. ஆனால் வங்க மக்களைக் காப்பதில் தீவிரம் காட்டிய இந்தியா, இலங்கைத் தமிழர்களைக் காக்கத் தயங்குவது ஏன்?

**பழ. நெடுமாறன்**

# சர்வதேசச் சட்டங்கள்

*1949*ஆம் ஆண்டு ஜெனிவாவில் நடைபெற்ற **மனித உரிமைகள் பாதுகாப்பு மாநாடு** வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகும். சர்வதேசத் தன்மை அல்லாத போராட்டங்களில் எவை எவை குற்றமாகக் கருதப்படும் என்பதற்கான விதிமுறைகளை இம்மாநாடு வகுத்தது.

இந்த விதிமுறைகளில் 3ஆவது பிரிவு மிக முக்கியமானது. மனித உரிமைகளைப் பாதுகாப்பது பற்றிய இந்த விதிமுறைகளில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. "சர்வதேசத் தன்மை வாய்ந்த போராட்டம் அல்லாத போராட்டத்தில் சம்பந்தப்பட்டவர்கள் கீழ்க்காணும் விதிமுறைகளைக் கடைப்பிடிக்கவேண்டும். போரில் நேரடியாகச் சம்பந்தமில்லாதவர்கள், சிறைவைக்கப்பட்டவர்கள் ஆகியோர் எல்லாச் சூழ்நிலைகளிலும் மனிதத் தன்மையோடு நடத்தப்படவேண்டும். படுகொலை செய்வது, படுகாயப்படுத்துவது, சித்திரவதை செய்வது, மிகமோசமாக நடத்துவது, அவமானப் படுத்துவது ஆகியவை அறவே தவிர்க்கப்படவேண்டும். முறையாக அமைக்கப்பட்ட நீதிமன்றம் தீர்ப்பு வழங்காமல் யாரையும் தூக்கில் இடுவதோ சிறையில் அடைப்பதோ கூடாது."

**மனித உரிமைகள் பாதுகாப்பு மாநாட்டு விதிமுறைகளைச் சுட்டிக்காட்டி யாஃயாகான் ஆட்சியைக் குற்றம் சாட்டிய இந்தியா இன்று இலங்கைத் தமிழர் விஷயத்தில் அந்த விதிமுறைகளை மறந்தது ஏன்?**

போரில் நேரடியாகச் சம்பந்தமில்லாதவர்களையும், சிறையில் உள்ளவர்களையும் படுகொலை செய்வதும், சித்திரவதை செய்வதும் குற்றம் என மனித உரிமைப் பாதுகாப்பு மாநாட்டு விதிமுறைகள் கூறுகின்றன. ஈழநாட்டு மக்கள் மீது விமானங்களிலிருந்தும் கடற்படைப் படகுகளிலிருந்தும் குண்டுமாரி பொழிந்து அழிக்கிறது சிங்கள இராணுவம்.

**தங்கத்துரை, குட்டிமணி, ஜெகன்** போன்ற ஈழப் போராளிகள் சிறையில் கொடூரமான முறையில் கொலை செய்யப்பட்டனர்.

மேலேகண்ட மனித உரிமைகள் பாதுகாப்பு விதிமுறைகளின்படி இதற்குக் காரணமானவர்களைத் தண்டிக்க வேண்டும் எனக் கேட்க வேண்டிய இந்தியா இந்தக் கொலைகாரர்களுடன் சமரசம் செய்துகொள்ளும்படித் தமிழர்களுக்கு அறிவுரை வழங்குகிறது

# மனித உரிமை பற்றிய உலகப் பிரகடனம்

*1956*ஆம் ஆண்டில் ஐ.நா. பேரவையில் மனித உரிமைகள் பற்றிய பிரகடனம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

இனம், நிறம், மதம், ஆண், பெண் வேறுபாடு இல்லாமல் உலகிலுள்ள சகல மக்களுக்கும் சட்டபூர்வமான சம உரிமைகளை இந்தப் பிரகடனம் அங்கீகரித்துள்ளது. ஒவ்வொரு மனிதனுக்கும் வாழும் உரிமை, சுதந்திரம், பாதுகாப்பு, பட்சபாதமற்ற நீதி அமைப்பினால் விசாரிக்கப்படும் உரிமை, ஆட்சியில் பங்குபெறும் உரிமை ஆகியவற்றை இப்பிரகடனம் அங்கீகரித்துள்ளது.

எதேச்சதிகாரமாகக் கைது செய்யப்படுவதிலிருந்து சுதந்திரம், மதச்சுதந்திரம், கருத்துச் சுதந்திரம், கூடுவதற்கும் அமைப்புகள் நிறுவுவதற்கும் சுதந்திரம் ஆகியவற்றை இப்பிரகடனம் உறுதி செய்கிறது.

இந்தப் பிரகடனத்தில் பல பிரிவுகளைப் பாகிஸ்தான் ஆட்சி மீறியது.

**பிரிவு:2** பட்சபாதமில்லாமல் சுதந்திரத்தையும் உரிமைகளையும் அனுபவித்தல்.

**பிரிவு:3** வாழும் உரிமை, சுதந்திரம், மனிதப் பாதுகாப்பு

**பிரிவு:5** சித்திரவதைகளுக்கு எதிரான தடை.

**பிரிவு:7** சட்டப்படி அனைவருக்குமுள்ள சமப் பாதுகாப்பு

**பிரிவு:9** எதேச்சாதிகாரமாகக் கைதுசெய்தல், சிறை இடுதல், நாடுகடத்தல் ஆகியவற்றிலிருந்து சுதந்திரம்.

**பிரிவு:17** சொத்து வைத்திருக்கும் உரிமை.

**பிரிவு:19** கருத்துச் சுதந்திரம்

மேற்கண்ட விதிமுறைகள் அத்தனையையும் பாகிஸ்தான் இராணுவம் மீறியது.

மேலும் போர்க்காலத்திலேயோ, அவசரக்காலத்திலேயோகூடக் கீழ்க்கண்ட விதிமுறைகளை மீறக்கூடாதென்று ஐ.நா. பிரகடனம் வலியுறுத்தியுள்ளது.

**பிரிவு:6** தன்னிச்சையாக யாருடைய உயிரையும் பறிக்கக்கூடாது.

**பிரிவு:7** யாரையும் சித்திரவதை செய்யவோ, கொடுமை செய்யவோ மனிதத் தன்மையற்ற விதத்தில் நடத்தவோ கண்டிக்கவோ கூடாது.

**பிரிவு:16** சட்டத்தின் முன் அனைவரும் சமமே என்பதற்கான அங்கீகாரம்.

**பிரிவு:18** ஒவ்வொருவருக்கும் கருத்துச் சுதந்திரமும் மதச் சுதந்திரமும் உண்டு.

மேற்கண்ட அத்தனை விதிமுறைகளையும் பாகிஸ்தான் இராணுவம் மீறிக் கண்டபடி வங்க மக்களைக் கொன்று குவித்தது. இந்த விதிமுறைகளைச் சுட்டிக்காட்டிப் பாகிஸ்தானைக் கண்டித்த இந்தியா அதே விதிமுறைகளின்படி குற்றம் செய்கிற இலங்கையைக் கண்டிக்க மறுப்பது ஏன்? வங்கமக்கள் சிந்தியதுதான் இரத்தம். தமிழர்கள் சிந்துவது இரத்தமல்ல என நினைக்கிறதா?

## இனப்பாகுபாட்டை ஒழிப்பதற்கான சர்வதேச மாநாடு

1966ஆம் ஆண்டு ஜனவரி 20ஆம் தேதி ஐ.நா. பேரவையின் சார்பில் நடத்தப்பட்ட இன வேறுபாடுகளுக்கு எதிரான சர்வதேச மாநாட்டில் முக்கியமான விதிமுறைகள் வகுக்கப்பட்டன.

**பிரிவு1:** இனம், நிறம், மொழி அடிப்படையில் காட்டப்படும் எத்தகைய வேறுபாடும் ஒதுக்கிவைப்பதும், கட்டுப்படுத்துவதும், இனப்பாகுபாடாகும். அடிப்படையான மனித உரிமையையும் சுதந்திரத்தையும் மேலேகண்ட பிரிவினைச் சார்ந்தவர்களுக்கு அரசியல், பொருளாதார, சமுதாய, பண்பாட்டு அடிப்படையில் மறுப்பது இனப்பாகுபாட்டின் அம்சமேயாகும்.

கிழக்கு வங்கமக்கள் இனப்பாகுபாட்டின் அடிப்படையில் கொடுமைப்படுத்தப்பட்டபொழுது அதை இந்தியா வன்மையாகக் கண்டித்தது.

ஆனால் இலங்கையில் இனப்பாகுபாட்டின் அடிப்படையில் தமிழர்களுக்கு அரசியல், பொருளாதார, சமுதாய, பண்பாட்டு உரிமைகள் மறுக்கப்படுவதையும் அவர்கள் தொடர்ந்து கொடுமைக்குள்ளாகி வருவதையும் கண்டிக்க இந்தியா தயங்குகிறது. வங்கப் பிரச்சினையில் மேற்கொண்ட சர்வதேச நடைமுறைகளை இலங்கைத் தமிழர்கள் பிரச்சினையில் மேற்கொள்ள இந்தியா தயங்குகிறது; தடுமாறுகிறது.

இந்தியா இவ்வாறு தயங்கியபொழுதிலும் அர்ஜெண்டினா போன்ற நாடுகள் சும்மா இருக்கவில்லை. இலங்கையில் தமிழர்கள் இனப்படுகொலை செய்யப்படுவதைப் பார்த்து மனம் பொறுக்காமல் அந்நாடுகள் கொதித்தெழுந்தன. அதன் பின்னர் இந்தியாவும் இந்நாடுகளுடன் சேர்ந்துகொண்டது.

1987ஆம் ஆண்டு மார்ச் மாதம் 13ஆம் தேதி மனித உரிமைக்கான ஐ.நா. கமிஷன் கூட்டம் நடந்தது. இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படுவதை ஒரு தீர்மானத்தின் மூலம் இக்கமிஷன் கண்டித்தது. 43 நாடுகள் ஏகமனதாக இத்தீர்மானத்தை நிறைவேற்றின. **அர்ஜெண்டினா, கனடா, நார்வே, செனிகல்** ஆகிய நாடுகள் இத்தீர்மானத்தைக் கூட்டாகக் கொண்டுவந்தன. உலக நாடுகளுக்கு முன் இலங்கையை இத்தீர்மானம் குற்றவாளியாக்கிக் காட்டிவிட்டது. மேலும் இத்தீர்மானத்தில் அனைத்து உலக செஞ்சிலுவைச் சங்கத்துடன் ஒத்துழைக்குமாறு இலங்கை அரசு வற்புறுத்தப்பட்டது முக்கியமானதாகும்.

இத்தீர்மானத்தைப் பற்றி இலங்கை அதிபர் ஜெயவர்த்தனா கருத்துத் தெரிவிக்கையில் பின்வருமாறு கூறினார். இலங்கையில் பிரச்சினைகளைப் பற்றிப் பேசுவதற்கு முன்னால் இந்தியாவும் அர்ஜெண்டினாவும் அவற்றின் சொந்தப் பிரச்சினைகள் குறித்துப் பேசட்டும் என்று அவர் கூறினார். **மருத்துவனே முதலில் உன்னைக் குணப்படுத்திக்கொள்** என்ற பைபிள் வாக்கியத்தை ஜெயவர்த்தனா மேற்கோள் காட்டி இந்தியாவையும் அர்ஜெண்டினாவையும் கடுமையாகச் சாடினார்.

# 12. இதழ்களின் இரட்டை அணுகுமுறை

வங்க விடுதலைப் போராட்டம் நடந்தபோது இந்திய பத்திரிக்கைகளும் தமிழ்நாட்டுப் பத்திரிகைகளும் அதற்கு ஆதரவான செய்திகளை பக்கம் பக்கமாக வெளியிட்டன.

வங்க தேசத்தில் பாகிஸ்தான் நடத்திய மிகக் கொடூரமான அட்டூழியங்களைப் பற்றிய செய்திகளை விரிவாக வெளியிட்டு இந்திய மக்களிடம் அனுதாப அலைகளை உருவாக்கியதில் இந்தியப் பத்திரிகைகளுக்குப் பெரும் பங்கு உண்டு.

வங்க மக்களைக் காப்பதற்கு இந்திய இராணுவத்தை உடனடியாக அனுப்ப வேண்டும் என இந்திய அரசியல் கட்சிகளும் மக்களும் கொதித்து எழுந்தபொழுது பிரதமர் இந்திரா வற்புறுத்தியதற்கு இந்தப் பத்திரிகைகளே காரணமாகும். இதைப் பயன்படுத்திக்கொண்டு பிரதமர் இந்திரா உடனடியாக இராணுவ நடவடிக்கை எடுப்பதற்கான நல்ல சூழ்நிலையையும் இந்தப் பத்திரிகைகளே ஏற்படுத்திக் கொடுத்தன என்பது முக்கியமானதாகும்.

பாகிஸ்தானிலிருந்துக் கிழக்கு வங்கம் விடுதலை பெறுவதற்கு உதவிய இந்தியப் பத்திரிகைகள் இலங்கைத் தமிழர் பிரச்சினையில் வேறுவித அணுகுமுறையைக் கையாளுகின்றன. பாகிஸ்தானிலிருந்துக் கிழக்கு வங்கம் பிரிந்துத் தனிநாடாவதற்கு உதவினால் இந்தியாவில் இருக்கும் மேற்குவங்கம் எதிர்காலத்தில் பிரிந்துபோகக் கூடும் என்ற ஐயமோ அச்சமோ இந்தியப் பத்திரிகைகளுக்கு ஒருபோதும் ஏற்படவில்லை. ஆனால் இலங்கையிலிருந்துத் தமிழீழம் பிரிவதற்கு ஆதரவு அளித்தால் எதிர்காலத்தில் இந்தியாவிலிருந்துத் தமிழ்நாடும் பிரிந்து போகக் கூடும் என இப்பத்திரிகைகளில் பெரும்பாலானவை அஞ்சுகின்றன. இதன் காரணமாகவே ஈழத் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை இந்தியப் பத்திரிகைகள், குறிப்பாக தமிழ்நாட்டுப் பத்திரிகைள் ஆதரிக்க மறுக்கின்றன.

ஈழத் தமிழர் பிரச்சினையில் தமிழ்நாட்டுப் பத்திரிகைகள் இருட்டடிப்பு செய்து வருவது மட்டுமில்லாமல் விஷமத்தனமான செய்திகளையும் தொடர்ந்து வெளியிட்டு வருகின்றன. 1948–ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து ஈழத் தமிழர்களும் பல்வேறு கொடுமைகளுக்கு ஆளானபொழுது அவர்களைப் பற்றிய செய்திகளை இந்தப் பத்திரிகைகள் கண்டு கொள்ளவே இல்லை.

## இந்திய வம்சாவழித் தமிழர்கள்

1948ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரம் பெற்றபிறகு அந்த ஆண்டும் அதற்கு அடுத்த ஆண்டும் கொண்டுவந்த குடியுரிமை சட்டங்களின் விளைவாக இந்திய வம்சாவழித் தமிழர்கள் நாடற்றவர்களாக்கப்பட்டனர். குடியுரிமை, வாக்குரிமைகளை இழந்தனர். 200 ஆண்டு காலத்திற்கு மேல் வாழ்ந்து அந்நாட்டில் இரப்பர், தேயிலைத் தோட்டங்களைத் தமது கடும் உழைப்பால் உருவாக்கிய தமிழர்களின் பரம்பரையினரே இத்தகைய அநீதிக்கு ஆனானார்கள். 1964ஆம் ஆண்டு இந்தியப் பிரதமர் சாஸ்திரியும் இலங்கைப் பிரதமர் சிரீமாவோவும் செய்துகொண்ட உடன்பாட்டிற்கிணங்க 5 இலட்சத்திற்கு மேற்பட்ட தமிழர்கள் இந்தியாவிற்குத் திரும்ப

அனுப்பப்பட்டனர். 1971ஆம் ஆண்டில் கச்சத்தீவை இந்திய அரசு இலங்கைக்குத் தாரை வார்த்தது.

மேற்கண்டவாறு இந்திய வம்சாவழித் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளைப் பற்றிக்கூட இந்தப் பத்திரிகைகள் கண்டனம் செய்யவில்லை. மனித நேயமற்ற முறையில் இலங்கை அரசு நடந்துகொண்டதையும் இந்திய அரசு அதற்கு இணங்கிச் செல்வதையும் இப்பத்திரிகைகள் கண்டிக்கவில்லை.

ஈழத் தமிழர்கள் பிரச்சினையில் மட்டுமல்ல தமிழ்நாட்டிலிருந்து இலங்கைக்குத் தோட்டத் தொழிலாளிகளாக அழைத்துச் செல்லப்பட்டு அவர்களின் உழைப்பினால் வளம் பெற்றபிறகு விரட்டியடித்த சிங்கள அரசைக் கண்டிக்கக்கூட இந்தப் பத்திரிகைகள் முன்வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

1983ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் பெரும் கலவரம் மூண்டெழுந்து ஆயிரக்கணக்கான தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டபொழுது உலகப் பத்திரிகைகள் இந்தச் செய்திகளைப் பரபரப்புடன் பிரசுரித்தன. அதற்குப் பின்னால் தமிழ்நாட்டுப் பத்திரிகைகளும் விழித்தெழுந்தன. இச்செய்திகளை வெளியிடத் தொடங்கின. அதுகூட தமிழ்நாட்டு மக்கள் மத்தியிலே காணப்பட்ட கொதிப்புணர்வின் விளைவினாலேயாகும். இலங்கைத் தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதைக் கண்டித்துத் தமிழகமெங்கும் மக்கள் பெரும் போராட்டங்களை நடத்தினார்கள். மக்கள் மத்தியில் காணப்பட்ட இந்த எழுச்சி தமிழ்நாட்டுப் பத்திரிகைகளை ஓரளவுக்குச் சிந்திக்க வைத்தன. இலங்கைத் தமிழர் செய்திகளை வெளியிட்டால்தான் தங்கள் பத்திரிகைகளும் விற்பனை ஆகும் என்பதால் வியாபார நோக்கத்துடன் இச்செய்திகளை வெளியிட முன் வந்தன. இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாகச் செய்திகளை வெளியிடவேண்டும் என்ற நோக்கம் அவர்களுக்கு ஒருபொழுதும் இருந்ததில்லை. ஈழத் தமிழர் விடுதலைப் போராட்டத்தின் விளைவாகத் தமிழ்நாட்டு மக்கள் மத்தியில் அனுதாப உணர்வு வளர்வதைக் கண்டு இந்தப் பத்திரிகைகள் பதற்றம் அடைந்தன.

1987–ஆம் ஆண்டுக்குப் பிறகு, அதிலும் ராஜீவ்–ஜெயவர்த்தனா உடன்பாடு கையெழுத்தான பிறகு இப்பத்திரிகைகளின் போக்கு அடியோடு மாறத் தொடங்கியது. ராஜீவ்–ஜெயவர்த்தனா உடன்பாட்டை இந்தப் பத்திரிகைகள் விழுந்து விழுந்து ஆதரித்தன. அதை ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்ட புலிகளைக் கடுமையாகச் சாடின. இதற்கு என்ன காரணம்? தமிழீழம் உருவானால் எதிர்காலத்தில் தமிழகமும் பாதிக்கப்படும் என இவர்கள் அஞ்சுகிறார்கள். எனவேதான் தமிழீழப் போராட்டத்திற்கு எதிரான செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து வெளியிடத் தொடங்கினார்கள். தவறான செய்திகளை, பொய்யான செய்திகளைத் தொடர்ந்து வெளியிட்டார்கள். இந்த விஷமப் பிரச்சாரத்திற்குத் துணைபுரியும் வகையில் இந்திய அரசின் வெளிநாட்டுத் துறையில் அதிகாரியாக இருந்த பார்த்தசாரதி என்பவர் சென்னையிலேயே முகாமிட்டுப் பொய்யான செய்திகளை உருவாக்கித் தருவதில் முக்கிய பங்கு வகித்தார். இந்திய அரசு உளவு நிறுவனமான "ரா", விடுதலைப் புலிகள் பற்றிய தவறான தகவல்களைத் தருவதையே தனது வேலையாகக் கொண்டிருந்தது. இந்தத் தவறான செய்திகளை மறுத்து யாராவது அறிக்கைகள் கொடுத்தால் அவற்றை பத்திரிகைகள் முழுமையாக இருட்டடிப்புச் செய்தன.

பி.பி.சி. செய்தியாளர் மற்றும் ஐரோப்பிய நாடுகளின் செய்தியாளர்கள் யாழ்ப்பாணம் சென்று உண்மை நிலைமைகளை நேரில் அறிந்து செய்திகளை வெளியிடுகிறார்கள். தமிழ்நாட்டில் இருந்து தினமணியின் சார்பில் கார்மேகம், இந்தியா டுடே தமிழ்ப்பதிப்பின் சார்பில் வாசந்தி, சுபமங்களா பத்திரிகை ஆசிரியர் கோமல் சுவாமிநாதன் ஆகியோர் யாழ்ப்பாணம் சென்று வந்தார்கள். கார்மேகம் தினமணியில் எழுதிய கட்டுரைத் தொடர் திடீர் என்று மழுப்பி முடிக்கப்பட்டது. அப்பொழுது அதன் ஆசிரியராக இருந்த மாலன் குறுக்கிட்டு, கார்மேகம் நேரில் கண்டு அறிந்த உண்மைகளை வெளியிட அனுமதிக்கவில்லை. இந்தியா டுடே வாசந்தியின் கட்டுரையும் மென்று முழுங்கி எழுதப்பட்டது. தான் கண்ட உண்மைகளை வெளியிட வாசந்திக்கு மனமில்லை. சுபமங்களா கோமல் சுவாமிநாதன் ஓரளவு உண்மையை எழுதினார். ஆனால் அவரும் கட்டுப்படுத்தப்பட்டார் என்பது புரிந்தது. ஏன் அவர்கள் இவ்வாறு செய்தார்கள்? வியட்நாம் போராட்டம் பற்றியும் பாலஸ்தீன விடுதலைப் போராட்டம் பற்றியும், தென்னாப்பிரிக்க மக்கள் நடத்திய போராட்டம் பற்றியெல்லாம் எழுதி நெக்குருகிக் கண்ணீர் வடிக்கும் இவர்கள் தமிழீழ விடுதலைப் போராட்டம் பற்றி மட்டும் ஏன் கசப்புணர்வுடன் செய்திகளை வெளியிடுகிறார்கள்? தமிழர்கள் நெஞ்சில் எழும் இந்த நியாயமான கேள்விக்கு விடை என்ன?

குறிப்பிட்ட தமிழ்நாட்டுப் பத்திரிகைகள் தங்களுக்கு எதிராக ஏதேனும் அடக்குமுறைகள் ஏவப்பட்டால் பெரும் கூச்சல் போடுகின்றன. ஆனால் தமிழ்நாட்டில் அடைக்கலம் புகுந்த ஈழத் தமிழ் எழுத்தாளர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளைப் பற்றி இந்தப் பத்திரிகையாசிரியர்கள் கண்டுகொள்ளவே இல்லை. உலகம் முழுவதும் உள்ள தமிழர்களால் மதிக்கப்படும் எழுத்தாளர்களான சிவநாயகம், கவிஞர் யோகரத்தினம், குகதாசன் ஆகியோர் தமிழ்நாட்டில் அடைக்கலம் புகுந்து இருந்தார்கள். அவர்கள் மீது பொய்க் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் சிறைப்பிடிக்கப்பட்டார்கள். 70 வயதுக்கு மேற்பட்ட முதியவரான சிவநாயகம், கை, கால்களில் விலங்கிடப்பட்டு ஒவ்வொரு முறையும் நீதிமன்றத்திற்கு இழுத்து வரப்பட்டார். இந்த மூவரும் பின்னர் வழக்குகளில் இருந்து விடுதலை செய்யப்பட்டார்கள். அவர்கள் மீது போடப்பட்ட வழக்குகள் பொய்யானவை என்பது நிரூபிக்கப்பட்டன. அன்றாடம் பத்திரிகை தர்மத்தைப் பற்றி பேசும் தமிழ்நாட்டுப் பத்திரிகைகள் தங்கள் சக பத்திரிகையாளர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளைப் பற்றி வாயையே திறக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாட்டில் கடுகளவுகூட செல்வாக்கு இல்லாத சுப்பிரமணியம் சுவாமிக்கு இந்தப் பத்திரிகைகள் கொடுக்கிற விளம்பரம் அளவுக்கு மீறியது. அவருடைய அபத்தமான உளறல்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தும் இந்தப் பத்திரிகைகள் வெளியிடுகின்றன. தமிழீழப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தும் வகையில் அவர் சொல்லும் பொய்யான செய்திகளைத் தொடர்ந்து பிரசுரிக்கின்றன. அவர் தங்கள் சாதிக்காரர் என்பதும், அவர் அள்ளிவீசும் பணத்திற்காகவும் மட்டுமல்ல; தமிழர்களுக்கு எதிராகப் பேசுகிறார் என்பதுதான் முக்கியமானது. ஆகவே அவருக்கு முக்கியத்துவம்

கொடுக்கிறார்கள்.

அதே வேளையில் முன்னாள் உச்சநீதிமன்ற நீதிபதி வி.ஆர். கிருஷ்ணய்யர், முன்னாள் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஏ.பி. வெங்கடேசுவரன் போன்றோர் மேற்கண்ட சாதியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அவர்களைப் பற்றிய செய்திகளை இப்பத்திரிகைகள் இருட்டடிப்புச் செய்கின்றன. ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக மனிதநேய அடிப்படையில் இவர்கள் குரல் கொடுப்பதை இப்பத்திரிகைகள் சகித்துக் கொள்ள முடிவதில்லை. எனவேதான் இவ்வாறு இருட்டடிப்புச் செய்கிறார்கள்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தைத் தமிழ்நாட்டுப் பத்திரிகைகளில் சில கொச்சைப்படுத்தியதைப் போல வேறு எந்த நாட்டின் விடுதலைப் போராட்டத்தையும் யாரும் கொச்சைப்படுத்தியிருக்க முடியாது. இதே பத்திரிகைகள் நாளை சுதந்திரத் தமிழீழம் மலரும்பொழுது சுதந்திர மலர்களை அச்சிட்டு முகப்பில் பிரபாகரனின் வண்ணப்படத்தை வெளியிட்டு அவற்றையும் விற்றுக் காசாக்கிக் கொள்வார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. தமிழ்நாட்டு மக்களின் மறதியும் உணர்வற்ற தன்மையும் இந்தப் பத்திரிகைகளுக்கு மூலதனமாக விளங்குகின்றன. வேறு ஒரு நாடாக இருந்தால் இந்தப் பத்திரிகைகளை மக்கள் அடியோடு புறக்கணித்து இருப்பார்கள்.

தமிழ்நாட்டில் தமிழில் பத்திரிகை நடத்தித் தமிழர்களிடமே விற்றுத் தமிழர்கள் காசில் வயிறு வளர்க்கும் தமிழ்நாட்டுப் பத்திரிகையாளர்கள் பலர் தமிழுக்கும் தமிழனுக்கும் எதிராக எழுதுவதையே தங்களது கடமையாகவும் வாழ்க்கையின் நோக்கமாகவும் கொண்டிருக்கிறார்கள்.

# 13. வெண்ணையும் — சுண்ணாம்பும்

வங்க விடுதலைப் போராட்டமும் தமிழீழ விடுதலைப் போராட்டமும் பல வகையிலும் ஒரே தன்மை வாய்ந்தவை என்பதை இதுவரை விளக்கியுள்ளேன்.

வங்கதேசம் விடுதலை பெற இந்திய அரசும், இந்திய மக்களும் இந்திய அரசியல் கட்சிகளும் உறுதுணையாக நின்றது வரலாற்றுப் பூர்வமான உண்மையாகும். ஆனால் அதே காலக்கட்டத்தில் தமிழீழ மக்களுக்கு உதவவேண்டிய இந்தியா அந்தக் கடமையில் இருந்து முற்றிலுமாக தவறிவிட்டது மட்டுமின்றி அந்தப் போராட்டத்திற்கு எதிராகவும் செயற்பட்டு வருகிறது.

ஒரு கண்ணில் வெண்ணெயும் இன்னொரு கண்ணில் சுண்ணாம்பும் வைப்பதற்கு ஒப்பானது இது. பஞ்சாபி, பட்டாணி, சிந்தி, வங்காளி ஆகிய தேசிய இனங்களைக் கொண்ட ஒரு நாடாகப் பாகிஸ்தான் உருவானது. மொழிவழியில் மேற்கண்ட நான்கு தேசிய இனங்களும் வெவ்வேறானவை என்றாலும் மத அடிப்படையில் ஒன்றானவர்கள் என்கிற ரீதியில் ஜின்னா பாகிஸ்தானை உருவாக்கினார். மொழி, பண்பாடு, வரலாறு ஆகியவற்றால் இந்த நான்கு தேசிய இனங்களும் வெவ்வேறானவை. மதத்தால் முஸ்லீம்களாக இருந்தாலும் அவர்களை ஒரே தேசிய இனமாக ஆக்கிவிடமுடியாது என்பதை காலப்போக்கில் உணரவேண்டிய கட்டாயம் பாகிஸ்தானுக்கு ஏற்பட்டது.

இலங்கையில் சிங்களர் தமிழர் என இரு தனித்தனி தேசிய இனங்கள் உண்டு. மொழி அடிப்படையில் மட்டுமில்லை. மத அடிப்படையிலும் இவர்கள் வெவ்வேறானவர்கள். சிங்களவர்களுள் பெரும்பாலோர் புத்த மதத்தைச் சேர்ந்தவர்கள். சிறுபான்மையோர் கிறிஸ்துவர்கள். ஆனால் ஒரு சிங்களர்கூட இந்து மதத்தையோ இஸ்லாம் மதத்தையோ சேர்ந்தவர் அல்லர். தமிழீழத்தில் பெரும்பான்மையோர் இந்துக்களாகவும் சிறுபான்மையோர் கிறிஸ்துவர்களாகவும் உள்ளனர். ஆனால் ஒரு தமிழர்கூட புத்த மதத்தைச் சேர்ந்தவர் அல்லர். மதத்தால் வேறுபட்டு இருந்தாலும் தமிழர்கள் அனைவரும் தாங்கள் தனித்த தேசிய இனம் என்பதை உணர்ந்துள்ளனர்.

பாகிஸ்தான் திட்டம் உருவானபொழுது வங்காளம் சேர்க்கப்படவில்லை. வங்காளம் எப்பொழுதும் தனித்தே இருந்தது. அதைப்போல தமிழீழப் பகுதி ஒருபொழுதும் சிங்களரின் அதிகாரத்திற்கு உட்பட்டதாக இருந்ததில்லை. ஐரோப்பாவில் இலங்கையை அடிமைப்படுத்திய காலம் வரை தமிழ் மன்னர்களால் ஆளப்பட்ட தனித்த ஒரு நாடாகத் தமிழீழம் விளங்கிற்று.

மேற்குப் பாகிஸ்தானியரின் உருது மொழி கிழக்கு வங்கத்தின் மீது திணிக்கப்பட்டபொழுது வங்காளிகள் அதை எதிர்த்துப் போராடினர். அதைப் போலவே ஈழத் தமிழர்கள் மீது சிங்களம் திணிக்கப்பட்டபொழுது அவர்களும் அதை எதிர்த்துப் போராடினார்கள்.

மேற்குப் பாகிஸ்தான், அமெரிக்கா உதவியுடன் தொழில்மயமாகவும் நவீனமயமாகவும் ஆக்கப்பட்டது. ஆனால் கிழக்கு வங்கம் விவசாய நாடாகவும் மேற்குப் பாகிஸ்தானின் சந்தையாகவும் திட்டமிட்டு ஆக்கப்பட்டது. இதன்

விளைவாகக் கிழக்குப் பாகிஸ்தானில் பணவீக்கம் அதிகமாகிப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது. இலங்கையில் உள்ள சிங்களப் பகுதிகள் அன்னிய அரசுகளின் உதவியுடன் தொழில்மயமாக்கப்பட்டன. ஆனால் தமிழ் ஈழத்தில் எத்தகைய தொழிலும் தொடங்கப்படவில்லை.

பாகிஸ்தான் இராணுவத்தில் வங்காளிகள் மிகக் குறைவாகவே இருந்தார்கள். அவர்களின் எண்ணிக்கை அதிகமாகாதபடி பாகிஸ்தான் அரசு மிகுந்த கவனத்துடன் செயல்பட்டது. சிங்கள இராணுவத்திலும் தமிழர்களைச் சேர்ப்பது இலங்கையின் பாதுகாப்பிற்கு அபாயகரமானது என்று கூறித் தமிழர்களைச் சேர்க்கவில்லை. அமெரிக்கா, சீனா போன்ற நாடுகளுடன் பாகிஸ்தான் செய்துகொண்ட இராணுவ உடன்பாடுகள் மூலம் பாகிஸ்தான் அரசு பெற்ற வலிமை அந்நாட்டில் ஜனநாயகத்தை அடியோடு அழித்தது.

இலங்கைக்கு அமெரிக்கா, பிரிட்டன், சீனா, இஸ்ரேல், பாகிஸ்தான் போன்ற நாடுகள் செய்துவரும் இராணுவ உதவிகளின்மூலம் பலம் பெற்ற சிங்கள அரசு தமிழர்களை ஒழித்துக்கட்ட அந்த வலிமையை முழுமையாகப் பயன்படுத்தி வருகிறது.

பாகிஸ்தானின் தேசிய வருமானத்தில் 60 சதவிகித வருமானம் கிழக்கு வங்கம் உற்பத்தி செய்யும் சணல், தேயிலை ஆகியவற்றின் மூலம் கிடைக்கிறது.

இலங்கையின் தேசிய வருமானத்தில் 70 சதவிகிதம் மலையகத் தமிழர்கள் உழைப்பினால் கிடைக்கும் ரப்பர், தேயிலை ஆகியவற்றின் மூலம் கிடைக்கிறது.

1970ஆம் ஆண்டு நடைபெற்ற பாகிஸ்தான் தேர்தலில் வங்கச் சட்டமன்றத்திற்கு அவாமிலீக் கட்சியினர் பெரும் வெற்றி பெற்றார்கள். 1977ஆம் ஆண்டு இலங்கையில் நடைபெற்ற தேர்தலில் தமிழர் பகுதியில் தமிழர் விடுதலைக் கூட்டணி(தமிழீழக் கோரிக்கையை முன்வைத்து) பெரும் வெற்றி பெற்றது.

முஜிபுர் ரஹ்மானின் அவாமிலீக் 6 அம்சத் திட்டத்தைப் பாகிஸ்தான் அரசிடம் அளித்தது. ஈழத் தமிழர்களின் கட்சிகளும் பொருளாதார அமைப்புகளும் ஒன்றுசேர்ந்து, திம்பு பேச்சுவார்த்தையின்பொழுது 4 அம்சத் திட்டம் ஒன்றை வெளியிட்டார்கள்.

வெளிநாடுகள் அளித்த பொருளாதார உதவிகளை மேற்குப் பாகிஸ்தான் மட்டுமே பயன்படுத்திக்கொண்டதே தவிர கிழக்கு வங்கத்திற்கு எதுவுமே அளிக்கப்படவில்லை.

அமெரிக்கா, சீனா, பிரிட்டன் போன்ற நாடுகள் வெளிப்படையாகப் பாகிஸ்தானுக்கு ஆயுத உதவி ,இராணுவப் பயிற்சி ஆகியவற்றை அளித்தன. அமெரிக்கா, பிரிட்டன், கிழக்குப் பாகிஸ்தான், இஸ்ரேல் போன்ற நாடுகள் சிங்கள இராணுவத்திற்கு ஆயுதப் பயிற்சியும் ஆயுத உதவியும் செய்தன.

கிழக்கு வங்கப் பிரச்சினையில் இந்தியா தலையிட்டபொழுது இந்து நாடான இந்தியா, முஸ்லீம் நாடான பாகிஸ்தானை அழிக்க முயலுவதாகப் பாகிஸ்தான் அரசு குற்றம் சாட்டியது. ஈழத் தமிழர்களுக்கு எதிரான இனப் படுகொலையை

இந்தியா கண்டித்தபொழுது சிறிய நாடான இலங்கையைப் பெரிய நாடான இந்தியா மிரட்டுகிறது எனச் சிங்கள அரசு கூறியது.

வங்கதேச விடுதலைப் போராட்டத்திற்கு முதுகெலும்பாகத் திகழ்ந்த பேராசிரியர்கள், மாணவர்கள், டாக்டர்கள் போன்ற அறிவு ஜீவிகளைப் பாகிஸ்தான் படையினர் திட்டமிட்டுப் படுகொலை செய்தார்கள்.

இலங்கையிலும் சிங்கள இராணுவம் அதே கொடுமைகளைச் செய்தது. யாழ்ப் பல்கலைக் கழகம் தாக்கப்பட்டது. பேராசிரியர்கள், மாணவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

ஜெயவர்த்தனா காலத்திலிருந்து சந்திரிகா காலம் வரையில் தொடர்ந்து தமிழ்ப்பகுதிகள்தான் புறக்கணிக்கப்படுகின்றன. உணவுப் பொருட்கள், மருந்து மற்றும் அத்தியாவசியப் பண்டங்களை அங்கு அனுப்பாமல் சிங்கள இராணுவம் தடுத்து நிறுத்தியுள்ளது.

விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கீழே போட்டுவிட்டுச் சரணடைந்தால் ஒழிய பேச்சுவார்த்தைக்குத் தாங்கள் தயாராக இல்லை என ஜெயவர்த்தனா முதல் சந்திரிகா வரை திரும்பத் திரும்பக் கூறுகிறார்கள்.

இந்தியாவின் பிரதமர்களாக நேரு, இந்திரா ஆகியோர் இருந்த காலங்களில் எந்த வெளிநாட்டு வல்லரசும் இலங்கையில் இராணுவ ரீதியாகத் தலையிடத் துணியவில்லை. ராஜீவ்காந்தி காலத்தில் தொடங்கி பி.வி. நரசிம்மராவ், தேவகௌடா, ஐ.கே. குஜ்ரால், வாஜ்பாய் காலம்வரை அமெரிக்கா, சீனா, பாகிஸ்தான், பிரிட்டன், இஸ்ரேல் போன்ற நாடுகள் இராணுவ ரீதியாக இலங்கையில் தலையிட்டு வருகின்றன. இலங்கையில் அன்னிய வல்லரசுகள் இராணுவ ரீதியாகத் தலையிடுவது என்பது எதிர்காலத்தில் இந்தியாவிற்கே ஆபத்தாகிவிடும் என்பதை இந்திய அரசும் இந்திய அரசியல் கட்சிகளும் உணரவேண்டும்.

இவற்றையெல்லாம் மனதில்கொண்டு தமிழீழ விடுதலைப் போராட்டத்தை இந்திய அரசும் இந்திய அரசியல் கட்சிகளும் அணுகவேண்டும். வங்கதேச விடுதலைப் போராட்டத்தினால் இராணுவ ரீதியாக இந்தியா தலையிட்டு வங்க தேசத்தை விடுவிப்பதற்கு உதவியதைப்போல தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு இராணுவ ரீதியில் இந்தியா தலையிட்டு உதவவேண்டும் என்று ஈழத் தமிழர்கள் வேண்டிக்கொள்ளவில்லை.

ஈழத் தமிழர்களும் தமிழ்நாட்டுத் தமிழர்களும் உலகம் பூராவும் உள்ள தேசிய இன விடுதலைப் போராட்டங்களில் அக்கறை காட்டுபவர்களும் குறைந்தபட்சம் கீழ்க்கண்டவற்றையாவது இந்திய அரசு செய்யவேண்டும் என எதிர்பார்க்கிறார்கள்.

1. பொருளாதார முற்றுகைக்கு உள்ளாகியிருக்கும் ஈழத் தமிழர்களுக்கும் இலங்கையின் பிற பகுதிகளில் வீடு வாசல்களை இழந்துத் தவிக்கும் இலட்சக் கணக்கான தமிழ் அகதிகளுக்கும் தேவையான உணவு, உடை, மருந்துகள் ஆகியவற்றை நேரடியாக அனுப்புவதற்கு இந்திய அரசு முன்வரவேண்டும்.

2. இலங்கையில் திட்டமிட்டு நடத்தப்படும் தமிழினப் படுகொலையையும் அரசு பயங்கரவாதத்தையும் உடனடியாக நிறுத்தாவிட்டால் கடும் விளைவுகள் ஏற்படும் என இந்திய அரசு எச்சரிக்க வேண்டும்.

3. இத்தகைய முயற்சிகளுக்கு இலங்கை ஒத்துழைக்காவிட்டால் அந்நாட்டிற்கு எதிராகப் பொருளாதாரப் பகிஷ்கரிப்பு நடவடிக்கைகளை இந்தியா மேற்கொள்ளவேண்டும். மற்ற நாடுகளையும் மேற்கொள்ளுமாறு தூண்டவேண்டும்.

4. இலங்கைக்கு ஆயுதங்களை ஏந்திச் செல்லும் விமானங்களும் கப்பல்களும் இந்திய விமான நிலையங்களிலோ துறைமுகங்களிலோ இறங்கிச் செல்ல அனுமதிக்கப்படக்கூடாது.

5. கச்சத்தீவு ஒப்பந்தத்திற்கு மாறாக அதை இராணுவ நடவடிக்கைகளுக்கு இலங்கை பயன்படுத்துவதால் அந்த ஒப்பந்தத்தை ரத்துச் செய்து கச்சத் தீவை இந்தியா கைப்பற்ற வேண்டும்.

6. ஐ.நா. சாசனம் வழங்கியுள்ள மனிதவுரிமைகளும் தேசிய இனங்களுக்கான சுயநிர்ணய உரிமையும் இலங்கையிலுள்ள தமிழர்களுக்கு அளிக்கப்படவேண்டும் என்பதை இந்தியா வலியுறுத்தவேண்டும். உலக மன்றங்களில் இது குறித்துத் குரலெழுப்பவேண்டும்.

7. இலங்கைத் தமிழர் பிரச்சினை தீருவதற்குத் தமிழீழம் அமைவது ஒன்றுதான் சரியான பரிகாரம் என்பதை இந்திய அரசு பகிரங்கமாக ஏற்கவண்டும்.

8. விடுதலைப்புலிகள் இயக்கத்தின் மீது விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்கவேண்டும்.

9. பாலஸ்தீனிய விடுதலை இயக்கம், நமீபிய விடுதலை இயக்கம் ஆகியவற்றிற்கு அங்கீகாரம் அளித்து அதற்குத் தேவையான மற்ற உதவிகளை இந்தியா செய்தது. அதைப் போலவே தமிழீழ விடுதலைக்காகப் போராடும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் அங்கீகாரம் அளித்து உதவிகளும் செய்யவேண்டும்.

9. தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்குத் தேவையான நிதி மற்றும் உதவிகளை இந்தியாவில் திரட்டுவதற்குப் பகிரங்கமாக அனுமதிக்க வேண்டும்.

10. ஐ.நா. பேரவை, அணிசாரா நாடுகளின் அமைப்பு போன்றவற்றில் பாலஸ்தீனிய விடுதலை இயக்கத்திற்கு இடமளித்திருப்பதைப்போலத் தமிழீழ விடுதலை இயக்கத்திற்கும் இத்தகைய அமைப்புகளில் பிரதிநிதித்துவம் அளிக்க இந்திய அரசு உதவ வேண்டும்.

மேலே கண்டவற்றை இந்திய அரசு செய்தாலே போதுமானது. **வீரஞ்செறிந்த சுதந்திரப்போராட்டத்தில் ஈடுபட்டுள்ள விடுதலைப் புலிகள் வெற்றிபெற்றுத் தமிழீழம் அமைப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை.** இவற்றைச் செய்யாமல் காலம்கடத்துவது என்பது தமிழீழ மக்களுக்கு இழைக்கப்படும் மிகப் பெரிய துரோகமாகும்.

அரசியலில் காலமும், இடமும் அறிந்துச் செயல்படவேண்டும். கிடைப்பதற்கரிய அரியகாலம் ஒன்று வாய்க்குமானால் அந்த வாய்ப்பை முழுமையாகப் பயன்படுத்திக்கொண்டு அப்பொழுதே செய்வதற்கரியதைச் செய்து முடிக்கவேண்டும். காலம் தாழ்த்துவோமானால் வாய்ப்பு கெட்டுப்போவதோடு செயல்களும் சிதறிப்போகும். இதை வள்ளுவர் பின்வருமாறு சுட்டிக்காட்டுகிறார்.

**"எய்தற் கரிய(து) இயைந்தக்கால் அந்நிலையே**
**செய்தற்(கு) அரிய செயல்.(488)"**

ஈழத் தமிழர்களுக்கு எதிரான இனப்படுகொலை முழுமையாகக் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கிற இந்தக் காலக்கட்டத்தில் மனிதாபிமான உணர்வோடு அவர்களைப் பாதுகாக்க வேண்டிய கடமையை உணர்ந்து இந்தியா உடனடியாகச் செயல்படவேண்டும். அவ்வாறு செய்யாமல் இந்தியா வாளா இருக்குமானால் அதன் விளைவுகள் இந்தியாவையே நிச்சயமாகப் பாதிக்கும். இங்கும் வள்ளுவப் பெருந்தகை கூறிய குறளினை நினைவுபடுத்திக்கொள்ளுவது நலம்.

**"செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க**
**செய்யாமை யானுங் கெடும்(466)"**

ஒருவன் செய்யத் தகாத செயல்களைச் செய்வதானாலும் கெடுவான். செய்யவேண்டிய செயல்களைச் செய்யாமல் விடுவதானாலும் கெடுவான்.

**இந்தியா என்ன செய்யப் போகிறது? செய்யவேண்டிய காரியத்தைச் செய்யாமல் கெடப்போகிறதா? அல்லது செய்வதற்கரிய செயல்களைச் செய்யவேண்டிய வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு காலத்தால் அதைச் செய்யப்போகிறதா? என்பதுதான் இந்தியாவிலும் உலகெங்கும் உள்ள பல நாடுகளிலும் பரவிக்கிடக்கும் 8 கோடி தமிழ் மக்களின் உள்ளங்களைக் குடையும் கேள்வியாகும்.**

**இதற்கு இந்தியா அளிக்கப்போகும் விடை என்ன?**

வங்க தேச விடுதலைப் போராட்டமும் தமிழீழ விடுதலைப் போராட்டமும் பலவகையிலும் ஒத்திருக் கின்றன.

வங்க மக்களும் ஈழத் தமிழ் மக்களும் மொழித் திணிப்பு, இனப்படுகொலை, பொருளாதாரச் சுரண்டல், இராணுவ ஒடுக்குமுறை, அகதிகளாக இந்தியாவிற்கு ஓடி வருதல் போன்ற பல பிரச்சினைகளில் ஒரே மாதிரியான ஒடுக்குமுறைகளுக்கும், கொடுமைகளுக்கும் ஆளானார்கள். ஆனாலும் வங்க மக்கள் மீது காட்டப்பட்ட அனுதாபமும், ஆதரவும் ஈழத் தமிழர்கள் மீது காட்டப்படாதது ஏன்? ஏன்?

தமிழ் மக்களின் உள்ளங்களை வாட்டிக் கொண்டிருக்கும் இந்தக் கேள்விகளின் எதிரொலியாக எழுந்ததே இந்நூலாகும்.

**- பழ. நெடுமாறன்**